28569

உ

சிவமயம்

# அண்ணாமலையார் துணை

# லக்ஷ்மி சரஸ்வதி கடாக்ஷம்

# YÁPPARUNGALAM

AN

ANCIENT AND COMPREHENSIVE WORK ON
TAMIL PROSODY

BY

AMRITASAKARANAR

WITH

AN ELABORATE COMMENTARY

EDITED BY

Ráo Bahadur S. BAVAṄANDAM PILLAI,
F. R. H. S. (Lond.) & M. R. A. S. (Lond.)

MEMBER OF THE TAMIL BOARD OF STUDIES AND OF THE
TAMIL COMPOSITION COMMITTEE, MADRAS UNIVERSITY.
MEMBER OF THE TEXT BOOK COMMITTEE OF THE
MADRAS EDUCATIONAL DEPARTMENT AND OF THE
TAMIL COMMITTEE OF THE MADRAS
SCHOOL BOOK & LITERATURE
SOCIETY.

[Vol I.]

PUBLISHED BY
ONGMANS, GREEN & CO.,
167, MOUNT ROAD, MADRAS.
BOMBAY AND CALCUTTA.

1916

*All rights reserved.*

Printed by Thompson & Co., at the " Minerva " Press,
33, Popham's Broadway, Madras.

*" Grammar, though a difficult study, is absolutely necessary in the search after philosophical truth......... .....and is no less necessary in the most important questions concerning religion and Civil Society"—Horne Tooke.*

அமிர்தசாகரனார்

இயற்றிய

# யாப்பருங்கலம்

மூலம்

(பழைய விருத்தியுரையுடன்)

ராவ் பஹதூர் - ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ்.(லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ்.(லண்டன்.)
பதிப்பித்தது.

[பகுதி-1.]

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."—திருக்குறள்.

சென்னை :
1916
[ரிஜிஸ்தர் செய்தது.]

தாம்ஸன் கம்பெனியாரால் தமது 'மினெர்வா' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# EDITORIAL PREFACE.

" *As a system of rhythmical and melodious effects not indebted for their potency to their associated ideas alone it (poetry) appeals also to that mysterious power by which mere arrangements of sound can convey emotion which no one could have predicted beforehand and which no known laws can explain.*"—F.W.H.Myers.

Poetic ideas find their fitting expression only in verse. From time immemorial the history of the poetry of all nations and of all countries bears strong testimony to this fact. When man's innermost feelings as pity, grief, joy, wonder and love are stirred to their very depths, they naturally show themselves forth in measured and harmonious language which, apart from the sense of its distinct words, conveys by peculiar sounds alone the kind of emotion within. Thus in the language of melody the particular form of a good verse glitters like a transparent crystal through which is seen the exact nature of the emotion which made it its vehicle.

Nowhere can this inseparable union of sound and substance of poetry be better appreciated than in the poetry of the Tamil language. In almost all good Tamil poems, whether ancient or modern, this harmony between sound and sense prevails so unvaryingly that a verse in Tamil cannot be chanted at all except in a peculiar musical tone. As the combinations into which delicate feelings and strong passions enter are infinite, the expressions of them in verse are equally infinite. The oldest and the most valuable treatise that gave a

scientific treatment to the study of versification in Tamil is that great and monumental work of the Tamil genius which is called *Tolkappiam*. There is ample evidence to show that the composition of this great work took place much anterior to the eventful period of the great "Mahabharata war" and the submergence of the continent Lemuria. At that ancient period the Tamils were a highly cultured, civilised and independent nation and were free from the influence of the Aryans, and their language also was in its pristine purity and had a rich and extensive literature of its own as is manifest from the commentaries of Adiyarkkunallar and others. Being written at that antique age, *Tolkappiam* devotes its chapter on versification to the study of those metres which are the exclusive property of the Tamils. In it not even a passing mention is made of the metres called *Kattalaikkalithurai* and *Viruttam* which in the mediæval period rose into such prominence as to drive the pure Tamil metres almost into oblivion.

The mediæval period in the history of the Tamil land was one of great religious activity—a period in which the Saiva and Vaishnava religions on the one side and the Jainism and the almost dying Buddhism on the other were struggling for supremacy and sometimes for mere existence,—a period, in which, as a result of the mingling of the Aryans with the Tamils, the colloquial as well as the literary language of the latter underwent a marked change. Into the old Tamil metres of *Kali* and *Agaval* certain modifications were introduced so as to make them a little more free and flexible to include within them the religious ideas and chant the new-formed hymns in the conventions of the devout people. The taste for genuine Tamil poetry fell off on account of this religious upheaval

and the old Tamil metres that embodied so many priceless poetic ideas, fell into disuse. The more the tendencies of the time inclined the people towards religion, the more artificial the poetry became.

If, under these altered circumstances, any revival of the taste for real poetry were to be attempted it could be achieved only by making use of the new metres *Kattalaikkalithurai* and *Viruttam* which, being mere modifications of the old Tamil metres *Kali* and *Agaval* are not wholly unfit for conveying true poetic sentiments. Saint Manikkavachakar clothed his pure, serene and soul-melting ideas of human and heavenly love in his two sacred poems *Tiruchitrambalakkovaiyar* and *Tiruvachakam*, the greater portion of which is composed in the new metres. In the wake of his early and successful attempts in the new field of Tamil poetry, there followed a host of great saints and eminent poets among whom the names of *Saint Sekkilar* and poet *Tiruttakkadevar* stand pre-eminent for their beautiful poetic compositions the *Periapuranam* and the *Jeevakachintamani*, which exhibit great originality of poetic power. From the third or the fourth century of the Christian era downwards all poetry with a few exceptions here and there, was composed for the most part in the new metres. Hence a scientific study of these new kind of measures became quite necessary to the Tamil student.

*Yapparungalam* which is now for the first time presented in a printed book-form to the Tamil reading public, is a rare and comparatively old Tamil treatise on Tamil prosody. Besides treating complettely of the ancient and pure Tamil metres, it analyses the whole extent of the new *Kalithurai* and *Viruttam* metres, classifies and groups

them all scientifically. The text contains only ninety six aphorisms ranging from one to twentynine lines in length which can be printed in six or seven pages of this size. But the value of the work is heightened to a remarkable extent by its exhaustive and learned commentary which has covered nearly six-hundred pages in print. That the commentator must have been a great and profound Tamil scholar who possessed a critical and comparative knowledge not only of almost all standard works in Tamil but also a few of the Sanskrit works extant at his time and preceding it, would be evident even to those who simply glance through this book.

The evidence—both internal and external—that can be gathered from this work, as also from references to it in other writers, goes to prove conclusively that the author of the *Yapparungalam* text was called *Amritasakaranar*; but it is regrettable that the name of its able and learned commentator is not at all known at present. There is clear evidence to prove that the composition of the text of *Yapparungalam* must have taken place either at the beginning or in the middle of the tenth century A. D. In the Tamil introduction to the second volume of this work we have gone into details of the evidence for fixing the authorship and the date of the text and, to a certain extent, of the commentary also.

It had long been our desire to print this valuable work and thus save it from the destruction which awaited it, if it had been allowed to remain in the few palm leaf manuscripts that were to be met with here and there in the Tamil country. We had been continually exerting ourselves to obtain a number of manuscripts of this work and with all our efforts

we have not been able to get yet more than a few. Even of these few, only one or two were in good condition and the rest mostly moth-eaten. However, all these were highly serviceable in collating the readings of the text and commentary and bringing out the correct reading to the utmost possible extent. We are quite conscious of the short-comings in this Edition, which we are sure, will be treated with indulgence, by those that have some experience in such undertakings, and which we shall be glad to correct in the next edition when pointed out by any of our kind readers. Our thanks are due to the scholars who so readily assisted us in the preparation of this work for the press.

# பதிப்புரை

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்று ஆன்றோர் கூறிய திருவாக்கின்பொருள் சிற்சில பாஷைகளை ஒப்பிட்டு நோக்குவார்க்கும் இனிது விளங்கும். பண்டைக் காலந் தொட்டு நூல்வழக்கினும் உலகவழக்கினும் திருத்தம் அடைந்து மக்களறிவின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்வனவாய்ப் போதரும் பழையமொழிகள் சிலவேயாகும். இப் பழைய மொழிகளில் தமிழ்மொழியை யொழித்து ஒழிந்தவற்றிற் பெரும்பாலன உலக வழக்கின்றி இறந்தொழிந்தன. தீஞ்சுவைவிளைக்கும் முப்பழத்தினும் இனிய மெல்லிய ஓசையின்பம் வாய்ந்த செந்தமிழ் மொழியோ எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் தன் இளமை கெடாதாய்க் கழிபெரு மகிழ்ச்சியோடு உலவிவருதலை உற்று நோக்குங்கால் அதனை வழங்கிவந்த நன்மக்கள் எவ்வளவு நுண்ணறிவும் எவ்வளவு அமைதியான தன்மையும் எவ்வளவு நாகரிகமும் உடையவர்களாய் இருந்திருக்கவேண்டுமென்பதை அறிகின்றோம். பழைய நாட்களில் வேறுபலமொழிகளைப் பேசிவந்த மக்கள் நுண்ணறிவிலும் அமைந்த குணத்திலும் நாகரிகத்திலும் சிறப்புற்றவராய் இல்லாமையால், அவர் வழங்கிய பாஷைகளெல்லாம் ஆண்டுகடோறும் மாறுதல்கள் பல எய்தி இலக்கணவரம்பில் அகப்படாவாய்ப் பயனின்றிக் கழிந்தன. தமிழைச்சூழ இஞ்ஞான்று நடைபெறும் பல பாஷைகளை ஆராய்ந்து பார்ப்பவர்க்கும் அப்பாஷைகள் ஓர் இலக்கணவரம்பில் நில்லாமல் பலபடச்சிதறி ஒழுங்கின்றிக் கிடத்தல் தெள்ளிதிற் புலப்படும்.

நாகரிகமில்லாத பாஷைகளிலே மக்களின் நல்லெண்ணங்களைக் காட்டுஞ் சொற்களுஞ் சொற்றொடர்களும் கருமணல்களோடு கலந்து கிடந்த பொற்றுகள்கள்போல், அல்லாத பலவுடன் மயங்கி ஓரொழுங்குமின்றிச் சிதர்ந்துகிடக்கும். நாகரிகம் அமைந்த மொழி

யிலே சிதர்ந்துகிடந்த அச்சொற்களுஞ் சொற்றொடர்களுமாகிய பொற்றுகள் பொறுக்கிச் சேர்க்கப்பட்டு, நல்லிசைப்புலவன் நன்மதிக் குகையில் உருகிச் செய்யுள் என்னும் அச்சிலே வார்க்கப்பட்டு, அளக்கலாகா அழகு மிக்க யாப்பென்னும் பொற்பாவையாய் எழுந்து நின்று விளங்கிக், காண்பார்க்குங் கேட்பார்க்குமெல்லாம் அழியா இன்பத்தைப் பொழியாநிற்கும். இவ்வியல்பிற்றாய் எழில்நலங் கனிந்த யாப்பானது உயிரையும் உணர்வையுங்கரைத்து இன்பவடிவாக்கித் தேன் போல் ஒழுகும் தித்திக்கும் ஓசையின் பல கூறுபாடுகளாற் பல பாக்களும் பல பாவினங்களுமாய்ப் பெருகி நிற்கும்.

வேற்றுநாட்டுச் சொற்களும் பொருள்களுமான ஆடையணிகலன்கள் தன்னை வந்து அணுகப்பெறாமல், தன் றெய்வ வளநாட்டு ஆடையணிகலன்களையே நமது தண்டமிழ்த்தாய் தன்மேற்கொண்டு பொலிந்த அந்நாளில் அவளது ஆம்பற் செவ்வாயினின்றும் அமிழ்தம் ஒழுகினாற்போற் புறம்போந்த வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் இயற்கைச் செந்தமிழ்ப்பாக்கள் பாவினங்களின் அரிய பெரிய அமைதிகளையெல்லாம் முற்றவெடுத்து முடியவிளக்கும் அருந்தமிழ்நூல் ஒல்காப்பெருமைத் தொல்காப்பியம் ஒன்றுமேயாம்.

இனி, அந்நாட் கழிந்தபின் இடைப்பட்ட காலத்தே விளைபொருள் வளனில்லா வேற்றுநாட்டவர் வறுமைகூர்ந்து செந்தமிழ்த் தனிவளநாடு புகுந்தார். புகுதர, எல்லா மக்களிடத்தும் அன்புடையளான நம் செந்தமிழ்த்தாய் அம்மக்கள் தம்மையும் அகங் கனிந்து முகம் மலர்ந்து ஏற்று அவர்வறுமைதீரத் தன்பாலுள்ள வளங்களை எல்லாம் உளங்குழைந்துதவி யூட்டி அவரை மகிழ்வித்தனள். மகிழ்விப்ப, அவருந் தமது மிடிதீர்ந்து தாம் தமது வறங்கூர் நாடுகளினின்றுங்கொணர்ந்த பன்மொழிச் சில்பணிகளைத் தமது நன்றிக்கு அறிகுறியாக அன்னைக்குக் கொடுத்தார். நந் தமிழன்னையும் அவை இயல்பானும் அளவானும் மிகச் சிறியவாயினும் அன்புறுமக்கள் தந்தனரென்பதனால் உவராது ஏற்றுத் தன் விலை வரம்பற்ற மணிக்கலன்களோடு அவற்றைக் கலந்தணிந்தாள். இம்முறையால் வடமொழியாளர் கொணர்ந்த சில சொற்களுஞ் சில யாப்புவகைகளுமாம் அணிகலன்களும் நந்தமிழன்னையின் புனிதமேனியின்கட் காணப்படலாயின.

இன்னும் அவ்விடைப்பட்ட காலத்தே வடமொழிமக்கள் திரள் திரளாகத் தமிழ்வளநாடு புகுந்து செந்தமிழன்னைபால் அடைக்கலம் புகவே, நந் தமிழன்னை தன்மக்கள்மேல் வைத்த அன்பினும் மிடிப் பட்டு வந்த அவ் அயற்புதல்வர்பால் அன்புமிகவைத்து அவரை மகிழ் விப்பான் வேண்டி அவர் மாற்றித்தந்த விருத்தப்பாக்களாம் அணிக லன்களைத் தனக்கு இசைந்தவாற்றாற் பலவகைப்படத் திரித்துச் சிறக் கச் செய் தணிந்திடுவா ளாயினள். இதனாலன்றோ, கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் திகழ்ந்த சைவ சமயாசிரியரான மாணிக்கவாசக சுவா மிகள் காலந்தொட்டு இற்றைநாள் வரையும் காவியங்கள் புராணங் கள் இதிகாசங்கள் முதலாயினவெல்லாம் பெரும்பாலும் பலதிறப் பட்ட விருத்தப்பாக்களினாலேயே யாக்கப்படுவவாயின ?

தமிழுக்கே சிறப்புரிமை வாய்ந்த பாக்கள் வழங்கிய பண்டைக் காலத்தில் இயற்றப்பட்ட பழந்தமிழ்ச் சீரிய நூலான தொல்காப்பியத் தில், பிற்றைஞான்று வந்த கலித்துறைகள் விருத்தங்கள் முதலியவற் றின் இலக்கணங்கள் ஒரு சிறிதுங் காணப்படமாட்டா. தமிழுக்கே உரிய பாக்கள் பாவினங்களோடு இப்புதிய பாக்கள் பாவினங்களின் இயல்புகளையும் விளங்க விரித்துரைப்பது யாப்பருங்கல விருத்தி என் னும் இந்நூல் ஒன்றுமேயாம். இதனினும் இவ்விலக்கணங்களைச் சுருக்கமாகக் கூறுவன யாப்பருங்கலக்காரிகையும் வீரசோழியமுமே யாம். இடைப்பட்டகாலம் முதற்கொண்டு மிகப்பெருகி வழங்கும் விருத்தம் கலித்துறை முதலிய பாவினங்களின் வேறுபாடுகளையும் இலக்கணங்களையும் நுனித்தறிந்து கோடற்கு யாப்பருங்கலவிருத்தி யினுஞ் சிறந்ததோர் யாப்பிலக்கணநூல் பிறிதில்லை யென்பது தெளி பொருளாம்.

இந்நூற் சூத்திரங்கள், அச்சிட்ட பக்கங்களில் ஏறக்குறைய அறுநூறு பக்கங்களைக் கவர்ந்து விரிந்து செல்லும் ஓர் அரிய பெரிய உரையின்கண் உள்ள அரும் பெரும் பொருள்களையெல்லாம் இரு நூற்றிருபத்திரண்டு அடியுள் அடக்கிக்கொண்டு,

> "சொல்லிற் சுருங்கிப் பொருள்பெருகித் தொன்ஞான
> மெல்லாம் விளக்கி யிருளகற்றும்—நல்யாப்
> பருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி
> ஒருங்கறிய வல்லா ருணர்ந்து"

என்று சிறப்பிக்கப்பட்டாங்கு சொற்செறிவும் பொருட் பெருக்கமும் வாய்ந்து திகழ்கின்றன.

இனி, இத்துணைச்சிறந்ததாகிய இவ்வியாப்பருங்கலமென்னும் நூலின் ஆசிரியர்பெயர் இந்நூற் பாயிரத்தால் இனிது விளங்காமை யின், அஃது ஒரு சிறிது ஈண்டு ஆராயற்பாற்று. இந்நூற்பாயிரம் இவ்வாசிரியர் பெயர் கூறுகின்றவிடத்துக் "கடற்பெயராருந்தவத் தோன்" எனக் குறிப்பாற் கூறியதன்றி வெளிப்படையாற் கூறிற் றிலது. அப்பாயிரத்துக்கு உரைகூறிய இந்நூலின் விருத்தியுரைகார ரும் 'கடலினது பெயரினையுடைய அரியதவத்தினை யுடையோர்' என்று சொற்பொருள் விரித்துரைகூறினாரே யல்லாமல், அவர் இயற் பெயர் இதுவென்று சுட்டிக் கூறினாரில்லை. இது கிடக்க.

இனி, யாப்பருங்கலக்காரிகை யென்னும் யாப்பிலக்கணநூலும், இவ்வியாப்பருங்கலம் என்னும்நூலும் ஆசிரியர் ஒருவராலேயே செய் யப்பட்டனவென்பது, யாப்பருங்கலக்காரிகைக்கு உரைவகுத்த குணசாகரர் உரைத்த உரையான் அறியப்படும்; என்னை? அவர் "யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்கார முடைத் தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை என்னும் பெயர்த்து" என்று உரைகூறினாராகலின். எனவே, யாப்பருங்கல மும் யாப்பருங்கலக்காரிகையும் ஒருவராசிரியராற் செய்யப்பட்டன வாமென்பது பெற்றாம்.

இனி, இவ்வியாப்பருங்கலநூலுக்கு விருத்தியுரைகண்ட ஆசிரி யரும் இந்நூற் பதினொந்தாம் சூத்திரத்திற்கு உரைத்தவுரையில் "இந் நூலுடையாரும் 'மாஞ்சீர் கலியுட்புகா' எனவும் * * * பிறவாற்றா னும் விளங்கக்கூறினார்." என்று கூறுதலானும், 'மாஞ்சீர்கலியுட் புகா' என்னுஞ் செய்யுள் யாப்பருங்கலக்காரிகைச் செய்யுளாதலா னும், அக்காரிகைச் செய்யுளை யியற்றினாரும் யாப்பருங்கலநூலாசிரி யரும் ஒருவரேயென்பது பெறப்படலானும் யாப்பருங்கலக்காரிகை நூலாசிரியரே யாப்பருங்கலத்திற்கும் நூலாசிரியரென்பது ஐயமின் றித் துணியப்படும் என்க.

இனி, யாப்பருங்கலக்காரிகை நூலாசிரியர் பெயர் அமிர்தசாகரனார் என்பது அந்நூற்குரைகண்ட குணசாகரர், " இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோ வெனின், ஆரியமென்னும் பாரிரும் பௌவத்

தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்தசாகரனென்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது." எனக் கூறுமாற்றால் நன்கு பெறப்படுகின்றது. இங்ஙனம் யாப்பருங்கலக் காரிகை நூலாசிரியர் பெயர் அமுதசாகரனென்பது இனிது பெறப் படவே, யாப்பருங்கல நூலாசிரியரும் அமுதசாகரனேயாதல் நன்கு பெறப்படும். என்னை ? இவ்விரு நூற்கும் ஆசிரியர் ஒருவரேயாவது முன்னே துணியப்பட்டமையின் என்பது.

இனி, வீரசோழிய உரைகாரரான பெருந்தேவனார் வீரசோழிய அலங்காரப்படலம் முப்பத்தொன்பதாஞ் செய்யுளுரையில், " மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம்" என்னும் இவ்வியாப்பருங்கல நூலின் தொண்ணூற்றாறாஞ் சூத்திரத்தை எடுத்துக்காட்டி, " என்று அமிர்த சாகரனார் கூறியனகொள்க" என்று அச்சூத்திரமியற்றினார் பெயர் விளங்கவெடுத்து மொழிதலானும், அச்சூத்திரம் இவ்வியாப்பருங்கல நூலிலன்றி வேறியாண்டுங் காணப்படாமையானும் யாப்பருங்கல நூலாசிரியர் பெயர் அமிர்தசாகரனாரே யென்பது ஐயுறவின்றித் துணியப் படும் என்க.

இனி, இவ்விருத்தியுரையுள் எடுத்தாளப்பட்ட நூல்கள் முதலிய குறிப்புகள் பலவும் இந்நூலின் இரண்டாம்பகுதியில் சேர்க்கப்படும்.

இத்துணைச் சிறந்ததாகிய இந்நூலையும் இதனுரையையும் அச்சியற்றி வெளியிட வேண்டுமென்னும் விருப்பம் நீண்ட நாளாக எமதுள்ளத்தே நிலைபெற்றிருந்தது. அவ்விருப்பத்தை நிறைவேற்றுதற்பொருட்டுப் பலவிடங்களில் யாப்பருங்கலவிருத்தி ஏட்டுப் பிரதிகள் தேடினேமாகச் சிற்சில ஏடுகளே கிடைத்தன. தமிழகத்தார் சிலர்பால் இவ்வேடுகள் இருந்தும் அவர் அவற்றை யாம் சில நாளேனும்பார்க்க மனம் ஒருப்பட்டாரில்லை. தாமேனும் இவ்வரிய பெரிய நூலை வெளிப்படுத்தினரோவென்றால் அதுவும் இல்லை. அந்தோ! நம்நாட்டவர் செயல் பெரிதும் இரங்கற்பாலதொன்றும்! தாமும் பயன்கொள வறியாது பிறரையும் பயன்பெற வொட்டாது தடைசெய்து அருமைபெருமை வாய்ந்த செந்தமிழ் நூல்களைச் செல்லுக்கு இரையாய் அழியவிடுதல் மிகவும் அருவருக்கற்பாற்று. அது கிடக்க.

ஏடுகள்பற்பல கிடைக்கும் வரையில் வாளா இருப்பேமாயின், கிடைத்த ஏடுகளும் எங்கே அழிந்துபடுமோ என்னும் அச்சமீதூர்தலாற் கிடைத்த சில ஏடுகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு நன்கு ஆராய்வித்து, இயன்றமட்டும் பிழையறத் திருத்தஞ் செய்வித்துப், பிரதிகடுணையின்றித் திருத்த ஏலாதவற்றை ஏட்டிலிருந்தவாறே பிரதி செய்வித்தும் பதிப்பித்து வரலாயினேம். இங்ஙனம் உறுப்பியலை முடிப்பித்துச் செய்யுளியலில் ஒரு சிறுபகுதி அச்சிடுவித்து வராநின்ற தறுவாயில் வேறு சில ஏடுகள் கிடைத்தன; அவற்றுள் ஓர் ஏடு பெரும்பாலுந் திருத்தமுள்ளதாக இருந்தது. உடனே, அச்சிடுவித்து முடிந்தபகுதிகளை இவ்வேடுகளோடுவைத்து ஒப்பிட்டுப்பார்க்கப் பல பாடபேதங்களும் பலபிழைதிருத்தங்களும் புலனாயின. அவற்றை இனி அச்சானபகுதிகளிற் சேர்க்கலாகாமையின், நீண்ட பிழைதிருத்தக் குறிப்பொன்றும் பாடபேதக் குறிப்பொன்றும் தனியாக அச்சிட்டுச்சேர்க்கப்பட்டன. ஏடுகளிலிருந்து பழைய நூல்களைப்பெயர்த்தெழுதி அச்சிடுவிக்கும் பெருவருத்தத்தினை உணர்ந்தோர் இங்ஙனம் இந்நீண்ட குறிப்புகள் சேர்த்ததனைப் பிழையாகக் கருதார்.

எம்மை இந்நன் முயற்சியிற் புகுவித்துத் தோன்றாத் துணையாயுடனிருந்துதவி இதனை முடிப்பித்த எல்லாம்வல்ல ஆண்டவன்றிருவருளை வழுத்துகின்றேம்.

# YAPPARUNGALACCUTTIRAM WITH THE VIRUTTI OR COMMENTARY.

[* These notes were taken from the report on a search for Tamil manuscripts prepared under the orders of the Government of Madras. The inaccuracies which appear to have crept into these notes are corrected in vol. II.]

The Text was written by *Amrtasâgaran*, who, it is said in the preface (சிறப்புப்பாயிரம்), followed the teaching of Gunasâgarar as can be seen from the following passage :—

முழுதுல கிறைஞ்ச முற்றொருங் குணர்ந்தோன்
செழுமலர்ச் சேவடி செவ்விதின் வணங்கிப்
பாற்படு தென்றமிழ்ப் பரவையின் வாங்கி
யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
தனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே.

The name of the author is referred to partly in the expression *Kadarpeyar*, 'having the name of the ocean'; and the full name is given by Perundevanar, the commentator of the *Virasoliyam*, as *Amrtasâgaranâr.** As *Perundevanar*, the commentator of the Virasôliyam, is considered to have been a disciple of

*" மாலை மாற்றே சக்கரஞ் சுழிகள
மேக பாத மெழுகூற் றிருக்கை
காதை கரப்பே கரந்துறை பாட்டே
தூசங் கொளலே வாவ னூற்றிக்

*Buddhamitra*, the Author of the Text, and a contemporary of *Virasôla* alias *Kulôttunga I*, who reigned between 1064-1113, the author of the work under notice must have flourished before the eleventh century. The commentator, whose name is not known, quotes authors and works very copiously, and I shall give, at the end of this notice, a list of them which I consider very useful

---

கூட சதுக்கங் கோமூத் திரியே
யோரெழுத் தினத்தா லுயர்ந்த பாட்டே
பாத மயக்கே பாவின் புணர்ப்பே
யொற்றுப் பெயர்த்த வொருபொருட் பாட்டே
சித்திரக் காவே விசித்திரக் காவே
விகற்ப நடையே வினாவுத் தரமே
சருப்பதோ பத்திரஞ் சார்ந்த வெழுத்து
வருத்தன மற்றும் வடநூற் கடலு
ளொருக்குடன் வைத்த வுதாரண நோக்கி
விரித்து முடித்த மிறைக்கவிப் பாட்டே
யுருவக மாதி விரவிய வீறாய்
வருமலங் காரமும் வாழ்த்தும் வசையுங்
கவியே கமகன் வாதி வாக்கியென்
றிவர்க டன்மையு மவையின தமைதியும்
பாடுதன் மரபுங் காரணைப் பகுதியு
மானந்த முதலிய வூனமுஞ் செய்யுளும்
விளம்பனத் தியற்கையு நரம்பின் விகற்பமும்
பண்ணுந் திறனும் பாலையுங் கூட்டமு
மெண்ணிய திணையு மிருதுவுங் காலமு
மெண்வகை மணமு மெழுத்துஞ் சொல்லுஞ்
செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்க்கமுந்
தந்திர வுத்தியுந் தருக்கமு நடமு
முந்துநூன் முடிந்த முறைமையின் வழாமை
வந்தன பிறவும் வயினறிந் துரைப்போ
னந்தமில் கேள்வி யாசிரி யன்னே."

என்று அமிர்தசாகரனார் கூறியன கொள்க.—வீரசோ. P. 196.

as many of the names are scarcely known at present. It has enabled me to make several inferences which are very important for the History of Tamil Literature, and some of these are given below :—

(1) *Poygaiyâr*, who is the Author of the *Kalavalinâr-padu* and portions of the anthologies called Naṟṟinai and Puranânuru, and also the Tamil Saint of the same name, are frequently referred to by the commentator without any attributes which may indicate a difference. The stanzas quoted from the *First Tiruvandâdi* of the *Iyarpâ* have been verified in the latter work with a slight difference, to illustrate some metrical peculiarity. I may also mention here the fact that Naccinârkkiniyar also refers to the *Andâdi* above mentioned in the following passage :—

"அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர்கள் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க."

"Instances of the poem are the Muttollâyiram and the *Andâdi* composition of *Poygaiyâr* and others."

From the identity of the names, we may infer that *Poygaiyâlvâr* was called simply *Poygaiyâr* and was the author of the *Kalavalinârpadu* and the portions of the Purananuru and the Naṟṟinai as already said ; that he was called *Poygaiyâlvâr* when he became a Saint ; that he was a contemporary of *Kôccenganan*, a Chola King, and *Kanaik-kâlirumporai*, a Chera King who was defeated in a battle by the former and was imprisoned. But when Poygaiyâr composed the poem known by the name of *Kalavalinâr-padu* in honor of the victorious Chola, the latter ordered the release of the Chera King ; and the event shows what amount of respect and reverence the Chola should have felt for the future Saint. I have roughly calculated the age of Kôccenganan to be the seventh or the eighth century

A. C., and the same age should be assigned to Pudattâlvâr, Pêyâlvâr, and Tirumalisaiyâlvâr, who were the contemporaries of Poygaiyalvâr.

(2) The commentator of the Yâpparungalam under notice quotes the name of *Pêrâsiriyar* with certain attributes which belong to God Siva, and they are as follow:—

1. பிறைநெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர்மகிழ்ந்த பேராசிரியர்.

2. நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர். "Pêrâsiriyar who gloried with the name of Siva, who had the Ganges on his matted hair."

3. திரிபுரமெரித்தவர் பெயர்மகிழ்ந்த பேராசிரியர். "Pêrâsiriyar......who burnt the three towns."

4. திரிபுரமெரித்த விரிசடைநிருத்தர் பெயர்மகிழ்ந்த பேராசிரியா. "Pêrâsiriyar......who burnt the three towns and had matted hair."

5. கறைமிடற்றோன் பெயர்மகிழ்ந்த பேராசிரியர். "Pêrâsiriyar......who had a black neck."

6. பெண்ணொருபாகன் பெயர்மகிழ்ந்த பேராசிரியர். "Pêrâsiriyar......who had his wife as part of his body."

7. பெருமான் பெயர்மகிழ்ந்த பேராசிரியர். "Pêrásiriyar......Siva.

8. பிறைமுடியோன் பெயர்மகிழ்ந்த—பேராசிரியர். "Pêrásiriyar......who had a crescent of the moon on his crown."

9. வாமமேகலை மாதையோர்பாகனார் நாமமகிழ்ந்த நல்லாசிரியர். "Nallâsiriyar......who had the Goddess Parvati as part of his body."

10. காமவேளைக் கறுத்த புத்தேள் நாமந்தாங்கிய நல்லாசிரியர். "Nallâsiriyar who held the name of God Siva, who burnt the God of Love."

11. காமனைக்காய்ந்தவர் நாமமகிழ்ந்த நல்லாசிரியர். "Nallâsiriyar who gloried with the name of Siva, who killed the God of Love."

In these adjectives the word பேர்மகிழ்ந்த is doubtful in meaning as it may mean 'who rejoiced by the name (of Siva),' that is, who was pious (to Siva), or 'who gloried by the name of Siva,' that is, who nobly held the name of Siva. The use of the word தாங்கிய 'who held or had,' in the attribute No. 10, leads us to adopt the latter meaning. In some of the references we have the name of நல்லாசிரியர் which must refer to the same author from the nature of the attributes. We do not know why the commentator should refer to *Pêrâsiriyar* with so many titles, all pointing to God Siva. As, in the whole of Tamil Literature, there is only one poet who is identified with God Siva, as far as I know, the references of the commentator must belong to the same person, that is, *Iraiyanâr* of the third Sangam.

We have now to settle a question which suggests itself, *viz.*, whether the *Pêrâsiriyar* (Iraiyanâr) was the same as the person who goes by the same name and who wrote a commentary on the Tolgâppiyam, and who is also referred to by Naccinârkkiniyar in his commentary on the work, without any attribute. The identity is also warranted by the fact that *Iraiyanâr* was a contemporary of Nakkirar who is said to have flourished in the fifth or the Sixth century, and that *Pêrâsiriyar* who wrote the commentary of the Tolgappiyam flourished before Naccinarkkiniyar who flourished after the Eleventh century, A. C. or subsequently.

The work under notice is divided into the following chapters :—

I. Uruppiyalôttu, (உறுப்பியலோத்து) which is sub-divided into—

1. Eluttôttu. எழுத்தோத்து.
2. Asaiyôttu. அசையோத்து.
3. Sirôttu. சீரோத்து.
4. Talaiyôttu. தளையோத்து.
5. Adiyôttu. அடியோத்து.
6. Todaiyôttu. தொடையோத்து.

II. Sêyyuliyalôttu. செய்யுளியலோத்து.

III. Olibiyalôttu. ஒழிபியலோத்து.

Apart from the Sêyyuliyal of the Tolgâppiyam, this is the only work on Tamil Prosody that treats of the subject very copiously and with many examples and authorities. Another work written by the same author as a sequel to this, viz., *Yâpparungalakkârigai*, is the only work now extant on the subject, the work under notice with its commentary being very rarely found in the libraries of Tamil pandits. The text Sutras alone were edited many years ago by Tandawarâya Mudaliar, an able Tamil Pandit and the Author of the *Panchatantra* in Tamil Prose. The work with its commentary under notice deserves to be printed and published; but I am trying to get some more copies of the work for comparing and collating, before putting the work in printers' hands.

The following names of authors, works, kings, and places are referred to by the commentator of the Yâpparungalasûtram :—

(1) *Names of Authors.*

1. Agattiyanâr. அகத்தியனார்.
2. Aniyiyaludaiyâr. அணியியலுடையார்.
3. Avinayanâr. அவிநயனார்.
4. Arivudainambi. அறிவுடைநம்பி.

5. Alaviyanâr.
அளவியனார்.
6. Idaikkâdar.
இடைக்காடர்.
7. Auvvaiyâr.
ஔவையார்.
8. Kadiyanalliyâr.
கடியநள்ளியார்.
9. Kapilar.
கபிலர்.
10. Kallâdar.
கல்லாடர்.
11. Kakkaipâdiniyâr.
காக்கைபாடினியார்.
12. Kudamûkkirpagavar.
குடமூக்கிற்பகவர்.
13. Kaiyanâr.
கையனார்.
14. Sangayâppudaiyâr.
சங்கயாப்புடையார்.
15. Sirukâkkaipâdiniyar.
சிறுகாக்கைபாடினியார்.
16. Sêyyuliyaludaiyâr.
செய்யுளியலுடையார்.
17. Tolgāppiyanâr.
தொல்காப்பியனார்.
18. Nakkirar.
நக்கீரர்.
19. Nallasiriyar
நல்லாசிரியர்.
20. Nallaranâr.
நல்லாறனார்.
21. Nattatanâr.
நத்தத்தனா.
22. Pâlkayanâr.
பல்காயனார்,
23. Paranar.
பரணர்.
24. Parimânanâr.
பரிமாணனார்.
25. Panambâranár.
பனம்பாரனார்.
26. Pâttiyanmarabudaiy
பாட்டியன்மரபுடையார்
27. Perunjittiranâr.
பெருஞ்சித்திரனார்.
28. Perundalaiccâttan.
பெருந்தலைச்சாத்தன்.
29. Perâsiriyar.
பேராசிரியர்.
30. Poygaittallayânaiccu lâsiryar.
பொய்கைத்தலையானைச் சூழாசிரியர்.
31. Poygaiyâr.
பொய்கையார்.
32. Mayêccurar.
மயேச்சுரர்.
33. Madalanar.
மாடலனார்.
34. Mapuranamudaiyar.
மாபுராணமுடையார்.
35. Mamûlar.
மாமூலர்.
36. Markkandêyanar.
மார்க்கண்டேயனார்.
37. Mûlar.
மூலர்.
38. Vasûdêvanar.
வாசுதேவனார்.
39. Vayppiyamudaiyar.
வாய்ப்பியமுடையார்,

40. Vayppiyanar.
வாய்ப்பியனார்.

41. Vilakkattanar
விளக்கத்தனார்.

## (2) *Names of works.*

1. Agattiyam.
அகத்தியம்.
2. Adinûl.
அடிநூல்.
3. Aniyiyal.
அணியியல்.
4. Amirtapati.
அமிர்தபதி.
5. Arasaccattam.
அரசசத்தம்.
6. Avinayam.
அவிநயம்.
7. Avinandamalai
அவிநந்தமாலை.
8. Asiriyamuri
ஆசிரியமுறி.
9. Anandavôttu.
ஆனந்தவோத்து.
10. Iramayanam.
இராமாயணம்.
11. Udayanakumaran - kadai, Udayanan-kadai.
உதயண குமாரன் கதை.
உதயணன் கதை.
12. Kanakkiyal.
கணக்கியல்.
13. Kalyanakadai
கலியாணகாதை.
14. Kalittogai.
கலித்தொகை.
15. Kavimayakkarai.
கவிமயக்கறை.
16. Karigai.
காரிகை.
17. Kalakêsi.
காலகேசி.
18. Kiraniyam.
கிரணியம்.
19. Kundalakêsi.
குண்டலகேசி.
20. Sangayappu.
சங்கயாப்பு.
21. Sayandam.
சயந்தம்.
22. Sindam.
சிந்தம்.
23. Cintamani.
சிந்தாமணி.
24. Cûlamani.
சூளாமணி.
25. Seyanmurai.
செயன்முறை.
26. Seyirriyam.
செயிற்றியம்.
27. Tumbippattu.
தும்பிப்பாட்டு.
28. Tesigamalai.
தேசிகமாலை.
29. Tolgappiyam.
தொல்காப்பியம்.
30. Naladinarpadu
நாலடி நாற்பது
31. Naladinanuru.
நாலடி நானூறு.

32. Nilakêsi.
நீலகேசி.

33. Pattinappalai.
பட்டினப்பாலை.

34. Palgayam.
பல்காயம்.

35. Panmanimalai.
பன்மணிமாலை.

36. Pannirupadalam.
பன்னிருபடலம்.

37. Pasandam.
பசந்தம்.

38. Pavaippattu.
பாவைப் பாட்டு.

39. Pingalakêsi.
பிங்கல கேசி.

40. Pingalam (Chandôviciti)
பிங்கலம் (சந்தோபிசிதி.)

41. Punarpavai.
புணர்ப்பாவை.

42. Puranasagaram.
புராணசாகரம்.

43. Purananûru.
புறநானூறு.

44. Periyapambam.
பெரியபம்மம்.

45. Peruvallam.
பெருவல்லம்.

46. Poygaiyarnul.
பொய்கையார்நூல்.

47. Pôkkiyam.
போக்கியம்.

48. Maniyaram.
மணியாரம்.

49. Mandiranul.
மந்திரநூல்.

50. Malaipadukadam.
மலைபடுகடாம்.

51. Mapuranam.
மாபுராணம்.

52. Markkandêyanarkanji.
மார்க்கண்டேயனார் காஞ்சி

53. Muttollayiram.
முத்தொள்ளாயிரம்.

54. Mummanikkôvai.
மும்மணிக்கோவை.

55. Mûppattucceyyul.
மூப்பெட்டுச் செய்யுள்.

56. Yapparungalavirutti.
யாப்பருங்கல விருத்தி.

57. Vaduviccai.
வதுவிச்சை.

58. Varuttamanam.
வருத்தமானம்.

59. Valaiyapati.
வளையாபதி.

60. Vayppiyam.
வாய்ப்பியம்.

61. Venbamalai.
வெண்பாமாலை.

## (3) *Names of kings and others.*

1. Kuttuvan.
குட்டுவன்.

2. Sankhapalan.
சங்கபாலன்.

3. Sayantan.
சயந்தன்.
4. Sengorkilli.
செங்கோற்கிள்ளி.
5. Semputcêy.
செம்பூட்சேய்.
6. Sêndan.
சேந்தன்.
7. Nandi.
நந்தி.
8. Nannan.
நன்னன்.
9. Nedumantêrkkilli.
நெடுமான்றேர்க்கிள்ளி.
10. Pallavamallan.
பல்லவமல்லன்.
11. Putkaranar.
புட்கரனார்.

(4) *Names of places.*

1. Kalumalam.
கழுமலம்.
2. Talaiyalanganam.
தலையாலங்கானம்."

உ

கடவுள் துணை

# யாப்பருங்கல விருத்தி

## பாயிரம்

முழுதுல கிறைஞ்ச முற்றொருங் குணர்ந்தோன்
செழுமலர்ச் சேவடி செவ்விதின் வணங்கிப்
பாற்படு தென்றமிழ்ப் பரவையின் வாங்கி
யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
யளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே.

என்பது பாயிரம்.

இதன் பொருள்:—முழுதுல கிறைஞ்ச=மூவகை உலகமும் வணங்க; முற்றொருங் குணர்ந்தோன்=முழுதுடன் அறிந்தோனது; செழுமலர்ச்சேவடி செவ்விதின் வணங்கி=வளமலர் போலும் செய்ய அடிகளை முறைமையால் இறைஞ்சி; பாற்படு தென்றமிழ்ப் பரவையின் வாங்கி=பாகுபடு தென்றமிழ்க் கடல்வயினின்றும் வாங்கி; யாப்பருங்கல நனி யாப்புற வகுத்தோன்=யாப்பென்னும் அருங்கலத்தை மிகவும் திண்ணிதாக வகுத்தோன்; தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த=தனக்கு எல்லைதானே யாகிய துறவொடு பொருந்திய; குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅ=குணசாகரப் பெயரோனது கோட்பாட்டின் வழுவாது நிற்கும்; துளக்கறு கேள்வி=மயக்க மற்ற கேள்வி யினையும்; துகடீர் காட்சி=குற்றமற்ற அறிவினையும்; அளப்பருங்கடற் பெயர்=அளத்தற்கரிய கடலினது

பெயரினையும் உடைய; அருந்தவத்தோன்=அரிய தவத்தினை உடையோன். என்றவாறு.

இன்—ஐந்தாவதனுருபு: வாங்கல்=அதன்வயிற் கோடல். "நனியென் கிளவி மிகுதிப் பொருட்டே" என்றாராகலின், நனி என்றதற்கு ஈண்டு மிகவுமெனப் பொருள்கொண்டார். ஓடு—உடனிகழ்ச்சி. வகுத்தோன் தவத்தோனென்றுகூட்டுக. ஏகாரம் ஈற்றசை.

---

### தெய்வ வணக்கம

**வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய**
**வறிவனை வணங்கி யறைகுவன் யாப்பே.**

என்பது சூத்திரம். நானுதலியது உரைக்குமிடத்து நூலாமாறும், நூலின் விகற்பமும், நூலென்ற சொற்குப் பொருளும், நூலாற் பயனும் உரைத்து உரைக்கற் பாற்று.

இதன் பொழிப்பு. நூலாவது:—

முதனடு விறுதி மறுதலைப் படாது
தொகைவகை விரியி னுட்பொரு டோன்ற
வுரையொடு புணர்ந்த வொழுக்கிற் றாகி
சூத்திர மோத்துப் படலம் பிண்டமென்
றியாப்புறுத் தமைத்த வவயவத்தாய் நடப்பது;

என்னை?

"நூலெனப் படுவது நுவலுங் காலை
*முதனடு விறுதி மாறுகோ ளின்றித
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே"
"அதுவே தானு மீரிரு வகைத்தே"
"ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானு
மினமொழி கிளந்த வோத்தி னானும்
†பொதுமொழி தொடரிய படலத் தானு

---

* "முதலு முடிவு மாறுகோளின்றி" என்றும்பாடம்
† "பொதுமொழி கிளந்த" என்றும்பாடம்.

மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப"

என்றார் தொல்காப்பியனாராகலின்.

அவற்றுள், சூத்திரமாவது:—

கருதிய பொருளைக் கைக்கொண்டு கண்ணாடியின் நிழல் போலத் தெரிவுறத் தோன்றச் செய்யப்படுவது ; என்னை ?

" அவற்றுட், சூத்திரந் தானே
யாடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே"

என்றாராகலின்.

ஓத்தாவது:—ஒப்புடைப்பொருளை ஓரிடத்துள் ஒற்றுமைப் படவைப்பதாகும் ; என்னை ?

"நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்"

என்றாராகலின்.

படலமாவது:—வேற்றுமை யுடைய பல பொருள்களால் தோற்ற முடைத்தாகத் தொடரவைப்பது ; என்னை ?

" ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரினது படல மாகும்"

என்றாராகலின்.

பிண்டமாவது:—உறுப்பு மூன்றும் உள்ளடக்கி நெறிப்பாடுடைத்தாய்க் கிடப்பது; என்னை?

"* மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப"

* ஈண்டு மூன்றுறுப்பென்றது சூத்திர மோத்துப் படலம் என்பவாம். "வாளாதே மூன்று உறுப்படக்கிய பிண்டம் என்றான் மேல் சூத்திரமும் ஓத்தும் படலமும் கூறிய அதிகாரத்தானே அம்மூன்றினையும் அடக்கி நிற்பது கூறுகின்றானென்பது. அம்மூன்றினையும் உறுப்பு எனவே பிண்டமென்பன தாம் உறுப்பின வென்பது பெற்றாம்" என்ற தொல்காப்பியச் சூத்திர உரையான் உணரப்படும்.

என்றாராகலின்.

இனி நூலின் விகற்பமுரைக்குமாறு:—நூல் மூத்திறப்படும். அவையாவன:—முதனூலும், வழிநூலும், சார்பு நூலும் என; என்னை?

‡ "[1]முதல் [2]வழி [3]சார்பென நூன் மூன்றாகும்"

என்றாராகலின்.

[1]முதனூலாவது:—குற்றங்கெடுத்து முற்றவுணர்ந்த நற்றவத்தோன் சொற்றதாகும்; என்னை?

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்றாராகலின்.

[2]வழிநூலாவது:—முதனூலோடு ஒத்த முடிவிற்றாய்த் தனதோர் விகற்பம் படக் கிடப்பது; என்னை?

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்"

என்றாராகலின்.

[3]சார்பு நூலாவது:—அவ்விருவர் நூலுள்ளும் ஒருவழிமுடிந்த பொருளை ஓராசிரியன் யாதானுமொரு காரணம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது; என்னை?

"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்"

என்றாராகலின்.

நான்காவது எதிர்நூலென்பது மொன்றுண்டு. அது முதல்வனூலின் முடிந்த பொருளை ஓராசிரியன் யாதானுமோர் காரணத்தாற் பிறழ வைத்தால், அதனைக் கருவியாற் றிரிபுகாட்டி ஒருவாமை வைத்தற் கொள்ளியோ னொருபுலவனானுய்க்கப்படுவது; என்னை?

"தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப
தெதிர் நூலென்ப வொருசா ராரே"

என்றாராகலின்.

இனி நூலென்ற சொற்குப் பொருள் உரைக்குமாறு:—நூல் போறலின் நூலெனப்படும்; என்னை? பாவைபோல்வாளைப் பாவை யென்றாற்போல. யாதோ நூல்போலுமாறெனின், நுண்ணிய பல

‡ "முதல்வழி புடையென" என்றும் பாடம்.

வாகிய பஞ்சின் நுனிகளால் கைவன் மகடூஉத் தனது செய்கை நலந் தோன்ற மாண்பினால் ஓரிழைப் படுத்தலன்றே உலகத்து நானூற்ற லாவது. அவ்வாறே சுகிர்ந்து (பிளவுபட்டு) பரந்த சொற்பரவை களால் பெரும்புலவன் தனதுணர்வு மாட்சியிற் சூத்திரம், ஓத்து, படலம், பிண்டமென்னும் யாப்பு நடைபடக் கோத்தலாயிற்று. நூல் செய்தலாவது அவ்வகை நாற்கப்படுதலின் நூலெனப்படுமே.

இனி நூலாற் பயனுரைக்குமாறு:— நூல் கேட்டு விளங்கிய நுண்ணுணர்வினான் அபாயமில்லாதகோர் உபாயத்தினால் அறம், பொருள், இன்பம், வீடு என இவற்றை நிரம்புமாறறிந்து நிகழ்த்து வானும். அதனாற் பகரப்பட்ட நான்கினையும் பாரம்பரத்தால் பனுவலே பயப்பதாயிற்றெனக் கொள்க.

இனி நூனுதலியது உரைக்குமாறு:— I சிறப்பெழுத்து II உறுப்பெழுத் தென்னுந் தொகையானும்;

**1. எழுத்து.**
(தொகை, வகை, விரி)

1. ஒற்று, 2. உயிர், 3. உயிர்மெய் யென்னும் வகையானும்; [1]உயிரும், [2]மெய்யும், [3]உயிர் மெய்யும், [4]குறிலும், [5]நெடிலும், [6]அளபெ டையும், [7]வன்மையும், [8]மென்மையும், [9]இடைமையும், [10]குற்றிய லிகரமும், [11]குற்றியலுகரமும், [12]ஆய்தமும், [13]ஐகாரக் குறுக்கமும், [14]ஔகாரக் குறுக்கமும், [15]மகரக்குறுக்கமு மென்னும் விரியா னும் :

**2. அசை.**
(தொகை, வகை, விரி)

I நேரசை II நிரையசையென்னுந் தொகையானும்; 1. நே ரசை, 2. நிரையசை, 3. நேர்பசை, 4. நிரைப சை யென்னும் வகையானும்; [1]சிறப்புடை நேரசை, [2]சிறப்பில் நேரசை, [3]சிறப்புடை நிரையசை, [4]சிறப்பில் நிரையசை, [5]சிறப்பு டை நேர்பசை, [6]சிறப்பில் நேர்பசை, [7]சிறப்புடை நிரைபசை, [8]சிறப்பில் நிரைபசை யென்னும் விரியானும்:

**3. சீர்.**
(தொகை, வகை, விரி)

I இயற்சீர், II உரிச்சீர், III பொதுச்சீர் என்னுந் தொகை யானும்; 1. நேரீற்றியற்சீர், 2. நிரையீற்றி யற்சீர், 3. நேரீற்றுரிச்சீர், 4. நிரையீற்றுரிச் சீர், 5. நேரீற்றுப் பொதுச்சீர், 6. நிரையீற் றுப்பொதுச்சீர் என்னும்வகையானும்; [1]சிறப்

புடை நேரீற்றியற்சீர், 2சிறப்பில் நேரீற்றியற்சீர், 3சிறப்புடை நிரையீற்றியற்சீர், 4சிறப்பில் நிரையீற்றியற்சீர், 5சிறப்புடை நேரீற்றுரிச்சீர், 6சிறப்பில் நேரீற்றுரிச்சீர், 7சிறப்புடை நிரையீற்றுரிச்சீர், 8சிறபபில் நிரையீற்றுரிச்சீர், 9சிறப்புடை நேரீற்றுப் பொதுச்சீர், 10சிறப்பில் நேரீற்றுப் பொதுச்சீர், 11சிறப்புடை நிரையீற்றுப் பொதுச்சீர், 12சிறப்பில் நிரையீற்றுப் பொதுச்சீர் என்னும் விரியானும்:

**4. தளை.** (தொகை, வகை, விரி)

I வெண்டளை, II ஆசிரியத்தளை, III கலித்தளை, IV வஞ்சித்தளை என்னுந் தொகையானும்; 1. இயற்சீர் வெண்டளை, 2. உரிச்சீர் வெண்டளை, 3. பொதுச்சீர் வெண்டளை, 4. நேரொன்றாசிரியத்தளை, 5. நிரையொன்றாசிரியத்தளை, 6. கலித்தளை, 7. ஒன்றிய வஞ்சித்தளை, 8. ஒன்றாத வஞ்சித்தளை என்னும் வகையானும்; 1இயற்சீர்ச் சிறப்புடை வெண்டளை, 2இயற்சீர்ச் சிறப்பில் வெண்டளை, 3உரிச்சீர்ச் சிறப்புடை வெண்டளை, 4உரிச்சீர்ச் சிறப்பில் வெண்டளை, 5பொதுச்சீர்ச் சிறப்புடை வெண்டளை, 6பொதுச்சீர்ச் சிறப்பில் வெண்டளை, 7நேரொன்றிய சிறப்புடை யாசிரியத்தளை, 8நேரொன்றிய சிறப்பில் ஆசிரியத்தளை, 9நிரையொன்றிய சிறப்புடையாசிரியத்தளை, 10நிரை யொன்றிய சிறப்பில் ஆசிரியத்தளை, 11சிறப்புடைக்கலித்தளை, 12சிறப்பில் கலித்தளை, 13ஒன்றிய சிறப்புடை வஞ்சித்தளை, 14ஒன்றிய சிறப்பில் வஞ்சித்தளை, 15ஒன்றாத சிறப்புடை வஞ்சித்தளை, 16ஒன்றாத சிறப்பில் வஞ்சித்தளை என்னும் விரியானும்:

**5. அடி.** (தொகை, வகை, விரி)

I இயலடி, II உரியடி, III பொதுவடி, என்னுந் தொகையானும்; 1. குறளடி, 2. சிந்தடி, 3. அளவடி, 4. நெடிலடி, 5. கழி நெடிலடி என்னும் வகையானும்; 1இயற்குறளடி, 2உரிக்குறளடி 3பொதுக்குறளடி, 4இயற்சிந்தடி, 5உரிச்சிந்தடி, 6பொதுச் சிந்தடி, 7இயலளவடி, 8உரியளவடி, 9பொதுவளவடி, 10இயனெடிலடி, 11உரிநெடிலடி, 12பொது நெடிலடி, 13இயற்கழி நெடிலடி, 14உரிக்கழி நெடிலடி, 15பொதுக்கழி நெடிலடி என்னும் விரியானும்;

**6. தொடை.** (தொகை, வகை, விரி)

I மோனை, II எதுகை, III முரண், IV இயைபு, V அளபெடை, VI செந்தொடை, VII இரட்டைத் தொடை, VIII அந்தாதித்தொடை என்னுந் தொகையானும்; 1. தலையாகுமோனை, 2. இடையாகுமோனை, 3. கடையாகுமோனை, 4. தலையாகெதுகை, 5. இடையாகெதுகை, 6. கடையாகெதுகை, 7. சொன் முரண், 8. பொருண்முரண், 9. சொற்பொருண்முரண், 10. மோனைமுரண், 11. எதுகை முரண், 12. சொன்முரண், 13. மோனையியைபு, 14. எதுகை யியைபு, 15. முரணியைபு, 16. அளபெடையியைபு, 17. மயக்கியைபு, 18. செவ்வியைபு, 19. மோனை யளபெடை, 20. எதுகை யளபெடை, 21. முரணளபெடை, 22. மயக்களபெடை, 23. செவ்வளபெடை, 24. இயற்செந் தொடை, 25. மருட்செந்தொடை, 26. ஒருபொருளிரட்டை, 27. இருபொருளிரட்டை, 28. பலபொருளிரட்டை, 29. இருமுற்றிரட்டை, 30. எழுத்தந்தாதி, 31 அசையந்தாதி, 32. சீரந் தாதி, 33. அடியந்தாதி, 34. மயக்கந்தாதி, 35. இடையீட் டந்தாதி யென்னும் வகையானும்; 1 அடிமோனை, 2 இணைமோனை, 3 பொழிப்பு மோனை, 4 ஒரூஉ மோனை, 5 கூழை மோனை, 6 மேற் கதுவாய் மோனை, 7 கீழ்க்கதுவாய் மோனை, 8 முற்று மோனை, 9 அடி யெதுகை, 10 இணை யெதுகை, 11 பொழிப் பெதுகை, 12 ஒரூஉ வெதுகை, 13 கூழையெதுகை, 14 மேற்கதுவா யெதுகை, 15 கீழ்க் கதுவா யெதுகை, 16 முற்றெதுகை, 17 அடிமுரண், 18 இணை முரண், 19 பொழிப்பு முரண், 20 ஒரூஉ முரண், 21 கூழை முரண், 22 மேற் கதுவாய் முரண், 23 கீழ்க்கதுவாய் முரண், 24 முற்று முரண், 25 அடி யியைபு, 26 இணையியைபு, 27 பொழிப்பியைபு, 28 ஒரூஉவியைபு, 29 கூழை யியைபு, 30 மேற்கதுவாயியைபு, 31 கீழ்க்கது வாயியைபு, 32 முற்றி யைபு, 33 அடியளபெடை, 34 இணையளபெடை, 35 பொழிப்பளபெ டை, 36 ஒரூஉ வளபெடை, 37 கூழை யளபெடை, 38 மேற்கதுவாய் அளபெடை, 39 கீழ்க்கதுவாய் அளபெடை, 40 முற்றளபெடை என வும்; 41 கடையிணைமோனை, 42 பின்மோனை, 43 இடைப்புணர்மோனை 44 கடைக்கூழைமோனை, 45 கடைமோனை; 46 கடையிணை யெது கை, 47 பின்னெதுகை, 48 இடைப்புணரெதுகை, 49 கடைக்கூழை யெது கை, 50 கடையெதுகை, 51 கடையிணை முரண், 52 பின்முரண், 53 இடைப்

புணர்முரண், 54கடைக்கூழைமுரண், 55கடைமுரண்; 56கடையிணை யியைபு, 57பின்னியைபு, 58இடைப்புணரியைபு, 59கடைக்கூழை யியைபு, 60கடை யியைபு; 61கடையிணை யளபெடை, 62பின்னிணையளபெடை, 63இடைப்புணரளபெடை, 64கடைக்கூழை யளபெடை, 65கடையளபெடை எ-ம்; 66அசைவிரவச் செந்தொடை, 67சீர்விரவச் செந்தொடை, 68இசை விரவச் செந்தொடை, 69முற்று விரவச் செந்தொடை; 70குறையீற்று ஒருபொரு ளிரட்டை, 71குறையீற்றுப் பலபொருளிரட்டை, 72நிறையீற்று ஒரு பொருளிரட்டை, 73நிறையீற்றுப் பலபொருளிரட்டை, 74குறையீற்று முற்றிரட்டை, 75நிறையீற்று முற்றிரட்டை; 76மண்டில வெழுத்தந்தாதி, 77செந்நடை யெழுத்தந்தாதி, 78மண்டில வசையந்தாதி, 79செந்நடை யசையந்தாதி, 80மண்டிலச் சீரந்தாதி, 81செந்நடைச் சீரந்தாதி, 82மண்டில வடியந்தாதி, 83செந்நடை யடியந்தாதி, 84மண்டில மயக்கந்தாதி, 85செந்நடை மயக்கந்தாதி, 86மண்டில இடையிட்டந்தாதி, 87செந்நடை யிடையிட்டந்தாதி என்னும் விரியானும்:

I வெண்பா, II ஆசிரியப்பா, III கலிப்பா, IV வஞ்சிப்பா, V மருட்பா என்னுந் தொகையானும்;

7. பா.
(தொகை, வகை, விரி)

1. குறள்வெண்பா, 2. சிந்தியல் வெண்பா, 3. இன்னிசைவெண்பா, 4. நேரிசை வெண்பா, 5. பஃறொடை வெண்பா, 6. நேரிசை ஆசிரியப்பா, 7. இணைக்குறள் ஆசிரியப்பா, 8. நிலைமண்டில ஆசிரியப்பா, 9. அடிமறி மண்டில ஆசிரியப்பா, 10. நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, 11. அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா, 12. வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, 13. வெண்கலிப்பா, 14. தரவு கொச்சகக் கலிப்பா, 15. தரவிணைக் கொச்சகக்கலிப்பா, 16. சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, 17. பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, 18. மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, 19. குறளடிவஞ்சிப்பா, 20. சிந்தடி வஞ்சிப்பா, 21. புறநிலைவாழ்த்து மருட்பா, 22. வாயுறை வாழ்த்து மருட்பா, 23. செவியறிவுறூஉ மருட்பா, 24. கைக்கிளை மருட்பா என்னும் வகையானும்; 1குறள் வெண்பா, 2விகற்பக் குறள் வெண்பா, 3நேரிசைச் சிந்தியல் வெண்பா, 4இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 5ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா,

6 இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 7 ஒரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 8 இரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 9 ஒரு விகற்ப நேரிசை வெண்பா, 10 இரு விகற்ப நேரிசை வெண்பா, 11 ஒருவிகற்ப இன்னிசை வெண்பா, 12 பல விகற்ப இன்னிசை வெண்பா, 13 பல விகற்ப நேரிசை வெண்பா, 14 ஒத்தவிகற்பப் பஃறொடை வெண்பா, 15 ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா, 16 இன்னியல் நேரிசை ஆசிரியப்பா, 17 விரவியல் நேரிசை ஆசிரியப்பா, 18 இன்னியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 19 விரவியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 20 இன்னியல் நிலைமண்டில ஆசிரியப்பா, 21 விரவியல் நிலைமண்டில ஆசிரியப்பா, 22 இன்னியல் அடிமறி மண்டில ஆசிரியப்பா, 23 விரவியல் அடிமறி மண்டில ஆசிரியப்பா, 24 வெள்ளைச் சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, 25 அகவற் சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, 26 அராகவியல் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 27 அராகவழி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 28 அளவியல் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 29 அளவழி வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 30 கலிவெண்பா, 31 வெண் கலிப்பா, 32 இயற்றரவு கொச்சகக் கலிப்பா, 33 சுரிதகத் தரவு கொச்சகக் கலிப்பா, 34 இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா, 35 சுரிதகத் தரவிணைக் கொச்சகக் கலிப்பா, 36 இயற் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 37 குறைச் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 38 இயற் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 39 குறைப் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 40 இயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 41 அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 42 இன்னியற் குறளடி வஞ்சிப்பா, 43 விரவியற் குறளடி வஞ்சிப்பா, 44 இன்னியற் சிந்தடி வஞ்சிப்பா, 45 விரவியற் சிந்தடி வஞ்சிப்பா, 46 புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா, 47 புறநிலை வாழ்த்து இயனிலை மருட்பா, 48 வாயுறை வாழ்த்துச் சமனிலை மருட்பா, 49 வாயுறை வாழ்த்து இயனிலை மருட்பா, 50 செவியறிவுறூஉச் சமனிலை மருட்பா, 51 செவியறிவுறூஉ இயனிலை மருட்பா, 52 கைக்கிளைச் சமனிலை மருட்பா, 53 கைக்கிளை இயனிலை மருட்பா என்னும் விரியானும்:

I தாழிசை, II துறை, III விருத்தம் என்னுந் தொகையானும்; 1. வெண்டாழிசை, 2. வெண்டுறை, 3. வெளிவிருத்தம், 4. ஆசிரியத்தாழிசை, 5. ஆசிரியத்துறை, 6. ஆசிரியவிருத்தம்

7. கலித்தாழிசை, 8. கலித்துறை, 9. கலிவிருத்தம், 10. வஞ்சித் தாழிசை, 11. வஞ்சித்துறை, 12. வஞ்சி விருத்தம் என்னும் வகையானும்; [1]வெண் செந்துறை, [2]குறட்டாழிசை, [3]வெள்ளொத் தாழிசை, [4]வெண்டாழிசை, [5]ஒரொலி வெண்டுறை, [6]வேற்றொலி வெண்டுறை, [7]வெளிநிலை விருத்தம், [8]வெளிமண்டில விருத்தம், [9]ஆசிரிய ஒத்தாழிசை, [10]ஆசிரியத் தாழிசை, [11]ஆசிரிய நேர்த் துறை, [12]ஆசிரிய இணைக்குறட்டுறை, [13]ஆசிரிய நிலை விருத்தம், [14]ஆசிரிய மண்டில விருத்தம், [15]கலி யொத்தாழிசை, [16]கலித் தாழிசை, [17]கலித் துறை, [18]கலி விருத்தம், [19]கலி நிலைத் துறை, [20]கலி மண்டிலத் துறை, [21]கட்டளைக் கலித்துறை, [22]கலிநிலை விருத்தம், [23]கலிமண்டில விருத்தம், [24]வஞ்சி நிலைத்தாழிசை, [25]வஞ்சி மண்டிலத் தாழிசை, [26]வஞ்சி நிலைத் துறை, [27]வஞ்சி மண்டிலத் துறை, [28]வஞ்சி நிலைவிருத்தம், [29]வஞ்சி மண்டில விருத்தம் என்னும் விரியானும்:

**8. பாவினம்.** (தொகை, வகை, விரி)

I செப்பல், II அகவல், III துள்ளல், IV தூங்கல், V கொஞ்சல் என்னுந் தொகையானும்; 1. பாஅ வண்ணம், 2. தாஅ வண்ணம், 3. வல்லிசை வண்ணம், 4. மெல்லிசை வண்ணம், 5. இயைபு வண்ணம், 6. அளபெடை வண்ணம், 7. நெடுஞ்சீர் வண்ணம், 8. குறுஞ்சீர் வண்ணம், 9. சித்திர வண்ணம், 10. நலிபு வண்ணம், 11. அகப்பாட்டு வண்ணம், 12. புறப்பாட்டு வண்ணம், 13. ஒழுகு வண்ணம், 14. ஒரூஉ வண்ணம், 15. எண்ணு வண்ணம், 16. அகைப்பு வண்ணம், 17. தூங்கல் வண்ணம், 18. ஏந்தல் வண்ணம், 19. உருட்டு வண்ணம், 20. முடுகு வண்ணமோடு ஆங்கவை யென்ப அறிந்திசினோரே என்னும் வகையானும்; குறிலகவற் றூங்கிசை வண்ணம் முதலாகிய **வண்ணம் நூறு** என்னும் விரியானும்: சுருங்கியும் விரிந்தும் கிடந்த தொன்னூல் யாப்புக்களினது துணிபு நோக்கி, அரும்பொருட் பெருங் கேள்வி ஆசிரிய வசனங்களை * ஆலம்பனமாக, அருங்கல வணி யொருங்கு கோத்தாற் போலவும், அலைகடல் கடைந்து அமுது கொண்டாற் போலவும், ஒருங்கு கோத்து ஒரு கோவைப்படுத்து எல்லார்க்கும்

**9. ஓசை.** (தொகை, வகை, விரி)

* ஆலம்பனம் = பற்றுக்கோடு.

உணர்வு புலன்கொள்ளு மாற்றால், யாப்புணர்த்துதல் நுதலிற்று. இதனானே இது சார்பு நூல் என்பது முடிந்தது.

இனி, இவ்வோத்து என்னுதலிற்றோ வெனின், அசைக்குறுப்பாம் எழுத்துக்களது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று. அதனானே எழுத்தோத்து என்பதாயிற்று.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், சிறப்புப்பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. என்னை?

"வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்"

என்றாராகலின்.

அச்சூத்திரப் பொருள் உரைக்கின்றுழிச் சூத்திரத்தின் விகற்பமும், சூத்திரம் என்ற சொற்குப் பொருளும் உரைத்து உரைக்கப்படும்.

சூத்திரம் ஆறு வகைப்படும்:—[1]பெயர்ச் சூத்திரம், [2]விதிச் சூத்திரம், [3]விலக்கியற் சூத்திரம், [4]நியமச் சூத்திரம், [5]அதிகாரச்சூத்திரம், [6]ஞாபகச் சூத்திரம் என; "பெயரே தொகையே" என்ப ஆகலின்.

அவற்றுள், [1]பெயர்ச் சூத்திரமாவது:—இடுகுறியானும், காரணக்குறியானும், பொதுவகையானும் இலக்கணங்கட்கு ஓர் உபகாரம் நோக்கி இன்னது இதற்குப் பெயர் என்றிடுவது.

[2]விதிச் சூத்திரமாவது:—

இன்ன தொன்றிற் றிதுவா மென்று
முன்னில் லதனை மொழிவ தாகும்.

[3]விலக்கியற் சூத்திரமாவது:—பொதுவகையான் விதிக்கப்பட்டதனை அவ்வகை ஆகாது என்பது.

[4]நியமச் சூத்திரமாவது:—முன் ஒன்றனான் முடியவைத்துப் பின்னும் அதனையே யெடுத்துக்கொண்டு விதிமுகத்தான் விலக்குவதூஉம் விலக்கும் வகையான் விதிப்பதூஉம் ஆமெனக் கொள்க.

[5]அதிகாரச் சூத்திரமாவது:—ஆற்றொழுக்கு, அரிமா நோக்கம், சாரச் சில்வழி யொழுகுதல், தவளைப் பாய்த்து என்பவற்றுள் ஒன்றேற்கும் வகையால் இயைபொருள் விளைப்பது.

[6]ஞாபகச் சூத்திரமாவது:—எளிதுஞ் சிறிதுமாக இயற்றற் பால

தன்னை அரிதும் பெரிதுமாக இயற்றிப் பிறிதொரு பொருளை அறிவிப்பது.

பரிபாடைச் சூத்திரம் என்பனவும் உள. அவை ஈண்டு தந்திர வுத்தியுள்ளே பட்டடங்கும் எனக் கொள்க. இவற்றை விகற்பித்துப் பலபடுத்திச் சொல்வாருமுளர்.

முதற் சூத்திரம் நான்கு வகைப்படும்:— [1]வழிபடு தெய்வ வணக்கஞ் செய்தலும், [2]மங்கலமொழி முதல் வகுத்தெடுத்தலும், [3] தொகை வகை விரியா னுதலிப் புகுதலும், [4]சொல்லத் தகும் பொருளை யெடுத்துரைத்தலும் என்க.

இனிச் சூத்திரம் என்ற சொற்குப் பொருள் உரைக்குமாறு:—

வற்றுடைப் பொருளெலாந் தோற்று மாறு
சூத்திரித்து நடத்தலிற் சூத்திர மெனப்படும்.

அது வடமொழித் திரிசொல் எனக் கொள்க. சூத்திரப் பொருள் உரைக்கின் மூழிப் பலதிறத்தானும் உரைப்ப; என்னை?

I "முத்திறத் தானு II மூவிரு விகற்பினும்
III பத்து வித்தானும் IV பதின்மூன்று திறத்தானும்
V எழுவகை யானு VI மிரண்டுகூற் றானும்
VII வழுவுநனி நீங்க VIII மாண்பொடு IX மதத்தொடும்
யாப்புறத் துரைப்பது சூத்திர வுரையே"

என்பதாகலின்.

I அவற்றுள், முத்திறமாவன:— [1]மொழிப்பு, [2]அகலம், [3] நுட்பம் என இவை.

II மூவிரு விகற்பமாவன:— [1]பிண்டித்துக்காட்டல், [2]பதங் காட்டல், [3]பதம் விரித்தல், [4]பதப் பொருள் உரைத்தல், [5]வினாதல், [6] விடுத்தல் என இவை.

III பத்து விதமாவன:—

[1]சொல்லே [2]சொற்பொருள் [3]சோதனை [4]மறைநிலை
[5]இலேசே [6]எச்சம் [7]நோக்கே [8]துணிவே
[9]கருத்தே [10]செலுத்த லென்றீ ரைந்து
கிளவியு நெறிப்பட வருவது
பனுவ லுரையென் றோதப் பட்டன.

IV பதின்மூன்று திறமாவன— 1சூத்திரந் தோன்றல், 2சொல் வகுத்தல், 3சொற் பொருளுரைத்தல், 4வினாதல், 5விடுத்தல், 6விசேடங் காட்டல், 7உதாரணங் காட்டல், 8ஆசிரிய வசனங் காட்டல், 9அதிகார வரவு காட்டல், 10தொகுத்து முடித்தல், 11விரித்துக் காட்டல், 12துணிவு கூறல், 13பயனொடு புணர்த்தல் என இவை.

V எழுவகையாவன:— 1பொழிப்பு, 2அகலம், 3நுட்பம், 4நூலெச்சம், 5பதப்பொருள் உரைத்தல், 6ஏற்புழிக் கோடல், 7எண்ணல் என இவை.

VI இரண்டு கூறாவன:— 1தொகுத்துக் கண்ணழித்தல், 2விரித்துக் கொணர்ந்துரைத்தல் என இவை.

VII வழுவாவன:—

1குன்றக் கூறல், 2மிகைபடக் கூறல்,
3கூறியது கூறல் 4மாறுகொளக் கூறல்
5வழூஉச்சொற் புணர்த்தல் 6மயங்க வைத்தல்,
7வெற்றெனத் தொடுத்தல் 8மற்றொன்று விரித்தல்,
9சென்றுதேய்ந் திறுதல் 10நின்றுபய னின்மை

என இவை.

VIII மாண்பாவன:—

1சுருங்கச் சொல்லல் 2விளங்க வைத்தல்
3நவின்றோர்க் கினிமை 4நன்மொழி புணர்த்தல்,
5ஓசை யுடைமை 6யாழமுடைத் தாதல்
7உலக மலையாமை 8முறையின் வைப்பே
9விழுமியது பயத்தல் 10விளங்குதா ரணத்தது

என இவை.

IX எழுவகை ஆசிரிய மதமாவன:—

1உடன்படல் 2மறுத்தல்
3பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
4தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
5இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
6பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
7பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே

என இவை.

இவ்வகையே புகுந்தன புகுந்தன பரப்பி உரைப்பான் புகில் * இறந்துபட்ட உரையிற்றாம். எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளவற்றுள் யாதானும் ஒருவகையாற் கேட்டோர் உணர்வு புலன் கொள்ளுமாற்றால் எடுத்துக்கொண்ட சூத்திரப்பொருள் உரைக்க வேண்டும் என்பது ஈண்டு துணிபு. அஃதாமாறு, நறுநாற்றம் கமழும் தாமரைமேல் நடந்த அறிவனை இறைஞ்சிச் சொல்லுவன் யாப்பு என்றவாறு.

இப்பொருளைச் சொல்லுமோ இச்சூத்திரம் என்னில், சொல்லும். என்னை? "வெறி" என்பது நறுநாற்றம் என்றவாறு. "கமழ்தல்" என்பது நாறுதல் என்றவாறு. அது "வெறிகமழ் சந்தனம்", "வெறிகமழ் துழாய்" என்றாற்போலக் கொள்க. "தாமரை" என்பது தாமரைப்பூ என்றவாறு: இது முதல்கூறும் சினையறிகிளவி (முதலாகு பெயர்). "தாமரை புரையுங்காமர் சேவடி." என்றாற் போல எனக்கொள்க. "மீமிசை" என்பது மேன்மேல் என்றவாறு. "மீமிசை" என்பதும் ஒரு பொருட்பன்மொழிச் சிறப்புப்பற்றி வந்தது: என்னை? "ஒரு பொருட்பன்மொழிச்சிறப்பினின் வழாஅ" என்றாராகலின். "அடுத்தன மீமிசை யருப்பம் பேணாது" என்றாற்போலக் கொள்க. "ஒதுங்கல்" என்பது நடத்தல். அது "போதியங்கிழவனைப் பூமிசை யொதுங்கினை" என்றாற்போலக் கொள்க. எல்லாப் பொருளையும் ஒரு கணத்திற்றானே அறிந்தமையால் "அறிவன்" என்பது காரணக்குறி; "ஐ" என்பது இரண்டாம் வேற்றுமை. "வணங்கி" என்பது இறைஞ்சி என்றவாறு. வணங்கி எனினும், இறைஞ்சி எனினும், பணிந்து எனினும் ஒரு தொழில். "அறைகுவன்" என்பது சொல்லுவன், என்றவாறு. அறைகுவன் எனினும், பகர்வன் எனினும், சொல்லுவன் எனினும், மொழிகுவன் எனினும் ஒக்கும். "யாப்பு" என்பது யாப்பு என்னும் அதிகாரம் என்றவாறு. யாப்பு எனினும், பாட்டு எனினும், தூக்கு எனினும், செய்யுள் எனினும், தொடர்பு எனினும் ஒக்கும். ஏகாரம் தேற்றேகாரம்; பிரிநிலை எனினும் அமையும்: என்னை?

"[1]தேற்றம் [2]வினாவே [3]பிரிநிலை [4]யெண்ணே
[5]ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே"

என்றாராகலின்.

---

* இறந்துபட்ட உரையிற்றாம் = வரம்பிகந்த வுரையினதாம்.

"வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து, மங்கலமொழி முதல் வகுத்து எடுத்துக்கொண்ட இலக்கண விலக்கியம் இடுக்கணின்றி இனிது முடியும்" என்பவாகலின் இச்சூத்திரம் இவ்வாறு கூறப்பட்டது எனக் கொள்க. இவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"ஆதியங் கடவுளை யருமறை யருகனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
சேதியஞ் செல்வனின் றிருவடி பரவுதும்"

"காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும்"

"ஆரருள் பயந்தனை யாழ்துயர் தவிர்த்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருண் மொழியைநின் றிருவடி தொழுதனம்"

எனப் போந்தவற்றாற் கண்டு கொள்க.

பாயிரம் முற்றியது.

# உறுப்பியல்

## க. எழுத்தோத்து

[யாப்பு இன்னது என்பது]

1. *எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா நடைய தியாப்பெனப் படுமே.

என்பது என்னுதலிற்றோவெனின், யாப்பாவது இன்னதென்று தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு:— [1]எழுத்தும், [2]அசையும், [3]சீரும், [4]தளையும், [5]அடியும், [6]தொடையும், [7]பாவும் என்னும் இவ்வேழுறுப்பினோடும் புணர்ந்து குற்றமின்றி நடைபெறுவது யாப்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது என்றவாறு.

உம்மைகள் தொக்கன. ஓடு எண்ணோடு. இவ்வேழுறுப்பினுந் தீர்ந்து யாப்பு உண்டோவெனின், இல்லை. என்போலவெனின், முப்பத்திரண்டு உறுப்பொடும் புணர்ந்தது † மக்கட் சட்டகம் என்றால், முப்பத்திரண்டு உறுப்பினுந் தீர்ந்து மக்கட் சட்டகம் இல்லை; அதுபோலவெனக் கொள்க. அல்லதூஉம் பிறருங் கூறினார்; என்னை?

---

* "செய்யு ளென்பது தெரிவுறக் கிளப்பின்
முன்னர்க் கூறிய முறைமைத் தாகி
[1]யெழுத்[2]தசை [3]சீர்[4]தளை [5]யடி[6]தொடை யென்ற
மூவிரண் டுறுப்பு மேவரச் சிவணிப்
பாவு மினமு மெனவிரு பாற்றே"

என்றார் இலக்கண விளக்க நூலுடையாரும்.

† மக்கட் சட்டகம்=மனித சரீரம்,

"யாப்பெனப் படுவ தியாதெனை வினவிற்
[1]றாக்குந் [2]தொடையு [3]மடியுமிம் மூன்று
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே"

என்றார் நற்றத்தனார்;

"இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் றமினிது விளங்க
யாப்பிய றனே யாப்புற விரிப்பி
[1]னெழுத்[2]தசை [3]சீர்[4]தளை [5]யடி[6]தொடை [7]தூக்கோ
டிழுக்கா மரபி னிவற்றொடு பிறவு
மொழுக்கல் வேண்டு முணர்ந்திசி னோரே"

என்றார் பல்காயனார்.

இவற்றை இடுகுறியானும், காரணக்குறியானும் வழங்குப. அவற்றுள், காரணக்குறியால் வழங்குமாறு:—

"எழுதப் படுதலி னெழுத்தே யவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே யசையிணைந்து
சீர்கொள நிற்றலிற் சீரே சீரிரண்டு
† தட்டு நிற்றலிற் றளையே யத்தளை
அடுத்து நடத்தலி னடியே யடியிரண்டு
* தொடுத்தன் முதலாயின தொடையே யத்தொடை
தூக்கிற்றொடர்ந் திசைத்தலிற் றூக்கெனப் படுமே"

என்றார் ஆசிரியரெனக் கொள்க.

இவை யிம்முறையே வைத்தற்கு என்னையோ காரணம் எனின், **எழுத்து** எல்லா உறுப்புக்கும் முதற்காரணமாதலிற் சிறப்புடைத்தென்று முன் வைத்தார், "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்பது தந்திரவுத்தியாகலான்; எழுத்தின் பின்னர் **அசை** வைத்தார், அசை யெழுத்தினான் ஆமாகலின்; அசையின் பின்

---

தட்டு நிற்றல்=தளைத்து நிற்றல்.

† "தொடுத்துமன் சேறலிற் றொடையே யத்தொடை
பாவி நடத்தலிற் பாவே பாவொத்
தினமாய் வழங்கலி னினமெனப் படுமே"

எனப்பாட முரைக்கும் இலக்கண விளக்கம்,

னர்ச் **சீர்**வைத்தார், சீர் அசையினான் ஆமாகலின்; சீரின் பின்னர்த் **தளை** வைத்தார், தளை சீரினான் ஆமாகலின்; தளையின் பின்னர் **அடி** வைத்தார், அடி தளையினான் ஆமாகலின்; அடியின் பின்னர்த் **தொடை** வைத்தார், தொடை அடியினான் ஆமாகலின்; தொடையின் பின்னர்த் **தூக்கென** வைத்தார், தூக்கு தொடையினான் ஆமாகலின். தூக்கு எனினும், பாட்டு எனினும், பா எனினும் ஒக்கும். என்னை?

"தூக்கும் பாட்டும் பாவு மொன்றென
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே"

என்றார் பல்காயனாராகலானும்,

"பாவென மொழியினுந் தூக்கின் பெயரே"

என்றார் நற்றத்தனாராகலானும் எனக்கொள்க.

"எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ டியாப்பு"

என்றது, "**இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே**" என்றமையான் அவை முற்றிய ஆறுறுப்பினையினுங் குற்றமின்றி நடைபெறுவது யாப்பு என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதென்க. சிறப்பென்பது எற்றாற் பெறுதுமெனின், '**என**' என்னுஞ் சொல்லாற் பெறுதும். அது சிறப்பினைக் கூறுமோவெனின், கூறும்; என்னை? "நளியிரு முந்நீ ரேணி யாக" என்னும் 35-வது புறப்பாட்டினுள்,

"முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
* **மரசெனப்** படுவது நினதே பெரும" எனவும்,
† "ஆடுகழைக் கரும்பின் வெண்பூ நுடங்கு
**நாடெனப்** படுவது நினதே யத்தை" எனவும்

சிறப்புப் பற்றிப் புணர்த்தார் சான்றோராகலானும், "**நாடெனப்** படுவது சோழ நாடு," "**ஊரெனப்**படுவது உறையூர்" என்று பரவை வழக்கினுள்ளுஞ் சிறப்பித்துச் சொல்லுவாராகலானுங் கூறினார் எனக்கொள்க.

எனவே, எழுத்துக் குற்றம் முதலாக வுடைய செய்யுள் யாப்பென்று கூறப்படாதென்பது பெறப்பட்டதாயிற்றெனக் கொள்க.

---

* அரசென்றது அரசர் தன்மையை.

† ஆடுகட் கரும்பென்றும் பாடம். இப்பாடத்திற்கு அசைந்த கண்ணினை யுடைய கரும்பென்று பொருள் கொள்ளுப.

அஃதேயெனின், 'எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ, டிழுக்காத தியாப்பெனப் படுமே' என்றாலும், கருதியபொருளைப் பயக்கும். "நடைய தியாப்பு" என்று மிகுத்துச் சொல்லவேண்டியது என்னை யெனின், *அரவ வனப்புடைத் தொடக்கத்தொருசாரனவும் யாப்புறுப்பு என்பது அறிவித்தற்கு என்க. அவை போக்கி, "நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதியுய" என்னும் ஒழிபியற் சூத்திரத்துட் சொல்லுதும். அதனால்,

"நாத முதலாக நல்லுறுப் பேழுமியைந்
தேதமி றன்மையி †லாசாந்—தாதுக்கள்
ஏழும் புணர்ந்த தியாக்கை யெழுத்தாதி
ஏழும் புணர்ந்த தியாப்பு" எனவும்,

"தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்பகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்
கற்றார் மதிக்குங் கலைக்காக்கைப் பாடினியார்
சொற்றார்தந் நூலுட் டொகுத்து" எனவும்

போந்த இவற்றை விரித்துரைத்துக் கொள்க. (௧)

[அசைக்குறுப்பாம் எழுத்தின் வகை இத்துணைத் தென்பது]

2. ‡உயிரே மெய்யே யுயிர்மெய் யென்றா
குறிலே நெடிலே யளபெடை யென்றா
வன்மை மென்மை யிடைமை யென்றா
சார்பிற் றோன்றுந் தன்மைய வென்றா
ஐஔ மகரக் குறுக்க மென்றாங்
§கைம்மூ வெழுத்து மாமசைக் குறுப்பே.

---

* அரவ வனப்பு = ஓசை வனப்பு.

† ஆசு = பொருத்தம்.

‡ "குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே"
என்பது யாப்பருங்கலக் காரிகை.

§ ஆய்தக் குறுக்கத்தினையுஞ் சேர்த்து உறுப்பு பதினொறெனக் கொள்வர் ஒருசாராசிரியர்.

என்பது என்னுதலிற்றோ வெனின் அசைக்கு உறுப்பாம் எழுத்துக்களினது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு:—[1]உயிரும், [2]மெய்யும், [3]உயிர்மெய்யும், [4] குறிலும், [5]நெடிலும், [6]அளபெடையும், [7]வன்மையும், [8]மென்மையும், [9]இடைமையும், 10 — 12 சார்பில் தோன்றும் இயற்கைய மூன்றும், [13]ஐகாரக்குறுக்கமும், [14]ஔகாரக் குறுக்கமும், [15]மகரக் குறுக்கமும் என்ற இப்பதினைந்து திறத்தெழுத்தும் அசைக்கு உறுப்பாவன என்றவாறு.

ஏகாரம் தேற்றம் என்றுமாம். என்று என்பது எண்ணிடைச் சொல். ஆங்கு அசை.

அவற்றுள், 1. **உயிராவன** அகரம் முதல் ஔகாரவீறாய்க்கிடந்த பன்னிரண்டு எழுத்துமெனக் கொள்க; என்னை?

> “அகர முதலா ஔகார மீறா
> யிசையொடு புணர்ந்தவீ ராறு முயிரே”

என்பது சங்கயாப்பாகலின்.

2. **மெய்யாவன** ககரம் முதல் னகரம் ஈறாய்க் கிடந்த பதினெட்டெழுத்துமெனக்கொள்க; என்னை?

> “ககர முதலா னகர மீறா
> யிசைவீ ரொன்பது மெய்யென மொழிப”

என்பது சங்கயாப்பாகலின். மெய் எனினும், உடம்பு எனினும், உறுப்பு எனினும் ஒக்கும்.

3. **உயிர்மெய்யாவன** உயிரும் மெய்யும் கூடின வெழுத்தெனக் கொள்க; என்னை?

> “உயிரு மெய்யும் புணர்ந்த புணர்ச்சி
> யுயிர்மெய் யென்றுங் குணர்த்தினர் கொளலே” எனவும்,
>
> “உயிரு மெய்யு மொருங்கியைந் தனவும்
> உயிர்மெய் யென்ப வுணர்ந்திசி னோரே” எனவும்,
>
> “உயிரி னளபே யளபென மொழிப” எனவும்,
>
> “உயிரி னளபுயிர் மெய்யென மொழிப
> வழக்கொடு வருஉங் காலை யான” எனவுஞ்

சொன்னார் தொல்லாசிரியராகலான்.

பதினெட்டு மெய்மேலும் பன்னிரண்டு உயிரும் ஏற இருநூற்று ஒருபத்தாறு உயிர்மெய்யாம்; என்னை?

"உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
அம்மூ வாறு முயிரோ டுயிர்ப்ப
இருநாற் றொருபத் தாறுயிர் மெய்யே"

என்பது பல்காயமாகலின்.

4. **குற்றெழுத்தாவன** அ, இ, உ, எ, ஒ, என்னும் இவ்வைந்து மெனக்கொள்க; என்னை?

"குறிலோ ரைந்து மறிவுறக் கிளப்பின்
அ இ உ எ ஒ வென்னு மிவையே"

என்பது சங்கயாப்பாகலின்.

5. **நெட்டெழுத்தாவன** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, என்னும் இவ்வேழும் எனக்கொள்க; என்னை?

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வென்னும்
ஏழு நெட்டெழுத் தென்ற லியல்பே"

என்பது சங்கயாப்பாகலின்.

"அ இ உ எ ஒவிவை குறியமற் றைய
யேழ்நெட் டெழுத்தா நேரப் படுமே"

என்பது அவிநயம்.

"குற்றெழுத் தைந்தொண் ணூற்றைந் தாகும்
நூற்றொடு முப்பத்து மூன்று நெடில்"

"இருநாற் றிருபத் தெட்டுவிரிந் தனவுயிரே
வன்மை மென்மை யிடைமை யென்ப"

எனப்போந்த விவற்றாற் கண்டு கொள்க. இவை அவிநயம்.

6. **அளபெடையாவன** மாத்திரை குன்றலிற் சீர்குன்றித் தளை கெட நின்றவிடத்து, யாப்பழியாமைப் பொருட்டு வேண்டப் பட்டன; என்னை?

"மாத்திரை வகையாற் றளைதப கெடாநிலை
யாப்பழி யாமையின் றளபெடை வேண்டும்"

என்றாராகலின்.

அவ்வளபெடைதான் இரண்டு வகைப்படும், உயிரள பெடையும் ஒற்றள பெடையுமென; என்னை?

" [1]உயிரள பெடையு [2]மொற்றள பெடையுமென்
றுயிரண் டென்ப வளபெடை தானே "

என்றாராகலின்.

உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்கு மிடத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்தும் தமக்கினமாகிய குற்றெழுத்தினோடு அளபெடுக்கும். ஐகாரம் இகரத்தோடு அளபெடுக்கும்; ஔகாரம் உகரத்தோடு அளபெடுக்கும்: என்னை?

" குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே "
"ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும் "

என்றார் தொல்காப்பியனாராகலின். அவ்வளபெடை தான் நான்கு வகைப்படும், [1]தனிநிலை அளபெடையும், [2]முதனிலை அளபெடையும், [3]இடைநிலை அளபெடையும், [4]இறுதிநிலை அளபெடையும் என: என்னை?

" [1]தனிநிலை [2]முதனிலை [3]யிடைநிலை [4]யீறெனா
நால்வகைப் பநீஉமள பாய்வரு மிடனே "

என்றாராகலின்.

அவை வருமாறு:—

1 ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என நெட்டெழுத் தேழும் தனிநிலை அளபெடையாய் வந்தவாறு;

2 பாஅரி, கீஇரை, கூஉரை, பேஎரி, தைஇயல், ஓஒரி, ஔஉவை என இவை யேழும் முதனிலை அளபெடையாய் வந்தவாறு;

3 படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎபம், வனைஇயம், புரோஒசை, மஔஉகம் என ஏழு நெட்டெழுத்தும் இடைநிலை அளபெடையாய் வந்தவாறு;

4 படாஅ, குரீஇ, கழூஉ, விலேஎ, விரைஇ, நிலோஒ, அஔஉ என ஏழு நெட்டெழுத்தும் இறுதிநிலை அளபெடையாய் வந்தவாறு.

ஒற்றெழுத்தளபெடை போக்கி "தனிநிலை யொற்றிவை தா மல கிலவே" என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும்.

குற்றெழுத்து ஒருமாத்திரை, நெட்டெழுத்து இரண்டு மாத்திரை, அளபெடை மூன்றுமாத்திரை யெனக்கொள்க; என்னை?

"குறிலொரு மாத்திரை நெடிலிரு மாத்திரை
யளபெடை மூன்றென் றறையல் வேண்டும்"

என்பது பல்காயமாகலின்.

மாத்திரையாவது கண்ணிமைத்தலொடு கைநொடி யொத்த காலம்; என்னை?

"கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"

என்றார் தொல்காப்பியனார்;

"கண்ணிமை கைநொடி யென்றிவை யிரண்டு
மின்னிடை யளவே யெழுத்தின் மாத்திரை"

என்றார் சங்கயாப்புடையார்;

"ஒன்றிரண் டொருமூன் றொன்றரை யரைகா
லென்றனர் பொழுதிவை யிமைநொடி யளவே"

என்றார் பிறரும்.

விளிமுதலாயினவற்றுள் மூன்று மாத்திரையின் மிக்க பலமாத்திரையானும் அளபெடுத்து வருமாயினும், அவை செய்யுட்களுக்குப் பெரியதோர் உபகாரமுடைய வில்லாவாகலின் அவற்றிற்கு இலக்கணம் எடுத்தோதிற்றிலர் எனக் கொள்க.

7. **வன்மையாவன** க, ச, ட, த, ப, ற என்னும் ஆறும்;

8. **மென்மையாவன** ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறும்;

9. **இடைமையாவன** ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறும்; என்னை?

"வன்மை யென்ப கசட தபற"
"மென்மை யென்ப ஙஞண நமன"
"இடைமை யென்ப யரல வழள"

"அவைதாம்,
புள்ளியொடு நிற்ற லியல்பென மொழிப
புள்ளியில் காலை யுயிர்மெய் யாகும்"

என்பவை சங்கயாப்பாகலின். அவை ஓரோவொன்று அரை யரை மாத்திரை யெனக் கொள்க; என்னை?

" உறுப்பி னளவே யொன்றரை யாகும் "

என்றார் கையனார்;

" அரைநொடி யளவின வறுமூ வுடம்பே "

" அரைநொடி யென்ப தியாதென மொழியின்
நொடிதரக் கூடிய விருவிர லிசையே "

என்றார் சங்கயாப்புடையார்.

10-12 சார்பிற் றோன்றுந் தன்மையவாவன:—குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும் எனவிவை; என்னை?

" குற்றிய லிகரங் குற்றிய லுகரம்
ஆய்தப் புள்ளி யென்றிவை மூன்றுஞ்
சார்பிற் றோற்றத் தரிமையி னளவே "

என்பவாகலின்.

10. அவற்றுள், * ஏழிடத்து ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அதனைக் **குற்றியலுகரம்** என்று வழங்குப; என்னை?

" எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே "

என்றார் பல்காயனாராகலின்.

---

* "நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே"

(தொல்-எழுத்-மொழி மரபு-சூத்-3.) எனவும்,

" ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன் "

(தொல்-எழுத்-குற்றி-சூத்-1.) எனவும்,

" நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே "

(நன்-எழுத்-சூத்-39.) எனவும்

ஆசிரியர் தொல்காப்பியனாரும் ஏனையரும் ஆறிடமே வேண்டினார்; அது புணர்ச்சியின் செய்கை நோக்கியே போலும்.

எழுவகை இடமாவன:— [1]நெடிற்கீழும், [2]நெடிலொற்றின் கீழும், [3]குறிலிணைக்கீழும், [4]குறிலிணை யொற்றின்கீழும், [5]குறினெடிற்கீழும், [6]குறினெடிலொற்றின் கீழும், [7]குற்றொற்றின் கீழும் எனஇவை; என்னை?

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

என்றாராகலின்.

அவை வருமாறு:—

[1]நாகு, காசு, காடு, காது, காபு, காறு என நெடிற் கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

[2]நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று என நெடிலொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றிய லுகரம் வந்தவாறு;

[3]வரகு, முரசு, முருடு, விருது, துரபு, கவறு எனக் குறிலிணைக் கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குறறியலுகரம் வந்தவாறு;

[4]அரக்கு, பொரிச்சு, தெருட்டு, குருத்து, பொருப்பு, சிரற்று எனக் குறிலிணை யொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு;

[5]அசோகு, பலாசு, மலாடு, கொடாது, புதாபு, விராறு எனக் குறினெடிற்கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு;

[6]தமாக்கு, தடாச்சு, பணாட்டு, தொடாத்து, புதாப்பு, விராற்று எனக் குறினெடிலொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு;

[7]நக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று எனக் குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்திணையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

**11.** அக்குற்றியலுகரந்தான் வருமொழிக்கு முதலில் யகரம் வந்தாற் றிரிந்து **குற்றியலிகரமாம்**; என்னை?

"யகர முதல்வரி னுகர மொழிய
விகரமுங் குறுகு மென்மனார் புலவர்"

என்றார் பல்காயனார்;

"வல்லெழுத் தாறே டூவகை யிடத்து
முகர மரையாம் யகரமோ டியையின்
இகரமுங் குறுகு மென்மனார் புலவர்"

என்றார் அவிநயனார்.

அவை வருமாறு:— நாகியாது, காசியாது, காடியாது, காதியாது, காபியாது, காறியாது எனவரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. பிறவாற்றானும் கண்டு கொள்க.

மியாவென்னும் முன்னிலை அசைச்சொற்கண் வந்த இகரமும் குற்றியலிகரமாம்; என்னை?

* "குற்றிய லிகர நிற்றல் வேண்டு
மியாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே"

என்றார் தொல்காப்பியனாராகலின்.

வரலாறு:—†கேண்மியா, சென்மியா எனக் கொள்க. பிறவகையானும் வந்தவழிக் கண்டு கொள்க.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும்; என்னை?

"குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமு
மற்றவை தாமே புள்ளி பெறுமே"

என்பது சங்கயாப்பாகலின்.

உயிருள் எகரமும் ஒகரமும் புள்ளி பெறும்; என்னை?

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்"

---

* "யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய" என்பர் பவணந்திமுனிவர்.

† இது திரியாது வந்த குற்றியலிகரம்.

"எகர ஒகரத் தியற்கையு மற்றே"
என்றார் தொல்காப்பியனாராகலின்.

சார்பிற் றோற்றத்து மூன்றும் அரையரை மாத்திரை யெனக் கொள்க; என்னை?

"மெய்யி னளவே யரையென மொழிப"
"அவ்விய னிலையு மேனை மூன்றே"

என்றார் தொல்காப்பியனாராகலின்.

12. **ஆய்தம்** ஒரு மொழியுள் வருகின்றுழிக் குற்றெழுத்தின் கீழாய், உயிர்மெய்யாகிய வல்லெழுத்தினைச் சார்ந்து வரும்; என்னை?

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே"

என்றார் தொல்காப்பியனார்;

"ஆய்தந் தானே குறியதன் கீழ்த்தாய்
வலியதன் மேல்வந் தியலு மென்ப"

என்றார் கையனார்.

அவை வருமாறு:—அஃகம், வெஃகா, எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு எனக் கண்டு கொள்க. தொடர்மொழி யுள்ளும் அவை வருமாறு வந்தவழிக் கண்டு கொள்க. ஆய்தம் எனினும், அக்கேனம் எனினும், தனிநிலை எனினும், புள்ளி எனினும், ஒற்று எனினும் ஒக்கும்; என்னை?

"அக்கேன மாய்தந் தனிநிலை புள்ளி
யொற்றிப் பால வைந்து மிதற்கே"

என்றார் அவிநயனார்.

13, 14. **இனி ஐகார ஔகாரக் குறுக்கம்** ஆமாறு:—அளபெடுத்தற் கண்ணும், தனியே சொல்லுதற் கண்ணும் என்னும் இரண்டு இடத்தும் அல்லாதவழி வந்த ஐகார ஔகாரம் என்பன தம் அளவிற் சுருங்கி நின்று ஒன்றரை மாத்திரையாம். ஐகார ஔகாரம் தனியே நின்று ஒரோவிடத்து ஒரு பொருளைச் சொல்லுதற்கண் ஒன்றரை, ஒருமாத்திரையுமாம்; என்னை?

" அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ
வுளதா மொன்றரை தனிமையு மாகும்"

என்றார் அவிநயனார். அவை மொழிக்கு 1. முதலும், 2. இடையும், 3. இறுதியும் நின்றவழிக் குறுகுவ எனக் கொள்க.

வரலாறு:—

1ஐப்பசி, மைப்புறம், ஐக்கட்டி;

பௌவம், மௌவல், கௌவை என ஐகார ஔகாரம் முதலில் நின்று ஒன்றரைமாத்திரை யாயினவாறு:

2இடையன், மடையன், உடைவாள், கடைவாள்;

*சிறுதலை நௌவிமான், நறுமலர் வெளவினார், ஒல்லென்பௌவம், கல்லென் கௌவை என ஐகார ஔகாரம் இடையில் நின்று ஒன்றரை மாத்திரை யாயினவாறு:

3குவளை, தவளை திணை, பணை;

அங்கெளஃ, அன்னெள என ஐகார ஔகாரம் இறுதியில் நின்று ஒன்றரை மாத்திரை யாயினவாறு.

பை, மை, கை, வை, தை எனத்தனியே நின்ற ஐகாரமும், கௌ, சௌ, வௌ எனத் †தனியே நின்ற ஔகாரமும் ஒன்றரை ஒரு மாத்திரை ஆயினவாறு கண்டு கொள்க.

**15. இனி மகரக்குறுக்கம்** ஆமாறு-மகரம் ஓரோவிடத்து அரை மாத்திரையிற் சுருங்கிக் கால் மாத்திரையாம். என்னை?

" அரையளவு குறுகன் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை"

---

* ஔகாரம் மொழி முதற்கண்ணே குறுகுமெனப்பிற ஆசிரியர் கூறினரேனும் இந்நூலுடையார் ஒழிந்த இடை, கடை என்னும் இரண்டிடங்களிலுங் கூடக் குறுகும் என்றது தொடர் மொழிக்கண் குறுகுவனவற்றையே கொள்ளற்கு என்க. ஔகாரம் தனிமொழியில் முதற்கண்ணேயன்றி இடை கடை என்னும் இரண்டிடத்தும் பயின்று வாராது என்பதறிந்து கொள்க. அதுபற்றியே சிறுதலை நௌவிமான், நறுமலர் வெளவினார் முதலிய தொடர் மொழிகளை உதாரணமெடுத்துக் காட்டிப் போந்ததூஉ மென்க.

† இரண்டு மாத்திரை யளவினதாய ஐகார ஔகாரங்கள் தனியே நிற்புழியும் ஒன்றரை ஒரு மாத்திரையளவினதாகக் குறுகும் என ஈண்டுக் கூறியது செய்யுட்கண் ஓசையிடர்ப்பட்டொலிக்கு மிடத்து, அவ்வோசை இடர்ப் படாதவாறு கொள்ளற்கு என்க.

என்றார் தொல்காப்பியனார். அது வகரமோடு கூட்டத்தின்கட் குறுகும்; என்னை?

"வகார மிசையு மகாரங் குறுகும்"

எனத் தொல்காப்பியனாரும்,

"வகரமோ டியையின் மகரமுங் குறுகும்"

எனப் பிறருங் கூறினாராகலின்.

வரலாறு:— வரும் வளைகாரன், தனம் விளைநிலம், வாழும் வணிகன், சூழும் வாவிகள் எனக்கொள்க. பிறவகையானும் வந்த வழிக் கண்டு கொள்க.

'**சார்பிற் றோன்றும் தன்மைய**' என்று மிகுத்துச் சொல்லியவத னால் அகரத்தோடு [1]யகர வொற்று வந்தும், [2]ஆய்தம் வந்தும் ஐகா ரத்தின்பயத்தவாய் நிற்கும்; அகரத்தோடு [3]உகரம் வந்தும், [4]வகர வொற்று வந்தும் ஔகாரத்தின் பயத்தவாய் நிற்கும்: என்னை?

"ஆய்தமும் யவ்வு மவ்வொடு வரினே
ஐயெ னெழுத்தொடு மெய்பெறத் தோன்றும்"

"உவ்வொடு வவ்வரி னௌவியல் பாகும்"

என்றார் அவிநயனார்.

வரலாறு:— [1]அய்யன், கய்தை, தய்யல், மய்யல், கய்யன் என அகரத்தொடு யகர ஒற்று வந்து ஐயன், கைதை, தையல், மையல், கையன் என ஐகாரத்தின் பயத்தவாயினவாறு; [2]கஃசு, கஃதம், கஃசம், என அகரத்தோடு ஆய்தம் வந்து கைசு, கைதம், கைசம் என ஐகாரத்தின் பயத்தவாயினவாறு; [3]அவ்வை, நவ்வி, [4]அஉவை, நஉவி, என அகரத்தோடு வகர ஒற்றும் உகரமும் வந்து ஔவை, நௌவி என ஔகாரத்தின் பயத்தவாயினவாறு.

இனி, "அசைக்கு **உறுப்பே**" என்பதில் ஏகாரம் ஈற்றசை; அல்லன எண்ணேகாரம்; என்னை?

"தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே"

**என்றார்** தொல்காப்பியனாராகலின். "**என்று**" என்பது எண் **ணிடைச்சொல்; என்னை?**

" உம்மை தொக்க வெனுவென் கிளவியும்
ஆவீ றாகிய வென்றென் கிளவியும்
ஆயிரு கிளவியு மெண்ணுவழிப் பட்டன "

எனத் தொல்காப்பியரும்,

" குற்றெழுற் றென்று நெட்டெழுற் றென்று
ஒற்றே யுயிரே யென்மனார் புலவர் "

எனப் பிறருஞ் சொன்னா ராகலானுங் கொள்க.

" **ஆங்கு** " என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஓரெழுத்தே ஒரு பொருள் பயந்து நிற்பன சிறப்பெழுத்தென்றும், இயைந்து பொருள் பயப்பன உறுப்பெழுத்தென்றும் வழங்கப்படுமெனக் கொள்க. எழுத்தெல்லாம் உயிரும், மெய்யும், உயிர்மெய்யும் என அடங்குவனவற்றை இவ்வாறு விகற்பித்துச் சொல்லியது, எழுத்துக்களது பெயர்வேறுபாடுகளெல்லாம் அறிவித்தற்கும், அப் பெயரால் பெயராக்கி ஆளுதற்கும் எனக்கொள்க. அல்லதூஉம் பிறரும் விகற்பித்துச்சொன்னார் எனக் கொள்க; என்னை?

" குறினெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமையொ டாய்தம்
இ உ ஐயென மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும் "

என்றார் காக்கைபாடினியார்;

" குறிய நெடிய வுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமை யளபெடை
மூவுயிர்க் குறுக்கமு மாமசைக் கெழுத்தே"

என்றார் சிறுகாக்கைபாடினியார்;

" நெடிய குறிய வுயிர்மெய் யுயிரும்
வலிய மெலிய விடைமை யளபெடை
மூவுயிர்க் குறுக்கமோ டாமசைக் கெழுத்தே "

என்றார் அவிநயனார்;

" குறினெடி லாய்த மளபெடை யைகாரக்
குறில்குற் றிகர வுகர—மறுவில்
உயிர்மெய் விராய்மெய்யோ டாறுநெழுத்தாஞ்
செயிர்வன்மை மென்மை * சமன்"

என்பது நாலடி நாற்பது என்னும் புறனடை;

" உயிருறப் புயிர்மெய் தனிநிலை யெனாஅக்
குறினெடி லளபெடை மூவின மெனாஅ
வலிகிய நாலுயிர் மலிகான் குறுக்கமோ
டைந்துதலை யிட்ட வையீ ரெழுத்து
மசைதொடை நேரசை யாகு முறப்பென
வசையறு புலவர் வகுத்துரைத் தனரே"

இது பெரிய பம்மம்;

" குறிலுயிர் வல்லெழுத்துக் குற்றுகர வாதி
குறுகிய ஐ ஔமவ் வாய்த—நெறிமையா
லாய்ந்த வசைதொடைதாம் வண்ணங்கட் கெண்முறையா
லேய்ந்தன வந்நான் கெழுத்து"

இது நாலடி நாற்பது என்னும் அசைப்புறனடை.

இவ் வெழுத்துக்களாற் செய்யுள்வருமாறு:—

[1]உயிர் மிக்கு வந்த செய்யுள்:—

" ஐயாவோ வையாவோ வையாவோ வெய்யாயோ
கையாயோ வைய களிறு"

[2]மெய் மிக்கு வந்த செய்யுள்:—

" பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

[3]உயிர்மெய் மிக்கு வந்த செய்யுள்:—

" படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசருளேறு"

[4]குற்றெழுத்து மிக்கு வந்த செய்யுள்:—

" கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

* சமன்-இடைமை.

5நெட்டெழுத்து மிக்கு வந்த செய்யுள்:—

"யாகாவா ராயினு நாகாக்கக் காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

* 6உயிரளபெடை நான்கும் வந்த செய்யுள்:—

"ஏஎர் சிதைய வழாஅலே லாஅய்பின்
சேஎயரி சிந்திய கண்"

7வன்மை மிக்கு வந்த செய்யுள்:—

"தெறுக தெறுக தெறுபகை செற்றுற்
பெறுக பெறுக பிறப்பு"

8மென்மை மிக்கு வந்த செய்யுள்:—

"மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்"

9இடைமை மிக்கு வந்த செய்யுள்:—

"வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வா ரயலுழுவார்
ஆழ்வாராம் வாரார் வர"

10குற்றியலுகரம் மிக்கு வந்த செய்யுள்:—

"குருந்துக் குறைத்துக் கொணர்ந்து நமது
கருப்புச் செருப்புப் பரப்பு"

11குற்றியலிகரம் வந்த செய்யுள்:—

"குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்"

"சிலையன் செழுந்தழையன் சென்மியா வென்று
மலையகலான் மாடே வரும்"

12ஆய்தம் வந்த செய்யுள்:—

"அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்"

---

*** ஏஎர் என்பதன்கண் முதனின்றும், வழாஅ என்பதன்கண் கடைநின்றும், ஏலாஅய் யென்பதன்கண் இடைநின்றும், சேஎ என்பதன்கண் தனியேநின்றும் உயிர் அளபெடுத்தமை காண்க,**

13ஐகாரக் குறுக்கம் வந்த செய்யுள்:—

“ படிமலைழத் தண்மலை வெற்ப னுறையு
நெடுந்தகையைக் கண்டதா நாள் ”

14 ஔகாரக்குறுக்கம் வந்த செய்யுள்:—

“ நௌவிமா னோக்கினை ரைவாய் மணிமுறுவல்
வௌவாதார் கௌவை யிலர் ”

“ அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும் ”

15 மகரக் குறுக்கம் வந்த செய்யுள்:—

“ தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும் ”

“ தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி ”

மகரக்குறுக்கத்துக்குப் பயன் மாபுராண முடையார் எடுத்தோதினர்; என்னை?

“ கழிநெடி லடியுங் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர் ”

என்றாராகலின்.

“ ஆய்தமு மொற்று யடங்கினு மாங்கதனை
ஓதினர் தொன்னூ லுணர்வுடையோர்—நீதியால்
ஒற்று யடங்குகினு முன்கால வேற்றுமையாற்
சொற்றார் மகரச் சுருக்கு ” எனவும்,

“ மெய்யென்ற சொல்லானே மிக்கமக ரத்தினையும்
நைய மடங்கு நனியென்னின்—ஐயென்ப
தாவியென வடங்கு மலைகிற் றெனின்மகரத்
தேய்விற்கு மலைதே திறம் ” எனவுங்

கூறினர். இன்னும் மகரக் குறுக்கத்தின் பயன் மாபுராணத்திடத்துக்காண்க, ஈண்டு உரைப்பிற் பெருகும்,

"உயிரென்ற சொல்லானே யொன்பதா மாவி
செயிரின்றிச் சென்றடங்கு மேனும்—பயில்புரைத்தார்
குன்றுதலா லெண்ணிற் குணம்புரிந்தா ரௌவுந்தான்
குன்றுதலாற் கூறப் படும்" எனவும்,

"கால விகற்பத்தாற் கட்டுரைக்கப் பட்டவற்றுண்
மூல வியனூன் முறைமையான்—ஞாலத்து
ளெல்லா மெடுத்துரைத்தார்க் காமோ சிலவெழுத்துச்
* சொல்லாதார்க் காகுமோ தோம்" எனவும்,

"அசையாக்குந் தன்மையவே யன்றித் தொடையோ
டிசையாக்கு மேனையவுஞ் சொற்றார்—இசைதொடைதா
மாக்கு மெழுத்தனைத்துஞ் சொன்னா ரசைமுகத்தாற்
றாக்கிய நூற் கேற்பத் தொகுத்து" எனவும்,

"குறிலு நெடிலு மளபெடையு மொற்று
மறிஞ ரசைக்குறுப்பா மென்பர்—வறிதே
† யுயிர்மெய்யு மூவினமென் றோதினா ரென்று
செயிரவர்க்கு நின்றதோ சென்று" எனவும்,

"வடாது தெனாதென்று வைத்ததனுன் மற்றாண்
டெடாதனவுஞ் சொற்றா ரினத்தாற்—கெடாததுபோன்
மஃகான குறுக்கம் வகுத்ததனுன் மாட்டெடுத்தா
ரஃகாய்தந் தானு மசைக்கு" எனவும்,

‡ "ஐயௌமவ் வென்றிவற்றிற் காங்குற்ற ஞாபகமா
னையாது கார நடத்தாதே—மெய்யானே
கற்றாய்ந்த நூலோ ரிகரம் புணர்த்ததூஉம்
குற்றாய்தந் தானுங் கொளற்கு" எனவும்,

---

* 'இல்லார்ச் சுருக்க நிலே' எனவும் பாடம்.

† 'உயிர்மெய்யம் மூவினமென் றோதினா ரேனும்' என்றும் பாடம்.

‡ 'ஐயௌவு மென்றிவற்றிற் காங்கந்த நீபமா' என்றும் பாடம்.

"சிறப்புடைய வல்ல வெனவிவற்றுட் கொள்ப
சிறப்புடைய வென்பவே சிந்தித்—துறுப்பசைக்கட்
காலளவா மொற்றினையுங் கைக்கோடல் காரணமா
நூலளவிற் சொற்றார் நுனித்து" எனவும்,

"ஐம்மூ வெழுத்து மசைக்குறுப்பா மென்பதன்கண்
உம்மைதா மெச்ச மெனவுரைப்பர்—ஐம்மூன்றின்
மிக்கனவுங் கைக்கோடல் வேண்டி வியன்பொருளை
மெய்ப்படுக்கு மாங்கே விதப்பு" எனவும்,

"மகரக் குறுக்கம் வகுத்ததுதா னய்தற்
கிகரக் குறுக்க முதலாப்—புகரற்ற
நாலொன்று மெண்ணுதே நாட்டுதன் ஞாபகமாய்
நூலொன்றி நிற்றற் பொருட்டு" எனவும்

போந்த இவற்றை விரித்துரைத்துக்கொள்க. இன்னும் மகரக் குறுக்கத்திற்குப் பயன் மாபுராணத்திடத்துக் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

[ஆய்தத்திற்கும் ஒற்றிற்குஞ் சிறப்புவிதி]

**3. தனிநிலை யொற்றிவை தாமல கிலவே
யளபெடை யல்லாக் காலை யான.**

மேற் சூத்திரத்துட் பொதுவகையானே எல்லா வெழுத்தும் அசைக்கு உறுப்பாம் என்றார்: அவற்றுள் சிலவற்றை விலக்கி ஒரோவழியே யாமாறு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். அவற்றுள் இச்சூத்திரம் ஆய்தத்திற்கும் ஒற்றிற்கும் எய்தியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு:—ஆய்தமும் ஒற்றும் தாமாக அலகு காரியம் பெறா, அளபெழுந்த வழியல்லாத விடத்து என்றவாறு.

எனவே, ஆய்தமும் ஒற்றும் ஒரோ ஒன்றேயாய் (தனியே)நின்று அலகுபெறா வென்பதாம்.

வரலாறு:—கார்க்கோதை, கதிர்ச் செங்நெல், கடாய்க்கன்று; என இவற்றுள் இரண்டு ஒற்று ஒருங்கு நிற்பினும், ஒரு மாத்திரை யுடைய எழுத்தின் பயத்தவாய் அலகு காரியம் பெறுங்கொலோ வெனின், பெறா வென்பதூஉம் பெறப்பட்டது. என்னை?

"அளபெழி னல்லதை யாய்தமு மொற்று
மலகியல் பெய்தா வென்மனார் புலவர்"

என்றார் அவிநயனார்;

"ஒற்றள பெழாவழிப் பெற்ற வலகிலவே"

"ஈரொற் றாயினு மூவொற் றாயினு
மோரொற் றியல வென்மனார் புலவர்"

எனவுஞ் சொன்னார் பிறரும் எனக் கொள்க. ஆய்தமும் ஒற்றும் தாமாக அலகு பெறாவெனவே, வேறொரு எழுத்தோடு கூடி நின்ற பொழுது அலகு காரியம் பெறும் என்பதாயிற்று. என்னை? தேவதத்தன் தானாகப் போகலான் என்றால் துணைபெற்றால் போவான் என்பதாம்; அது போலக் கொள்க. அவை வருமாறு:—

"தனிநிலை யொற்றிவை **தாமல கிலவே**
அளபெடை **யல்லாக் காலை** யான" எனவே,
தனிநிலை ஒற்றிவை **தாமலகு பெறாஉ**
மளபெடை **யாகிய காலை** யான

என்பது பெறப்பட்டது என்பதாயிற்று.

"ஆய்தமு மொற்று மளபெழ நிற்புழி
வேறல கெய்தும் விதியின வாகும்"

என்றார் காக்கை பாடினியாரும் எனக் கொள்க.

"தாமலகிலவே" என்றவழி 'ஏகார' விகற்பினால் ஒற்றும் ஆய்தமும் அளபெழுந்து குற்றெழுத்தின் பயத்தவாய் ஓர் அலகு பெறுவது அல்லது, முன்னும் பின்னும் நின்ற எழுத்தினோடு புணர்ந்து நிரையசை யாகாவெனக்கொள்க. '**இவை**' என்னும் சுட்டுவிகற்பினால் ஒற்றினுள் அளபெழுவன, '**தாம்**' என்பதனாற் பெறப்பட்ட ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, என்னும் பத்து மெய்யும், ஆய்தமும் குறிற் கீழும் குறிலிணைக் கீழும் வந்து இறுதிநிலை அளபெடையும், இடைநிலை அளபெடையும் அன்றி ஆகாவெனக் கொள்க. என்னை?

"ஙஞண நமன வயலள வாய்தம்
ஈரிடத் தளபெழு மொரோ வழியான"

என்றார் பிறரும் எனக் கொள்க.

அவை வருமாறு:—மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு என ஆய்தத்தோடு பதினொன்றும் குறிற்கீழ் அளபெழுந்தவாறு; அரங்ங்கம், உரிஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு என ஆய்தத்தோடு பதினொரெழுத்தும் குறிலிணைக்கீழ் அளபெழுந்தவாறு. இவ்விருபத்திரண்டு புள்ளி அளபெடையுஞ்செய்யுளகத்தல்லது பரவை வழக்கினுள் வாரா எனக் கொள்க. என்னை?

"மாத்திரை வகையாற் றளைதப கெடாநிலை
யாப்பழி யாமையின் றளபெடை வேண்டும்"

என்றாராகலான். அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"எஃஃகி லஃஃகிய வெஃஃகுணர் நாவினர்
வெஃஃகின் வெஃஃகுவர் வீடு" எனவும்,

"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு" எனவும்,

ஆய்தம் அளபெழுந்து நேரசையாயினவாறு கண்டு கொள்க.

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலா
ளென்ன் *குறமகளா மாறு" எனவும்,

"அம்ம் பவள வரிநெடுங்க ணாய்வஞ்சிக்
கொம்ம் பவளக் கொடிமருங்குல் கோங்கி
னரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்" எனவும்,

"வாளோர் தடங்கண் வகையாலும் வைகலும்
வாளா விருக்கும் வகையாலும்—நாளும்
விழைந்ந்து †வேமென்று சிந்திப்பாள் போலும்
குழைந்ந்த கோதை குறிப்பு" எனவும்,

* பிறமகளாமாறு எனவும் பாடம்.
† 'வேமென்று சிந்திப்பாள்' என்றும் பாடம்.

"கண்ணன் டண்ணெனக் கண்டுங் கேட்டும்" எனவும் *ஒற்று அளபெழுந்து நேரசையாயினவாறு. பிறவும் வந்துழிக் கண்டு கொள்க.

"ஆய்தமு மொற்றெனப் பெற்றசை யாக்குமென்
றோதி னருள ராகவு மொண்டமிழ்
நாத ராயவர் நாவலி போரையிற்
கேது வென்றெடுத் தோதினு ரென்பவே"

"நலிபு வண்ண மாய்தம் பயிலும்"

என்றுங் கூறினாராகலின்.

"மறையவரும் வந்தார் வசிட்டரும் வந்தார்
குறைவின்றிக் கொண்டாடல் வேண்டும் - மறையவருண்
மிக்க விழுக்குணங்க ளோக்கி வியனிலத்து
மக்கள் வசிட்டரா மாறு"

பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க (௩)

[இகரவுகரக் குறுக்கத்திற்கும் உயிரளபிற்குஞ் சிறப்பு விதி]

**4. தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய விகரமுங் குற்றிய லுகரமும்
அளபெடை யாவியு மலகியல் பிலவே.**

---

* இதனாற் பெறப்பட்டது யாதோவெனின், ஒற்றுக்கு மாத்திரை அரையன்றே? அது அளபெழுங்கால் ஈரொற்றாய் நின்று ஒரு மாத்திரையளவு பெறும்; அதனால் அது குற்றெழுத்து என்று கொள்ளப்படும். அப்போது அது தனக்கு முன்னும் பின்னும் நின்ற குற்றெழுத்துடன் கூடின் இருகுறில் இணைந்த நிரையசை யென்று கொள்ளப்படும். கொள்ளப்படவே, ஓரசையின் பாற் பட்டுச் சீராகாது செய்யுட் சந்தம் கெடும். ஆதலின் அங்ஙனம் கொள்ளாது தனித்தனி நின்ற இருகுறிலாகக்கொண்டு "தேமா" என்னும் வாய்பாட்டான் அலகுசெய்து கொள்க என்றது பெறப்பட்டது. அம்ம், கொம்ம், அரும்ம், கரும்ம், சண்ண், தண்ண் என்பவற்றுள் நின்ற ஈரொற்றையும் குறிலின் பாற்படுத்து நேரசையாகக்கொள்ளின் வெண்டளை பிழையாது நிற்றல் கண்டுகொள்க.

இச்சூத்திரம் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையுமாகிய விவற்றிற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு :—தளையும், சீரும், வண்ணமும் சொன்ன இலக்கணத்தோடு மாறுகொள வருமேயெனின், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம் பெறா எனக் கொள்க என்றவாறு.

எனவே, எதிர்மறுத்தல் என்னுந் தந்திர உத்தியால்,

> தளைசீர் வண்ணந் தாங்கெடி லவ்வழிக்
> குறுகிய விகரமுங் குற்றிய லுகரமும்
> அளபெடை யாவியு மலகியல் பினவே

என்பதாயிற்று. இதன் கருத்து, தளையும், சீரும், வண்ணமும் ஆமாறு சொன்ன இலக்கணத்தோடு மாறு கொள்ளாது ஒருபகாரம் பெற நிற்பிற் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம் பெறுமென்றவாறு. தளைசீர் வண்ணமாமாறு சொன்ன இலக்கணமும் தளைசீர் வண்ணம் எனப்படும். உபசார வழக்கினால் குண்டலகேசி நீல பிங்கலகேசிகளது தோற்றமுந் தொழிலுஞ் சொன்ன விலக்கணச் செய்யுட்களும் பிரித்து வேறோருபகாரத்தினாற் குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்னும் பெயர்பெற்றாற்போலவெனக் கொள்க. தளைசீர் வண்ணம் என்புழி உம்மை தொகுத்து நிறுத்துப் பின்னர்க் "**குறுகிய விகரமும், குற்றிய லுகரமும் அளபெடையாவியும்**" என்று உம்மைவிரித்து ஒருநெறியின்றிச் சொல்லவேண்டியது என்னையெனின், ஈண்டு நிரனிறை யென்னப்படாது கூறுமாற்றே கொள்ளப்படும் என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது. அவை வருமாறு:—

> "குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
> மழலைச்சொற் கேளா தவர்"

> "அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
> பொருளல்ல தவ்வூன் றினல்"

என்ற விவற்றுள், "குழலினி தியாழினிது" எனவும், "அருளல்ல தியாதெனில்" எனவும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டு,

" குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல"

என்பதனாற் கொள்க.

" சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ணாளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென்—றறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்"

என இதனுள் 'இன்றிவர்க்கியாஞ் செய்தக்கா ணாளை' என்புழிக் குற்றியலிகரம் வந்து வஞ்சியுரிச்சீராயிற்று. இது வெண்பாவினுள் விரவுக என்னும் ஓத்திலாமையால் வெண்பா அழியா நிற்கும். ஆண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாது என்று களைய வஞ்சி யுரிச்சீரன்றாம்.

இனிக் குற்றியலுகரத்திற்குச் செய்யுள் வருமாறு:—

" கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழ
மென்றுமூடுநீடு பிடியுள போலு—மதனல்
* ஈண்டிடை யிரவிவ ணசை இவரின்
வண்டின் கோதை யுயிர்வா ழலளே"

என இக்குறளடி வஞ்சிப்பாவினுள் குற்றியலுகரம் பல வந்து ஐயசைச் சீரும் ஆறசைச் சீருமாயின. அவ்வாறு வருக என்னும் இலக்கணம் இன்மையால், ஆண்டுக் குற்றியலுகரங்களை இவ்விலக்கணத்தால் அலகு பெறா என்று களையச் சீர் சிதையாதாம். "தாழிரும் பிணர்த்தடக்கை" என்னும் இருசீரடி வஞ்சிப்பாவினுள் "எனைப் பல வெமக்குத்தண்டாது" என ஐயசைச் சீர்வந்ததனுட் குற்றுகரத்தை அலகு பெறுதென்று களையச் சீர் சிதையாதாம். " நலஞ்செலத் தொலைந்து புலம்பொடு பழகி" என்னும் பாட்டினுள், " குண்டுநீடு நீர்க் குளிர்த்ததண்சுனைக் குறித்துக்கூடுவோர் நெறியுணர்த்தவும்" எனவும், "போதுசேர்ந்து கூடுபொறி வண்டினம் புரிந்து வாங்கு வீங்கு நரம்பி னிமிர்தலின்" எனவும் வந்த வஞ்சியடிகளுள்ளும் குற்று

* 'இண்டிடை யிரவிவ ணெறிவரின்' என்றும் பாடம்.

கரங்களை அலகுபெறா என்று களையச் சீர் சிதையாதாம். பிறவு மன்ன. இவற்றுக்கு இலக்கணம் ஓதவேண்டிய தென்னை, குற்றிகர குற்றுகரங்கள் வந்து இன்னாங்காய் அறாத்திசைத்தமையால், அறாத் திசைப்பும், வெறாத்திசைப்பும் குற்றப்பாடெனக் கொண்டு களைந் திடாமோ வெனின், அற்றன்று; அறாத்திசைப்பும் வெறாத்திசைப் பும் குற்றப்பாடு என்று களைந்திடப்படா, பிறசான்றோர் செய்யுளு கத்தும் அருகி வருமாகலான் எனக்கொள்க.

இனி **அளபெடைக்குக்** கூறுமாறு:—

"இடை நுடங்க வீங்கிக் கோதை பின்றாழ வாட்கண்
புடை பெயரப் போழ்வாய் திறந்து—கடை கடையி
னுப்போல வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போ நீர் வேலி யுலகு"

எனவிதனுள் '**உப்போஒ**' என்புழி அளபெழுந்து கலித்தளை தட்டு, வெள்ளையுட் பிறதளை விரவா என்னும் இலக்கணத் தோடு மாறுகொள்ளு மாகலின், ஆண்டு அவ்வளபெடையை இவ் விலக்கணத்தால் அலகுபெறா தென்று விலக்க வெண்டளை பிழை யாதாம்.

"**பிண்ணாக்கோஒ** வென்னும் பிணாவின் முகத்திரண்டு
கண்ணோக் குடையனபோற் கட்டுரைக்குப்—பிண்ணாக்குக்
கொள்ளீரோ வென்பாடன் கூறெயிறு காளையரை
யுள்ளீர்வ போலவுள"

"பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவா—நெல்லுக்கு
**நூறோஒ** நூறென்பா ளுடங்கிடைக்கும் வெம்முலைக்கும்
மாறோமா லன்றளந்த மண்"

"**களிச்சாத்தாஅஅ** வென்றியான் கட்காணா நின்று
விளித்தாலும் வாரான் விரைந்து—களிச்சாத்தன்
வாளாவே தின்பான் வேலைக்குப் போகலான்
காளையாம் பைதல் கவடு"

என்ற இவற்றுள் பண்டமாற்றின் கண்ணும், விளித்தற் கண் ணும் அளபெடையனுகரணங்கள் வந்து வெண்பாவினுள் நால

ணைச் சீராய், வண்ணம் அறுப்புழிச் "செப்பலிசையன வெண்பா" என்னும் இலக்கணத்தோடு மாறாய்ச் செப்பலோசை சிதைய நிற்கும்; ஆகலின் ஆண்டு உயிரளபெடைகளை இவ்விலக்கணத்தால் அலகுபெறுமென்று கொளப, வண்ணம் சிதையாதாம்.

"அளபெடை யாவியும் **அலகில**" என்றது, "அலகியல்பல" என்ற விதப்பினால் ஆண்டு உயிரளபெடைகளை இவ்விலக்கணத்தால் அலகு பெறா என்று நெட்டெழுத்தே போலக்கொண்டு வழங்கப்படுமெனக்கொள்க

இனி யவை அலகு பெறுமாறு:—

"சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவான்—மலைவிலங்குந்
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து"

இதனுட் குற்றியலுகரம் இவ்விலக்கணத்தோடு மாறுகொள்ளாது நின்று அலகு பெற்றவாறு கண்டு கொள்க.

"வந்துநீ சேரி னுயிர்வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலு—முந்தியாங்
கோளாமை கண்டனங் கொல்குறியா யின்னுமோர்
நாளாமை நாம்புணர்ந் தமாறு"

இதனுள் '**வந்து நீ**' என்புழிக் குற்றியலுகரமும், '**முந்தியாய்**' என்புழிக் குற்றியலிகரமும் தளைசீர்வண்ணங்கட்கோர் உபகாரம் பட நின்று அலகு பெற்றவாறு. பிறவும் அன்ன.

"காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
**நாவலோஒ** வென்றிசைக்கு நாளோதை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைப்பப் போலாதே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு"

என இதனுள், '**நாவலோஒ**' என்புழி உயிரளபெடை தளைசீர் வண்ணங்களோடு மாறு கொள்ளாது நின்று அலகு பெற்றவாறு.

"**கடாஅக்** களிற்றின்மேற் கட்படாஅ மாதர்
**படாஅ** முலைமேற் றுகில்"

" காஅரி கொண்டான் கதச்சோ மதனழித்தான்
ஆஅழி ஏந்த லவன் "

இவற்றுள் 'கடாஅக்களிறு' 'படாஅமுலை' 'காஅரி' 'ஆஅழி' என்புழி வந்த உயிரளபெடைகள் தளைசீர் வண்ணங்களோடு மாறு கொள்ளாது நின்று அலகு பெற்றவாறு.

" தூஉபத் தீம்புகை தொல்விசும்பு போர்த்ததுகொல்
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்
மாஅ மிசையாஅன் சொன்ன நறுநுதலா
ராஅமெ யெல்லாம் பசப்பு "

என்பதூஉங் கொள்க.

'சீர்தளை வண்ணம்' என்னாது 'தளைசீர் வண்ணம்' என்று முறை பிறழக் கூறினமையாற் குற்றியலிகர குற்றியலுகரங்களைக் குற்றெழுத்தே போலக்கொண்டு அலகிடப்படும் எனக்கொள்க. 'தளை சீர் வண்ணம் கேடவரும்' என்னாது 'தாம் கேடவரினே' என்ற விதப்பினால் தனிநிலை அளபெடை நேர்நேராகவும், இறுதிநிலை அளபெடை நிரைநேராகவும் வைக்கப்படும், மூன்றுமாத்திரையின் மிக்க பல மாத்திரையான் வரினும் எனக்கொள்க; என்னை?

" தனிநிலை யளபெடை நேர்நே ரியற்றே
இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே"

என்றாராகலின்.

" இடைநுடங்க வீஇங்கோதை" என்னும் தொடக்கத்தன அளபெடுப்பனவல்ல; என்னை?

"மாத்திரை வகையாற் றளைதப கெடாநிலை
யாப்பழி யாமையின் றளபெடை வேண்டும்"

என்றாராகலின், கூட்டவும் விலக்கவும் பட்டது. அதனால் இச்சூத்திரத்துள் "அளபெடை யாவியும்" என்பது வேண்டா வென்று விடுத்திடலாமோ வெனின், அற்றன்று; செய்யுளகத்துள்ளும், பரவை வழக்கினுள்ளும் "கடாக்களிற்று" "படாமுலை" என்றும் அளபெடாதே தத்தம் பொருளைப் பயக்கும் சொற்கள் ஒருகாற் செய்

யுள்கத்து வந்து மாத்திரை சுருங்கிச் சீரும் தளையும் சிதையவந் தால், "கடாஅக் களிற்றின்மேற் கட்படாஅ மாதர், படாஅ முலைமேற் றுகில்" என்று சீருந்தளையும் சிதையாமே அளபெடுக்கும்.

"நிலம்பாய்ப்பாய்ப் பட்டன்று நீலமா மென்றோள்
கலம்போய்ப்போய்க் கௌவை தரும்"

என்றித் தொடக்கத்தன மாத்திரை சுருங்கிச் சீரும் தளையும் சிதைய நில்லாவாகலின் அளபெடா வென்பது; என்னை? "மாத்திரை வகையாற் றளைதப கெடாநிலை, யாப்பழியாமை நின்றள பெடை வேண்டும்" என்றாராகலின். இதன் கருத்து, பரவை வழக்கினுள் விளியும், பண்டமாற்றும், நாவல்கூறலும், அவலமும், அழுகையும், பூசலிடுதலும், முறையிடுதலும் முதலாயவற்றுள் அள பெடுத்த மொழிகள் செய்யுளகத்து வந்து உச்சரிக்கும் பொழுது அளபெடா என்பது இலக்கணம் இன்மையிற் செய்யுளகத்து வந்து தளைசீர் வண்ணம் கெடநின்றால் அலகுபெறா என்பது. ஆதலின், "அளபெடை யாவிபு மலகியல்பிலவே" என்பது சொல்லவேண்டு மென்க. அல்லதூஉம்,

"ஆழி யிசைப்பப் பகல்போ மிரவெரிற்
றோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் **திரையவோஒ** வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து"

என்னும் பொய்கையார் வாக்கினுள், "**திரையவோஒ**" என்பதனைப் புளிமாங்காயாக வைப்பினும், வகையுளி சேர்த்துக் கருவிளமென் னுஞ் சீராகவைப்பினும் சீருந்தளையுஞ் சிதைந்து செய்யுள் அழிய நி[illegible]தன்றாயினும், விளி முதலியவற்றுள் அளபெழுந்து செய்யுளி டத்தும் வந்து அவ்வாறே சொல்லப்படும் என்னும் கருத்தினனே, அகத்தியனார் அறுவகையானந்த ஓத்தினுள் இதனை,

"இயற்பெயர் சார்த்தி யெழுந்தள பெழினே
வியற்பா டில்லா வெழுத் தானந்தம்"

என்றார் என்க; பிறருங் கூறினாரென்க.

"சீர்தளை சிதைவுழி யீருயிர்க் குறுக்கமும்
நேர்த லிலவே யுயிரளபெடையும்"

என்றார் மயேச்சுவரர்;

"இஉ இரண்டன் குறுக்கந் தளைதப
நிற்புழி யொற்றா நிலையின வாகும்"

"உயிரள பேழு முரைத்த முறையான்
வருமெனி னவ்வியல் வைக்கப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்;

"உயிரள பெடையுங் குறுகிய வுயிரி
னிகர வுகரமுந் தளைதபி னொற்றாம்"

"சீர்தப வரினு மொற்றியற் றாகும்"

என்றார் அவிநயனார்;

"ஐந்தா றளையி னருகி யுகரத்தின்
வந்தசீ ரொன்றிரண் டொப்பித்து—நந்தாவித்தால்
வஞ்சிப்பா விற்கியலு நாலசைச்சீர் வண்ணுரிச்சீர்
தங்கி விரவத் தரும்"

என்றார் பிறரும்.

**"ஆற்றல்சா லாவி முயல வகத்தியல்கா
லேற்றெழுந்த தேட்டிடத்து முத்திறத்தாற்—றேற்றி
விசையா மணுக்கந்தா மைந்தெழுத்தாய்ப் பத்துத்
திசையாய்ச் செவிப்புலனாய்ச் சென்று"**

இதனை விரித்துரைத்துக் கொள்க. (௪)

எழுத்தோத்து முற்றியது.

# உ. அசையோத்து

[அசையின் வகை இவையென்பது]

**5. *நேரசை யென்று நிரையசை யென்று**
**வாயிரண் டாகி யடங்குமன் னசையே**

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வென்னின், எழுத்தினானும் அசையாமாறு உணர்த்திற்றுதலான், அசை யோத்து என்னும் பெயர்த்து.

ஆயின் இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எழுத்தினாக் கப்பட்ட அசைகளின் பெயர் வேறுபாடு உணர்த்துதனுதலிற்று.

இதன் பொருள்:—"நேரே நிரையே நேர்பே நிரைபென, ஈரி ரண்டென்பவசையின் பெயரே" என விரித்து உரைத்தாராயினும், தொகுத்து நோக்குங்கால், "அசையே"—அசையே; "நேரசை யென்று நிரையசை யென்று"—நேரசையும், நிரையசையுமென; "ஆயிரண்டாகி அடங்கும்"—அவ்விரண்டாகி அடங்கும் என்றவாறு.

அவ்விரண்டாய் வழங்குமாறு:—நேர்நேராய் நேர்படங்கும்; நிரைநேராய் நிரைபு அடங்கும். நேர்நிரை என்னாது "நேரசை" "நிரையசை" என்று விதந்து ஓதியவதனால், நேரசை ஓரலகு பெறும், நிரையசை இரண்டலகுபெறும் எனக்கொள்க; என்னை?

"நேரசையொன்றே நிரையசை யிரண்டல
காகு மென்ப வறிந்திசி னோரே" எனவும்,

"நேரோ ரலகு நிரையிரண் டலகு
நேர்புமூன் றலகு நிரைபுநான் கலகென்
றோதினர் புலவ ருணரு மாறே" எனவுஞ்

சொன்னார் அவிநயனார் ஆகலின்.

---

"*குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புணையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே"

**என்பது யாப்பருங்கலக் காரிகை.**

"நேர்நேர் நிரைநேராய் நேர்பு நிரைபடங்குஞ்
சீர்மே லசைபலவாய்ச் சேருங்கா—லீரியல்பிற்
குற்றிபோற் குற்றிகரங் கொண்டியற்ற நேர்நிரையாய்
முற்றி முடிந்து விடும்"

என்றார் பிறரும்.

இனி, ஒருசார் வட நூல்வழித் தமிழாசிரியர்,
நேர்நிரை நேர்பு நிரைபென நான்கும்
* ஆடுருபி வடிவாக விடுவா ருமுளர்.
" நேர்நிரை நேர்பு நிரைபென நான்கு
† மாடுருபிப் போல ‡வொருவிர னேரே"
" விரலிடை யிட்டன வசைச்சீர் நாலசை
விரல்வரை யிடையினு மான மில்லை"
" விரலிடை யிட்டன வாடுரு வெடிவரி
னிரல்பட வெழுதி யலகு பெறுமே"

என்றார் மயேச்சுவரர்.

இனி, நேரசை நிரையசைகளைத் தனியசை இணையசை யென் பாருமுளர்; என்னை?

"தனியசை யென்று மிணையசை யென்று
மிரண்டென மொழிமனா ரியல்புணர்ந் தோரே"

என்றார் காக்கை பாடினியார். (ரு)

[நேரசை யிவை யென்பது]

## 6. நெடில்குறில் தனியாய் நின்று மொற்றடுத்து
## நடைபெறு நேரசை நால்வகை யானே

என்பது என்னுதலிற்றோ வெனின் அதிகாரம் பாரித்த இரண்டசை யினுள்ளும், முதற்கண் நேரசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—"நெடில் குறில் தனியாய் நின்றும்" என்பது, நெட்டெழுத்துத் தனியே நின்றும், குற்றெழுத்துத் தனியே நின்றும்; "ஒற்று அடுத்தும்" என்பது, நெட்டெழுத்து ஒற்றடுத்துத் தனியே நின்றும், குற்றெழுத்து ஒற்றடுத்துத் தனியே நின்றும்;

* 'மேவ வோடிய விடுவாரு முளர்' எனவும், 'ஆட்டுரு வடிவாக விடுவாருமுளர்' எனவும் பாடமுண்டு.
† 'ஆட்டுருப்போல' எனவும் பாடம்.
‡ 'ஒருவீர் நேரே' என்றும் பாடம்.

"நடைபெறு நேரசை நால்வகை யானே" என்பது, நேரசை நான்கு வகையானும் நடைபெறும் என்றவாறு.

உதாரணம்:— ஆழிவெள்வேல். இதில், "ஆ" தனிநெடில் நேரசை; "ழி" தனிக்குறில் நேரசை; "வெள்" குற்றெழுத்து ஒற்றடுத்த நேரசை; "வேல்" நெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசை; கோல், வேல், கண், கோழி, வேந்தன், காரி, சேந்தன், பெற்றான்வீடு என்றிவை பிறவு மன்ன.

உதாரணச் செய்யுள்:—

"ஆழி நன்மான் கொல்வல் லேற்றை
போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் தாந்நு வோரே"

இவை நேரசை நான்கும் வந்த செய்யுள்; "நடைபெறும்" என்ற விதப்பால் ஒன்றனைப் பாக்கினை என்பதுபோல ஐகார ஔகாரக் குறுக்கமும் நேரசையாம்.

"கன்னிப் பூத்த பொன்னிணர் வேங்**கை**"
"**கைவை** போகிய கருங்காய்ப் பிடிபெழ்
நெய்கொள வொழுகிய பலகவ ரீரெண்"
"**ஔவை** யென்று வெறெடுத் துரைக்கும்
**தௌவை** யென்றன் றோழீ"
"**பௌவத்** தன்ன பாயிரு ணீங்கி"

எனவும் கண்டு கொள்க. (சு)

[தனிக்குறில் நேரசையாகாத விடங்கள்]

**7. குறிப்பே யேவற் றற்சுட் டல்வழி**
**தனிக்குறின் மொழிமுதற் றனியசை யிலவே**

என்பது என்னுதலிற்றோவெனின், மேற்சூத்திரத்துத் தனிக்குறில் குறிப்பின் கண்ணும் ஏவற்கண்ணும் நேரசையாம் என்ற வழி, அது இன்னவிடத்தன்றி ஆகா என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—"குறிப்பே ஏவல் தற்சுட்டு அல்வழி தனிக்குறில்" என்பது, குறிப்பின்கண்ணும், ஏவற்கண்ணும், தற்சுட்டின்

கண்ணும் அல்லாதவழி வந்த தனிக்குறில்; "மொழிமுதல் தனி அசை இலவே" என்பது, மொழிமுதற்கண் நின்று தனிக்குறில் நேரசை ஆதல் இல என்றவாறு. என்னை?

"தற்சுட் டேவல் குறிப்பிவை யல்வழி
முற்றுத் தனிக்குறின் முதலசை யாகா"

என்றார் பல்காயனார்.

உதாரணம்:—

"உண்ணு னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்"

இதனுள் அஆ என்புழிக் குறிப்பின்கண் வந்த தனிக்குறில் அகரம், மொழி முதற்கண் நின்று நேரசையாயிற்று. அஆ என்பது அறிவின்கட் குறிப்பு.

"வெறிகமழ் *தண்சிலம்பின் வீங்கி யுகளும
மறிமுலை யுண்ணாமை வேண்டிப் பறிமுன்கை
அஉ அறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ"

இதனுள் 'நொ' என ஏவற்கண் தனிக்குறில் மொழிமுதற்கண் வந்து நேரசையாயிற்று. "நொ" என்றது ஒன்றைச்செய் என்றமையான் ஏவல். "அஉ அறியா" எனத் தற்சுட்டின்கண் தனிக்குறின் மொழிமுதற்கண் நின்று நேரசையாயின. "அஉ அறியா" என்பதில் அகர உகரம் தன்னை உணர்த்திற்று; ஆகலால் தற்சுட்டு. "குறிப்பே" என ஏகாரம் மிகுத்துக் கூறிய அதனால், சுட்டின் கண்ணும் வினாவின்கண்ணும் ஒரு சார் தனிக்குறில் மொழி முதற்கண்வந்து நேரசையாம்; என்னை?

"ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா
சுட்டினும் வினாவினு முயிர்வரு காலை
யொட்டி வரூஉ மொருசாரு முளவே"

என்றார் மயேச்சுவரர்.

---

* 'தண்புறவின்' என்றும் பாடம்.

உதாரணம்:—

"அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்
எஎவனை வெல்லா ரிகல்"

இதனுள் முன்னைய மூன்றும் சுட்டு. "எஎவன்" என்பது வினா.

"குறிப்பே யேவற்றற்சுட்டு அசையிலவே" என்றதனானே மொழி முதல் என்பது பெறலாம்; என்னை?

"ஒற்றின் றாகியுங் குறிப்பே யேவ
றற்சுட் டல்வழி முதறனி நேராம்"

என்றாராகலின். அவ்வாற்றலாற் பெறவைத்து மொழிமுதல் என்று விகற்பித்த வதனால், குறிப்பே யேவற்றற்சுட்டின் வந்த குற்றெழுத்து விட்டிசைப்பின் அல்லது மற்றொன்றனோடு இயைந்து இனியவாய் நடப்பினும் முதற்கண் நேரசையாகா; வரலாறு:—

"யரல வழள விடையின மென
மரபு பிழை யாத வைப்பு"

"அமருந்து தானை யதிகரதங் கொண்டு
யறியார்தங் கோவே யதிகாதங் கோடுவ
துமருந்து தாயுணவே கொண்டு"

என்ற இவற்றுள், "யரல வழள" என்பன தற்சுட்டின் கண்ணும், "து" என்பது ஏவற்கண்ணும் வந்து விட்டிசையாது, மற்றொன்றனோடு இயைந்து இனியனவாய் நடத்தலின் நேரசையாகாது, நிரையசையாயின. "இலவே" என்னும் தேற்றேகார விதப்பினால் குறிப்பு ஏவல் தற்சுட்டின் கண் வந்த குற்றெழுத்து விட்டிசைத்து நிற்பின் மொழியிடையும் இறுதியும் நின்று நேரசையாம்.

உதாரணம்:—

"அ, இ, உ, எ ஒவ்வினை குறிய மற்றை
யேழ்நெட் டெழுத்தா நேரப் படுமே"

என மொழியிடையிலும் கடையிலும் குற்றெழுத்து தற்சுட்டின்கண் வந்து நேரசையாயின. பிறவும் வந்த வழிக்கண்டு கொள்க. (எ)

[நிரையசை யிவை என்பது]

8. குறிலிணை குறினெடி றனித்து மொற்றடுத்தும்
நெறிமையி னான்காய் வருநிரை யசையே

என்பதென்னுதலிற்றோ வெனின் நிரையசையாமாறு உணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்:—"குறில் இணை குறில்நெடில் தனித்தும்" என்பது, குறில் இரண்டு இணைந்தும், குறில்நெடில் இணைந்தும்; "ஒற்று அடுத்தும்" என்பது, குறில் இணை ஒற்றடுத்தும், குறில் நெடில் ஒற்றடுத்தும்; "நெறிமையின் நான்காய் வரும் நிரை அசையே" என்பது, நிரை அசை இந்த நான்கு முறைமையினும் வரும் என்றவாறு.

"**தனித்தும்**" என மிகுத்த அதனால், நேரசைகட்கும், நிரையசைகட்கும் ஓதிய எழுத்துக்கள் மொழியாய் நிற்பினும், மொழிக்கு உறுப்பாய் நிற்பினும் கொள்ளப்படும். அவற்றுள் பொருள்பயந்து நிற்பன சிறப்பசை என்றும், மொழிக்கு உறுப்பாய் நிற்பன சிறப்பிலசை என்றும் வழங்கப்படும். இவ்விரண்டினானும் எட்டசையும் உறழப் பதினாறாம். "**நெறிமையின்**" என்ற விதப்பினால் நெடில் இரண்டு இணைந்தும், நெடில் குறில் இணைந்தும் நிரையசையாகா; என்னை?

"நெடிலொடு நெடிலு நெடிலொடு குறிலும்
இணையசை யாகுத லிலவென மொழிப"

என்றார் காக்கை பாடினியார்.

உதாரணம்:—வெறி, சுறா, நிறம், விளாம் எனவரும். குறில் இரண்டு இணைந்த நிரையசை "வெறி"; குறில் நெடில் இணைந்த நிரையசை "சுறா"; இருகுறிலிணைந்து ஒற்றடுத்த நிரையசை "நிறம்"; குறில் நெடில இணைந்து ஒற்றடுத்த நிரையசை "விளாம்"; பல, பலா, பலம், பலாம், எனவும்; முயல், பலா, மரு, கிழான் எனவும்; கழி, களு, கடல், கடாம் எனவும்; கரி, பொருள், கடா, கடாம், எனவும் வரும்: பிறவும் அன்ன.

உதாரணச் செய்யுள்:—

"கடியுலாய் நிமிர்ந்த கயங்குடை வரால்"
"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் விரிசொளி வரதனைப்
பணிபவர் பவநணி பரிசறுப் பவரே"

எனஇவை நிரையசை நான்கும் வந்த செய்யுள். அல்லதூஉம்,

“ நெடில் குறிறனியாய் நின்றுமொற் றடுத்துங்
குறிலிணை குறினெடி றனித்துமொற் றடுத்து
நடைபெறு மசைநேர் நிரையசை நாலிரண்டே ”

என்றார் பல்காயனார்;

“ குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே ”

என்றார் தொல்காப்பியனார்;

“ தனிநெடி றனிக்குறி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப ”

“ குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப ”

என்றார் நற்றத்தனார்;

“ நேர்நால் வகையு நெறியுறக் கிளப்பின்
நெடிலுங் குறிலுந் தனியே நிற்றலும்
அவற்றின் முன்ன ரொற்றொடு நிற்றலும்
இவைதா நேரசைக் கெழுத்தி னியல்பே ”

“ இணைக்குறில் குறினெடி லிணைந்து மொற்றடுத்தும்
நிலைக்குரி மரபி னிரையசைக் கெழுத்தே ”

என்றார் சங்கயாப்புடையார்;

“ நெடிலுங் குறிலு மொற்றொடு வருதலுங்
கடிவரை யிலவே நேரசைத் தோற்றம் ”

“ குறிலு நெடிலுங் குறின்மு னிற்பவு
நெறியினொற் றடுத்து நிரையசை யாகும் ”

என்றார் பிறைநெடுமுடிக் கறை மிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியனார்.

“ தனிநெடி லாகியுந் தனிக்குறி லாகியு
மொற்றொடு வந்து நேரசை யாகும் ”

"குறிலிணை யாகியுங் குறிநெடி லாகியு
மொற்றொடு வந்து நிரையசை யாகும்"

என்றார் சிறுகாக்கை பாடினியார். (அ)

[ஐகாரக்குறுக்கம் இரண்டிணைந்து நிரையசையாவது]

9. ஈறு மிடையு மிணைந்து மிணையசை
யாகு மையென்ப வறிந்திசி னோரே

என்பதென்னுதலிற்றோவெனின், ஐகாரக் குறுக்கம் இணையசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொழிப்பு:—சீர்க்கு இறுதியும் இடையும் நின்ற ஐகாரம், ஐகாரத்தினோடு இணைந்து நிரையசையாகும் என்றவாறு.

"இணைந்தும்" என்ற உம்மையான், அல்வழி ஐகாரம் குற்றெழுத்தே போல நின்று பிறிதோர் எழுத்தினோடு இணைந்து நிரையசையாம். சீர் என்பதனை ஆற்றலாற் பெற்றது. அதனை அரிமா நோக்கெனினும், அதிகாரம் எனினும் அமையும். 'குற்றெழுத்தே போல' என்பது "விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்" என்பதாகலானும், "குறுமை யெழுத்தினியல்பே யைகாரம், நெடுமையி னீங்கியக்கால்" என்றாராகலானும் சொல்லப்பட்டது. அந்தமு நடுவு நிரையசையாகும் எனவே, ஆதிக்கண்நின்ற ஐகாரம் நிரையசையாகா என்பது பெறப்பட்டது; என்னை?

"ஐயெ னெடுஞ்சினை யாதி யொழித்தல
கெய்து மிணையசை யென்றிசி னோரே"

என்றார் காக்கை பாடினியார்;

"இடையுங் கடையு மிணையுமை யெழுத்தே"

என்றார் சிறுகாக்கை பாடினியார்;

"கடையு மிடையு மிணையுமை யிரட்டியும்"

என்றார் அவிநயனார்.

உதாரணம்:—

"கெண்டையை வென்ற கிளரொளி யுண்கண்ணாள்
பண்டைய ளல்லள் படி"

"கெண்டையை" என்புழிச் சீர்க்கடைக்கண் ஐகாரம் இரண்டிணைந்து நிரையசை யாயிற்று.

"அன்னையையா னேவ தவமா லணியிழாய்
புன்னையையா னேவன் புலந்து"

இதனுள் "அன்னையை" "புன்னையை" என்னும் இரண்டிடத்தும் சீர்நடு ஐகாரம் இரண்டு இணைந்து நிரை யசையாயின.

"படுமழைத் தண்மலை வெற்ப னுறைபு
நெடுந்தகையைக் கண்டதா நாள்"

இதனுள் "படுமழை" "தண்மலை" என்பவற்றில் கடைக்கண் நின்ற ஐகாரம் குற்றெழுத்தோடு இணைந்து நிரையசை யாயிற்று.

"புன்னைப் பொழிலருகே போயினள் பூங்கொம்பர்
தன்னையருங் காணத் தளர்ந்து"

இதனுள் 'தன்னையரும்' என்புழிச்சீர் நடு ஐகாரம் குற்றெழுத்தி னோடு கூடி நிரையசையாயிற்று.

"பையுண் மாலைப் பழுவம் படரிய
நொவ்வுப் பிறவா வல"

இதனுள் "பையுண்" என்புழிச் சீர் முதற்கண் நின்ற ஐகாரம் நிரை யசையாகாதவாறு காண்க.

"நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
யடைப்பையா கோறு வெனலு - மடைப்பையான்
கொள்ளச் சிறுகோல் கொடுத்தான் றலைபெறினு
மெள்ளா தியாங்கண் டிலம்"

இதனுள் "அடைப்பையா" என்புழிச் சீர் நடுஐகாரம் நெட்டெழுத்தி னோடியைந்து நிரையசை யாயிற்று.

"மொழிபுணர்ந்த சீர்முதற்கண் மும்மூன்று மாவி
யிழிபு மிணையசையா மென்பர்— ஒழிவின்றித்
தேவைத்த தாகச் சிவணு முதற்குறிப்பே
யேவற்க ணின்று மெனல்"

"குறிப்பேயேவற்சுட்டு" என்னும் சூத்திரத்துணின்றும் "சீர் முதல்" என்று அதிகாரம் வருவித்து, "மொழி புணர்ந்த சீர்முதற்

கண் மும்மூன்றுமாகி யிழிபும் இணையசையாம்" என்று ஐகாரக் குறுக்கம் பிறிதொன்ற னோடிணைந்தும், ஐகாரத்தினோடிணைந்தும் நிரையசையாம் என்று கூட்டிப்பொருள் உரைக்கப்படும்; என்னை?

"வேண்டியது நிறுவி வேண்டாப் பொருள்விலக்கு
மாண்பினதாய் நிற்பதா நூல்"

என்பதாகலான்.

வரலாறு:—"பூந்தாமரை" யென்னும் பாட்டினுள்,

"புகழ்தலானுப்பெரு வண்மையனே" எனவும்,

"வன்கொன் றையைமருட்டும் வண்டார் குழன் மடவாள்
கண்கெண் டையைமருட்டுங் காண்" எனவும்

வருதல் கண்டுகொள்க.

"வழுக்கி னியல்வகையின் வாய்மையால் வேறு
யிழுக்கி னொறும்போழுக்கே போலு—மெழுத்தி
னிசைத்தொடர்ச்சி மாலையை யெண்முறையாற் கண்டித்
தசைத்திசைய வைப்ப தசை"

இதனை விரித்துரைத்துக் கொள்க. (கூ)

அசையோத்து முற்றியது.

# ௲. சீரோத்து

[சீர்களது பெயர் வேறுபாடு]

10. *இயற்சீ ருரிச்சீர் பொதுச்சீ ரென்று
மயக்கற வகுத்த சீர்மூன் றாகும்.

இவ்வோத்து அசையினாற் சீராமாறு உணர்த்திற்று; ஆதலாற் சீரோத்து என்னும் பெயர்த்து.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அசைகளானாகிய சீர்களது வேறுபாடும் அவற்றதெண்ணு முணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர்' என்று என்பது, இயற்சீரும், உரிச்சீரும், பொதுச்சீரும் என்று; 'மயக்கற

---

* "ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே"

என்பது யாப்பருங்கலக்காரிகை.

இயற்சீரை, முதற்சீரெனவும், உரிச்சீரை இடைச்சீரெனவும், பொதுச்சீரைக் கடைச்சீரெனவும் வழங்குவர் வீரசோழிய நூலுடையார்; என்னை?

குறிலு நெடிலு மெனுமிவை நேரசை; குற்றெழுத்துப்
பெறின்மு னிவையே நிரையசை யாம்;பிழைப் பில்லைபின்பொற்
றிறினும் அசையிரண் டொன்றின்முற்சீர்மூவசை யொன்றிநே
ரிறுவதிடைச்சீர் நிரையிறிற் பிற்சீ ரெனவியம்பே (வீரசோழியம்-யாப்பு-1.)

கருவிளங் கூவிளந் தேமா புளிமா வெனக்கலந்து
மருவிய நான்கு முதற்சீர் களாமற் றவற்றினந்தத்
துருவமாங் காய்வரி னுமிடைச் சீரொண் கனிவருமேற்
செருவமர் வேற்கண்ணி னுய்கடைச் சீரெனத் தேர்ந்தறியே (வீரசோழியம்-யாப்பு-2.)

என்றாராகலின்.

வகுத்த சீர் மூன்றாகும்' என்பது, ஐயமற வகுக்கப்பட்ட சீர் மூன்று வகைப்படும் என்றவாறு.

இவை யிம்முறையே வைத்த காரணம் என்னையோவெனின், **இயற்சீர்** எல்லாச்செய்யுளுள்ளும் இயன்று இனிது நடத்தலிற் சிறப் புடைத்தென்று முன் வைக்கப்பட்டது; என்னை? "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்பது தந்திர உத்தியாகலின். **உரிச்சீர்** எல்லாச் செய்யுளுள்ளும் வருமெனினும் வெண்பாவிற்கும், வஞ்சிப்பாவிற்கும் உரிமை பூண்டு நிற்றலின் இடைக்கண் வைக்கப் பட்டது. **பொதுச்சீர்** அருகியன்றி வாராமையிற் கடைக்கண் வைக் கப்பட்டது. அல்லதூஉம் இரண்டு மூன்று நான்கு என்னும் அசை களான் ஆக்கப்படுதலின் எண்ணின் முறையே வைத்ததூஉமாம். என்னை?

"இயற்சீ ருரிச்சீர் பொதுச் சீரென்னு
நிகழ்ச்சிய வென்ப நின்ற மூன்றும்"

என்றார் மயேச்சுவரர். சீர் மூன்றாகு மென்றாரேனும், குறித்த பொருளைக்கொண்டு நிற்கும். "**மயக்கற வகுத்த**" என்ற மிகையால் நேரசையும் நிரையசையும், நேர்பசையும் நிரைபசையும் என நான் கானவசையும் வேண்டினார் தொல்காப்பியர் முதலிய ஒருசாரா சிரியர்: நேர்பசை நிரைபசை வேண்டாது, நேரசை நிரையசை வேண்டி நாலசைப் பொதுச்சீர் வேண்டினார் காக்கைபாடினியார் முதலிய ஒரு சாராசிரியர்: நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நாலசையும் நாலசைப்பொதுச்சீரும் வேண்டினார் பல்காயனார் முத லிய ஒருசாராசிரியர்: இந்நூலுடையார் நேர்பசையும் நிரைபசையும் வேண்டாது, நாலசைப் பொதுச்சீரும் வேண்டாமே நடப்பதோர் உபாயம் கண்டாரேனும் முதனூலின் வழிநில்லாது தமது மதம் படுத்துச் சொன்னாரென்னும் பாதுகாவனோக்கியும்,

"உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு"

என்பதாகலானும், அவ்வாறு உரைப்பின் உணர்வினோர்க் கல்லது அறிவரிதாகலானும், காக்கைபாடினியார் முதலிய தொல்லாசிரி யர்தம் மதம்பற்றி யீண்டு நாலசைச்சீர் எடுத்தோதினார் என்பதறி

வித்தற் கெனக்கொள்க. நாலசைச்சீர் வேண்டாமே நடத்தும் உபாயம் போக்கிக் கூறுதும். அல்லதூஉம் சீர்வயிற் பொருள் பயந்து நிற்பனவற்றைச் சிறப்புடைச் சீரென்றும், *வகையுளி சேர்ந்து நிற்பனவற்றைச் சிறப்பில் சீரென்றும் சொல்வரென்ப தறிவித்தற்கும் வேண்டப்பட்டது; "விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்" என்பதாகலின்.

"குற்றுகர மொற்றாக்கிக் கூன்வகுத்துச் சிந்தியற்றி
மற்றை நெடிலும் வகையுளியுஞ்—சொற்றதன்மேல்
மேலசைச்சீர் நாட்டி யளபெடையை யீறழித்தா
னாலசைச்சீர்க் கில்லை நடை"

இதனை விரித்துரைத்துக் கொள்க. (௧0)

[இயற்சீரின் திறமும் தொகையும் உணர்த்துவது]

11\. ஈரசை கூடிய சீரியற் சீரவை
யீரிரண் டென்ப வியல்புணர்ந் தோரே.

இஃது என்னுதலிற்றோ வெனின், மேலதிகாரம் பாரித்த முறையானே மூவகைச் சீருள்ளும் முதற்கண் இயற்சீராமாறும் அவற்றதெண்ணும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'ஈர் அசை கூடிய சீர் இயற்சீர்' என்பது, இரண்டசை இணைந்து நின்றது இயற்சீர் எனப்படும்; 'அவை யீரிரண்டு' என்பது, அவை நான்கு திறத்தன; 'என்ப இயல்பு உணர்ந்தோரே' என்பது என்பர் நூன்முறைமையினை அறிந்தோர் என்றவாறு.

அவை, நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்பன; என்னை?

"நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரையென்
றீரிரண் டென்ப வியற்சீர்த் தோற்றம்"

என்றாராகலின்.

---

* வகையுளி = பிரிதலுள்ளது; வகை = பிரிவு.

உதாரணம்:—

| நேர் நேர் | நிரை நேர் | நிரை நிரை | நேர் நிரை | |
|---|---|---|---|---|
| தே மா | புளி மா | கரு விளம் | கூ விளம் | எனவும், |
| தே மா | புளி மா | கண விரி | பா திரி | எனவும், |
| பூ மா | மலர் பூ | மலர் மழை | பூ மழை | எனவும், |
| இம் மா | எழி னி | இனி மொழி | இன் மொழி | எனவும், |
| சாந் தம் / வேங் கை | அரி மா | வலம் புரி | சந் தனம் | எனவும், |
| கா சு | பிறப் பு | வரி வளை | நூ புரம் | எனவும் |

வரும். பிறவுமன்ன. அவற்றிற்குச் செய்யுள் :—

தேமா புளிமா தேமா கருவிளம்
"குன்றக் குறவன் காதன் மடமகள்
கருவிளம் புளிமா புளிமா கூவிளம்
வரையர மகளிர் புரையுஞ் சாயல
தேமா கருவிளம் புளிமா
ளைய ளரும்பிய முலையள்
தேமா கூவிளம் கூவிளம் புளிமா
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

தேமா புளிமா கூவிளம் கருவிளம்
"சீயஞ் சுமந்த மாசறு மணியணை
தேமா புளிமா கூவிளம்
மேய வரசோன் சேவடி
தேமா தேமா கூவிளம் புளிமா
வாயின் வாழ்த்த வானுல கெளிதே"

என இவற்றுள் இயற்சீர் நான்கும் வந்தன. இயற்சீர் பிறிதாகாது எல்லாப் பொருண்மேலும் சொல்லப்படும் சிறப்புடைமையானும் *முதற்பா இரண்டினுள்ளும் பெரும்பான்மையியன்று இனிது நடத்தலானும் இயற்சீர் என்பது காரணக்குறி.†

---

*முதற்பா இரண்டென்பது வெண்பாவினையும் ஆசிரியப்பாவினையுமென்க.

† "இஃது [1]ஆட்சியுங் [2]குணனுங் காரணமாகப் பெற்றபெயர். [1]ஆட்சி

ஒரோ அசையினு லாகிய வீரசைச்
சீரியற் சீரெனப் படுமே

என்றார் காக்கைபாடினியார்.

"கூடிய" என்ற மிகையால் இயற்சீரை ஆசிரிய வுரிச்சீர் என்று வழங்குவாரும் உளர்; என்னே?

"இயற்சீ ரெல்லா மாசிரிய வுரிச்சீர்"

என்றார் காக்கைபாடினியார். (கக)

[உரிச்சீ ன்திறமும் தொகையும் உணர்த்துவது]

12. மூவகைச் சீருரிச் சீரிரு *நான்கினும்
நேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே

என்பது என்னுதலிற்றோவெனின் உரிச்சீர் ஆமாறும் அவற்றதெண்ணும், பெயர் வேறுபாடும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:— 'மூவசைச்சீர் உரிச்சீர் இருநான்கினும்,' என்பது மூன்றசையானாகிய சீர் உரிச்சீர், அஃது எட்டுவகைப்படும்; அவற்றுள்; 'நேர் இருநான்கும் வெள்ளை' என்பது, நேரசை இறுதியாகிய நான்கு சீரும் வெண்பா வுரிச்சீர் (அல்லது காய்ச்சீர்) எனப் படும்; 'அல்லன பாவினுள் வஞ்சியின் பாற்பட்டனவே' என்பது அஃதல்லனவாகிய நிரையசை இறுதியான நான்கு சீரும் பாவினுள் வஞ்சிப்பாவின் பகுதியாகிய வஞ்சியுரிச்சீர் (அல்லது கனிச்சீர்) எனப்படும் என்றவாறு.

"பாவினுள் வஞ்சியின் பாற்பட்டனவே" என்ற சிறப்பால் வஞ்சியுரிச்சீர் பிறசெய்யுளுள்வரினும் வஞ்சிப்பாவினுட்போல் இனிது நடவாதென்க.

---

"இயற்சீ ரிறுதிமு னேரவ ணிற்பின்" எனவும் பிறண்டும் (தொல் காப்பியர்) ஆளுப. 2.தணம், இயற்சீராகலானும், நான்கு பாவிற்கும் இயன்று வருதலானும் குணம் காரணமாயிற்று. இயல்புவகையான் ஒரோ ஒன்றுகி நின்ற சொற்கள் வருதல் பெரும்பான்மையாகலானும், நான்கு பாவிற்கும் பொதுவாகி இயன்று வருதலானும், இயலசையான்வரும் ஈரசைச்சீராகலானும் இவற்றை ஒரு பாவிற் கும் உரிமை கூறுதல் அரிதாகலானும் இவற்றை இயற்சீரென்றான்" என்பர் பேராசிரியர்.

* 'நான்கனுள்' என்றும் பாடம்.

உதாரணம்:—

1 நேர் நேர் நேர் 2நிரை நேர் நேர் 3 நிரை நிரை நேர் 4நேர் நிரை நேர்
தே மாங் காய் புளி மாங் காய் கரு விளங் காய் கூ விளங் காய் எனவும்,

பூ வா மா விரி பூ மா நறு வடி மா பூ விரி மா எனவும்,

பொன் னாக் கும், பொரு ளாக் கும், பொருள் பெருக் கும், பொன் பெருக்கும் எனவும்,

தென் மேற் கு, வட மேற் கு, வட கிழக் கு, தென் கிழக்கு எனவும்,

வேய் மென் றோள், வளை மென் றோள், வளை கெழு தோள், வேய்கெழுதோள் எனவும்

வரும். பிறவுமன்ன. அவற்றிற்குச் செய்யுள் :—

1தே மாங் காய் 3கரு விளங் காய்
"பொன் னார மார் பிற் புனை கழற் காற் கிள் ளிபேர்
தே மாங் காய் 4கூ விளங் காய்
உன் னேனென் றா மூலக் கை பற்றி னேற் கன் றே
2 புளி மாங் காய் தே மாங் காய்
மன னேர டு வா யெல் லா மல் குநீர்க் கோ ழிப்
புளி மாங் காய்
புன லுடன் பே ரே வரும்."

1தே மாங் காய் 4கூ விளங் காய் 3கரு விளங் காய்
"வான் றோ யும் பொன் னெயி லான் வண் டார் மல ரடிக் கீழ்த்
1. புளி மாங் காய்
தேன் றோய் மலர் பெய் மின் சென் று"

என இவற்றுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தன.

1 நேர் நேர் நிரை 2 நிரை நேர் நிரை 3 நிரை நிரை நிரை 4நேர் நிரை நிரை
தே மாங் கனி புளி மாங் கனி கரு விளங் கனி கூ விளங் கனி எனவும்,

மா வாழ் சுரம் புலி வாழ் சுரம் புலி படு சுரம் மா படு சுரம் எனவும்,

பூ வாழ் பதி திரு வாழ் பதி திரு வுறை பதி பூ வுறை பதி எனவும்,

மீன் வாழ் துறை, சுற வாழ் துறை, சுற மறி துறை, மீன் மறி துறை
எனவும்,
பூண் மென் முலை, புணர் மென் முலை, வள ரிள முலை, பூ ணிள முலை
எனவும்

வரும். பிறவுமன்ன. அவற்றிற்குச் செய்யுள்:—

3. கரு விளங் கனி
சுற மறி வன துறை யெல் லாம்
2. புளி மாங் கனி
இற வின் பன இல் லெல் லாம்
4. கூ விளங் கனி
மீன் றிரி வன கிடங் கெல் லாம்
1. தே மாங் கனி
தேன் றூழ் வன பொழி லெல் லாம்

எனவாங்கு,

தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு *செங்கோன் மன்ன னூரே.

1. தே மாங் கனி — தே மாங் கனி
தா ளோங் கிய தண் பிண் டியி
4. கூ விளங் கனி
ணுண் மலர் விரி தரு நிழற் கீழ்ச்
2. புளி மாங் கனி
சுடர் பொன் னெயி னகர் நடு வ
3. கருவிளங்கனி — கருவிளங்கனி
ணரி யணை மிசை யினி தமர்ந் தனை

அதனால்,

பெருந்தகை யண்ணனிற் பரசுதுந்
திருந்திய சிவகதி சேர்கயா மெனவே.

1. தே மாங் கனி — 4. கூவிளங்கனி
பூந் தா மரைப் போ தல மரத்
கூ விளங் கனி — கூவிளங்கனி
தேம் புன லிடை மீன் றிரி தரு
3. கரு விளங் கனி — கரு விளங் கனி
வள வயலி டைக் கள வயின் மகிழ்

---

*'நெடுமதின் மன்ன னூரே' என்றும் பாடம்.

| | |
|---|---|
| 2. புளி மாங் கனி | கரு விளங் கனி |
| விளைக் கம் பலை | மனைச் சிலம் பவும் |
| கரு விளங் கனி | கரு விளங் கனி |
| மனைச் சிலம் பிய | மண முர சொலி |
| புளி மாங் கனி | புளி மாங் கனி |
| வயற் கம் பலைக் | கய லார்ப் பவும் |

நாளும்,

மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே.

எனவும் கொள்க.

இச்சூத்திரம் மொழிமாற்று. எங்ஙனமெனின்,

மூவசைச் சீருளிச் சீரிரு நான்கினு
ணேரிறு நான்கும் வெண்பா வுரிச்சீர்
நிரையிறு நான்கும் வஞ்சி யுரிச்சீர்

என்றாராகலின்.

"இயற்சீ ரிறுதிமு னேர வணிற்பி
னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப"

எனத் தொல்காப்பியனார், "வெண்பா வுரிச்சீர்" என்றதனை மொழி மாற்றி" "உரிச்சீர் வெண்பா" என்றார்; அதுபோலக் கொள்க. நேரீறாகிய மூவசைச்சீர் நான்கும் பெரும்பான்மையும் வெண்பா வுக்கே உரிமைபூண்டு நிற்றலின் வெண்பா வுரிச்சீர் என்பதூஉங் காரணக்குறி; நிரையீறாகிய மூவசைச்சீர் நான்கும் பெரும்பான் மையும் வஞ்சிப்பாவிற்கே யுரிமை பூண்டமையின், வஞ்சியுரிச்சீர் என்பதூஉங் காரணக்குறி; என்னை?

"மூவசை யான்முடி வெய்திய வெட்டினு
*ளந்தந் தனிச்சீர் நான்கசை வெள்ளை
அல்லன, வஞ்சிக் கிழமை வகைப்பட் டனவே"

என்றார் காக்கைபாடினியார்;

---

* 'அந்தந் தனியசை வெள்ளை யல்லன
வஞ்சிக் கிழமை வகைப்பட் டனவே எனவும் பாடம்,

"ஈரசை யாகிய மூவசைச் சீர்தான்
நேரிறின் வெள்ளை நிரையிறின் வஞ்சி"

என்றார் சிறுகாக்கைபாடினியார்;

"ஈரசைச் சீர்நான் கியற்சீர் மூவசையின்
இயற்சீ ரெட்டினு ளல்லன விரவினு
நேரிறின் வெள்ளை நிரையிறின் வஞ்சி"

என்றார் அவிநயனார். (கஉ)

## 13. நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே

என்பது என்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே பொதுச் சீராமாறும், அவற்றதெண்ணும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—'நால் அசைச்சீர் பொதுச்சீர் 'என்பது நால் அசையாகிய சீர் பொதுச்சீர் எனப்படும்; 'பதினாறே' என்பது, அவைதாம் பதினாறு திறத்தனவாம் என்றவாறு.

அவற்றுள் நேர் இறுதி எட்டும் நிரை யிறுதி எட்டுமாம் என்றவாறு. ஈரசைச்சீர் பின் முன்னாக வைத்து உறழ்ந்து மாறியக்கால் நாலசைச்சீர் பதினாறாம்; என்னை ?

"ஈரசைச்சீர் பின்முன் னாவைத் துறழ்ந்து
மாறியக்கா னாலசைச் சீர்பதி னாறாம்"

என்றார் அவிநயனார்.

அவற்றிற்கு வாய்பாடு:—

| | |
|---|---|
| தேமாந் தண் ணிழல் | புளி மாந் தண் ணிழல் |
| தே மாந் தண் பூ | புளி மாந் தண் பூ |
| தே மா நறும் பூ | புளி மா நறும் பூ |
| தே மா நறு நிழல் | புளி மா நறு நிழல் |

எனக்கொள்க.

"தேமா புளிமா கருவிளங் கூவிளமென்
றேமா றறிந்தவற்றி னந்தத்து—நாமாண்பிற்
றண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழலு
நண்ணுவிக்க நாலசைச்சீ ராம்"

இதன்வழியே ஓட்டுக.

"வாய்க்காலும் வாய்த்தலையு மாண்ட துலைவாயு
நீக்காப் பெருந்துறையு முன்னிறீஇக்—காக்கு
மறிவுவாழ் வெண்ப திடையா முதற்கட்
சுறமறிப்பி னலசைச்சீர்ச் சொல்" எனவும்,

"ஆர முறுவ லணிவட மேகலையென்
றீரிரண்டும் வைத்தெண் ணிடையாரச்—சேர்வித்து
முத்து மணியு முதல்வைப்ப நாலசைச்சீர்
பத்து மிருமூன்றும் படும்" எனவும்

நாலசைச்சீர்க்கு வாய்பாடு கூறினார் பிறரும்.

அவற்றிற்குச் செய்யுள்:—

"அங் கண் வானத் தமரர சரும்
வெங் களி யானை வேல் வேந் தரும்
வடி வார் கூந் தன் மங் கை யரும்
கடி மல ரேந் திக் கதழ்ந் திறைஞ் சச்
சிங் கஞ் சுமந் த மணி யணை மிசைக்
கொங் கவி ரசோ கின் *கொழு நிழற் கீழ்ச்
செழு நீர்ப் பவ ளத் திரள் காம் பின்
முழு மதி புரை யு முக் குடை நிழல்
வெங் கண் வினைப் பகை விளி வெய் தப்
பொன் புனை நெடு மதில் புடை வளைப் ப
வனந் தச துட் டய மவை யெய் த
நனந் தலை யுல குடை நவை நீங் க
மந் த மா ருத மருங் கசைப் ப
வந் தர துந் துபி நின் றியம் ப
விலங் கு சா மரை யெழுந் தல மர
நலங் கிளர் பூ மழை நனி சொரி தர
இனிதிருந்
தருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே"

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் முதற்
கண் வந்தன. இவை பதினாறும் சிறப்பின்மையிற் பொதுச்சீர் என்

*'குளிர் நிழற் கீழ்' என்றும் பாடம்.

பது காரணக்குறி. பொதுச்சீர் சிறப்பின்மையைச் சொல்லுமோ எனின், சொல்லும்; என்னை?

" புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக்க வர்க்கே புலனு—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாவாம்
பாம்பறியும் பாம்பினது கால்"

இதனுள் பொதுவைச் சிறப்பின்மைக்கட் புணர்த்தார் சான்றோராக லின். பிறரும் நாலசைச்சீர் எடுத்தோதினர்; என்னை?

" அசையே யிரண்டு மூன்றுந் தத்தமி
லிசைய வருவன சீரெனப் படுமே"
" ஈரிரண் டாகியு மோரோவிடத் தியலும்"
" நாலசை யானு நடைபெறு மோரசைச்
சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத் துளவே"
" நாலசைச் சீரு மோரோவிடத் தியலும்
பாவொடு பாவினம் பயிற லின்றி"

என்றார் பல்காயனார். (கூ)

[ஓரசைச்சீரின் பெயரும் வகையு முணர்த்துவது]

## 4. ஓரசைச் சீருமஃ தோரிரு வகைத்தே

என்பது என்னுதலிற்றோவெனின், ஓரசையினன் ஆகிய சீரும் பொதுச்சீர் என்று எய்துவித்தலும், அவற்ற தெண்ணும் உணர்த்து தனுதலிற்று.

இதன் பொருள்:—'ஓர் அசைச்சீரும் அஃது' என்பது, ஓர் அசை யினன் ஆகிய சீரும் அஃது என்று மாட்டெறிந்தமையிற் பொதுச் சீராம்; 'ஓர் இருவகைத்தே' என்பது, அது நேரசைச்சீரும், நிரை யசைச்சீரும் என இரண்டு வகைப்படும் என்றவாறு.

உதாரணம், நாள் மலர் என்பன. வெண்பாவின் இறுதியோசை யூட்டற் பொருட்டு இவை ஓரசைச் சீருக்கு உதாரணம் உரைத்தது.

அவற்றிற்குச் செய்யுள் :—

" பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர் "

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"

என இவற்றுள் 'நீர்' என நேரசையும், 'இலர்' என நிரையசையும் வந்தவாறு காண்க.

"இசைநிலை நிறைய நிற்குவ வாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே"

என்றார் தொல்காப்பியனார்.

"நேர்நிரை வரினே சீர்நிலை யெய்தும்
பாவொடு பிறவு மாகு மொரோவழி"

என்றார் அவிநயனார்.

"நேரு நிரையுஞ் சீராய் வருதலுஞ்
சீருந் தளையுஞ் சிதைவழிக் கொளலும்
யாவரு முணர்வர் யாவகைப் பாவினும்"

என்றார் மயேச்சுவரர். (கச)

[மு.ப் கூறப்பட்ட சீர்கள் செய்யுளகத்து நிற்கும் முறைமை]

15. விரவிய மருகியும் வேறு மொரோவழி
மருவியும் பெறுதும் வழங்குமன் னவையே

என்பது என்னுதலிற்றோவெனின் அச்சீர் செய்யுளகத்து நிற்கும் முறைமை யுணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்:—'விரவியும்' என்பது, இயற்சீரும் உரிச்சீரும் செய்யுளகத்து மயங்கியும் வரும்; 'அருகியும்' என்பது பொதுச்சீர் அருகியும் வரும்; 'வேறும்' என்பது, இயற்சீரும் உரிச்சீரும் வேறு வேறேயாயும் செய்யுளகத்து வரும்; 'ஒரோவழி மருவியும்' என்பது, நிரையீறுகிய நாலசைப் பொதுச் சீரெட்டும் வஞ்சிப்பாவி னுள்ளே வரும்; 'பெறுது' என்பது, வஞ்யுரிச் சீர் வெண்பாவினுள் வரப்பெறு; நேர் ஈறுகிய தேமா, புளிமா என்னும் இரண்டு இயற் சீரும் ஒத்தாழிசைக் கலிப்பாவினும், தரவுதாழிசைகளுள்ளும் வரப் பெறு; வஞ்சியுள்ளும் இறுதிக் கட்பெரும்பான்மையும் வரப்பெறு; 'வழங்கு மன்னவையே' என்பது, அவ்வாற்றால் நடைபெறும், முன் கூறப்பட்ட சீர்க ளென்றவாறு.

விரவிபு மருகியும் வேறு மொரோவழி
மருவியும் பெறாது வழங்குமன் னவையே

என்றதல்லது இயற்சீரும் உரிச்சீரும் விரவியும் வரும்; பொதுச்சீர் அருகியும் வரும்; இயற்சீரும உரிச்சீரும் வேறுவேறாகியும் வரும்; நிரையீறாகிய நாலசைப் பொதுச்சீர் வஞ்சியுள்ளே வரும்; வஞ்சியுரிச்சீர் வெண்பாவினுள் வரப்பெறா; நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவுள்ளும், வஞ்சிப்பாவின் இறுதியும் வரப்பெறா என்று இவ்வாறு கூறிற்றிலரேனும், உரையிற் கோடல் என்னும் தந்திர வுத்தியானும், பிறநூன் முடிந்தது தானுடம்படுத லென்பதனாலும் இவ்வாறு உரைக்கப்பட்டது. "அரையளவு குறுகன் மகர முடைத்தே" எனத் தொல்காப்பியத்துள் இன்னவிடத்துக் குறுகும் என்று யாப்புறுத்துக் கூறிற்றிலரேனும் உரையிற் கோடலென்னும் உத்தியைப்பற்றி வகரத்தின் பின் மகரம் குறுகும் என்று விருத்தியுள் விளங்கக்கூறினார். அதுபோலக் கொள்க.

இது பொருந்தாது; என்னை ? "வகரமியையின் மகரமுங் குறுகும்" என்று போக்கிச் சொன்னாராகலானும், அவினயத்துள்ளும், "முதலிடை நுனிநாப் பல்லிதழ் மூக்கின், வன்மை முதலா மும்மையும் பிறக்கும்" எனப் பொதுவகையாற் கூறி, இன்னவிடத்து இன்ன எழுத்துப் பிறக்கும் என்று கணக்கியலுள் புறநடை யெடுத்தோதினார் அவினயனாராகலானும், இந்நூலுடையாரும் *"மாஞ்சீர் கலியுட்புகா" எனவும்,

"நாலசைச்சீர் வெண்பாவி னண்ணா வயற்பாவி
னாலசைச்சீர் நேரீற்று நாலிரண்டா—நாலசைச்சீர்
ஈறுநிரை சேரி னிருநான்கும் வஞ்சிக்கே
கூறினார் தொல்லோர் குறித்து"

என்னும் புறநடையானும், பிறவாற்றானும் விளங்கக்கூறினாராகலானென்க. இனிப் பிறநூலுட் கூறுமாறு:—

*மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவில் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே. (யாப்பருங்கலக் காரிகை-38)

"இயற்சீ ருரிச்சீ ரெனுமிரு சீரும்
மயக்க முண்மையி னல்வகைப் பாவு
மினத்தின் மூன்று மினிதி னகும்"

"உரிச்சீர் விரவ லாயு மியற்சீர்
நடக்குன வாசிரி யத்தொடு வெள்ளை
அந்தந் தனியா வியற்சீர் கலியொடு
வஞ்சி மருங்கின் மயங்குத லிலவே"

"நாலசை யானடை பெற்றன வஞ்சியு
ளீரொன் றிணைதலு மேனுழி யொன்றுசென்
றந்த மிணையசை வந்தன கூறிய
வஞ்சிக் குரைத்தன வாதலு
மாகுன வெண்ப வறிந்திசி னோரே"

என்றார் காக்கை பாடினியார்.

"நேரீற்றியற்சீர் கலிவயி னிலவே
வஞ்சி மருங்கினு மிறுதி யினிலவே"

என்றார் நற்றத்தனார்.

"ஓசையி னொன்றி வரினும் வெண்சீரு·
மாசிரிய வடியுட் குறுகு மென்ப"
"அதனுட் டன்சீர் வெண்சீ ரொருங்கு
புகலிற் கலியுட் பொருந்து மென்ப"
"வஞ்சியு ளாயி னஞ்சுத லிலவே"
"இயற்சீ ரிறுதி நேருற்ற காலை
வஞ்சி யுள்ளும் வந்த தாகா
வாயினு மொரோவிடத் தாகு மென்ப"

என்றார் பல்காயனார்;

"கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே"

"வஞ்சி மருங்கினு மிறுதி நில்லா"

என்றார் தொல்காப்பியனார்;

"உரிமை யியற்சீர் மயங்கியும் *பானுன்
கிருமை வேறியல் வெண்பா வாகியும்
வருமெனும் வஞ்சிக் கலியினே ரிற்ற
வியற்சீ ராகா வென்மனர் புலவர்"

"நிரையிறு நாலசை வஞ்சி யுள்ளால்
விரவினு நேரீற் றல்லவை யியலா"

என்றார் அவிநயனார்;

"நேரீற் றியற்சீர் கலிவயிற் சேரா
நிரையி னின்ற நாலசை யெல்லாம்
வரைதல் வேண்டும் வஞ்சியில் வழியே"

என்றார் மயேச்சுவரனார்.

இவற்றிற்குச் செய்யுள்:—

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

என இக்குறள் வெண்பாவினுள் இயற்சீரும் உரிச்சீரும்விரவிவந்தன.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே"

இவ்வாசிரியத்துள் இயற்சீரும் உரிச்சீரும் விரவிவந்தன.

"அடல் வணங்கு கழற்செவ்வே லணங்குதார்ச் செம்பியன்றன்
கெடலருங் கிளர்வேங்கை யெழுதித்தம் முயிரோம்பா
உடல்சமத் துருத்தெழுந்த வொண்ணுத பல்லரசர்
கடகஞ்சேர் திரண்முன்கை கயிற்றேறும் வைகினவே"

இக்கலியடியுள் இயற்சீரும் உரிச்சீரும் விரவிவந்தன.

"தாழ்பொழிற் றடமாஞ்சினை
வீழ்குயிற் பெடைமெலிவினைக்

* 'பதினுன்கு' என்றும் பாடம்,

கண்டெழூந் துளருஞ்சிறகிற்
சென்றணைந்து சேவலாற்றுஞ்
செழுநீர்க்
கழனி யூரன் கேண்மை
மகிழ்நறுங் கூந்தற் கலரா னதே''

இவ்வஞ்சியுள் இயற்சீரும் உரிச்சீரும் மயங்கிவந்தன.

''அலரிநாறு துவர்வாய் *மதர்த்த நோக்கி
னன்னுத லரிவை'' எனவும்,

''இன்னுயிர் தாங்கு மதுகை யோனே'' எனவும்,

''அந்தண் சாந்தமோ டகின்மரந் தொலைச்சிச்
செந்து சிதையா துழுத செங்குரற்
சிறுதினைப் படுகிளி நம்மொடு கடியு
நெடுவரை நாடர்க்கு நேர்ந்தனர் நமரே'' எனவும்

இவ்வா சிரியத்துள் நாலசைச்சீர் வந்தது.

''திரைந்துதிரைந்து திரைவரத் திரண்முத்தங் கரை†வாங்கி
நிரைந்துநிரைந்து சிறுநுழைச்சியர் நெடுங்கானல் விளையாடவும்
கண்டல்வண்டற் கழிபிணங்கிக் கருநீல மதுவீழவும்
கொண்டலெண்ட மணற்குன்றிற் பண்ணையாயங் குடிகெழுவவும்
போதணிந்தபொழிற்புன்னைப் பராரைப்பெண்ணைப் படுதுறையெம்
தூதணிந்த வண்டுண்கண்ணித் துறைவனெங்க டுறைவனே''

இக்கலியடியினலசைப் பொதுச்சீர் வந்தது.

'' செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ்
செழுநீர்,
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே ''

இவ்வஞ்சியடியுள் நாலசைச்சீர் வந்தன.

---

* 'மாத்தான்' எனவும் பாடம்.
† 'யரக்கின்' என்றும் பாடம்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்"

"தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி"

என வரும் குறள் வெண்பாக்களில் ஓரசைப் பொதுச்சீர் வந்தன.

"ஊழி நீ யுலகு நீ யுருவு நீ யருவு நீ"

என்னும் அம்போதரங்கவுறுப்பின்கண் ஓரசைப் பொதுச்சீர் வந்தன

"கை விரிந்தன காந்தளும் பூஞ்சுனை
மை விரிந்தன நீலமும் வான்செய்நாண்
மெய் விரிந்தன வேங்கையுஞ் சோர்ந்ததே
நெய் விரிந்தன நீளிருங் குன்றெலாம்"

"சூர வணங்கிலை மாவொடு சூழ்கரைச்
சர வணம்மிது தானனி போலுமா
லர வணங்குவி லாண்டகை சான்றவன்
பிரி வுணர்ந்துழி வாரலனென் செய்கோ"

எனப்பாவினங்களுள் முதற்கண் நேரசைப் பொதுச்சீரும், நிரை யசைப் பொதுச்சீரும் வந்தன.

இனி இயற்சீரும் உரிச்சீரும் வேறுவேறு வருமாறு:—

"தெறுக தெறுக தெறுபகை செற்றாற்
பெறுக பெறுக பிறப்பு"

இது இயற்சீரான் வந்த வெண்பா.

"பூம்பாவாய் நீ யொருநாட் பூம்பொழில்வாய் வந்தாயை
*யாம்பாவை வேண்டினமோ வென்று"

என வுரிச்சீரான் வெண்பாவந்தது.

"மருந்தெனின் மருந்தே நல்குறு மகளே"

இது இயற்சீரான் வந்த ஆசிரியப்பா.

* 'யூர்ம்பாவை' எனவும் பாடம்.

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

இது வெண்பா வுரிச்சீரானே வந்த கலிப்பா.

" எல்லாரு மெந்தமக்கே
நல்லறிவே யுளவென்பார்
நல்லார்க ணணிதெரியிற்
கல்லாருங் கற்றாருஞ்
சொல்லாலே வெளிப்படுவர்

அதனால்,

மண்மிசை மாண்ட கற்பின்
விண்ணொடு வீடு விளக்குமா லதுவே"

இது வெண்பாவுரிச்சீரானே வந்த வஞ்சிப்பா.

" பூந்தாமரைப் போதலமாத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்

நாளும்,

மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே"

என்பது வஞ்சியுரிச்சீரானே வந்த வஞ்சிப்பா.

" விரவியு மருகியும் வேறுமொரோவழி" யென்றது " மருவி யும்" என்று மயங்கவைத்தமையால் வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா; ஆசிரியத்துள்ளுங் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; கலியுள் ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சியுள் இரண்டு

நாலசைச்சீர் ஓரடியிற் கண்ணுற்று நிற்கவும் பெறும்; அல்லன வற்றுட் பெரும்பான்மையும் ஓரடியுள் ஒன்றன்றிவாரா; இரண்டு வரினும் கண்ணுற்று நில்லா; இயற்சீர் ஆசிடையிட்டும் வரும்; ஓரசைச்சீர் பெரும்பான்மையும் வெண்பாவி னிறுதிக்கண்ணும், அம்போதரங்க வுறுப்பினிறுதிக் கண்ணும் வரும்; உரிச்சீரானே ஆசிரியம் பயின்றுவாரா; இயற்சீரானே வஞ்சியும் கலியும் பயின்று வாரா.

இனி ஒரோவழி மருவியும் வருமாறு :—

> " நின்றுநின்றுள நினைபுநினைவொடு
> வாடிநீடு தெருமருநிறைசெலச்
> சென்விசெலவிவ ணின்றுதனதெழில்
> வாட வருமாறாந் தளிர்நிறத்தகைபிற
> சேர்ந்தந்தண்முகை மென்குழற்பெருந்தடங்
> கண்பூவெனுநலந் தொலைந்தினியாற்றலன்
> செலச்செலவூரலர் செவிச்சுடச்சுடமுகிழ்
> முகிழ்ப்பபலரறி வுறுப்பவுநீடினை
> தெரிவொடு கெழூமிய திருநலம்
> புரிவொடு கெழுவுக புனைதா ரோயே"

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நிரையீறுகிய நாலசைப் பொதுச் சீரெட்டும் வந்தன. " பெறுதும்" என்ற உம்மையால் வஞ்சியுரிச் சீர் வெண்பாவினுள் வாராமையும், நேரீற்றியற்சீர், ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் வாராமையும், மேற்காட்டியவற்றுள்ளும் பிறவற் றுள்ளுங் காண்க.

> " சுடர்த்தொடீஇ கேளாய் தெருவிநு மாடு
> மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
> கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
> நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
> ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
> உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
> அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
> யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
> தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை

வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்"

இந்தக் கலிவெண்பாவினுள் நேரீற்றியற்சீர் வந்தது. "புன்காற் புணர்மருதின் போதப்பிய புனற்றாமரை" எனவும், "தேன்றாட் டீங் கரும்பின் றாமரை" எனவும், "வார்காற் செழுங்கழுநீர்" எனவும், *"வெறிகொண்டறைவர்" எனவும், வஞ்சியடி முதற்கணேரீற்றியற் சீர் வந்தது. "எழிலார்சிமய முறிகொண்டறையு மூறல்வாய்ச் சுரும் பின்" எனவும் "காமர் கரும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" என்னுங் கொச்சகக்கலியுள்ளும் நேரீற்றியற் சீர் வந்தது. "உடைமணி வரை யுருவிக்குப் பாய்ந்தன" என வஞ்சியடி நடு நேரீற்றியற்சீர் வந்தது. "அள்ளற் பள்ளத்தகன்குன்றாரே" என்னு முச்சீரடி வஞ்சியுணடு 'ஊரே' என்னு நேரீற்றியற்சீர் சிறுபான்மை வந்தது.

"பொன்புனைந்த நகரும்
நகர்சூழ்ந்த வெயிலும்
எயிலேந்திய கண்ணுங்
கண்ணேந்திய குணனும்"

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளிதலைஇய தீயுந்
தீமுரணிய நீரும்"

இவ்வஞ்சியடியிறுதி நேரீற்றியற்சீர் சிறுபான்மை வந்தது.

இனிப் பாவினத்துள் விரவி வருமாறு:—

"போதார் நறும்பிண்டிப் பொன்னார் மணியணிப்புனற்
றாதார் மலரடியைத் தணவாது வணங்குவோர்
தீதார் வினைகெடுப்பார் சென்று"

இவ்வெள்ளொத்தாழிசையுள் இயற்சீரும் உரிச்சீரும் வந்தன.

---

*'வெறிகொண்டமை' எனவும் பாடம்.

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்"

என வெள்ளொத்தாழிசை இயற்சீரானே வந்தது.

"வாராரே யென்றென்று மாலைக்க ணீதுஞ்சா
யூராரே யென்றென்று மொன்றெவ்வா வுரை சொல்லி
யார்பாரே யென்றாளே யாய்"

என உரிச்சீரானே வெள்ளொத்தாழிசை வந்தது.

குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
வழலெரியின் மூழ்கினவாலந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉ
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்

இவ்வெண்டுறையு ளியற்சீரும், உரிச்சீரும் வந்தன.

"அங்குலியி னவிரொளியா லருண மாகி
யணியாழி மரகதத்தாற் பசுமை கூர்ந்து
மங்கலஞ்சேர் நூபுரத்தா லரவஞ் செய்பு
மலரடியை மடவன்ன மழலை யோவாச்
செங்கமல வனமென்று திகைத்த போழ்திற்
றேமொழியாற் றெருட்டுதியோ செலவி னாலோ
தொங்கலம்பூங் கருங்கூந்தற் சுடிகை நெற்றிச்
சுந்தரிநிற் பணிவார்க்கென் றுணிவு தானே"

இவ்வாசிரிய விருத்தத்து ளியற்சீரு முரிச்சீரும் விரவி வந்தன. பிற பாவினங்களுள்ளும் இயற்சீருரிச்சீர் விரவவும் பெறும். அவை வந்துழிக்காண்க.

இனிப் பொதுச்சீர் பாவினத்துள் அருகி வருமாறு:—

"இருநெடுஞ் செஞ்சுட ரெழிகமொன் றேந்தி யிரவின்வந்த
வருநெடு மங்காதற் கன்றே தறப்பால *தல்லாவிட்டாற்
கருநெடு மால்கட லேந்திய கோன்கயல் சூடுநெற்றிப்
பெருநெடுங் குன்றம் விலையோ கருதிலெம் பெண்கொடிக்கே"

இக்கலித்துறையு ளலசைச்சீர் வந்தது.

---

*'அல்லாது விட்டால்' என்றும் பாடம்.

"உரி மையின்கண் ணின்மையால்
அரி மதர்மழைக் கண்ணாள்
செரு மதிசெய் தீமையால்
பெரு மைகொன்ற வென்பவே"

"கை விரிந்தன காந்தளும் பூஞ்சுனை
மை விரிந்தன நீலமும் வான்செய்நாண்
மெய் விரிந்தன வேங்கையுஞ் சோர்ந்ததே
நெய் விரிந்தன நீளிருங்குன்றெலாம்"

என்னும் வஞ்சிவிருத்தத்துள் ஓரசைப் பொதுச் சீர்வந்தது.

"சூர வணங்கிய பாவொடு" எனவும், இக்கலி விருத்தத்துளடி தோறு மோரசைப் பொதுச்சீர் வந்தது. இவற்றை வகையுளி சேர்த்துக் கொள்க வென்பாருமுளர். (கரு)

[நேர்நடுவாகிய வஞ்சி யுரிச்சீர் கலியுள்ளும் ஆசிரியத்துள்ளும வருமெனல்]

(16) நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே

என்பதென்னுதலிற்றோ வெனின், விதிவகையான் விலக்குதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'நிரைநடு இயலா வஞ்சி யுரிச்சீர்' என்பது, நேர்நடுவாகிய தேமாங்கனி புளிமாங்கனி எண்ணும் வஞ்சியுரிச்சீர்; 'கலியினோடு அகவலில் கடிவரை இலவே' என்பது (அவை) கலியுள்ளும் ஆசிரியத்துள்ளும் வரப்பெறு மென்றவாறு.

அகவல் என்பது ஆசிரியத்தைச் சொல்லுமோ வெனின், சொல்லும்; என்னை?

"அகவ லென்ப தாசிரியப் பாவே"

என்பது சங்கயாப்பாகலின்.. மேற் சூத்திரத்துள் 'உரிச்சீருமியற் சீரும் விரவியும் வரப்பெறும் செய்யுளகத்தும்' என்ற வதனால் இப்பொருண் முடியவைத்துப், பெயர்த்துஞ் சூத்திரமோதிய வதனாற் கலியுள்ளும், ஆசிரியத்துள்ளும் வஞ்சியுரிச்சீர் வருகின்றுழி நிரை நடுவாகவில்லாதன வருக வென்பது பயன். எனவே, நிரை

நடுவாகிய கூவிளங்கனி, கருவிளங்கனி யென்னு மிருசீரும் வாராக என்று விலக்கப்பட்டதாகலின், இதனை நியமச் சூத்திர மென்க; என்னை? முன்னொன்றினான் முடிய வைத்துப், பின்னுமதனை யெடுத்துக் கொண்டு விதி முகத்தால் விலக்குவதூஉம், விலக்குதல் வகையான் விதிப்பதூஉம் நியமச்சூத்திர மாதலின். வரலாறு:—

புனற்படப்பைப் பூந்தாமரைப் போதுற்ற புதுநீரு
ளினக்கெண்டை யிரைதேரிய விருஞ்சிறைய மடநாரை
கழுநீருங் குவளையுமங் கரும்பினொடு காய்நெல்லும்
பழுநீரு ளொடித்தேறும் பழனஞ்சூ ழூரகேள் (இது தரவு)

"வடித்தடங்கண் பனிகூர வால்வளைத்தோள் பசப்பெய்தத்
துடிக்கியையு நுண்ணிடையைத் துன்னாது துறப்பாயேற்
பொடித்தகன்ற வனமுலையாள் புலம்பலும் புலம்பாளோ"

"வண்டுற்ற நறுங்கோதை வால்வளைத்தோண் மெலிவெய்தப்
பண்டுற்ற வெழில்வாடப் பரியாது துறப்பாயே
லுண்டுற்ற காதலகத் துள்ளாகி யிருப்பாளோ"

"வேய்விடுத்த மென்றோளு மேனியும் விளர்ப்பெய்த
நீவிடுத்தாங் கொண்பொருட்கே நீங்குதலை நினைப்பாயே
லாய்மலர்க்கண் பனிகூர வாவியு முள்ளாமோ"
(இவை மூன்றுந் தாழிசை)

எனவாங்கு (தனிச்சொல்)

குவளை யுண்க ணிவணலந் தொலைய
வுறுபொருட் கெண்ணிய வெண்ணம்
மறுபிறப் புண்டெனிற் பெறுக யாமே (இது சுரிதகம்.)

இந்நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவினுள், பூந்தாமரை யெனவும், இரைதேரிய எனவும் நேர்நடுவாகிய வஞ்சி யுரிச்சீர் வந்தது.

"மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றைக்
கடிகமழ் புறவிற் கனைவண் டார்க்கும்
யாணர்க் கோனு ரென்ப
பாணர்ப் பாரந் தாங்கியோன் பதியே"

இவ்வாசிரியத்துள் 'மாரியொடு மலர்ந்த' வென்புழித் தேமாங்கனி என நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வந்தது.

"நன்னாள் வேங்கைப் பொன்னேர் புதுமலர்
குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாட
கடிபுனற் கோஎனு ரன்ன
தொடிபொலி பணைத்தோ டுறவாய் நீயே"

இதனுட் 'குறிஞ்சியோடு கமழும்' என்புழிப் புளிமாங்கனி யென நேர்நடுவாகிய வஞ்சி யுரிச்சீர் வந்தது. "வளைவிலவே" என்ற விதப்பால், ஆசிரியத்து ளிரண்டு மோரடியுட் பெரும்பான்மையும் வாரா; வரினு மியற்சீ ரிடையிட்டு நிற்கும்; அருகிக் கண்ணுற்று நிற்கு மேனுஞ் சிறப்பில. "வீங்குமணி விசித்த விளங்குபுனை நெடுந் தேர்" என்னு மாசிரியத்து ளிருசீரு மோரடியுள்ளே 'விசித்த' வெ ன்னு மியற்சீரிடையிட்டு வந்தது. "வண்டுகெழு திலக மொருமாத் தொலைத்த" என்ற ஆசிரியத்து ளிருசீருங் கண்ணுற்றவாறு காண்க. பிறவுமன்ன. அகவல் கலியோடு என்னாது "கலியினோடகவல்" என்று முறைபிறழ வைத்தமையால் கொச்சகக் கலிப்பாவினுள் நிரைநடு வாகிய வஞ்சியுரிச்சீ ரருகிவரினும் பெரிதுஞ் சிறப்பில. வரலாறு:— "திரைந்து திரைந்து திரைவரத்திரண் முத்தங்கரைவாங்கி" என் னுங் கொச்சகக் கலியுள் சிறுநுளைச்சியர் என நிரைநடுவாகிய வஞ்சி யுரிச்சீர் வந்தது. "கலியினோடகவல்" எனப் பொதுவகையாற் கூறிற்றேனும், கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவி னுள்ளுமே விதி முகத்தால் விலக்குவது. அவற்றின் இனத்துள் நிரைநடுவாயினவும் புகுதுமெனக் கொள்க. அஃதெற்றாற் பெறுதுமெனின், "மூவகைச் சீருரிச்சீர்" என்னுஞ் சூத்திரத்துப் பாவென்னுந் தவளைப்பாய்த் தாக அதிகாரம் வருதலானும், உரையிற் கோடலென்பதனாலும், 'ஆசிரியத்தொடு வெள்ளையுங்கலியும் நேரடி தன்னு னிலைபெற நிற் கும்,' என்று பொதுவகையாற் சொல்லி ஆசிரியப்பாவே கொண்டார் பல்காயனார் ஆதலானும்,

"பொதுவகையாற் சொற்றனவும் பொய்தீர் சிறப்பிற்
குதவி யொரோவிடத்து நிற்கும்—விதிவகையா
னின்ற பொருளை நிகழ்விப்பது நியம
மென்றுரைப்பர் தொல்லோ ரெடுத்து"

என்பதனாலும் பெறுதும், வரலாறு;—

வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவ
னளிர்கொடியன நறுவிரையக நறுமலரன நறவம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
யொளிர்கொடியன வயர்திரளினொ டொழுகினரன வோடை.

இக்கலிவிருத்தத்துள் நிரையும் நேரும் நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வந்தன.

கொன்றார்ந் தமைந்த குருமுத் தெழினிறக்
குருதிக் கோட்டன விருந்தாட் பெருங்கைக்
குன்றமெனை வன்றமெனக்
குமிறா நின்ற கொடுந்தொழில் வேழம்

வென்றார்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத்
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பருஉத்தா
ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன கழற்கண் யாளி

சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறும்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப்
புகையா நின்றன புலிமா னேற்றை

†யென்றாங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை
விலக்கலி னிறுவரை யிரவிடை வரக்கள
வுளமது கற்றோ ரொதுங்கற் பாற்றே.

என்னு மாசிரியத் துறையுள் வஞ்சியுரிச்சீர் வந்தது.

---

†இவ்வடி காரிகை அச்சுப்பிரதிகளிலும், யாப்பருங்கல விருத்தி ஏட்டுப் பிரதிகள் பலவற்றிலும் இருபது சீருடையதாகக் காணப்படுகிறது. கடையடி பதினாறு சீரேயுடைத்தாயிருத்தல் வேண்டுமாதலால், ஈண்டுப்பதினாறு சீரே கொண்டு மிகுந்த சீரைத் தள்ளத்தக்க இடங்களிற்றள்ளி பதிப்பிக்கலாயிற்று. இருபது சீருடையதாகக் கூறிய பாடம் வருமாறு :—

'என்றாங் கிவையிவை யியங்கலி னெந்திறத்தினி வரல் வேண்டலந் தனிவர லெனத்தலை விலக்கலி னிறுவகூர மிசையெறி குரும்பிடை யிதுவென் னென வதுநோனார் கரவிர விடைகள வுளமது கற்றோ ரோதுங் கற்பன்றே'

"இணைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
இணையுள வாசிரி யத்தன வாகா"

என்றார் காக்கை பாடினியார்;

"நடுநே ரியலா வஞ்சி யுரிச்சீ
ருரிமை யுடைய வாசிரியத் துள்ளே"

என்றார் சிறு காக்கை பாடினியார்;

"நேர்நடு வியலா வஞ்சி யுரிச்சீ
ராசிரி யத்திய லுண்மையு முடைய"

என்றார் அவிநயனார்;

"நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
வரைதல் வேண்டு மாசிரிய மருங்கின்"

என்றார் மயேச்சுவரர். இவர்களும் இலைசெர்சவும்மை விதப்பாற் கலிப்பாவினுள்ளு முடன்பட்டா ரென்க.

"அசையிரண்டு மூன்று மவைநான்கு மொன்றும்
வசையின் முறைமையான் வந்து—திசைசமழு
மேரேற்ற கோதா.யெதிர்பங்கம் வாராமைச்
சீரேற்று நிற்பது சீர்"

சீரோத்து முற்றியது.

## ச. தளையோத்து

[தளை இன்னதென்பதும் அதன் தொகையும் உணர்த்துவது]

17. சீரொடு சீர்தலைப் பெய்வது தளையவை
யேழென மொழிப வியல்புணர்ந் தோரே.

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின், தளையாமாறுணர்த்திற்றாகலாற் றளையோத்தென்னும் பெயர்த்து. இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனிற், பொது வகையாற் றளையாமாறும், அவற்றதெண்ணு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—'சீரொடு சீர்தலைப் பெய்வது தளை' என்பது, ஒரு சீரொடு ஒரு சீரேற்று நிற்பது தளை யென்று சொல்லப்படும்; 'அவை ஏழ் என மொழிப இயல்புணர்ந் தோரே' என்பது அவை ஏழு வகைப்படுமென்று சொல்லுவார் நூன்முறை யறிந்தோ ரென்றவாறு.

†ஏழாவன:— வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையுமென. அவை போக்கித், தத்த மிலக்கணச் சூத்திரத்துட் காட்டுதும். பிறரும்,

"தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே"

என்பது யாப்பருங்கலக்காரிகை.

"தன்சீர் தனதோ டொன்றலு முறழ்தலு
மென்றி ரண்டாகு மியம்பிய தளையே"

என்பர் இலக்கண விளக்கநூலுடையார்.

† தளை ஏழாவன:—1. இயற்சீர் வெண்டளை, 2. வெண்சீர் வெண்டளை, 3. நேரொன்றிய ஆசிரியத்தளை, 4. நிரையொன்றிய ஆசிரியத்தளை, 5. கலித்தளை, 6. ஒன்றிய வஞ்சித்தளை, 7. ஒன்றாத வஞ்சித்தளை.

"செயற்குறி யிருசீர் செய்யு ணடப்புழித்
தலைப்பெய னிற்பது தளையெனப் படுமே"

என்றாராகலின், சீரொடு சீர்தலைப் பெய்வது தளையென்றொருமை கூறி, அவையேழென மொழிபவென்றெண்ணிப், பின்பு பன்மை கூறியதனாற் றளை வழங்குகின்றுழி, நின்றசீரி னீற்றசையும் வருஞ்சீரின் முதலசையுந் தம்முளொன்றுதலும் ஒன்றாமையுங் கொண்டு வழங்கப்படும்; என்னை?

"நின்ற சீரீற் றொடுவருஞ் சீர்முத
லொன்றுத லொன்றா தாகுத றளையே"

என்றார் பிறரு மெனக்கொள்க.

"நின்றசீ ரீறும் வருஞ்சீர் முதலசையு
மொன்றியு மொன்றாது மோசைகொள—நின்றால்
வளையொன்று முன்கையாய் வந்தன நாலோர்
தளையென்று கட்டுரைப்பர் தாம்" (கஎ)

[வெண்டளை இது வென்பது]

## 18. வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமு மென்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே

என்ப தென்னுதலிற்றோவெனின் வெண்டளை யிரண்டு மாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—'வெண்சீரொன்றலும்' என்பது, வெண்பா வுரிச்சீர் நின்று தன் வருஞ்சீர்முதலசையோ டொன்றலும்; 'இயற்சீர் விகற்பமுமென்று' என்பது, இயற்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉமென; 'இரண்டென்ப வெண்டளைக் கியல்பே' என்பது, வெண்டளை யியல்பா னிரண்டுவகைப்படு மென்றவாறு.

இயல்பே யென்ற விதப்பால் வெண்பாவுரிச்சீர் நின்று வெண்பா வுரிச்சீரோ டொன்றுதலும், இயற்சீர் நின்று இயற்சீரோ டொன்றுதலூஉஞ் சிறப்புடைத்து. வருஞ்சீர் யாதானுமாக வரப்பெறும். விகற்பமென்ற தொன்றாததனைச் சொல்லுமோவெனிற், சொல்லும்; என்னை?

"இயற் சீரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்"

என்றாராகலின்.

அவற்றிற்குச் செய்யுள்:—

"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை"

இது வெண்சீரொடு வெண்சீரொன்றி வந்த சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று"

இது வெண்சீரொடு வேற்றுச்சீரொன்றிய சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இஃது இயற்சீர் நின்று, இயற்சீரொடு விகற்பித்து வந்த சிறப்புடை இயற்சீர் வெண்டளை.

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

இஃது இயற்சீர் நின்று வேற்றுச்சீரொடு விகற்பித்து வந்த சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

"சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து"

இதனுள் வெண்டளை யெல்லாம் வந்தன. (௧௮)

[ஆசிரியத்தளை இது வென்பது]

**19. ஈரசைச் சீர் நின் றினிவருஞ் சீரொடு**
**நேரசை யொன்ற னிரையசை யொன்றலென்**
**றாயிரு வகைத்தே யாசிரி யத்தளை**

என்ப தென்னுதலிற்றோவெனின் ஆசிரியத் தளையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'ஈரசைச்சீர் நின்று இனிவரும் சீரொடு நேரசை ஒன்றல்' என்பது, இயற்சீர் நின்று வருஞ்சீர் முதலசையொடு நேரசையா யொன்றுவதூஉம்; 'நிரையசை யொன்றலென்று' என்பது, நிரையசையா யொன்றுவதூஉமென்று; 'ஆயிருவகைத்தே ஆசிரியத் தளை' என்பது, ஆசிரியத்தளை யிரண்டு வகைப்படு மென்றவாறு.

இனிவருஞ்சீர் என்று சிறப்பித்த வதனால் வருஞ்சீரும் இயற்சீரே வந்தொன்றுவது சிறப்புடைத்து. வருஞ்சீர் யாதானு மாகப் பெறும்.

வரலாறு:—

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கு
மகில்படு கள்ளியங் காடிறந் தோரே"

இஃது ஈரசைச்சீர் நின்று ஈரசைச்சீரொடு ஒன்றிய சிறப்பிலாசிரிய நேரசைத்தளை.

"திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி"

இஃது ஈரசைச்சீர் நின்று வேற்றுச்சீரொடு ஒன்றிய சிறப்பிலாசிரியத்தளை.

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை முழங்கப்
பண்ணமைத் தவர்தேர் சென்ற வாறே"

இஃது ஈரசைச்சீர்நின் றீரசைச்சீரோ டொன்றிய சிறப்புடை யாசிரியத்தளை.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

இஃது இயற்சீர் நின்று வேற்றுச் சீரோ டொன்றிய சிறப்பிலாசிரியத்தளை.

"ஈரசை யியற்சீ ரொன்றிய தெல்லா
மாசிரி யத்தளை யென்மனார் புலவர்"

என்றார் மயேச்சுவரர்;

"ஈரசை யியற்சீ ரொன்றிய நிலைமை
யாசிரி யத்தளை யாகு மென்ப"

என்றார் பிறருமாகலின். பிறவுமன்ன. (கக)

[கலித்தளை இது வென்பது]

20. நிரையீ றில்லா வுரிச்சீர் முன்னர்
நிரைவரு காலைக் கலித்தளை யாகும்

என்பதென்னுதலிற்றோ வெனிற் கலித்தளையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'நிரையீ றில்லா உரிச்சீர் முன்னர்' என்பது நேரீறாகிய உரிச்சீர் முன்னர்; 'நிரைவரு காலைக் கலித்தளை யாகும்' என்பது நிரையசை வருஞ்சீருக்கு முதல்வரிற் கலித்தளை யாகு மென்றவாறு.

நிரையீறில்லா வுரிச்சீர் முன்னர் நிரைவரிற் கலித்தளை யாகும் என்னாது, நிரைவருகாலை யென்று மிகுத்துச் சொல்லிய வதனால், வருஞ்சீர் நேரீற்றுச் சீரேயாவது சிறப்புடைத்து, பிறசீர் வரப் பெறுமாயினு மெனக் கொள்க.

வரலாறு:—

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி" என்பது நேரீற் றுரிச்சீர் நின்று நேரீற் றுரிச்சீரொடு மொன்றாது வந்த சிறப்புடைக்கலித்தளை.

"முற்றொருட்டு மறவினை முறைமையான் முயலாதார்" என்பது நேரீற் றுரிச்சீர் நின்று வேற்றுச்சீரோ டொன்றாதுவந்த சிறப்பில் கலித்தளை. இயற்சீரை ஆசிரியவுரிச்சீரென்று வழங்கவும் பெறுமென் றுரைக்கப்பட்ட தாகலின், நிரையீறில்லாத் தேமா புளிமா வென்னு மிரண்டாசிரியவுரிச்சீர் முன் நிரையசை முதலாகிய சீர் வரினுங் கலித்தளையேயாம்; பிறவரினாகாது. ஈரசைகூடிய சீரியற் சீரென்றெடுத்தோதினமையானும், ஆண்டு இயற்சீரைஆசிரிய வுரிச்சீரென்று வழங்கப்படு மென்று பிறர்மதஞ் சொன்னமையா னும், இயற்சீர் விகற்பம் வெண்டளையா மென்றெடுத் தோதிப் போந்

தமையானுமெனின் அது பொருந்தாது. நிரையீறாகிய கூவிளங்கரு விளம் என்னுஞ் சீர் நின்று வருஞ்சீரொடு விகற்பித்தவழி வெண்டளைக் கிடமாகுமாதலான், இயற்சீர் விகற்பம் வெண்டளையா மென்பது பழுதாகாது. தேமா, புளிமா வென்னும் இரண்டாசிரிய உரிச் சீர்ப்பின் நிரை வரினுங் கலித்தளையாதல் வேண்டு மென்று கடாவினால் அசைச்சீர் கலிக்குச் சிறப்பில்லாமை யானும், பிறநூலுளிவ்வாறு கூறப்படாமை யானும், பல்பொருட் கேற்பி னல்லது கோடலென்பது தந்திரவுத்தியாகலானும் ஈண்டு நேரீறாகிய மூவசைச்சீர் நின்று ஒன்றாததுவே கலித்தளையென்று கொள்ளப்படுவதென்க.

> "ஈரசைச்சீர் நாமுரிய வாசிரியச் சீர்க்கென்று
> நேரீற் றியற்பின் னிரைவருங்கா-லோருங்
> கலித்தளையா மென்கவக வற்சீர் கலியி
> னொலிக்கிசையா வென்றுரைக்கு மோத்து"

இதனை விரித்துரைத்துக்கொள்க.

[வஞ்சித்தளை இது வென்பது]

21. தன்சீ ரிறுதி நிரையொடு நேர்வரின்
வஞ்சித் தளையின் வகையிரண் டாகும்

என்பதென்னுதலிற்றோ வெனின் வஞ்சித்தளையா மாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—'தன்சீரிறுதி' என்பது, வஞ்சியுரிச்சீரினிறுதி; 'நிரையொடு நேர்வரின்' என்பது, வருஞ்சீர் முதலசைச்சீர் நிரையசையாய் வரவும், நேரசையாய் வரவும்; 'வஞ்சித்தளையின் வகையிரண்டாகும்' என்பது, வஞ்சித்தளை இரண்டு வகைப்படுமென்றவாறு.

வஞ்சித்தளை இரண்டாகும் என்னாது, வஞ்சித்தளையின் வகையிரண்டாகுமென்று விகற்பித்த வதனால் வருஞ்சீரும் வஞ்சி யுரிச்சீராய் வருவது சிறப்புடைத்து; பிறசீரும் வருமாயினு மெனக் கொள்க.

"பூந்தாமரைப் போதலமர" என்னும் பாட்டினுள் முதலிரண்டடியும் வஞ்சியுரிச்சீர் நின்று வஞ்சியுரிச்சீரோ டொன்றாது

வந்த சிறப்புடை வஞ்சித்தளை. அல்லன வொன்றிவந்த சிறப்புடை வஞ்சித்தளை.

"மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்
கினிதி னொதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே" எனவும்,

"புனல்பொழிவன சுனையெலாம்
பூநாறுவ புனலெலாம்
வரைமூடிவ மஞ்செலாம்
தேனுறுவ பொழிலெலாம்
எனவாங்கு
நாறுகுழற் கொடிச்சியர் தம்மலைச்
சீறூர் வாழிய செல்வமொடு பெரிதே" எனவும்

போந்த இவற்றுள் வஞ்சியுரிச்சீர் நின்று வேற்றுச் சீரோ டொன்றியும், ஒன்றாதும் வந்த சிறப்பில் வஞ்சித்தளை யிரண்டும் வந்தவாறு கண்டுகொள்க. "தன்சீ ரிறுதி நிரையொடு நேர்வரின் வஞ்சித்தளையாம்" என்றமையான், வஞ்சிச்சீர் நிரையும்நேரு மொருங்கு நின்று புளிமாவென்னுஞ் சீராய்வரினல்லது வஞ்சித்தளையாகாது பிறவெனின், அற்றன்று, வஞ்சித்தளையின் வகையிரண்டாகுமென் றெண்ணி விரித்துரைத்தமையால், வருஞ்சீர் நிரைமுதலாய் வரினும் நேர் முதலாய் வரினும் வஞ்சித்தளையா மென்பது. எனவே, நிரையு நேரு முதலாகிய வெல்லாச்சீரினையு முட்கொண்டு பிறநூலொடுமாறு கொள்ளாது நிற்குமெனக் கொள்க. அல்லதூஉம்,

"இருவகை யுகரமோ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப"

என்பது நேர்க்கீழ்க் குற்றிய லுகரமும், முற்றிய லுகரமும் வந்தது. 'நுங்கு நுங்கினார்' என்றாற்போல வொருங்குவரி னேர்பசையாய் நிரைக்கீழ்க் குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் வந்தது. 'நுழைந்து புக்காரே' என்றாற்போல ஒருங்குவரின் நிரைபசையா மென்ப தன்று. நேர்க்கீழ்க் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரி

னும், நேர்பசையாம். நிரையசைக்கீழ்க் குற்றியலுகரம் வரினும், முற்றியலுகரம் வரினும் நிரைபசையா மென்றார் செய்யுளியலுடையார்; அதுபோலக் கொள்க. 'வஞ்சித்தளைவகை வரைவின்றாகும்' என்றாற்போலத், 'தன்சீ ரிறுதி நிரையொடு நேர்வரின் வஞ்சித்தளையிரண்டாகு மென்று, தொகுத்துச் சொன்னாலுங் குறித்தபொருளைக் கொண்டுநிற்கும், 'வஞ்சித்தளையின் வகையிரண்டாகும்' என்று விரித்துச் சொல்லவேண்டியதென்னை யெனின், தளைவழங்குகின்றுழி நேரீறாகிய நாலசைப் பொதுச்சீரை வெண்பாவுரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றியது வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும் நிரையீறாகிய நாலசைப் பொதுச்சீரை வஞ்சியுரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடொன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளையாகவும், ஓரசைப் பொதுச்சீரை இயற்சீரேபோலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடொன்றியது ஆசிரியத்தளையாகவும், ஒன்றாதது வெண்டளையாகவும் கொண்டு வழங்கப்படும் என்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது; 'விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்' என்பதாகலின். பிறரும்,

"நேரீற்று நேர்வரின் வெண்டளை யாகுமந்
நேரீற் றியல்பின் னிரைவரி-னேருங்
கலித்தளையாம் பால்வகையால் வஞ்சித் தளையா
நிரைவரினு நாலசைச்சீர்க் கண்" எனவும்

"உரைச்சீர்த் தளைவகைக் கெய்தும் பெயரது
நிரைநே ரிறுதி நாலசைச் சீர்க்கண்" எனவும்

"ஓரசைப் பொதுச்சீர்த் தளைவகை தெரியின்
ஈரசைச் சீர்த்தளைக் கெய்தும் பெயரே" எனவும்

"ஓரசைப் பொதுச்சீ ரொன்று தாயினும்
வெண்டளை யொன்றிய தாசிரியத் தளையே" எனவும்

சொன்னாரெனக் கொள்க. "அங்கண்வானத் தமரரசரும்" என்னும் பாட்டினுள், "வெங்களியானை வேல்வேந்தரும்" என நேரீற்று நாலசைச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றினமையின் வெண்டளை. "கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்ச" என்பது நேரீற்று நாலசைச்சீரோ டொன்றாமையிற் கலித்தளை. "மந்தமாருத மருங்கசைப்ப, அந்தரதுந்துபி நின்றியம்ப" என நிரையீற்று நால

சைப் பொதுச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசையோடொன்றியும் ஒன்றாதூஉம் வந்த வஞ்சித்தளை. "இலங்குசாமரை யெழுந்தலமர" என்பது நிரையீற்று நாலசைப் பொதுச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றிய வஞ்சித்தளை. "உரிமையின்க ணின்மையால்— கொன்றவென்பவே" இதனுள் 'மழை' என்னும் அசைச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றாமையின் வெண்டளை; 'செய்' என்னும் அசைச்சீர் நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றிற்றாதலின், ஆசிரியத்தளை; பிறவும் வந்தவழிக்கொள்க. பிறருந் தளைக்கிலக்கண மிவ்வாறே எடுத்தோதினர். என்னை?

"இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்"

"உரிச்சீ ரதனு ளுரைத்ததை யன்றிக்
கலக்குந் தளையெனக் கணடிசி னோரே"

"இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசிரி யத்தளை யாகும்"

"வெண்சீ றிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாங் கலித்தளை யாகும்"

"தன்சீ ரிரண்டு தலைப்பெய றம்முளொத்
தொன்றினு மொன்றா தொழியினும் வஞ்சியின்
பந்த மெனப்பெயர் பகரப் படுமே"

என்றார் காக்கைபாடினியார். அங்ஙனமெனின், இவர் வருஞ்சீருங் குறித்துக் கூறினாரன்றோ வெனின், அவர் அவை சிறப்புடைமை நோக்கி யெடுத்தோதினர், அல்லாது அசைச்சீரு முடன்பட்டா ரெனக்கொள்க.

"இயற்சீ ரொன்றா நிலையது வெண்டளை
உரிச்சீ ரதனி லொன்றுத லியல்பே"

"ஈரசை யியற்சீ ரொன்றிய நிலைமை
யாசிரி யத்தளை யாகு மென்ப"

"வெண்சீ ரிறுதி நிரைவரிற் கலித்தளை
வஞ்சி வகைமை வரையின் றாகும்"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"ஈரசை யியற்சீ ரொன்றுத லியல்பே"

என்றார் அவிநயனார்.

"இயற்சீ ரொன்றா நிலையது வெண்டளை
யுரிச்சீ ரதனோ டொன்றுத லியல்பே"

"நேரு நிரையுமா மியற்சீ ரொன்றின்
யாவரு மறிப வாசிரி யத்தளை"

"வேறுபட வரினது வெண்டளை வெண்சீர்
ஆறறி புலவர்க் கொன்றினு மதுவே"

"வெண்சீர்ப் பின்னர் நிரைவரு காலைக்
கண்டனர் புலவர் கலித்தளை யாக"

"வஞ்சி யுரிச்சீர் வந்தன வழிமுறை
யெஞ்சிய வரினும் வஞ்சித் தளையே"

என்றார் மயேச்சுவரர்

[தளைகள் மயங்குமாறுணர்த்துவது]

(22) வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன
வெல்லாத் தளையு மயங்கியும் வழங்கும்.

இச்சூத்திரந் தளைமயக்கமா மாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—'வெள்ளையுட் பிறதளை விரவா' என்பது, வெண்பாவினுள் வெண்டளையன்றி வேற்றுத்தளை வந்து மயங்கா; 'அல்லன' என்பது, ஒழிந்த பாவிடத்தும் பாவினத்திடத்தும் வெண்பாவினத்திடத்தும்; 'எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும்' என்பது, வேற்றுத்தளையும் மயங்கியும் வரப்பெறு மென்றவாறு.

'மயங்கியும் வழங்கும்' என்ற உம்மையால், எல்லாத்தளையும் மயங்கியும் வரினுந் தன்றளையான் வரினே சிறப்புடைத்து; என்னை?

"எல்லாத் தளையு மயங்கினுந் தன்றளை
யல்லாத் தளையாற் பாவினி தியலா"

என்றாராகலின். அவை விரவி வருமாறு:—

ஆசிரிய அடியுள் தளை மயக்கம்.

ஆசிரியவடியுள் வெண்டளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலும், கலித்தளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலும், வெண்டளையுங் கலித்தளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலும், வெண்டளையுங் கலித்தளையும் விரவிநிற்றலும், வெண்டளையே வரினும், கலித்தளையே வரினும், வெண்டளையும் வஞ்சித்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையுங் கலித்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையு மாசிரியத்தளையுங் கலித்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையும் வெண்டளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலுமுரிய வென்றிவ்வாற்றாற் பலபட விகற்பித்தும்;

கலியடியுள் தளைமயக்கம்.

கலித்தளையுள், வெண்டளையுந் தன்றளையு மாசிரியத் தளையும் விரவிநிற்றலும், தன்றளையும் வெண்டளையும் விரவிநிற்றலும், தன்றளையு மாசிரியத்தளையும் வெண்டளையும் விரவிநிற்றலும், தன்றளை யன்றியே யாசிரியத்தளையும் வெண்டளையும் விரவிநிற்றலும் வெண்டளையே வருதலும், ஆசிரியத்தளையே வருதலும், வஞ்சித்தளையுந் தன்றளையும் விரவிநிற்றலும், தன்றளையும் வஞ்சித்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையும் மாசிரியத்தளையும் வெண்டளையும் விரவி நிற்றலும், வஞ்சித்தளையுந் தன்றளையு வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையுந் தன்றளையும் வெண்டளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையும் வெண்டளையு மாசிரியத்தளையும் விரவிநிற்றலும், வஞ்சித்தளையே வருதலுமென்றிவ்வாற்றாற் பலபட விகற்பித்தும்;

வஞ்சியடியுள் தளைமயக்கம்.

வஞ்சியடியுள் வெண்டளையே வருதலும், ஆசிரியத்தளையே வருதலும், கலித்தளையே வருதலும், தன்றளையுங் கலித்தளையுமே வருதலும், கலித்தளையு மாசிரியத்தளையுமே வருதலும்; முச்சீரடி வஞ்சியுள் வெண்டளையுந் தன்றளையும் வருதலும், ஆசிரியத்தளையுந் தன்றளையும் வருதலும், கலித்தளையுந் தன்றளையும் வருதலும், வெண்டளையு மாசிரியத்தளையும் வருதலும், வெண்டளையுங் கலித்தளையும் வருதலும், கலித்தளையு மாசிரியத்தளையும் வருதலுமுடைத் தென்றிவ்வாற்றாற் பொதுவகையாற்

கூறிச், சிறப்புடைத்தளையானுஞ் சிறப்பில் தளையானு மிவ்வாறு மயங்கச் சொல்ல வெல்லா மிரட்டியாமென்று, இவ்வாறு இருதளைகள் தம்முண் மயங்கி நிற்பன பல வேறுவகைப்பட்ட தளைமயக்கமா மென்றிலக்கியப்பன்மை நோக்கி விகற்பித்துக் கூறினாரொரு சாராசிரிய ரேனும், எல்லாத்தளையும் வந்து இவற்றுண் மயங்குமெனவே யடங்குமென்று, அல்லன வெல்லாத்தளையு மயங்கியும்வழங்கு மென்று தொகுத்துச் சொன்னா ரிந்நூலுடையார். அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிதம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவி லென்னையர் மலையே"

இவ் வாசிரியத்துள் வேற்றுத்தளை யெல்லாம் வந்து மயங்கியவாறு கண்டு கொள்க.

"குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு
ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

இக்கலிப்பாவினுட் "பிறபாவின் றளையெல்லா மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

"பூம்பொழிற் றண்கானல்
புனல்பொழி தண்படப்பை
வீநாறு பூங்காஞ்சிக்
கானாறு கோட்டெருமைக்
குழக்கன்று பிழைத்தோடிக்
காய்த்திறுத்த கதிர்ச்செங்நெற்
றேய்த்துழக்கு மதுநோனா
ரெனவாங்குத்

தீங்கழை வாங்கி விலங்கி விளங்கும்
பூம்புன லூர புலம்பா றனே"

இவ்வஞ்சிப் பாவினுள் வெண்டளையு மாசிரியத்தளையு மயங்கி வந்த வாறு கண்டு கொள்க.

இனிப்பாவினத்துட் டளைமயங்கி வருமாறு:—"முழங்கு திரைக் கொற்கை வேந்தன்" என்னும் வெண்டுறையுள் வஞ்சித்தளையு மாசிரியத்தளையுங் கலித்தளையும் வெண்டளையு மயங்கி வந்தவாறு கண்டு கொள்க.

"வம்பலைத்த வனமுலையாள் முகமாய் வந்து
மறுநீக்கி மறைந்திருந்தேற் கறிந்து காணு
மம்பரத்தி னினிதிழிந்தா லமிழ்தங் கொள்வான்
அவிரொளிசேர் மயிரொழுக்கா யணைந்த தென்று
செம்பவளத் திரள்முத்தஞ் செறியச் செய்து
சிலைக்கோலிக் கணைதெரிந்து சேம மாகக்
கொம்பலைத்து நுகப்பியக்கி மதிய மிட்ட
கொடிமதிலென் றவிர்பூணைக் குறிக்கொண் டேனே"

இவ் வாசிரியவிருத்தத்துட் கலித்தளையு மாசிரியத்தளையும் வெண்டளையு மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

"நாகஞ் சந்தனத் தழைகொண்டு நளிவண்டு கடிவ
நாகஞ் சந்தனப் பொதும்பிடை நளிர்ந்துதா துமிழ்வ
நாகஞ் செஞ்சுடர் நருமணி யுமிழ்ந்திருள் கடிவ
நாக மற்றிது நாகர்தம் முலகினை நகுமே"

இக்கலித்துறையு ளாசிரியத்தளையுங் கலித்தளையும் வெண்டளையும் மயங்கி வந்தவாறு கண்டு கொள்க.

வெள்ளையுட் பிறதளை விரவாவல்லன எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கு மென்பதனுள், 'அல்லன எல்லாத்தளையும் மயங்கியும் வழங்கு' மென்பது வேண்டா; 'வெள்ளையுட் பிறதளை விரவா' வென்பதனானே யல்லனவற்றுட் பிறதளை விரவு மென்பது பெறப்படும்; என்னை? மேலைச்சேரிக் கோழி வென்றதென்றாற் கீழைச்சேரிக் கோழியோடிற்று என்பது பெறப்பட்டது. அல்லதூஉம் பிறரும் 'முக்கட்கூட்டங் களவிற்கில்லை' யென்றமையான், மக்கட்கூட்டங்

கற்பிற் குண்டெென்பது பெறப்பட்டதென்று விரித்துரைத்தாராக லானு மென்க. இவ்வகையா லெதிரது மறுத்த லீண்டுப் பெறப்படுமே யெனினும், விளங்கச் சொல்லலென்னு நூன்மரபி னுற் சொல்லப்பட்டதாம். அற்றன்று, "வெள்ளையுட் பிறதளை விர வா" வென்பதனைச் சூத்திரமாகக் கொண்டபொழுது, 'வெள்ளை,' யென்பதனாலே வெண்பாவும், வெண்பாவினமும் கொள்ளப்படுமே யெனின், வெண்பாவினத்துள்ளும் வேற்றுத்தளை விரவாது விடல் வேண்டும். 'வெள்ளை' யென்பதனால் வெண்பாவே கொள்ளப்படுவ தெனின், பாவாய் வேறாகிய வாசிரியம், கலி, வஞ்சியென்றி வற்றிற் பிறதளை விரவு மென்பதல்லது, இனத்திற் பிறதளை விரவு மென்பது பெறப்படாது. 'மேலைச்சேரிக்கோழி வென்ற' தென்றாற் 'கீழைச்சேரிக்கோழி யோடிற்' றென்பதல்லது ஏனைச்சேரிக் கோழி வென்றது, ஓடிற்றென்பது பெறலாகாது; அவ்வாறே போல வும், 'மக்கட்கூட்டங் களவிற்கில்லை' யென்றாற் களவின் வேறாகிய கற்பிற்குண்டென்பதல்லது கைக்கிளை பெருந்திணைக் குண்டில்லை யென்பது பெறப்படாது; அவ்வாறே போலவுமென்று கடாவுமாணுக் கனைக்குறித்து வெண்பாவொழித் தல்லாப்பாவும் பாவினமும் பிறதளை விரவு மென்பதறிவித்தற்கு "வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன, வெல்லாத்தளையும் மயங்கியும் வழங்கு" மென்பது சொல்ல வேண்டு மெனக்கொள்க.

அஃதேயெனின், 'வெள்ளையுட்பிறதளை விரவா வல்லனதளையு மயங்கியும் வழங்கு' மென்றாலுங் குறித்த பொருளைக் கொண்டு நிற்கும். 'எல்லாம்' என்பது சொல்லவேண்டிய தென்னையெனின், பெருநூன் மருவாவொருசாரார், சான்றோர் செய்யுட்டன்மை யறி யாதோரும்நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் பிறதளையும் வெண்பாவி னுளருகிவரு மென்பாருளராயினும், அவ்வாறு வரின் வெண்பாவழி யும், செப்பலோசை தழுவி நில்லாதாகலினென்று மறுத்தார் காக் கைபாடினியார் முதலாகிய மாப்பெரும் புலவர்; அவரது துணிபே இந்நூலுள்ளுந் துணிபு என்று யாப்புறுத்தற்கு வேண்டப்பட்ட தெனக்கொள்க.

"குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு *நேர்மணன்மே னின்று—புலாலுணங்கல்

* 'வெண்மணல்' எனவும் பாடம்.

கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர
துள்ளம்புக் கியாப்ப துரை"

இதனுட் 'கொள்ளும்புட் காக்கின்ற' வென்புழிச் செப்பலோசை கொள்ளுமாறுபோலாது 'கோவின்மையோ வென்புழி' வஞ்சியுரிச்சீர் வந்து வஞ்சித்தளை தட்டுச் செப்பலோசை வழுவிக்கிடந்தவாறும், வகையுளி சேர்த்தலாகாதவாறும், உதாரண வாய்பாட்டா லோசையூட்டினு முண்ணுதவாறுங் கண்டுகொள்க. அல்லதூஉஞ் சான்றோர் செய்யுளுள்ளும் வஞ்சித்தளை தட்டுச் செப்பலோசை வழுவியும் வேற்றுத்தளை வந்த வெண்பா வில்லைபோலு மெனக் கொள்க.

"வளக்கு ளக்கறை மாநீலங் கொய்வாட்
களக்க லாகுமோ வன்பு"

இதனுள் ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை வழுவிற்று. பிறவு மிவ்வாறு வழுவி வந்தன கண்டு கொள்க.

"சீர்வண்ணம் வெள்ளைக் கலிவிரவும் வஞ்சியு
ளேருங் கலிப்பாச் சிறிச்சிறிதே—பாவினுள்
வெண்பா வொழித்துத் தளைவிரவுஞ் செய்யுளாம்
ஒண்பாக் கலியுட் புகும்" எனவும்,

"வெள்ளையொழித் தெல்லாப் பாவொடு பாவினஞ்
சொல்லிய தளைசீர் வரைவில விரவும்" எனவும்

சொன்னார் பிறருமெனக் கொள்க.

"நின்றசீ ரீறும் வருஞ்சீர் முதலசையு
மொன்றியு மொன்றது மோசைகோண்—டென்றும்
வளையொன்று முன்கையாய் வந்தன நூலோர்
தளையென்று கட்டுரைப்பார் தாம்"

"அதிக்கண்ட மென்று மிசையென்றுஞ் சீரைப்
பதச்சேத மென்றும் பகர்வர்—பதச்சேதம்
சந்தித் ததனைத் தளையென்ப ரத்தளையைப்
பந்தமென் பாரும் பலர்"

இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

தளையோத்து முற்றியது.

# ரு அடியோத்து.

[அடிவகை இவையென்பது]

23. குறளடி சிந்தடி யளவடி நெடிலடி
கழிநெடி லடியெனக் கட்டுரைத் தனரே.

இவ்வோத் தென்னபெயர்த்தோ வெனின், தலையிணையடியா மாறும் அடிப்பெயரும், அடிக்குரிமையும், அடி மயக்கமும், அடிவரை யறையும், ஆமாறுணர்த்திற் றுதலா னடியோத் தென்னும் பெயர்த்து.

இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின், ஒருசாராசிரியர் வேண்டு மடிகளது பெயர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—குறளடியுஞ் சிந்தடியு மளவடியு நெடிலடியுங் கழிநெடிலடியுமென விவை யைந்து திறத்தன வடியென்றுரைத்தா ரொருசார் தொல்லாசிரியர் என்றவாறு.

இப்பொருளைச் சொல்லுமோ விச்சூத்திரத்துட்டொடர் மொழி யெனிற், சொல்லும்; என்னை? 'குறளடி சிந்தடி யளவடி நெடிலடி கழிநெடிலடி' என்பது உம்மைத் தொகையாகலின், எண்ணும்மை வாசகம்பட விரித்துரைக்கப்பட்டது. ஐந்து திறத்தன வென்பது அச்சொன்ன வடி யைந்தே யாகலின் ஐந்தென்பது போந்தபொருள். *'கடையிணை, பின்முரண் இடைப்புணர் முரண்' என்னுஞ் சூத்திரத்து ணின்றுஞ், சார்ச்சிவழி ஒழுகுதலென்னு மதிகாரமுறைமையா லொருசாராசிரிய ரென்பது †கொணர்ந்துரைக்கப்பட்டது. வடநூ லுள்ளும் ஞாபகத்தானும் விருத்தியானு மதிகாரமென்று சேண் வயிற் கொணர்ந்துரைக்கப் படுமாகலின். அல்லதூஉம், பல்காயனார் முதலாகிய வொருசாராசிரியர் எடுத்தோதிற்றிலராகலி னது வலித் துரைக்கப்பட்டதென வமையும். இதுவுஞ் சார்புநூலாகலின் அப்படி

* இவ்வியல் 37-ஆம் சூத்திரம்.

† 'சொன்னமையாற் கொணர்ந்து' எனவும் 'சேண்மையிற் கொணர்ந்து' எனவும் பாடம்,

விகற்ப மெடுத்தோதினர் காக்கைபாடினியார் முதலாகிய வொரு சாராசிரிய ரெனக்கொள்க; என்னை?

'குறள்சிந் தளவு நெடில்கழி நெடிலென்
றைவகை மரபின வடிவகை தானே'

என்றாராகலின். தொல்லை யென்பது 'கட்டுரைத்தனரே' என விறந்தகாலம் படத் தன்மையொடு தழுவச் சொன்னமையாற் பெறப் பட்டது. ஆசிரியரென்பதாற்றலாற் போந்த பொருள். அணியிய லுடையாரும்,

"இயன்ற செய்யுட் கியைந்த பொருளை
யுயர்ந்த நடையா லுணராக் கூறலு
மருங்கல மொழியா லரிபறக் காட்டலு
மொருங்கிரண் டென்ப வுயர்நடைப் பொருளே"

என்னுஞ் சூத்திரத்துள் ஒருங்கிரண்டு என்புழி யாற்றலாற் போந்த பொருளை, 'என்ப' வென்னு முற்றுச் சொல்லோடு புலவரென்னும் பெயர்கூட்டிப் பொருளுரைத்தாராகலி னிதுவு மவ்வாறே கொள்க. பலவுஞ் சிலவுமாகிய தளையொடு பொருந்திய சீர்களாலடுத்து நடத் தலி னடி யென்பது காரணக்குறி; என்னை?

"தடுத்தன தட்டத் தளைபல தழுவியும்
அடுத்த சீரி னடியெனப் படுமே"

என்றாராகலின்.

குறளடி முதலிய வடிகளை யிடுகுறியானுங் காரணக்குறியானும் வழங்குப. காரணக்குறியான் வழங்குமா றியாதோவெனின், மக்களிற் றீரக் குறியானைக் குறளனென்றும், அவனினெடியானைச் சிந்தனென் றும், குறியனு நெடியனுமல்லாதானை அளவிற்பட்டா னென்றும், அவனினெடியானை நெடியானென்றும், தீரநெடியானைக் கழிய நெடி யானென்றும் வழங்குவராதலின் இவ்வடிக்கு மிவ்வாறே பெயர் சென்ற தெனக்கொள்க. (உ௩)

[அடிகளைந்தனுள் முதல் நாலடிக ளாமாறு]

24. குறளடி சிந்தடி யிருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்
நிரனிரை வகையா னிறுத்தனர்கொளலே.

இஃதென்னுதலிற்றோவெனின், மேலதிகாரம் பாரித்த வைந்தடியுள்ளூ முதனான்கடியு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—குறளடி சிந்தடியென்றும், அதன் கீழ் இருசீர் முச்சீரென்றும்; அளவடி நெடிலடியென்றும் அதன்கீழ் நாற்சீரைஞ்சீரென்றும் இவ்வாறு நிரனிறைவகையானிறுவி யிருசீரானே வந்தது குறளடியென்றும், முச்சீரானே வந்தது சிந்தடியென்றும், நாற்சீரானேவந்தது அளவடியென்றும், ஐஞ்சீரானே வந்தது நெடிலடி யென்றும் இவ்வாறுகொண்டு வழங்குக என்றவாறு.

"இருசீர் குறளடி சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீ ரறுசீ ரதனி
னிழிபு நெடிலடி யென்றிசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

நிரனிறைவசையா னிறுத்தனர் கோளலே யென்பதில்லாவிடினும் நிரனிறைப் பொருள்கோளேயாம்; 'ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற், கிகர வுகர மிசைநிறை வாகும்' என்றாற்போல. பெயர்த்து மதனை யெடுத்தோத வேண்டியதென்னையெனின் நாற்சீரடி சிறப்புடைத்து; அதனை நேரடி யென்றும், அளவடி யென்றும் வழங்குபவென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்ட தெனக் கொள்க.

" நாற்சீர் கொண்டது நேரடி யளவென்ப
தூக்கொடுந் தொடையொடுஞ் சிவணு மென்ப"

என்றார் நத்தத்தனாரு மெனக் கொள்க.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு.—

" திரைத்த சாலிகை, நிரைத்த போனிரந்
திரைபப தேன்களே, விரைக்கொண் மாலையாய்"

இது குறளடியான் வந்த செய்யுள்.

" இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்*றடங் கையினாய் "

இது சிந்தடியான் வந்த செய்யுள்.

---

* 'தடக்கையினாய்' என்றும் பாடம்.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே"

இஃது அளவடியான் வந்த செய்யுள்.

"வென்றான் வினையின் றொகையாய விரிந்து தன்க
ணொன்றாய்ப் பரந்த வுணர்வின்னொழி யாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்"

இது நெடிலடியான் வந்தசெய்யுள். பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க (உச)

[கழிநெடிலடி ஆமாறு]

25. கழிநெடி லடியே கசடறக் கிளப்பி
னறுசீர் முதலா வையிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே

என்பது என்னுதலிற்றோ வெனின், கழிநெடிலடி யாமா றுணர்த்து தல் நுதலிற்று

இதன்பொருள்:—'கழிநெடி லடியே கசடறக்கிளப்பின், அறுசீர் முதலா ஐ இரண்டீறா வருவன' என்பது, கழிநெடிலென்பதை ஐயு றவு தீரவுரைக்குங்கால் *அறுசீர்முதலாகப்பத்துச்சீரிறுதியாக வரும் அடியெல்லாம்; 'பிறவும் வகுத்தனர்கொளலே' என்பது, பத்துச் சீரின் மிக்குப் பதினறுசீரின்காறும் வருவனவுமுள, அவற்றையுங் கழிநெடிலடியின் பாற்படுத்து வழங்குக வென்றவாறு.

'கசடற' வென்பது ஐயுறவுதீர என்பதனைச் சொல்லுமோ வெனிற் சொல்லும்; 'கற்க கசடற' என்றாராகலின். கழிநெடிலடி யே என்றவழி ஏகாரம் பிரிநிலை. அஃதெற்றிற் பிரிக்கப்பட்டதோ வெனின்,

* 'அறுசீர் முதலாக ஒன்று தலைச்சிறந்து பத்துச்சீரிறுதியாக' என்று சில பிரதிகளிற் காணப்படுகிறது.

"குறளடி சிந்தடி யளவடி நெடிலடி
கழிநெடி லடியெனக் கட்டுரைத் தனரே"

என்ற சூத்திரத்தினின்றும் பிரிக்கப்பட்டது. இசைநிறை ஏகார மெனவு மமையும். 'கழிநெடி லடியே யறுசீர் முதலா வையிரண்டீறு' வென்றது, கசடறச்கிளப்பின், என்று சிறப்பித்துச் சொல்லியவதனால் எண்சீரின் மிக்குவந்த செய்யுட்கள் சிறப்பில வெனக்கொள்க; என்னை?

"இரண்டு முதலா வெட்டீ றாகத்
திரண்ட சீரா லடிமுடி வுடைய
விறந்து வரினு மடிமுடி வுடைய
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே"

என்றார் பிறருமாகலினென்க. 'ஐயிரண்டீறு' வென்றெடுத்தோதினமையால், ஒன்பதின் சீரடியும் பதின்சீரடியும் இடையாகு கழிநெடிலடி யெனப்படும். 'பிறவும் வகுத்தனர் கோளலே' என்றமையாற் பதின்சீரின் மிக்குவருவன வெல்லாம் கடையாகு கழிநெடிலடி யென்று கொள்ளப்படு மென்பது கொள்க.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய ரினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ நுடங்கிய வலயத்தால்
திரைக்கரங்களிற் செழுமலைச் சந்தனத்திரள்களைக் கரைமேல் வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு பொருதல் தவியாதே"
இஃதறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு வருவானி தென்கொ றணிவே"
இஃதெழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"மூவடிவி னுலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலக மூடியெழில் முளைவயிர நாற்றித்
தூவடிவி னுலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டால்

சேவடிக டாமரையின் சேயிதழ்க டண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளா வா*லெமக்குப் புண்ணியர்தங் கோவே"

இஃதெண்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தானையை
யிலங்கு மாழியின் விலங்கியோண்
முடங்கு வாலுளை மடங்கல் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை
சுந்தரி வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்
தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே"

இஃதொன்பதின்சீர்க் கழி நெடிலடியான் வந்த செய்யுள்.

"கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
வங்க பூர்வ மாதி யாய வாதி நூலி
னீதி யோது மாதி யாய
செங்கண் மாலைக் காலை மாலை சென்று சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே"

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

அருளாழி யொன்று மறனே ரிரண்டு
மவிர்சோதி மூன்றொ டணியோக நான்கு
பதமைந்து மாறுபொருண்மேன்

---

* 'ஏமக்கெம்புண்ணியர் தங்கோவே' எனவும் பாடம்'

மருளாழி போழு நபமேழு மேவி
நலமெட்டும் வாட்டும் வகையொன்ப தென்றல்
வருதற்கோ பத்தின் மகிழா

விருளாழி மாய வெறியாழி யன்ன
வெழிலாழி தன்னு ளெழுஞாயி றோட
வவிர்கின்ற வெல்லை யளவு

முருளாழி செல்ல வொழியானம் பக்க
னுலவாத செல்வ முடனேயொ டொல்கி
யுலகுச்சி சேர்வ துளதே.

இது பதினொருசீர்க் கடையாகு கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

கோளரி வாளரி வல்லிய மொல்லொலி
கொண்ட கொலைத்தொழி லெண்கொடு கேழல்கள்
கொட்கு நெடுஞ்சிமை யுட்கிவர் மால்வரை

யாளியை யஞ்சிய வெஞ்சின மால்களி
றந்தளிர் நந்திய சந்து மறைந்தக
லஞ்சுடர் வான்றவழ் மஞ்சு மணந்தெழும்

நீளர வல்கு ணிறங்கிளர் நுண்டுகி
ணித்திலம் வைத்து நிரைத்த பன்மாலைகொள்
நேரிழை மென்முலை போதெழி னன்னுதல்

வாளரி சிந்தி யவிர்ந்து விலங்கின
மைதரு முண்கண் வணங்கு நுணங்கிடை
வண்டிமிர் வார்குழ லொண்டொடி மாதே

இது பன்னிருசீர்க் கடையாகு கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

“நாடி மீட லல்ல தில்லை நல்ல பூவி னல்லி மேய
நம்பி போது நம்பி தன்னோ டன்பளா
யாடு மஞ்ஞை யன்ன சாய லஞ்சொன் மாதர் பஞ்சி துஞ்சு
மல்கு லோவ மெல்ல வொல்கி யல்லல்சேர்
வேட ரோடி வேழம் வீழ வெய்ய வம்பி னெய்து சுட்ட
வேய்கொ டீயின் வெந்து விண்டு வெம்மை சேர்

கோடை யோடு நீடு வாடு குன்றி னின்று மின்று சென்று
கோடி மாட கூட நாடு *கூடமே”

இது பதின்மூன்று சீர்க் கடையாகு கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

“கொன்றூர்ந்தமைந்த” வென்னும் ஆசிரியத்துறையுள் முதலாமடியும் மூன்றாமடியும், பதினான்கு சீர்க் கடையாகு கழிநெடிலடியானும், அல்லாத வெல்லாம் பதினாறு சீர்க் கடையாகு கழிநெடிலடியானும் வந்தன. பதினைஞ்சீர்க் கடையாகு கழிநெடிலடியான் வந்த செய்யுளும் வந்தவழிக் கண்டு கொள்க; என்னை?

கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்
அறுசீர் முதலா வையிரண் டீறா
வருவன பிறவுங் கொளலே

என்றாலும் கருதிய பொருள் பயக்கும். ‘வகுத்தனர் கொளலே’ என்று மிகுத்துச் சொல்லியவதனால், நாற்சீரடிதன்னையே நாலெழுத்து முதலாக ஆறெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியுங் குறளடி; ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுஞ் சிந்தடி; பத்தெழுத்து முதல் பதினான்கெழுத்தின்காறு முயர்ந்த வைந்தடியும் அளவடி, நேரடி; பதினைந்தெழுத்து முதல் பதினேழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி; பதினெட்டெழுத்து முதலாக விருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி, என்றும், இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா வில்லை என்றும் இவ்வாறு அடிவகுத்துப் பின்னை, குறளடி முதலாகிய ஐந்தடியும் ஆசிரியப்பாவிற்குரிய; சிந்தடியும் அளவடியும் நெடிலடியின் முதற்கண்ணிரண்டடியும் வெண்பாவிற்குரிய; அளவடியுட் கடையிரண்டடியும், நெடிலடியும், கழிநெடிலடியும் இலக்கணக் கலிப்பாவிற்குரிய; அல்லதூஉம் நாலெழுத்து முதற் பனிரண்டெழுத்தின் காறும் இருசீரடி வஞ்சிப்பாவிற்குரிய; முச்சீரடி வஞ்சிப்பாவிற்கு எழுத்து வரையறை யில்லையாயினும், எட்டெழுத்து முதலாக நெடிலடிக் கோதிய வெழுத்தளவும் வரப்பெறுமென்றும்; பின்னை வெண்பா வாசிரியம் கலியுள் வருஞ்சீ ரைந்தெழுத்தின் மிகா; வஞ்சிப்பாவின்

*‘கூடுமே’ எனவும் பாடம்

சீர் ஆறெழுத்தின் மிகா, சிறுமை மூன்றெழுத்தாவது சிறப்புடைத்து, இரண்டெழுத்தானும் அருகி வரும்; என்னை?

"சிறுமை மூன்றெழுத் திரண்டெழுத்திற் குறையா"
என்றார் பிறரும், என்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது; இது சார்புநூலாகலின்; என்னை?

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே"
"நாலெழுத் தாதி யாறெழுத் தெல்லை
யேறிய நிலத்த குறளடி யென்ப"
"ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்ற மவ்வழி யான"
"பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே"
"மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப"
"மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப"
"தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாராகலின். இவற்றுக் கெழுத் தெண்ணுழிக் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், ஒற்று இவை ஒழித்தெண்ணிக்கொள்க.

"ஈரிரண்டு மோரேழு மீரைந்து மூவைந்தும்
பாரியைந்த நாற்சீர் பதினெட்டும் - பாவாய்
விளையும் பதினேழ் நிலத்துக் குறள்சிந்
தளவு நெடில்கழிலோ டைந்து".

"ஐந்து மகவற்கு வெள்ளைக் களவடியுஞ்
சிந்து நெடிலடிக்கட் டொல்லிரண்டும் - வந்த
தளவிரண்டு மொன்ற நெடில்கழியுந் தன்பாற்
றளைசிதைவி ரண்டாக் கலிக்கு"

"ஈரிரண்டோ டீரா றெழுவா யிறுவாயாச்
சேரு மெழுத்திருசீர் வஞ்சிக்கா-மோரு

நெடிலடிக்கு நேர்ந்தனவு மூவொருசீர் வஞ்சிக்
கடிவகுத்தா ரெட்டாதி யாய்ந்து''

''அளவியற்பா வென்றசீ ரைந்தெழுத்திற் பல்கா
வளவஞ்சிக் காறுமா மாதோ—வளவஞ்சிச்
சின்மை யொருமூன்று மென்ப சிறப்புடைமைத்
தன்மை தெரிந்துணர்ந்தோர் தாம்''

''குற்றுகரங் குற்றிகர மென்றிரண்டு மாய்தமு
மொற்று மெனவொரு நான்கொழித்துக் - கற்றார்
உயிரு முயிர்மெய்யு மோதினா ரெண்ணச்
செயிரகன்ற செய்யு ளடிக்கு''

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. அல்லதூஉம் இயற்சீரான் வந்ததனை இயலடி யென்றும்; உரிச்சீரான் வந்ததனை உரிச்சீரடியென்றும்; இருசீர் விரவியும், பொதுச்சீர் விரவியும், பொதுச்சீரானே வந்து நிகழ்வனவற்றை யெல்லாம் பொதுவடி யென்றும் வழங்குப. ஐந்தடியினையும் இம்மூன்றனை யுறழப் பதினைந்தடியாம். பிறவற்றைக் கூறப் பலவுமாம். (உரு)

[வஞ்சிப்பாவிற்குரிய அடிகளிவை யென்பது]

26. சிந்தடி குறளடி யென்றிரண் டடியான்
வஞ்சி நடக்கு மென்மனார் புலவர்

என்பது சூத்திரம். மேற்கூறப்பட்ட வடியினை எல்லாப் பாவிற்கும், பாவினத்திற்கும் பகுத் துணர்த்துவா னெடுத்துக் கொண்டார். அவற்றுள் இச்சூத்திரம் வஞ்சிப்பாவிற்குரிய அடியுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—சிந்தடியும் குறளடியுமென் றிவ்விரண்டடியானும் வஞ்சிப்பா நடக்கு மென்ப புலவ ரென்றவாறு.

''என்மனார் புலவர்'' என்பது என்ப புலவரெனச் சொல்லுமோ வெனிற்சொல்லும்: என்ப என்பது நிலைமொழி, புலவர் என்பது வருமொழி, மன், ஆர் என்பன இடைச்சொல்; நிலைமொழியீற்றுப் பகரங்கெட்டு என்மனார் புலவரென்று முடிந்ததாகலின், குறளடி சிந்தடி

யென்றது சிந்தடி குறளடி யென்று முறைபிறழ வைத்தது, சிந்தடி வஞ்சிப்பாச் சிறப்புடைத்து என்பத றிவித்தற்கெனக் கொள்க; தலை தடுமாற்றந்தந்து புணர்ந்துரைத்தல் தந்திரவுத்தியாகலான். பிறரும் வஞ்சிப்பாவிற் கடி வகுத்துரைத்தா ரெனக் கொள்க. என்னை?

"சிந்தடி குறளடியென் றுயிரு திறமும்
வஞ்சிக் கிழமை வகைப்பட் டனவே"

என்றார் காக்கைபாடினியார்.

"வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்"
"முச்சீ ரானும் வருமிட னுடைத்தே"

என்றார் தொல்காப்பியனார்.

"இருசீ ரடியு முச்சீ ரடியும்
வருதல் வேண்டும் வஞ்சி யுள்ளே"

என்றார் மயேச்சுவரர்

அவற்றிற்குச் செய்யுள்:—

"பானல்வாய்த் தேன்விரிந்தன
கானல்வாய்க் கழிமணந்தன
ஞாழலோடு நறும்புன்னை
தாழையோடு முருகுயிர்த்தன
வண்டல்வாய் நறுநெய்தல்
கண்டலோடு கடலுடுத்தன
தவளமுத்தஞ் சங்கீன்று
பவளமோடு நெருமந்துரா
யின்னதோர்
கடிமண முன்றிலு முடைத்தே
படுமீன் பரதவர் பட்டினந் தானே"

இது குறளடியான் வந்த வஞ்சிப்பா.

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த கலந்தொலைப் பரிவெய்தி
யென்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தினிற் சிறந்தாங்கெனப்

பெரிதுங்
கலங்கஞ ரெய்தி யிருப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே" எனவும்

"பரலத்தஞ்செல விவளொடு படுமாயி
னீரவத்தை நடைவேண்டா வினிநனியெனச்
*சிறுகுறும்பிடை மூதெயிற்றியர் சிறந்துரைப்பர்
தெறுகதிர் சென்றுறுமாங்கட் டெருட்டுநர் கொல்லோ
வெனவாங்கு
நொதுமலர் வேண்டி நின்றொடு
மதுகர முற்ற வாடவர் தாமே" எனவும்

இவை சிந்தடியான் வந்த வஞ்சிப்பா. பிறவுமன்ன. (உசா)

[வெண்பாவிற்கும் கலிப்பாவிற்கு முரிய அடிகள் இவை யென்பது]

**27. கலியொடு வெண்பா வகவல் கூறிய**
**வளவடி தன்னு னடக்குமன் னவையே.**

இஃதென்னுதலிற்றோவெனின், ஒழிந்த மூன்று பாவிற்கு முரிய அடியுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:—கலிப்பாவும், வெண்பாவும், ஆசிரியப்பாவும் என்று கூறு மூன்று பாவும் மேற்சொல்லப்பட்ட அளவடியா னடக்கும் என்றவாறு.

அகவலென்ற தாசிரியம்; என்னை?
"அகவ லென்ப தாசிரியப் பாவே"

என்றார் சங்கயாப் புடையாராகலின். 'வெண்பா வகவல் கலி' யென்னுது, 'கலியொடு வெண்பா வகவல்' என்றமை தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தல் தந்திரவுத்தியாதலின். அல்லதூஉம், கலியுள் அம்போதரங்க வுறுப்பு சில இருசீரடியாலும், முச்சீரடியாலும் வரும்; அராகவுறுப்பு நாற்சீ ரடியின் மிக்குவரும்; அவைபோக்கிக் கலிப்பாச் சொல்லுழிச் சொல்லுதும். 'கூறிய' வென்று மிகுத்துச் சொல்லிய வதனுல் வெண்பாவி னீற்றடியும், நேரிசை யாசிரியப்பாவி னீற்ற யலடியும், கலிவெண்பாவினீற்றடியும் முச்சீரான்வரும்; இணைக்குற

*'சிறு குறும்படை' எனவும் பாடம்.

ளாசிரியப்பாவி னிடையடி யிரண்டும் பலவும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரும்; 'தன்' என்று மிகுத்துச் சொல்லிய வதனான் ஆசிரியவிருத்தமும், கலித்துறையும் ஒழித்து மூன்று பாவினமும் பெரும்பான்மையு நாற்சீரடியான்வரும்; 'அவையே' என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஒருசார் ஆசிரியவடியும், கலியடியும் ஐஞ்சீரானருகி வருவனவு முள வெனக் கொள்க. அவைபோக்கி 'மிக்குங் குறைந்து' மென்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். 'விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்,' என்பதாகலி னிவ்வாறு கூறப்பட்டது. பிறரு மிவ்வாறிவற்றுக் கடி வகுத்துரைத்தார்; என்னை?

"ஆசிரியம் வெண்பாக் கலியொடு மும்மையு
நாற்சீ ரடியா னடைபெற் றனவே"
"சிந்துங் குறளும் வருதலு மவ்வழி
யுண்டென் றறைப வுணர்ந்திசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

"இருசீ ரடியு முச்சீ ரடியும்
வருதல் வேண்டும் வஞ்சி யுள்ளே"

"அல்லாப் பாவி னடிவகை தெரியி
னெல்லா நாற்சீ ரல்லடி யியலா
இறுதியு மயலு மிடையு முச்சீர்
பெறுதியும் வரையார் வெள்ளைமுதன் மூன்றும்"

என்றார் நீர்மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்.

"இரண்டினு மூன்றினும் வஞ்சி யாகும்
நாற்சீ ரடியாற் பாப்பிற மூன்றே"

என்றார் அவிநயனார்.

"ஆசிரி யத்தொடு வெள்ளையுங் கலியு
நேரடி தன்னா னிலைபெற நிற்கும்"

என்றார் பல்காயனார்.

"ஆசிரி யப்பா வெண்பாக் கலியென
மூவகைப் பாவு நேரடிக் குரிய"

என்றார் நத்தத்தனார்.

"வஞ்சி யல்லா மூவகைப் பாவும்
எஞ்சுத லிலவே நாற்சீ ரடிவகை"

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

அவற்றிற்குச் செய்யுள்:—

"அரக்காம்ப றும்வா யம்*மருங்குற் கன்னே
பரற்கான மாற்றின கொல்லோ-அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையனப் பையனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி"

என வெண்பா வளவடியான் வந்தது.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே"

என வாசிரியப்பா வளவடியான் வந்தது.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி,

(இது தரவு)

அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவு முரைத்தனரே,

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே,

* 'மருங்குற் கன்ணே' எனவும் பாடம்,

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிற கராலாற்றும் புறவெனவு முரைத்தனரே,
(இவை மூன்றுந்தாழிசை)

எனவாங்கு (இது தனிச்சொல்)

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே" (இது சுரிதகம்)

எனக் கலிப்பா வளவடியான் வந்தது. (உஎ)

[பாவினங்களில் வழங்கும் அடிகள்]

### 28 பாவின மெல்லா வடியினு நடக்கும்.

இஃதென்னுதலிற்றோ வெனின், பொதுவகையாற் பாவினங் கட் கடியாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—குறளடி முதலிய வெல்லா வடியானும் பாவினங்கள் நடக்கும் என்றவாறு.

உம்மை முற்றும்மை. இன்னபாவினம் இன்னவடியானடக்கு மென்று சிறப்பித்துப் போக்கிச் செய்யுளோத்தினுட் கூறுதும். பிறரு மிவ்வாறு கூறினர்; என்னை?

"விருத்தந் துறையொடு தாழிசை யென்றா
வினச்செய்யு ளெல்லா வடியினு நடக்கும்"

என்றார் காக்கைபாடினியார்.

"எல்லா வடியினு மினப்பா நாற்சீ
ரல்லா மெல்லடிப் பாவினுக் கியலா"

என்றார் அவிநயனார்.

அவற்றிற்குச் செய்யுள்:—

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்

பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

எனக் குறளடியாற் பாவினம் வந்தவாறு.

"சோலை யார்ந்த சுரத்திடைக்
*காலை யார்கழ லார்ப்பவு
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே"

எனச் சிந்தடியாற் பாவினம் வந்தவாறு.

" கற்பிறங்கு சாரற் கனவருவி நன்னாட
னெற்றுறந்தா னென்னி லுடையுமா மென்னெஞ்ச
முற்றுறந்தா னிற்ப முகிழ்முலையா யானினிப்
பிற்றுறக்க லாவதோர் பெண்ணாய்ப் பிறப்பேனோ"

எனவும்,

† "தேம்பழுத் தினியநீர் * * * மாடமே"

எனவும் அளவடியாற் பாவினம் வந்தவாறு.

" யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே"

என நெடிலடியாற் பாவினம் வந்தவாறு.

"பூந்த ணிரும்புனத்துப் பூசல் புரியாது பூழி யாடிக்
காந்தள் கமழ்குலையாற் காதன் மடப்பிடிதன் கவுள்வண் டோச்ச
வேந்தன்போ னின்ற விறற்களிற்றை வில்லினாற் கடிவார் தங்கை
யேந்தெழி லாக மியையா தியைந்தநோ யியையும் போலும்"

என அறுசீர்ச் சிறப்புடைக் கழிநெடிலடியாற் பாவினம் வந்தவாறு.

" சிறுநுதற் பேரமர்க்கட் செய்யவாய்க் கருங்கூந்தற்
பெருந்தோட் பேதைக் கொன்றானு
முறுமதி வாண்முகமு மொல்கு மருங்குலு
மொருகாழ் முத்து மேற்கொண்ட

---

* 'காலையார்ந்த கழலார' எனவும் பாடம்.

† இச்செய்யுள் முழுமையும் 101-ஆம் பக்கத்திற் காண்க.

மறுநுதி மென்முலையும் வாட வாழாள்
வருந்து மென்று பணிந்தாலும்
இறுமருங்கு லென்று சுரும்புதானு மிரங்கார்கள்
ளரும்பூவு மிணைந்து வேண்டி."

என வெழுசீர்ச் சிறப்புடைக் கழிநெடிலடியாற் பாவினம் வந்தவாறு.

* "திருமொழியாற் சின்னவணிச் சிலம்பு பாடுஞ்
சிறையன்னந் திருந்தடிமேற் சிலம்பு பாடு
மருமரபின் முரணவிய வரிசேர்ந் தாடு
மயில்புரையு நெடுந்தடங்க ணரிசேர்ந் தாடும்
விரிமலர்சேர் நறுங்குழன்மேல் விரியுங் கந்தம்
வியன்ஞாலம் வியப்பெய்த விரியுங் கந்தம்
இருளனங்கன் பெருந்துயர மிரிக்கு மென்று
மிமைந்தியக்கி யென்றுயர மிரிக்கு மென்றும்"

இஃதெண்சீர்ச் சிறப்புடைக் கழிநெடிலடியான் வந்த பாவினம்.

† "அறிவா ரறியு மன்படைந் தின்பமா மருளே
பூண்டு மாண்ட செல்வ வாண்ட கையார்
மறிவார் மறியு மனத்தான் மாசே யெனப்
பூண்டே யென்று மருளார் செல்வ மருளாராய்ப்
புரிவாரென்னிற் றுன்பம் புரிவார் போலுங்
கீழ்கீழென்று பொருளே சிந்தித் திருணீங்கப்
பிறியார் பேரு நெறியே பிழையார் நின்று
பிறப்பங் குணர வல்லா ரென்றும் வல்லாரே"

இஃதொன்பதின்சீர் இடையாகு கழிநெடிலடியான் வந்த பாவினம்.

† "கல்லடைந்த சீறார்க் கணையடைந்த வெஞ்சிலையர்
கடுவாய்வேடர் கற்பொன் றில்லாக் கலையேற் றார்தி
சொல்லடைந்த பெண்மைச் சுரும்படைந்த பூங்கோதை

---

* 'சிறுமொழியாற் சின்ன குறுவணி' எனவும் 'திருமொழியாற் சின்ன குறுவணி' எனவும் பாடம்.

† இக்குறியிட்டுள்ள பாடல்கள் கூறிய இலக்கணத்திற்கு மாறாக உள்ளன. இவற்றின் சரியான பாடம் கிடையாமையால் ஏட்டுப்பிரதிகளில் கண்டவாறே பதிக்கப் பெற்றுள்ளன.

செவ்வாய் சிதரிக்க ணவ்வாய் மென்றோளா
கொல்லடைந்த வேலன்ன கூர்ம்பரல் வெவ்வியலாக
குறும்பாற்றூர்க்குரற் கொடிதே மலருங் கொடிதே
* * * * "

இது பதின்சீ ரிடையாகு கழிநெடிலடியான் வந்த பாவினம்.

" கல்லார் கடங்கழிய நோக்கி யரியவென்றும்
பேர்கூறிக் கலங்கிநாளும் புலம்பாவென்றும்
சொல்லாலுணர்ந்த வதனை யென்று * * "

இது பதினொருசீர்க் கடையாகு கழிநெடிலடியான் வந்த பாவினம் பிறவும் சங்கபாப்பிற் கண்டுகொள்க. (உ௮)

[ஆசிரியப்பாவில் பிறபாக்களுக்குரிய அடிகள் வந்து மயங்குமாறு]

29. இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
யகப்பட வருஉ மகவலு முளவே.

இம்மென்னுதலிற்றோ வெனின், அடிமயக்க மாமா றுணர்த்துவான் எடுத்துக்கோடலின், இச்சூத்திரம் ஆசிரியப்பாவினுள் ஏல்லாவடியு மயங்குமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—ஈரசைச் சீரினாலாகிய வெண்பாவடியும், வஞ்சியடியுமென இவற்றைத் தமக்கடியாகக்கொண்டு நடக்கு மொரு சா ராசிரியப்பாவுமுள வென்றவாறு.

அகப்படுத்துதல்-தமக்காகச் செய்தல்; பொருள்க ளகப்படுத்தா ரென்றாற்போலக் கொள்க. பிறரு மிவ்வாறு மயக்கஞ் சொன்னார்; என்னை?

"இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே "

என்றார் தொல்காப்பியனார்.

" வஞ்சி விரவ லாசிரிய முடைத்தே
வெண்பா விரவினுங் கடிவரை யின்றே "

என்றார் பல்காயனார்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத்தென்ப வவர்தேர் சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே"

"கொலைவி லெயினர் குறும்பி னுறங்கு
மலைவிலங்கு நீள்சுரம் சிலையொடு கழிமா
ரன்புகெழு காதல் கூர
நன்பெருந் திருநலம் பிறிதா கின்றே"

என இவற்றுள் "எறும்பி யளையிற் குறும்பல் சுனைய" எனவும், "கொலைவி லெயினர் குறும்பி னுறங்கும்" எனவும் இயற்சீர் வெள்ளடி வந்தவாறு காண்க. இவற்றை,

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்

எனவும்,

கொலைவி லெயினர் குறும்பி னுறங்கும்
மலைவிலங்கு நீள்சுரஞ் செல்

எனவும் இவ்வா றுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க. இவை யென்று மிகுத்துச் சொல்லியவதனால் வெண்பாவுரிச்சீரொடு விரவி வந்த இயற்சீர் வெள்ளடியும் ஆசிரியத்துள் வரப் பெறுமெனக் கொள்க. வரலாறு:—

"அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்பு மனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யென்று நோவா ரில்லைத்
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே"

இதனுள் "அங்கண் மதிய மரவின்வாய்ப பட்டென" என்பது வெண்சீர் விரவி வந்த வியற்சீர் வெள்ளடி. இதனை,

அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது.

என்றுச்சரித்து வெள்ளடி யாமாறு கண்டுகொள்க.

இனி வஞ்சி விரவி வருமாறு:—

" * இருங்கடற் றானையொடு பெருநிலங் கவைஇ
யுடையில நடுவணத் திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
யதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே"

இதனுள், "உப்பிலாஅ வவிப்புழுக்கல்" எனவும், "கைக்கொண்டு பிறக்குநோக்காது" எனவும், "இழிபிறப்பினோ னீயப்பெற்று" எனவும் வஞ்சியடி விரவி வந்தவாறு.

"இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
வரூஉ மகவலு முளவே"

---

* 'இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்' எனவும் பாடம்.

என்றாலும் கருதிய பொருள் பயக்கும். "அகப்பட" வென்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை யெனின், அகத்திணையாகிய வாசிரியப்பாவின் வஞ்சியடி வரப்பெறா என்றற்கும், ஒருசார் கலி யடி விரவிவரு மாசிரியமுள வென்றற்கும் வேண்டப்பட்டது.

"அகத்திணை யல்வழி யாங்கதன் மருங்கின்
வகுத்தன சொற்சீர் வஞ்சியொடு மயங்கும்"

என்றார் பனம்பாரனார். ஆசிரியமருங்கி னென்னாது, "ஆங்கதன் மருங்கி" னென்றார், அதிகார வசத்தால் அவ்வாசிரியருமென்றுணர்க. "சொற்சீர்" என்பது,

"கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியசை யாகியும் வழியிசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே"

என்று செய்யுளியலுடையா ரோதிய பெற்றியால் வருவன வெனக் கொள்க. இனிக் கலியடி விரவிய ஆசிரியம் வருமாறு:—

"ஆனாப் பெருமைய வணங்கு நனியணங்கும்
வானோங்கு சிமையத்து மனமகிழ்ந்து பிரியாது
முருகவே ளுறையுஞ் சார
லருகுநீ வருத லஞ்சுவல் யானே"

இவ்வாசிரியத்தில் "வானோங்கு சிமையத்து மனமகிழ்ந்து பிரியாது" என்பதனை,

வானோங்கு சிமையத்து மனமகிழ்ந்து பிரியாது
தேனோங்கு நறும்பைந்தார்ச் சேயமருந் திருவிற்றே

எனவுச்சரித்துக் கலியடி யாமாறு கண்டுகொள்க.

"குருகுவேண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சோலை
யருளா னாத லாயிழை கொடிதே"

இதனுள், "மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது" என்பதனை,

"மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்குஞ் சுழல்விழிக்கட் சீயஞ்சென் றழலுமே"

என வுச்சரித்துக் கலியடியாமாறு கண்டு கொள்க. (உக)

[கலிப்பாவில் பிற பாக்களுக்குரிய அடிகள் வந்து மயங்குமாறு]

## 30. வெள்ளடி கலியினுள் விரவவும் பெறுமே.

இஃது என்னுதலிற்றோவெனிற் கலிப்பாவினுள் பிறபாவினம் விரவுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:-வெண்பாவடி, ஒருசார் கொச்சகக்கலிப்பாவினுண்மயங்கவும் பெறு மென்றவாறு.

"வெள்ளடி கலியினுள் விரவவும் பெறுமே" என்ற வும்மையால் ஆசிரியவடியும் வந்து மயங்கவும் பெறுமெனக்கொள்க. "காமர்கடும் புனல் கலந்தெம்மோ டாடுவாள்" என்னும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள்ளும், "நறுவேங்கைத் துறுமலர் நன்னுதலார் கொண் டணிய" என்னும் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவினுள்ளும் வெண் பாவும் ஆசிரியப்பாவும் மயங்கி வந்தன. அவை போக்கி மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாக் காட்டும் வழிக் காட்டுதும்; என்னை?

"வஞ்சி விரவினு மாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கலிவரை வின்றே"

என்றார் பொதுவகையானுமநத்தத்தனாரெனக் கொள்க.

"பொதுவகையாற் சொற்றனவும் பொய்தீர் சிறப்பிற்
குதவி யொரோவிடத்து நிற்கும்—விதவகையா
னின்ற பொருளை நிகழ்விப் பதுநியமம்
என்றுரைத்தார் தொல்லோ ரெடுத்து"

[வஞ்சிப்பாவில் பிறபாவிற்குரிய அடிகள் வந்து மயங்குமாறு.]

## 31. வஞ்சியு ளகவல் மயங்கினும் வரையார்.

என்பதென்னுதலிற்றோ வெனின், வஞ்சிப்பாவினுட் பிறபா மயங்குமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடி மயங்கும் என்றவாறு.

அகவல் மயங்கினும் வரையார் என்ற வும்மையாற் கலியடியு மொருசார் வெள்ளடியுமயங்கிவரவும் பெறும்; சிந்தடியுங் குறளடியுந் தம்முண் மயங்கியும் வரும் வஞ்சிப்பாவு முளவெனக் கொள்க. பட்டி னப்பாலை யென்னும் வஞ்சிநெடும்பாட்டினுள், "சேரிழை மகளி

ருணங்குழைக் கவரும்" என்றித்தொடக்கத்தன வாசிரியவடி. "வயலாமை புழுக்குண்டும் வறளடும்பின் மலர் மலைந்தும்" என்பது கலியடி. இதனை,

"வயலாமை புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மலைந்தும்
கயனுட்டக் கடைசியர்தங் காதலர்தோள் கலந்தனரே"

என வுச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க. "கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை" என்பது வெள்ளடி. இதனை,

"கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
யாழிசூழ் வையக் கணி"

எனவுச்சரித்து வெள்ளடி யாமாறு கண்டுகொள்க.

"தாழிரும் பிணர்த்தடக்கை" என்ற வஞ்சிப்பாவினுள்ளும் கலியடி வந்தன வெனக் கொள்க.

"குருகு நாரையொடு கொட்பாறு
விரிதிரைநீர் வியன்கழனி
மறுகு கெழீஇய மலிசும்மை
எனவாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே"

இது குறளடியுஞ் சிந்தடியு மயங்கிவந்த வஞ்சிப்பா. அகத்திணை யகவலுள் வஞ்சி வாரா; என்னை?

"அகத்திணை மருங்கி னளவு மயங்கி
விதப்ப மற்றவை வேறு வேண்டி
வஞ்சி யடியின் யாத்திலர் வஞ்சி
யகத்திணை மருங்கி னணையு மாறே"

என்பது பன்னிருபடலத்துப் பெருந்திணைப்படலத்துச் சூத்திரமாகலின். அஃதேயெனிற் பட்டினப்பாலைத் தொடக்கத்தன அகத்திணை வஞ்சியாம் பிறவெனின், அகத்திணையகத்து வஞ்சி வருவது சிறப்பின்றாயினும், சிறுபான்மை வரப்பெறு மென்பாரு முளராகலின் அவையும் அமையுமென்பது; என்னை?

"அகத்திணை யகவயி னிற்ப வஞ்சி
சிறப்பில வெனினுஞ் சிலவிடத் துளவே"

என்பது மாபுராணச் சூத்திரமாகலின்.

"அகப்பா வகவலுள் வஞ்சிசொற் சீரடி யாயிரண்டும்
புகப்பா லனவல்ல வென்பதொல் லோர்கள் புகாில்வஞ்சி
யகப்பாப் பொருளணையா வென்பர் நாவல ராங்கருகிப்
புகப்பான் மையுமொரு சார்புல வாணர் புகன்றனரே"

"ஆசிரியப் பாவி னயற்பா வடிமயங்கு
மாசிரியம் வெண்பாக் கலிக்கண்-மாசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவி
னெண்பா வடிவிரவா வற்று"

"சீர்வண்ணம் வெள்ளைக் கலிவிரவும் வஞ்சியு
ளோருங் கலிப்பா சிறச்சிறதே-பாவினுள்
வெண்பா வொழித்துத் தளைவிரவுஞ் செய்புளாம்
வெண்பா கலியுட் புகும்"

என்றார் நாலடி நாற்பதுடையா ரெனக்கொள்க. (௩௧)

[ஒவ்வொரு வகைப்பாவுக்கும் அடிச்சிறுமை ஆமாறு]

32. ஈரடி வெண்பாச் சிறுமை மூவடி
யாசிரி யத்தொடு வஞ்சி யொஞ்சிய
தீரிரண் டடியே யிழிபென மொழிப

என்ப தென்னுதலிற்றோவெனின், நான்கு பாவிற்குஞ் சிறுமைக் கெல்லையாகிய அடிவரையறை யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—ஈரடி வெண்பாவிற்குச் சிறுமை; ஆசிரியப் பாவிற்கும், வஞ்சிப்பாவிற்கு மூன்றடி சிறுமை; ஒழிந்த கலிப்பா விற்கு நான்கடி சிறுமையாமென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

ஏகாரம் தேற்றம்.

"ஒருதொடை யீரடி வெண்பாச் சிறுமை
யிருதொடை மூன்று மடியி னிழிந்து
வருவன வாசிரிய மில்லென மொழிப
வஞ்சியு மப்பா வழக்கின வாகும்"

"நான்கா மடியினு மூன்றுந் தொடையினும்
தாழ்ந்து கலிப்பாத் தழுவுத லிலவே"

என்றார் காக்கைபாடினியார்,

16

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்"

என விரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"அவரோ வாரார் தான்வந் தன்றே
யெயிற்றகை யிளமுலை பொலியப்
*பொரிப்பூம் புன்கின் முறிதிமிர்ந் தன்றே"

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

என வாசிரியப்பாவிற்கு மூன்றடியால் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"குருகு நாரையொடு கொட்பாரு"

†"மந்தாநில மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு,
இனிதி னொதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே"

என மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"செல்வப் போர்க்கதக் கண்ணன் * * * *"

"திருந்திலையி னிலங்கிலைவேற் றிகழ்தண்டார்க் கதக்கண்ணன்
விரிந்திலங்கு ‡வெண்குடைக்கீழ் வேந்தட்ட வியன்களத்து
முரிந்திறைஞ்சி முத்துறைக்கு முடியெல்லாந் தத்தந்தம்
அருந்திறல மறமன்னர்க் கழுவனவே போன்றனவே"

என நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

இச்சூத்திரத்துள் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்று முறைபிற் கூறுது, 'வெண்பா வாசிரியம் வஞ்சி' யென்று தலைதடு

---

* "பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே" என்பது ஐங்குறு நூறு அச்சுப் பிரதியிலுள்ள பாடம். † "மந்தாநிலம் வந்துயிர்ப்ப" எனவும் பாடம். ‡ "விரைப்பைம் பூண்" எனவும் பாடம்.

மாற்றந் தந்துரைத்தல் வேண்டியதென்னை யெனின் நான்கு பாவிற்கும் பெருமைக்கெல்லை, பாடுவோனது பொருண்முடிபின் குறிப்பே, வரையறையில்லை யென்பாரும்; அடிவரையறுத்துச் சொல்வாருமென விருதிறத்தர் ஆசிரியரென்ப தறிவித்தற்கு என்க. நூல் நயமறிவார் ஆராயுங்கால், (அவற்றுள்) வேறுபாடில்லை யென்ப தறிவித்தற்கொரு தோற்றமுணர்த்திய தெனினும் அமையும். யாதோ வேறுபாடில்லாதவாறெனின், 'பெருமைக்கெல்லை பாடுவோனது பொருண்முடிபின் குறிப்பே, வரையறையில்லை' என்பார் விளங்கக்கூற லென்னு நூன்மாண்பு கடைப்பிடித்து மயங்காமை கூறினர். அடிவரையறுத்தோதினர், சிறப்புடைய பொருளை எடுத்துக் காட்டலென்னுந் தந்திரவுத்தி பற்றிச் சிறப்புடைமையால் எடுத்தோதி, மிக்கனவுமுடன்பட்டமை உய்த்துணரவைத்தோதினர்; மிக்க அடி வருவது செய்யுட்கட் குறித்தென்பதாகலானும், வாயுறை வாழ்த்து முதலாயின அடிவரையறையில்லை யென்றாராகலானு மெனக் கொள்க.

அவர் கூறுமாறு:—

"உரைப்போர் குறிப்பினை யன்றிப் பெருமை
யுரைத்தித் துணையென வைத்துரை யில்லென்
பரைத்தனர் மாதோ வுணர்ந்திசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

"ஒன்று மிரண்டு *மூன்றுமோ ரிரண்டு
மென்றிம் முறையே பாவின் சிறுமை
தங்குறிப் பினவே தொடையின் பெருமை"

என்றார் அவிநயனார்.

"ஆசிரியப் பாவின் சிறுமைக் கெல்லை
மூவடி யாகும் பெருமை யாயிரம்
ஈரடி முதலா வொன்று தலைச்சிறந்
தேழடி காறும் வெண்பாட் டுரிய
வாயுறை வாழ்த்தே செவியறி வுறாஉவே
கைக்கிளை மயக்கங் கலிவெண் பாட்டே
தத்தங் குறிப்பின வளவென மொழிப"

என்றார் நத்தத்தனார்.

* 'மூன்று நான்கும்' என்றும் பாடம்.

"ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை
யாயிர மாகு மிழிபுமூன் றடியே"

"ஆசிரிய நடைத்தே வஞ்சி * * "

"நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டுக் களவெழு சீரே"

"அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்"

"கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
தொகுநிலை யளவி னடியில வென்ப"

"* முடிபொரு ளல்லா தடியள பிலவே"

என்றார் தொல்காப்பியனார்.

"ஏழடி யிறுதி யீரடி முதலா
வேறிய வெள்ளைக் கியைந்தன வடியே
மிக்கடி வருவது செய்யுள்கட் குரித்தே
மூவடிச் சிறுமை யாயிர மாகு
மாசிரி யத்தின் பெருமை யளவே"

என்றார் சங்கயாப்புடையார்.

"ஆயிர மிறுதி மூவடி யிழிபா
வாசிரியப் பாட்டி னடித்தொகை யறிப
வீரடி முதலா வேழடி காறும்
திரிபில வெள்ளைக் கடித்தொகை தானே"

என்றார் பல்காயனார்.

"ஐயிரு நூறடி யாசிரியம் வஞ்சிச்
செய்யு ணடப்பினுஞ் சிறப்புடைத் தென்ப"

"பேணும் பொருண்முடிபே பெருமைக் கெல்லை
காணுங் காலை கலியலங் கடையே"

"கலியுறுப் பெல்லாங் கட்டளை யுடைமையின்
†நெறியின் முறைவழி நிறுத்தல் வேண்டும்"

---

* இச்சூத்திரம் தொல்காப்பியம் அச்சுப்பிரதியிற் காணப்படவில்லை.

† 'நெறியின் மொழிவழி' என்றும் பாடம்.

"கொச்சகக் கலிவயிற் குறித்தபொருள் முடிவாந்
தாழிசை பலவுந் தழுவுதன் முடிபே"

† என்றார் பிறை நெடு முடிக் கறைமிடற் றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்.

"வஞ்சி யாசிரிய மென்றிரு பாட்டு
மெஞ்சா மூவடி யிழிபுயர் பாயிரம்"

"ஆசிரிய மென்ப தகவலின் வழாது
கூறிய சீரொடுந் தளையொடுந் தழீஇ
முச்சீ ரடியா யீற்றயல் நின்று
மச்சீ ரடியிடை யொரோவழித் தோன்றியு
மவ்வியல் பின்றி மண்டில மாகியும்
மூவடி முதலா முறைசிறந் தேறித்
தொள்ளா யிரத்துத் தொண்ணூற் றெண்ணிரண்
டெய்து மென்ப வியல்புணர்ந் தோரே"

"வஞ்சி தானே யடிவரம் பின்றி
யெஞ்சா விசைநிலை தூங்க லெய்தியு
மாசிரிய மாகியு முடியு மென்ப"

"செப்ப லோசையிற் சீர்தளை சிதையாது
மெய்ப்படக் கிளந்த வெண்பா விரிப்பிற்
குறணேர் நெடிலென மூன்று மவற்றின்
இறுதி யடியே முச்சீர்த் தாகி
யதனீற் றசைச்சீ ரெய்தி யடிவகை
யோரிரண்டு முதலா முறைசிறந் தீரா
றேறு மென்ப வியல்புணர்ந் தோரே"

என்றார் பரிமாணனார்.

"எழுத்தினா லாகு மசையசையாற் சீராஞ்
சழக்கிலாச் சீராற் றளையென்-றொழுக்கினார்
சீரா லடியடியாற் செய்யுளா மென்றிடையிட்
டோராதே யோதுவதோ வோத்து"

இது கடா.

† 'என்றார் மயேச்சுரர்' எனச் சில பிரதிகளிற் காணப்படுகிறது.

"ஒருதளை யாதியா வோரேழின் காறும்
வருவது மன்னு மடியென்-றுரையா
திருசீர் முதலாக வெண்சீர்கா றென்ற
வருமுனிவர்க் காய்த்தோ வலர்"

**இது விடை.**

"ஒருதொடை யீரடி யென் றோதிய துள்ளிட்
டிருதிறமாச் சொல்லிய தெல்லா-மிருதிறமு
நல்லா சிரியர் நலமென்றற் கந்நயத்தா
லெல்லாருந் தீர்வ ரிழுக்கு"

"எண்ணெழுத்திற் றிண்ணியரா யெஃகின் வலியராய்
நுண் ணுணர்விற் சேர்ந்த நுழைவினராய்-மண்மேல்
நடையறிந்து கட்டுரைக்கு நாவினார்க் கல்லா
லடியறியுந் தன்மை யரிது"

"தடுத்த தளையொன்றுந் தாம்பலவுங் கூடி
யடுத்து நடப்ப தடியாம்-வடுத்தீர்ந்த
* பாத வடமொழியைப் பைதீர் தமிழ்ப்புலவர்
நாதரடி யென்றார் †நமக்கு"

இவற்றை விரித்துரைத்துக் கொள்க, (௩௨)

* 'பாதவடி மொழியை' என்றும் பாடம். † 'நன்கு' எனவும் பாடம்.

அடியோத்து முற்றிற்று.

# ௬. தொடையோத்து

[தொடை தோன்றுமாறு]

33. தொடையே யடியிரண் டியையத் தோன்றும்.

இவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின், அடியாற்றொடை யாமா றுணர்த்திற்றாகலாற் றொடையோத்தென்னும் பெயர்த்து.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பொது வகையாற் றொடையாமா றுணர்த்துத லுதலிற்று.

இதன் பொருள்:—தொடையென்று சொல்லப்படுவது அடியிரண்டியைந்தவிடத்துப் பெறப்படு மென்றவாறு.

தொடையே என்பதில் ஏகாரம் பிரிநிலை. எற்றிற் பிரிக்கப் பட்டதோ வென்னின்,

எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா நடைய தியாப்பெனப் படுமே

என்பதனிற் பிரிக்கப்பட்டது. பிறரு மிவ்வாறு சொன்னார்; என்னை?

"தொடையெனப்படுவ தடைவகை தெரியி
னெழுத்தொடு சொற்பொரு ளொன்றிவை மூன்றி
* னிரல்பட வந்த நெறிமைத் தாகி
யடியோ டடியிடை யாப்புற நிற்கு
முடிவின தென்ப முழுதுணர்ந் தோரே"

என்றார் காக்கை பாடினியார்.

"அடுத்த வடியிரண் டியாவகைப் பாவினுந்
†தொடுத்து வழங்கலிற் றொடையெனப் படுமே"

என்றார் வாமமேகலை மாதை யோர் பாகனார் நாம மகிழ்ந்த நல்லாசிரியர். தொடைக் குதாரணம் போக்கிச் சொல்லுதும்.

---

† 'இயற்பட' எனவும் பாடம். * 'தொடுத்தனர் வழங்கலின்' எனவும் பாடம்.

[தொடையின் வகை ஆமாறு.]

**34.** மோனை யெதுகை முரணியை பளபெடை
பாதமிணையே பொழிப்போ டொரூஉத்தொடை
கூழை கதுவாய் மிசைய தூஉங் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமா ரவையே.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், ஒருசார் தொடைகளது பெயரும், அவற்றின் விகற்பமு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்றிவை யைந்தும்; அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என இவற்றொடு பொருந்தி அவை யொரோவொன்று எட்டெட்டுப் பாகுபா டுடையவா மென்றவாறு.

பாதம் என்பது அடி. இணையே என்றவழி ஏகாரம் எண். கதுவாய் மிசைய தூஉம் கீழ தூஉ மென்பது, மேற்கதுவாய் கீழ்க்கதுவாய். சிவணுதல்-பொருந்துதல்; என்னை? "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்றாற்போலக் கொள்க. மார் என்பது இடைச்சொல். அவை என்பது சுட்டுச்சொல். அவையே என்பதில் ஏகாரமீற்றசை; தேற்றேகாரமெனினும் அமையும். இனி அவை கூட்டி வழங்குமாறு:

[1]அடிமோனை, [2]இணைமோனை, [3]பொழிப்புமோனை, [4]ஒரூஉமோனை, [5]கூழைமோனை, [6]மேற்கதுவாய் மோனை, [7]கீழ்க்கதுவாய் மோனை, [8]முற்றுமோனை எனவும்;

[1]அடியெதுகை, [2]இணையெதுகை, [3]பொழிப்பெதுகை, [4]ஒரூஉவெதுகை, [5]கூழையெதுகை, [6]மேற்கதுவாயெதுகை, [7]கீழ்க்கதுவாயெதுகை, [8]முற்றெதுகை எனவும்;

[1]அடிமுரண், [2]இணைமுரண், [3]பொழிப்புமுரண், [4]ஒரூஉமுரண், [5]கூழைமுரண், [6]மேற்கதுவாய் முரண், [7]கீழ்க்கதுவாய் முரண், [8]முற்றுமுரண் எனவும்;

[1]அடியியைபு, [2]இணையியைபு, [3]பொழிப்பியைபு, [4]ஒரூஉவியைபு, [5]கூழையியைபு, [6]மேற்கதுவாயியைபு, [7]கீழ்க்கதுவாயியைபு, [8]முற்றியைபு எனவும்;

[1]அடியளபெடை, [2]இணையளபெடை, [3]பொழிப்பளபெடை, [4]ஒரூஉவளபெடை, [5]கூழையளபெடை, [6]கீழ்க்கதுவாயளபெடை, [7]மேற்கதுவாயளபெடை, [8]முற்றளபெடை எனவுங் கூட்டி யெட்டு வகைப் பாகுபாடுங் கண்டுகொள்க.

சீரிய வென்று மிகுத்துச் சொல்லியவதனால், இயைபுத் தொடை யிவ்வாறு வழங்காது இறுவாய் முதலாகக் கொண்டு வழங்கப்படுமெனக் கொள்க. அஃது ஈறுபற்றி யறியுந்தன்மைத்தாகலின், இயைபுத் தொடைக் கிவ்வாறெட்டு விகற்பமும் சொன்னார் கையனார், தொல்காப்பியனார் முதலாகிய ஒருசா ராசிரியர். ஈண்டு அவர் மத விகற்பம் பற்றிச் சொல்லப்பட்டது, இது சார்பு நூலாகலின். * இவற்றிற் கிலக்கியந் தத்த மிலக்கணஞ் சொல்லுழிச் சொல்லுதும்.

"எழுத்தியற் றொடைகளி னிடைக்கண் மாறுகோண்
மொழிப்பொருட் டொடைமுறை பிறழ வைத்ததோ
ரிழுக்கியல் பிலாநிர னிறையு மெட்டெனு
வொழுக்கின ருண்மையை யுணர்த்தல் வேண்டியே."

இதனை விரித்துரைத்துக் கொள்க. அவை யாமாறு போக்கி 'நிரனிறை முதலிய' வென்னுஞ் சூத்திரத்துள்ளே காட்டுதும்.

[அடிமோனைத் தொடை ஆமாறு]

ஆதி யெழுத்தே யடிதொறும் வரினடி
மோனைத் தொடையென மொழிமனார் புலவர்

என்பது என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே அடி மோனை யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—முதலடி முதற்கண் வந்த எழுத்தே எல்லா வடி முதற்கண்ணும் வரின், அதனை அடிமோனைத் தொடை யென்று வழங்குவர் புலவ ரென்றவாறு.

ஆதியெழுத்தே யென்றவழி ஏகார விதப்பினால், ஆதிச்சொல் அடிதோறும் ஒன்றிவரத்தொடுப்பது சிறப்புடைத்து. எனக் கொள்க 'ஆதியெழுத்தே யடிதொறு மாதிக்கண் வரின்' என்று சிறப்பியாது பொதுவகையாற் கூறிற்றாகலின், முதலடி முதற்கண் வந்த

* 'இவற்றிற்குச் செய்யுள் போக்கித் தத்தம் இலக்கணச் சூத்திரத்துள்ளே காட்டுதும்' என்பது பிரதிபேதம்.

எழுத்து அடிதோறும் இறுதிக்கண் வரினும், இடைக்கண் வரினும், முதற்கண் வரினும் அடிமோனைத் தொடையாம் பிறவெனின், அற்றன்று; சூத்திரத்துள் ஆதியெழுத்தென்று சொல்லப்பட்டதாகலின், அதனோடு சார்த்தி ஆதியெழுத்தே யடிதோறும் ஆதிக்கண் வரின் என்று பொருள் கொள்ளப்படும்; என்னை?

"வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினும்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே" எனவும்,

"வேற்றுமை யின்றியு மிடமுத லாவறிந்
தேற்பன பொதுவி னிசைப்பினு மிழுக்கா" எனவும்,

"கேட்ட மொழியொழித்துக் கேளாக் கிளவியொடு
கூட்டியுரை *கொளுத்துதல் கோட்பா டன்றே" எனவும்,

"அடிமுத லோரெழுத் தடிமுதற் றொடையே"

எனவுஞ் சொன்னார் பிறருமாகலின். 'அளபெடை யொன்றுவ தளபெடைத் தொடையே' என்பதன் காறு மடிதொறு மென்பதும் முதல் என்பதும் அதிகாரம் செலுத்தியுரைக்க; வரலாறு:—

"மாவும் புள்ளும் †வதுவையிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே"

இஃது அடிதோறு முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா னடிமோனை.

சீர்தோறும் முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தால் அது இணைமோனைத் தொடை விகற்பமாம். வரலாறு:—

"அணிமல ரசோகின் ‡றளிர்நலங் கவற்றி
யரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி
யம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
யகன்ற வல்கு லந்நுண் மருங்கு

* 'கொளீஇதல்' என்றும் பாடம். † 'மதிவயிற் படர' என்றும் பாடம்.
‡ 'தளிர்நிறங் கவற்றி' என்றும் பாடம்.

லரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுத லரிவை
யயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே"

இதனுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க. (௩௫)

[அடி யெதுகை ஆமாறு]

### 36. இரண்டா மெழுத்தொன் றியைவதே யெதுகை.

இஃதென்னுதலிற்றோவெனின், அடியெதுகை யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றி வரத்தொடுப்ப தடியெதுகைத் தொடை யெனப்படும் என்றவாறு.

'இரண்டாவதியைவதெதுகை' என்றானும் இரண்டாமெழுத் தென்பது பெறலாம், அதிகார வசத்தானும்; பிறரும்,

"முதலெழுத்தொன்றி முடிவது மோனை
யேனைய தொன்றி னெதுகைத் தொடையே"

என்றாராகலின். பெயர்த்தும் எழுத்து என்று சொல்லவேண்டியதென்னை யெனின், அடிக்கெழுத் தெண்ணுமாறே போலாது தொடைக்கு எல்லா வெழுத்துங் கொள்ளப்படுமென்ப தறிவித்தற்குச்சொல்லப்பட்டது *

"எழுத்தென் றதிகார மீண்டியலா நிற்ப
எழுத்தென்று மீண்டு மியம்பிற்—றிழுக்காமை
யெல்லா வெழுத்துந் தொடைக்கா மடிக்கெழுத்
தல்லா தனவுமென் றற்கு"

* அடிக்கெழுத் தெண்ணுங்கால் ஒற்றெழுத்துக்களை நீக்கி உயிரெழுத்துக்களும் உயிர் மெய்யெழுத்துக்களுமே எண்ணிக் கொள்ளப்படும். தொடையில் அவ்வாறன்றி ஒற்று உள்பட வெல்லா வெழுத்துக்களு மெண்ணப்படு மென்பதாம்.

"குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமோ
டொற்று மெனவொரு நான்கொழித்துக்-கற்றோ
ருயிரு முயிர்மெய்யு மோதினு ரெண்ணச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு"

இவற்றை விரித்துரைத்துக் கொள்க. 'இரண்டாமெழுத் தொன்றி வரினும் முதலெழுத்தெல்லாந் தம்முளொத்த வளவினவாய் வந்து, பட்டென்பதற்குக் கட்டென்பதல்லது காட்டென்பது எதுகை யாகாது; காட்டென்பதற்குப் பாட்டென்பதல்லது பட்டென்ப தெதுகையாகாது; அரமென்பதற்குப் பரமென்பதல்லது பாரமென் பது எதுகையாகாது; பாரமென்பதற்குக் காரமென்பதல்லது கர மென்ப தெதுகையாகாது' என்பதறிவித்தற்கு இயைவதே என்றார்.

* "முதலெழுத் தளவொத் தயலெழுத் தொன்றுவ
தெதுகை யதன்வழி யியையவும் பெறுமே" எனவும்,

"முதலெழுத் தொன்றுவ மோனை யெதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
வதுவொழித் தொன்றி னாகு மென்ப"

எனவுஞ் சொன்னார் பல்காயனா ரெனக்கொள்க.

'இரண்டா மெழுத்தியைவதே யெதுகை' யென்னாது ஒன்று என்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை யென்னின், ஒருசா ராசிரியர் இரண்டாமெழுத்தின் மேலேறிய வுயிரொன்றி வந்தாலு மூன்றாமெழுத்து ஒன்றி வந்தாலும் எதுகைப்பாற் படுத்து வழங்குவ ரென்ப தறிவித்தற்கு எனக் கொள்க. வரலாறு:—

"துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடிவமை யெஃகம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே"

இஃதிரண்டா மெழுத்தின் மேலேறிய வுயிரொன்றிய வெதுகை. இது செய்யுளியலுடையார் † காட்டியது.

---

* 'முதலளவோடொத் தயலெழுத்தொன்றுவ' தெனவும் பாடபேதமுண்டு.
† 'காட்டும் பாட்டு' என்றும் பிரதிபேதம் உண்டு.

" பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றது புன்னை "

" பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் "

இவை மூன்று மெழுத்தொன்றிய வெதுகை.

* " ஊசி யறுகை யுறுமுத்தங் கோப்பனபோன்
மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப—மூசு
முலைக்கோடு புல்லுதற் கொன்றில்லாதேன் காண்மோ
விறக்கோடு கொண்டெரிக்கின் றேன்"

இந் நக்கீரர் வாக்கினுட் கடை யிரண்டடியும் மூன்றுமெழுத் தொன்றெதுகை வந்தவாறு காண்க.

" † அவிழ்ந்த துணியனைக்கு மம்பலமுஞ் சீக்கு
மகிழ்ந்திடுவார் முன்னர் மலருங்—கவிழ்ந்து
நிழறுழா யானை நெடுமான்றேர்க் கிள்ளி
கழறொழா மன்னவர்தங் கை"

இப் பொய்கையார் வாக்கினுண் மூன்றுமெழுத் தொன்றி வந்தது. இதனை, இரண்டாமெழுத்தின் மேலேறிய வுயிரொன்றி வந்தமையால் உயிரெதுகை யென்பாரு முளர்.

" மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு"

இதுவு மதுபோலக் கொள்க. பிறவுமன்ன.

---

* " ஊசி முனையில் ஒளிர்முத்துக் கோத்ததுபோல்
வீசும் பனிவந்து மெய்குளிர—மூசு
முலைத்தடங்கண் மாதே முழுவினையேற் கின்று
நிலைக்கடையோ நிச்சயித்தாய் நீ "

என்பது, தமிழறியும் பெருமாள் கதை அச்சுப்பிரதியில், நக்கீரர் பாடியதாகக் கூறப்பட்டுள்ளது. இப்பாடங்கொள்ளில் மேற்காட்டிய இலக்கணத்துக்கு இஃது உதாரணமாகாதவாறு காண்க.

† 'அவிழ்ந்த துணியியைக்கும்' எனவும் பாடம்.

இனி யெட்டுத் திறத்தானும் வருமாறு:—

" வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டு
ளிடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்திசைத்த கை" எனவும்,

" அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்" எனவும்,

" அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்" எனவும்,

" போதுசேர் கோதாய் பொருப்பன் றரக்குறித்தான்
றாதுசேர் மார்பின் றழை" எனவும்,

" ஆறியா முள்புக் கழுந்து வருதவிர்த்தான்
* கூறியாய் சொல்லுமோ வின்று" எனவும்

இரண்டா மெழுத்தொன்றி வந்தமையால் அடியெதுகை.

" பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
யென்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
யன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய
மயிலேர் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணு மறிவு தொலைத்தனவே"

இதனு ளிணையெதுகை முதலான வேழு விகற்பமு முறையானே வந்தவாறு கண்டு கொள்க. பிறவு மன்ன. (௩௬)

[வருக்க, நெடில், இன மோனையும் எதுகையு மாமாறு]

## 37. வருக்க நெடிலினம் வரையா ராண்டே

இஃதென்னுதலிற்றோ வெனின், மோனைக்கு மெதுகைக்கு மெய்தியதோ ரிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—வருக்கமும் நெடிலும் இனமும் வந்தாலும் நீக்கப்படா மோனையு மெதுகையுமா மென்றவாறு.

---

* 'கூறியாய்ச் சொல்லுமோ' எனவும் பாடம்.

அவற்றை முறையானே யுறழ்வர். அவை வருக்கமோனை, வருக்கவெதுகை, நெடின்மோனை, நெடிலெதுகை, இனமோனை, இனவெதுகை யென்று வழங்கப்படும். அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

“ பகலே—பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொருது சினந்தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தியிப்
பொழுது வருகுவை யாயி
னற்றூர் மார்ப தீண்டலெங் கதுப்பே”

இது பகர மெய் வந்த வருக்க மோனை. இவ்வகை வருவன முதலெழுத்தொன்ற விடினும், தமது வருக்க வொப்புமை நோக்கி மோனைப் பாற்படுத்தி வருக்கமோனை யென்று வழங்கப்படும்.

“ நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடுவண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லாப்
பாடமை சேர்க்கையுட் கண் ”

இது டகர மெய் வருக்க வெதுகை. இரண்டாமெழுத் தொன்ற விடினும் இரண்டாமெழுத்தின் வருக்க வொப்புமை நோக்கி யெதுகைப்பாற்படுத்து வருக்கவெதுகை யென்று வழங்கப்படும்.

இனி நெடின்மோனை வருமாறு:—

“ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை ”

இது முதலெழுத் தொன்றாமையின் மோனையுமன்று; இரண்டா மெழுத்தொன்றுதலும், இரண்டாமெழுத்தின் மேலேறிய வுயி ரொன்றுதலும், மூன்றாமெழுத் தொன்றுதலு மின்மையா லெதுகை யுமன்று; சொல்லும் பொருளும் பகைத்து வாராமையின் முரணு மன்று; இறுவாயொத்து வாராமையி னியைபுமன்று; அளபெடுத் தொன்றி வாராமையின் அளபெடையுமன்று; ஒவ்வாமை தொடுத் தின்மையிற் செந்தொடையுமன்று; அடிமுழுது மொருசொல்லே வரத் தொடுத்த தின்மையி னிரட்டைத் தொடையுமன்று; ஈறு முதலாகத் தொடுத்ததின்மையினந்தாதித் தொடையுமன்று. இதனை நெட்டெழுத்தென்னும் மாத்திரை யொப்புமை நோக்கி யினைந் தினிதாய்க் கிடத்தலா னெடின் மோனையென்று வழங்கப்படும்.

இனி நெடிலெதுகை யாமாறு:—

“ஆவாவென் றே யஞ்சின ராழா வொருசாரார்
கூகூவென் றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமாவென் றே மாய்ந்தனர் நீந்தா வொருசாரார்
ஏகீர்நாய்கீ ரென்செய்து மென்றா ரொருசாரார்”

இன்னவெல்லா மிரண்டா மெழுத்தொன்றா வாயினும், இரண்டா மெழுத்தி னெடி லொப்புமை நோக்கி யினைந்தினியவாய்க் கிடத் தலி னெடிலெதுகைப்பாற்படுத்து நெடிலெதுகை யென்று வழங் கப்படும்.

இனமோனை மூன்று வகைப்படும். அவை வல்லினமோனையும் மெல்லின மோனையு மிடையின மோனையுமாம்.

அவற்றுள் வல்லினமோனை வருமாறு:—

“கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே”

இஃதெல்லாவடியு முதற்கண் வல்லினமே வந்தமையின் வல்லின மோனையென்று கையனார் காட்டிய பாட்டு. பிறவுமன்ன. வல்லின மோனையு மிடையின மோனையும் சங்கயாப்பிற் கண்டுகொள்க.

இனவெதுகை மூன்று வகைப்படும்; வல்லின வெதுகை மெல்லின வெதுகை, இடையின வெதுகை யென.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும் "

இஃது இரண்டாமெழுத்து வல்லினம் வந்தமையால் வல்லின வெதுகை.

" அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு "

இது மெல்லின வெதுகை.

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு "

இஃது இடையின வெதுகை. பிறவு மன்ன.

'வருக்க நெடிலினம் வரையார்' என்றோதும், அதிகார வசத்தால் அவை யென்பது பெறலாம்; பிறரும்,

" அடிதொறு முதலெழுத் தடைவதை முதற்றொடை
யிடையதன் முன்னொன் றியைவதை யெதுகை
நெடிய பிறவு மினத்தினு மாகும் "

என்றாராகலானும். பெயர்த்தும் ஆண்டு என்று மிகுத்துச் சுட்டிக் கூற வேண்டியதென்னை? எதுகைத் தொடையுட் சீர் முழுவதும் வருவது தலையா கெதுகை, ஓரெழுத்தே வரத் தொடுப்பது இடையா கெதுகை, இனத்தானும் மாத்திரையானும் பிறவாற்றானும் வரத்தொடுப்பது கடையா கெதுகை யென்றும், முன்னிரண்டடியு மோரெதுகைத் தொடையாய் வந்து பின்னிரண்டடியு மற்றொரு திறத்தான் வரினும் குற்றமில்லை; அஃது இரண்டடி யெதுகை என்பார் ஒரு சாராசிரியர் எனற்கும், ஒரு சாராசிரியர் எதுகைத்தொடையுள், ய ர ல ழ என்னும் நான்கொற்றும் வந்து மிகத் தொடுத்தால், அதனை யாசிடை யெதுகை யென்று வேண்டுவர் என்ப தறிவித்தற்கும் வேண்டப்பட்டது.

அவர் கூறுமாறு:—

" சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே "

என்றாராகலின்.

அவை வருமாறு:—

" சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாண்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போழ்து "

இது தலையா கெதுகை.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு "

இஃது இடையா கெதுகை.

" ஆவி னிடையர் *விதையடிப்ப ரவ்விதையைக்
காமினோ வென்றாற் கதம்படுவர்—நாமினிப்
பொல்லா தெனினுமப் பூந்தோட்டம் வாழுநருங்
கொள்ளாரா நஞ்சொற் குணம் "

இது கடையா கெதுகை.

மோனைக்கு மிவ்வாறே சொல்லிக்கொள்க; என்னை ?

" ஒன்றின முடித்த றன்னின முடித்த
லென்றிவ் வகையால் யாவையு முடியும்"

என்பவாகலின்.

வரலாறு:—

" சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு "

இது தலையாகு மோனை.

* 'விதையழிப்பர்' எனவும் பாடம்.

"மாவும் புள்ளும் *வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
* * *"

இஃது இடையாகு மோனை.

"பகலே-பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
* * *"

என்பது கடையாகு மோனை.

இனி யிரண்டடி யெதுகைக்குச் சொல்லுமாறு:—

"இரண்டடி யெதுகை திரண்டொருங் கியைந்தபின்
முரண்ட வெதுகையு மிரண்டடி யுள் வரையார்"

என்றாராகலின்.

வரலாறு:—

"உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலகமாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னுற்றவுந்
† தொழுவ றொல்வினை நீங்குக வென்றியான்"

எனவும்,

"மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
மடவரலார் கொய்ய மலர்வனவு நாகம்
பிணிய விழ்ந்து நன்னுளாற் பூப்பனவும் வேங்கை
பிறங்கன்மாத் தொலைத்தவற் றான் றய்ப்பனவும் வேங்கை
‡ இறைக்காச்சா னெம்மருளா மாலையு மாலை
யெமக்கினிதா யாமவனைச் சூட்டுவது மாலை
நிறைகாய்த்தி நெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
நிலங்காக்குஞ் சேனய் நெடுநகருங் §காமம்"

எனவும்,

---

* 'பதிவயிற் படர' எனவும் பாடம்.

† 'தொழுவற் றொல்வினை' எனவும் பாடம்.

‡ 'இறைக்காசான்' எனவும் பாடம்.

§ காமம், என்பது ஈழநாட்டிலுள்ள கதிர்காமம் என்னும் திருப்பதி.

" மந்திரி கடிதோடி மதிபுரை குடையசையத்
தந்திரவகை காணிற் றன்னொடு நிகரில்லாப்
பூவிரி கமழ்குஞ்சிச் சாகர மகளொப்பா
யாவரு மிவணில்லென் றுரைசுற வதுகூறும் "

எனவுங் கொள்க.

மோனைக்கு மிவ்வாறே கூறப்படும்; ஒன்றின முடித்த றன்னின முடித்த லென்பது தந்திரவுத்தியாகலின்.

வரலாறு:—

" ஆகங் கண்டகத் தாலற்ற வாடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதர நண்ணினர் "

எனக் கொள்க. பிறவு மன்ன.

இனி ஆசிடை யெதுகைக்குச் சொல்லு மாறு:—

" யரலழ வென்னு மீரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பி
னாசிடை யெதுகையென் றறிந்தனர் கொளலே "

என்றாராகலின்.

அவை வருமாறு:—

" தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமோ-வெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல் "

எனவும்,

" காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே "

எனவும் போந்தவிவற்றுள் பொய்க்கோலம், காய்மாண்ட என யகரவொற்றிடை வந்த வாசிட்ட யெதுகை கொள்க.

"மாக்கொடி மாலையு மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையுங் கமழ்ந்த மல்லிகைப்
பூக்கொடிப் பொதுய்ப்பரும் பொன்னின் ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொத்ததே"

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பாத்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்"

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

இவை ரகர வொற்றிடைவந்த ஆசிடையெதுகை.

"ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு"

இது லகரவொற்றிடை வந்த ஆசிடையெதுகை.

"அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரம் போலு மனைவாழ்க்கை—மந்தரத்துள்
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று"

இது ழகர வொற்றிடை வந்த ஆசிடையெதுகை.

இவையெல்லாம் வரலாற்று முறைமையோடுங் கூடி யியைந்தினிய வாய்க்கிடப்பனவே கொள்ளப்படுமென்க. ஆண்டே என்ற ஏகார விதப்பினால் எதுகைத்தொடையானே பாவினம் வருவது, பிற தொடையால் வருமாயினும்; அல்லதூஉம் தலையாகு மோனையானும் வரப்பெறு மெனக் கொள்க. "*எதுகைத் தொடையா வினம்பிற விரவினுஞ் சிறப்புடை மோனையுஞ் சிவணு மாண்டே" எனப் பிறருஞ்சொன்னார்.

* 'எதுகைத் தொடையா னடிபிற விரவியும்' எனவும் பாடம்.

மேற்காட்டிய பாவினத்துள்ளும் பிறவற்றுள்ளு மெதுகைத் தொடையான் வருமாறு கண்டு கொள்க. "ஆவாவென்றே யஞ்சின ராழா வொரு சாரார் * * *" என்பது இறுதியிலையாய் வந்ததாயி னும் நெடிலெதுகையாய் வந்தது. முரணாய் வரும் பாவினமும், அளபெடையாய் வரும் பாவினமு மெதுகையிற் றீர்ந்தும், மோனை யிற் றீர்ந்தும் வாராவெனக் கண்டுகொள்க.

தலையாகு மோனையாற் பாவினம் வருமாறு:—

"கருநீல மணிநந்த கதுப்பினயற்
கருநீல மணிநந்தன கண்ணிணைகள்
கருநீல மணிக்கதிர்க் கட்டியெனக்
கருநீல மணிநந்த கருங்குழல்கள்"

எனக் கொள்க.

மிகுதிவகையால் ய, ர, ல, ழ என்னும் நான்குமே யாசென்று ராயினும், வல்லினத்துப் பகரமும், மெல்லினத்து ங, ஞ, ண வென்னு மூன்று மொழித்து, *எல்லா வொற்று மொரோ விடத் தாசாய் வரவும் பெறும். ண, ம, ன வென்னு மூன்றும் வல்லினஞ் சார்ந் தாசாகா; †வகார, நகார, மகாரத்தோ டியைந்து மாசாகா வெனக் கொள்க. இன்னு மவ்வேகார விதப்பினானே உரையிற் கோடலென்பதனால் விட்டிசை மோனையும், இடையிட்டெதுகையுங் கொள்ளப்படும்; என்னை?

"விட்டிசை மோனையு மிடையிட் டெதுகையு
மொட்டி வரூஉ மொருசாரு முளவே"

என்றாராகலின்.

வரலாறு:—

"அஉ அறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ"

இதனுண் முதலெழுத்திரண்டு மளவொத்து விட்டிசைத்தமையால் விட்டிசைமோனை.

---

* 'அல்லா வொற்றும்' எனவும் பாடம்.

† 'வகார நகார தகார மகாரத் தோடு' எனவும் பாடம்.

இடையிட் டெதுகை வருமாறு:—

“தோடாரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைகறோறும் பைபையப் பெருகின
நீடா ரிவணென நீமனங் கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழீ
வாடாப் பௌவம் வார்முகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
யோடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே”

இஃது அடியிடையிட் டெதுகை வந்தமையா லிடையிட்டெதுகை.

எல்லா வெதுகைக்கு முதலசை நேர்க்கு நிரையும், நிரைக்கு நேரும் வாரா. நேர்க்கு நேரும், நிரைக்கு நிரையுமே வருவதெனக் கொள்க.

“நிரைநேர் மறுதலை யடையா தம்முள
மெதுகை முதலசை யென்மனார் புலவர்”

எனவும்,

“யாவகை யெதுகையு *மசைமுறை பிறழாப்
பாவகை நான்காம் †பாட்டி னுள்ளே”

எனவுஞ் சொன்னாராகலின். “விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்” என்பது தந்திர வுத்தியாகலி னிவ்வா றுரைக்கப்பட்டது. பிறரு மோனைக்கு மெதுகைக்கு மிவ்வாறே சொன்னார்; என்னை?

“அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை
அஃதொழித் தொன்றி னெதுகைத் தொடையே
ஆயிரு தொடைக்குங் ‡கிளையெழுத் துரிய”

என்றார் தொல்காப்பியனார்.

---

* ‘அசை நிலை’ எனவும் பாடம்.

† ‘பாட்டி டுங் காலே’ எனவும் பாடம்.

‡ கிளையெழுத்து-இன வெழுத்து.

"முதலெழுத் தொன்றின் மோனை யாகு
மம்மொழித் தொன்றி னெதுகை யாகு
மாயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய"

என்றார் நத்தத்தனார்.

"முதலெழுத் தொன்றின் மோனை யெதுகை
முதலெழுத் தளவோ டொத்து முதலா
வம்மொழிற் தொன்றி னாகு மென்ப
விவ்விரு தொடைக்குங் கிளையெழுத் துரிய"

என்றார் பல்காயனார்.

"முதலெழுத் தொன்றி முடிவது மோனை
யேனைய தொன்றி னெதுகைத் தொடையே
யுறழ்ப்பி னொன்றின் விகற்பமு மப்பா
னெறிப்பட வந்தன நேரப் படுமே"

என்றார் * சிறுகாக்கை பாடினியார். (கூஎ)

[முரண்தொடை ஆமாறு]

38. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே

என்பது என்னுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே அடிமுரணுமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—அடிதொறுஞ் சொல்லும் பொருளும் மறுதலைப்படத் தொடுப்பது அடி முரண்டொடை எனப்படு மென்றவாறு.

அம்முரண் மூன்று வகைப்படும். அவைசொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளுந் தம்முண்முரணுதலுமென. இனியொருசா ராசிரியர் அவைதா மைந்து விகற்பமா மென்பர். உவை யாவையோ வெனின், சொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடு முரணுதலும் என விவை.

* 'காக்கைபாடினியார்' என்றும் பிரதி பேதம் உண்டு.

வரலாறு:—

“ செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிறுநிறத் தழுத்தலிற்
பசும்புண் வார்ந்த வசும்புடைக் குருதியொடு
வெள்ளிளி பயிற்று நாட
னுழைய னாகவும் விழையுமென் னெஞ்சே ”

இது சொல்லும் சொல்லும் முரணியது. * செந்தொடை நிறமன்று; செவ்வை. கருங்கை நிறமன்று; கொலைத்தொழில்.

“ தீமேய் திறல்வரை நுழைஇப் பரிமெலிந்து
நீர்நசை பெறூஅ நெடுநல் யானை
வானதிர் † தழங்குரன் மடங்க லாறுது
நிலஞ்சேர்பு ‡ முயங்கு புலஞ்சேர் மரத்த
நிலவென விளங்கு நிரைவளைப் பணைத்தோ
ளிருளே ரைம்பா லொழியப்
பொருள்புரிந் தகறல் புரைவதோ வன்றே ”

இது பொருளும் பொருளும் முரணியது. தீயென்னும் பொருட்கு நீரென்னும் பொருளும், வானென்னும் பொருட்கு நிலமென்னும் பொருளும், நிலவென்னும் பொருட்கு இருளென்னும் பொருளும் மறுதலைப்பட்டன.¶

“ பெருநிலக் குறுமகள் பிறிதோர்ந்து நடுங்கலிற்
சிறுமை கூர்ந்த செல்சுடர் மாலையொடு
நெடுநீர்ப் பொய்கைக் § குறுநீர் தந்த
தண்பனி யவிழ்மலர் நாறுநின்
கண்பனி துடைமார் வந்தனர் நமரே ”

* ‘ செந்தொடை என்புழிச் செய்யதாய வண்ணமில்லை; செம்மை என்னுஞ் சொல்லே. ‘ கருங்கை ’ என்புழிக் கருமை என்னும் வண்ணமில்லை; கொன்று வாழுங்கை யுணர்த்தியது ’ எனவும் பிரதிபேதம் உண்டு.

† ‘ வெங்குரல் ’ எனவும் பாடம்.

‡ ‘ முழங்கு ’ எனவும் பாடம்.

¶ தீ-நீர், வான்-நிலம், நிலவு-இருள் எனப் பொருளொடு பொருண் முரணியது, எனவும் பாடம்.

§ ‘ குறுநர் ’ எனவும் பாடம்.

இது சொல்லும்பொருளும் சொல்லொடு முரணியது. *நெடு நீர் என்பது சொல், குறுநீரென்பது சொல், பெருநிலம் பொருள்.

"செந்தீ யன்ன †சினத்த யானை
நீர்நசை பெறாஅக் கானற்
றேர்நசைஇ யோடுஞ் சுரனிறந் தோரே"

இது சொல்லும் பொருளும் பொருளொடு முரணியது. செந்தீ யென்புழிச் செம்மையு முண்டு; தீக்கட் செய்யதென்னுஞ் சொல்லு முண்டு. நீர்நசை பெறாஅ வென்புழிச் சொல்லில்லை; முரணியது பொருளெனக் கொள்க.

"ஓங்குவரைத் ‡தொடுத்துத் தாழ்ந்திரங் கருவி
செங்குர லேனற் பைங்கிளி யிரியச்
சிறுகுடித் ததும்பும் பெருங்கன் னாடனை
நல்ல னென்றும் யாமே
தீய னென்னுமென் றடமென் றோளே"

இது சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடு முரணியது. 'செங்குரல்' என்புழிச் சொல்லுமுண்டு; செம்மை குரற் கண்ணுமுண்டு. 'பைங்கிளி' என்புழிச் சொல்லுமுண்டு; பசுமை கிளிக்கண்ணுமுண்டு; செம்மை யென்பதும் பசுமை யென்பது முரணின. 'ஓங்குவரை தொடுத்துத் தாழ்ந்திரங் கருவி' என்பதூஉ மதுவெனக் கொள்க.

இனி அவை எட்டுத் திறத்தானும் முறையே வருமாறு:—

"இருள்விரிந் தன்ன மாநீர் மருங்கின்
நிலவு குவிந்தன்ன வெண்மண லொருசிறை
யிரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்

---

* 'நெடுநீர் என்புழி நெடுமையென்னுஞ் சொல்லுமுண்டு; நீரும் நெடிது. குறுநீர்தந்த என்புழிக் குறிது என்னுஞ் சொல்லுண்டு; குறிய பொருளில்லை' எனவும் பிரதிபேதம் உண்டு. இது 'குறுநீர்' என்னும் பாடத்திற்கியைந்த பொருளாகக் காணப்படுகின்றது.

† 'சினநுதல்' என்றும் பாடம்.

‡ 'தொடுத்த' எனவும் பாடம்.

சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே "

இஃது அடிதொறும் பொருளால் வந்து மறுதலைப் படத் தொடுத்தமையா லடிமுரண்.

" சீறடிப் பேரக லல்கு லொல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணு
மிருக்கையு நிலையு மேந்தெழி லிபக்கமுந்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தனை முனியா
தென்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே "

இதனுள் இணைமுரண் முதலாய ஏழு விகற்பமு முறையானே வந்தவாறு கண்டு கொள்க. முரண்டொடை யிலக்கண மிவ்வாறே பிறருஞ் சொன்னார்; என்னை?

" மொழியினும் பொருளினு முரணுதன் முரணே "
என்றார் தொல்காப்பியனார்.

" சொல்லினும் பொருளினு மாறுகோண் முரணே "
என்றார் பல்காயனார்.

" பொருளினு மொழியினு முரணுதன் முரணே "
என்றார் நத்தத்தனார்.

" பொருளினுஞ் சொல்லினு முரணத் தொடுப்பின்
முரணென மொழிப முந்தை யோரே "
என்றார் மயேச்சுரர்.

" மறுதலை யுரைப்பினும் பகைத்தொடை யாகும் "
என்றார் அவிநயனார்.

" மொழியினும் பொருளினு முரணத் தொடுப்பி
னிரணத் தொடையென் றெய்தும் பெயரே "
என்றார் காக்கைபாடினியார். (௩௮)

[இதுவுமது]

39. கடையிணை பின்முர ணிடைப்புணர் முரணென
விவையுங் கூறுப வொருசா ரோரே

என்பது என்னுதலிற்றோவெனின், முரண்டொடைக் கொரு சா ராசிரியர் வேண்டும் விகற்ப முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :—கடையிணைமுரணும், பின்முரணும், இடைப் புணர்முரணு மென்று சொல்லுவ ரொருசா ராசிரியர் என்ற வாறு.

கடை யிருசீரு மறுதலைப்படத் தொடுப்பது கடையிணைமுரண், கடைச்சீரு மிரண்டாஞ்சீரு மறுதலைப்படத் தொடுப்பது பின்முரண், இடை யிருசீரு மறுதலைப்படத் தொடுப்பது இடைப்புணர்முரண் எனக்கொள்க. கடையிணை பின்முரண் இடைப்புணர்முரண் என்ற தல்லது, அவற்றிற் கிலக்கணங் கூறிற்றில்லை யாயினுஞ், சொல்லின் முடிவி னப்பொருள் முடித்த லென்பது தந்திரவுத்தியாகலானும், உரையிற்கோட லென்பதாகலானு மிவ்வா றுரைக்கப்பட்டது.

அவற்றுக்குச் செய்யுள் வருமாறு :—

"* மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
றேரோ காணலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதல் பெரிதே "

இது கடையிருசீரு மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடையிணைமுரண்.

" சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து

* 'மீன்றேர்ந்து வருந்திய' எனவும் பாடம்.

தமிய மிருந்தன மாகி நின்று
நலனுடைப் பணிமொழி நன்குபல *புகழ்ந்து
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே"

இது கடைச்சீரு மிரண்டாஞ்சீரு மறுதலைப்படத் தொடுத்தமையாற் பின்முரண்.

"போதவிழ் குறிஞ்சி †நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்குவெள் ளருவிக்
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறா ரிழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின வினியோர் மாட்டே"

இஃது இடையிருசீரு மறுதலைப்படத்தொடுத்தமையா லிடைப் புணர் முரண்.

இவ்வாறு கூறினார் கையனா ரென்னு மாசிரிய ரெனக் கொள்க.

இவையுங் கூறுப வென்ற உம்மையான் முதற்சீ ரொழித்து மூன்று சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுப்பது கடைக்கூழை முரணெனப்படும்.

வரலாறு :—

"காவியங் கருங்கட் ‡செய்யவாய்ப் பைந்தொடி
பூவிரி நறுமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா ¶லெம்மே"

இதன் முதலடியில் கருங்கட் செய்யவாய்ப் பைந்தொடி எனக் கடைச்சீர் மூன்று மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைக்கூழை முரணெனக் கொள்க.

---

* 'புகன்று' எனவும் பாடம்.
† 'நறுந்தண்' எனவும் பாடம்.
‡ 'செவ்வாய்' எனவும் பாடம்.
¶ 'எமக்கே' எனவும் பாடம்.

ஒன்றினமுடித்த றன்னின முடித்த லென்பது தந்திரவுத்தியாக் லின் ஏனைத்தொடைக்கு மிவ்வாறே கொள்க.

அவை சொல்லுமாறு:— கடையிணைமோனை, பின்மோனை, இடைப்புணர்மோனை, கடைக்கூழைமோனை, எனவும்; கடையிணை யெதுகை, பின்னெதுகை, இடைப்புணரெதுகை, கடைக்கூழையெ துகை எனவும்; கடையிணையியைபு, பின்னியைபு, இடைப்புணரியைபு, கடைக்கூழையியைபு எனவும்; கடையிணையளபெடை, பின்னள பெடை, இடைப்புணரளபெடை, கடைக்கூழையளபெடை எனவுங் கண்டு கொள்க.

அவற்றிற்குச் செய்யுள்:—

" பூந்தார்ச் சிறுகிளி புலம்பொடு புலம்ப
மைம்மலர் நெடுங்கண் வாங்கமை நெடுந்தோ
ளந்நுண் கொடியிடை * கொடியேற் றுறந்து
சீறடிச் சிலம்பு சிலம்பொடு சிலம்ப
† வேதி லாளனொ டிவ்வழிப்
போதல் கண்டனையோ வாழிய புறவே"

இதனுட் கடையிணைமோனை முதலாகிய நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

" வஞ்சியங் கொடியின் வணங்கிய நுணங்கிடை
மலர்புரை வடிக்கண் வாங்கமைத் தொடித்தோண்
மதிபுரை சிறுநுதல் நறுமென் கூந்தல்
வான்கதிர் வடமலி தடமுலை மடவரல்
பஞ்சியஞ் சீறடி பனிப்பவிவ்
வெஞ்சுர மிதிப்ப விளைந்ததால் விதியே "

இதனுட் கடையிணை யெதுகை முதலாகிய நான்கு விகற்பமும் வந்தவாறு கண்டுகொள்க.

" புயலறல் போலும் பூங்குழற் பிழம்பே
தொய்யிலும் பொன்னே சாயலு மயிலே

---

* 'அணங்கிருளிடை யெற்றுறந்து' எனவும் பாடம்.
† 'ஏதில் காளையோ டிவ்வழி' எனவும் பாடம்.

சிலையே நுதலும் முறுவலு *முத்தே
மயிலும் பாலு மாம்பலு மொழியே
யரிமதர் நெடுங்கணு மயிலே
வரிவளைத் தோளி முகமுமோர் மதியே"

இதனுட் கடையிணையியைபு முதலாகிய நான்கு முறையானே வந்தவாறு கண்டுகொள்க. இஃதிறுவா யெழுவாயாகக் கண்டு கொள்க.

"மெல்லிணர் நறுப்பூ விடாஅ தொடாஅள்
செய்கையும் வழாஅ தெய்வமுந் தொழாஅ
ளினிதினி னகாஅ ளிபாஅள் யாவதும்
விரிமலர் மராஅங் குராஅம் விராஅம்
பின்னிருங் கூந்த னன்னுத
லென்னு குவள்கொ லென்னுமென் னெஞ்சே"

இதனுட் கடையிணையளபெடை முதலாகிய நான்கு விகற்பமு முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

இன்னும், 'இவையுங் கூறுப வொருசாரோரே' யென்றவும்மை விகற்பினால் அடியடிதோறுங் கடைச்சீர்க்கண் முதலெழுத்துமொழியு மொன்றிவந்தாற் கடைமோனையென்றும், இரண்டா மெழுத்தொன்றி வந்தாற் கடையெதுகை யென்றும், கடைச்சீர் மறுதலைப் படத் தொடுத்து வந்தாற் கடைமுரணென்றும், அடிதொறுங்கடைச் சீரிறுதி யெழுத்தொன்றி வந்தாற் கடையியைபென்றும், கடைச்சீரளபெடுத்துவந்தாற் கடையளபெடையென்று மிவ்வாறு பெயரிட்டு வழங்குவாரு முளரொருசா ராசிரியரெனக் கொள்க.

வரலாறு :—

"வளரிளங் கொங்கை வான்கெழு மருப்பே
பொறிவண் டோதியிற் பாடுமா மருளே
வாணுத லொண்மதி மருட்டு
மாயோ ளிவளென் னோய்தணி மருந்தே"

இஃது அடிதொறுங் கடைச்சீர்க்கண் முதலெழுத் தொன்றி வரத் தொடுத்தமையாற் கடைமோனை.

---

* 'மணியே' எனவும் பாடம்

" சுரிதரு மென்குழன் மேலு மாலைகள் சூட்டினீர்
புரிமணி மேகலை யாளை யாரமும் பூட்டினீ
ரரிதவழ் வேனெடுங் கண்களு மஞ்சன மூட்டினீர்
வரிவளை பெய்திளை யாளை நுண்ணிடை வாட்டினீர் "

இஃது அடிதோறும் கடைச்சீர்க்கண் ணிரண்டா மெழுத்தொன்றிவரத் தொடுத்தமையாற் கடையெதுகை.

" கயன் மலைப்பன்ன கண்ணிணை கரிதே
தடமுலைத் திவளுந் தனிவடம் வெளிதே
நூலினு நுண்ணிடை சிறிதே
யாடமைத் தோளிக் கல்குலோ பெரிதே "

இஃது அடிதோறும் கடைச்சீர் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைமுரண்.

" மாமலர் நெடுங்கண் மானேக் கினவே
பொன்மலர் வேங்கை புணர்முலைச் சுணங்கே
நறுமலர்க் கூந்தலு மறலே
* செறுமலர்க் கமல மலைத்தது முகமே "

" ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் "

" அளவறியா னட்டவன் கேண்மையே கீழ்நீர்த்
தறியறியான் பாய்ந்தாடி யற்று "

என விவை முதற்சீர்க் கடையொத்து வந்தமையாற் கடையியைபு.

" தொடுகடற் றுறைதுறை திரிதருஞ் சுறாஅக்
கருங்கழி கலந்து கலித்தருங் கராஅ
மறிதிரை மகரமும் வழாஅ
வெறிநீர்ச் சேர்ப்ப னின்னெறி தகாஅ "

இது கடையளபெடை. பிறவுமன்ன. (௩௯)

---

* 'ஒண்மலர்' எனவும் பாடம்.

[அடியியைபுத்தொடை ஆமாறு.]

40. இறுவா யொப்பினஃ தியைபெனப் படுமே.

இஃதென் னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே யடியியைபுத் தொடையாமாறுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:— அடிதோறு மிறுதிக்கண் ணெழுத்தானுஞ் சொல்லானு மொன்றிவரின், அஃது அடி இயைபுத்தொடை யென்னப்படும் என்றவாறு.

வரலாறு :—

"மாயோள் கூந்தற் குரலு நல்ல
* கூந்தலில் வேய்ந்த மலரு நல்ல
மலரே ருண்கணு நல்ல
பலர்புக ழோதியு நனிநல் லனவே"

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத் தோளி கூடலு மணங்கே
யரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே"

இவை யடிதோறு மிறுதியொன்றி வந்தமையான் அடியியைபுத்தொடை.

இனி அவை எட்டுத்திறத்தானும் வருமாறு :—

"மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
யதனால்

* 'கூந்தற் பெய்த' எனவும் பாடம்.

இவ்வயி னிவ்வுரு வியங்கலி
னெவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே "

இதனுள் இணையியைபு முதலாகிய ஏழு விகற்பமு முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

ஈறு முதலாக 'இயை பெனட்படுமே' என்று சிறப்பித்தவதனால், மோனையாய்வந்து இறுவாயொத்தால் மோனை யியைபென்றும், எதுகையாய் வந்து இறுவாயொத்தால் எதுகை யியைபென்றும் முரணாய்வந் திறுவாயொத்தால் முரணியை பென்றும், அளபெடை யாய் வந்து இறுவாயொத்தால் அளபெடையியைபென்றும், பல வாய் வந்து இறுவாயொத்தால் மயக்கியைபென்றும், பிற வாராது இறுவாயொத்தால் செவ்வியைபென்றும் வழங்கப்படு மெனக் கொள்க.

அவற்றுட் சில வருமாறு :—

" பூந்தண் பொழிலிடை வாரணந் துஞ்சும்
பூங்கண் ணன்னை யில்லிடைத் துஞ்சும்
பூங்கொடிப் புறத்தயற் குறவன் றுஞ்சும்
பூசலிக் களவென் றியாந்துஞ் சலமே"

இது மோனையியைபுத்தொடை.

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைவதூஉங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

இஃது எதுகை யியைபுத்தொடை.

" இருளுக் கெரிவிளக் கென்றும் பகையே
அருளுக் கலைவாழ்க்கை யஃதும் பகையே
மருளுக்கு வாலறிவு *மாளாப் பகையே
பொருளுக்கஃ தின்மை பகை "

இது முரணியையுத்தொடை.

" ஏஎ வழங்குஞ் சிலையா யினிவாரல்
மாஅ வழங்கு நெறி "

---

* 'மாயா' எனவும் பாடம்.

"ஓ ஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்"

இஃது அளபெடை யியைபுத்தொடை.

"பரவை மாக்கடற் படுதிரை வரவும்
பண்டைச் †செய்தி யின்றிவண் வரவும்
பகற்பின் முட்டா திரவிது வரவும்
பசியு மார்கையும் வரவும்
பரியினும் போகா துவப்பினும் வருமே"

இது மோனையு முரணுமாய்வந் திறுவாய் யொத்தமையான் மயக்கியைபுத் தொடை.

"ஓங்குவரை யமன்ற வேங்கை நறுமலரு
மூர்கெழு நெய்தல் வார்கெழு மலரும்
பழனத் தாமரை யெழினல மலரு
மில்லயற் புறவின் முல்லைவெண் மலரு
முராஅங் கடற்றிரை விராஅ மலரும்
வேறுபட மிலைச்சிய நாறிருங் குஞ்சி
யேந்தல் பொய்க்குவ னெனவும்
பூந்த ணுண்கணும் புலம்பா னுவே"

இது பொழிப்பெதுகையும், பொழிப்பளபெடையுமாய் வந்திறுவா யொத்தமையான் மயக்கியைபுத்தொடை. மயக்கியைபுத் தொடைக் கிலக்கணம் பலரும் ஈறு பிறிதாய் வந்ததாயினு மென்பாரு முளரெனக் கொள்க.

அது போக்கித் தொடை பல தொடுப்பினு மென்னுஞ்சூத்திரத் துட் காட்டுதும். இயைபுத்தொடைக் கிலக்கணம் பிறரு மிவ்வாறு சொன்னார்; என்னை?

"இறுவா யொன்ற லியைபின் யாப்பே"

என்றார் தொல்காப்பியனார்.

"இறுவா யொப்பினஃ தியைபென மொழிப"

என்று ரவிநயனார்.

† 'செய்திய யின்றிவன்' எனவும் பாடம்.

"இயைபே யிறுசீ ரொன்று மென்ப"
என்றார் பல்காயனார்.

"இறுசீ ரொன்றி னியைபெனப் படுமே"
என்றார் நத்தத்தனார். (௪0)

[அடி அளபெடைத்தொடை யாமாறு]

41. அளபெடை யொன்றுவ தளபெடைத் தொடையே

என்பதென்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே யடி யளபெடைத் தொடை யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—அடிதொறு முதற்சீர்க்கண் அளபெடுத் தொன்றிவரின் அஃது அடியளபெடைத்தொடை யெனப்படுமென்ற வாறு.

இச்சூத்திரத்துண் முதற்சீ ரென்பதில்லையாயினும், 'இருசீர் மிசைவரத் தொடுப்பதை யிணையே' என்னும் சூத்திரத்தினின்றும், சீர் என்றும் முதல் என்றும் சிங்க நோக்கதிகாரம் வரவுரைக்கப் பட்டதெனக் கொள்க.

ஒன்றுதலென்பது,

"தனிநிலை முதனிலை யிடைநிலை யீறெனா
நால்வகைப் படூஉமளா பாய்வரு மிடனே"

என்று சொல்லப்பட்ட உயிரளபெடையும், ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்த மென விவை பதினொரொற்றும் குறிற்கீழுங் குறி லிணைக்கீழுமென்று சொல்லப்பட்ட ஒற்றளபெடையும் தம்முள் ஒன்றி வருவதெனக்கொள்க. நான் கிடத்து மேழு நெட்டெழுத்து மளபெடுப்ப விருபத்தெட் டுயிரளபெடையாம். அவ்விருபத்தெட்டி னையு மெட்டுவிகற்பத்தானு முறழ இருநூற் றிருபத்துநாலாம். பதி னொரொற்றுங் குறிற்கீழுங் குறிலிணைக்கீழு மளபெடுப்ப விருபத் திரண்டாம். அவ்விருபத் திரண்டினையும் எட்டு விகற்பத்தானு முறழ நூற்றெழுபத்தாறாற் றளபெடையாம். அவை யிறுதி யிடைநிலை யாய்க்கூறுபடுப்ப விரட்டியாம். அவையெல்லாம் செய்யுள்வந்துழிக் கண்டு கொள்க.

" ஏ எ வழங்குஞ் சிலையா யினிவாரல்
மா அ வழங்கும் வரை"

இது சீர்க்கு முன்னும் பின்னு மெழுத்தின்றி யோரெழுத்தே நின்றளபெடுத்தமையாற் றனிநிலை யளபெடைத்தொடை.

" காஅரி கொண்டான் கதச்சே மதனழித்தான்
ஆஅழி யேந்த லவன்"

இது முதனின்ற சொல்லின்கட் பின்னு மெழுத்துப்பெற்று முதலெழுத் தளபெழுந்தமையான் முதனிலை யளபெடைத்தொடை.

" கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்"

இது முதனின்ற சீரி னிறுதி யெழுத்தளபெடுத் தொன்றிவரத் தொடுத்தமையா லிறுதிநிலை யளபெடைத்தொடை.

" பராஅய தேவர்க் கொழிக்கலு மாமோ
விராஅய கோதை விளர்ப்பு"

இது முதனின்ற சீரி னடுநின்ற எழுத்தளபெடுத் தொன்றிவரத் தொடுத்தமையா லிடைநிலை யளபெடைத்தொடை.

இனி ஒற்றளபெடை:—

" வண்ண்டு வாழு மலர்நெடுங் கூந்தலாள்
பண்ண்டை நீர்மை * யரிது"

இஃது இடைநிலையொற் றளபெடைத்தொடை.

" உரன்ன் னமைந்த வுணர்வின ராயி
னரண்ண் ணவர்திறத்த தில்"

இஃதிறுதிநிலையொற் றளபெடைத்தொடை.

தொடையே யென்றதிகாரம் வரவைத்துப், பெயர்த்தும் அளபெடையொன்றுவ தளபெடைத் தொடையென்று மிகுத்துச் சொல்லியவதனால், முதலெழுத்தொன்றிவந் தளபெழுந்தால் மோனையளபெடைத் தொடையென்றும், இரண்டாமெழுத்தொன்றி வந்து அளபெழுந்தால் எதுகை யளபெடைத்தொடை யென்றும், முரணாய் வந்தளபெழுந்தால் முரணளபெடைத்தொடை யென்றும்

* பரிது எனவும் பாடம்.

அவை பல வந்தளபெழுந்தால் மயக்களபெடைத்தொடை யென்றும், பிற வாராதளபெழுந்தால் செவ்வளபெடைத்தொடை யென்றும் வழங்கப்படும். அவற்றிற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க.

அஃதே யெனின், அளபெடை யொன்றுவ தளபெடைத் தொடை யென்னாது, அளபெடைத் தொடையே யென்று ஏகார மிகுத்துச்சொல்ல வேண்டியதென்னை யெனின், ஒரு சாராசிரியரால் இணை முதலாகிய ஒருசா ரளபெடை விகற்பங்கள் சிறுபான்மை யொன்று தளபெடுத்து வரினுங் கொள்ளப் படுமென்ப தறிவித் தற்கு வேண்டப்பட்டது.

தொடை விகற்பத்து நான்கு உயிரளபெடையும், இரண்டு ஒற்றளபெடையுந் தம்முண் மயங்கி வரப்பெறும்.

உதாரணம் :—

'ஏஎ ராஅர் நீஇ ணீஇர்' என்பது கொள்க.

இனி அவை யெட்டு விகற்பத்தானும் வழங்குமாறு:—

" ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்.

இஃதடிதோறு முதற்சீர்க்கண் ணளபெடுத் தொன்றிவரத் தொடுத்தமையா லடியளபெடைத்தொடை.

" தாஅட் டாஅ மரைமல ருழக்கி
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅன்
மீஇ னாஅர்ந் துகளுஞ் சீஇ
ரேஎ ராஅர் நீஇ ணீஇ
ரூரன் செய்த கேண்மை
யாய்வளைத் தோளிக் கலரா னதே"

இதனு ளிணையளபெடைத்தொடை முதலாகிய வேழு விகற்ப மும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

அளபெடைக்கிலக்கணம் இவ்வாறு பிறருஞ் சொன்னார்; என்னை?

"அளபெடைத் தொடைக்கே யளபெடை யாகும்"

என்றார் பல்காயனார்.

"அளபெடைத் தொடைக்கே யளபெடை யொன்றும்"

என்றார் நத்தத்தனார்.

*"அளபெடை யினம்பெறத் தொடுப்ப தளபெடை"

என்றார் அவிநயனார்.

"சொல்லிசை யளபெழ நிற்பதை யளபெடை"

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

"அளபெழுந் தியாப்பினஃ தளபெடைத் தொடையே"

என்றார் † திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்.

‡ "எழுவாயெழுத் தொன்றின் * * * * அளபெடையே"

¶ "மாவும் புண்மோனை * * * பணிமொழியே"

இவற்றைப் பதம் நெகிழ்த்துரைத்துக்கொள்க. (சுக)

## 2. இருசீர் மிசைவரத் தொடுப்பதை யிணையே.

மோனை முதலாகிய வைந்து தொடையு முணர்த்தி யவற்றின் விகற்பமு முணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்று ளிச்சூத் திர மிணையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

---

* 'அளவே யினம் பெற' எனவும் பாடம்.

† 'உயரும் புரநகாச் செற்றவன் பெயர்,' என்றும் பாடம்.

‡ எழுவா யெழுத்தோன்றின் மோனை யிறுதி யியை யிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் யாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்க
ணழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.
(யாப்பருங்கலக்காரிகை)

¶ மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாவளிய
வோவிலந் தாதி யுலகுட னூமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.
(யாப்பருங்கலக்காரிகை)

இதன் பொருள் :—முதலிரு சீர்க்கண்ணு மேலடிக்கண் வரத் தொடுத்தாற்போல மோனை முதலாயின வரத்தொடுத்தால், அவை யிணைமோனை, இணையெதுகை, இணைமுரண், இணையியைபு, இணை யளபெடை யெனப்படும் என்றவாறு ; என்னை ?

"இரண்டாஞ் சீர்வரி னிணையெனப் படுமே"

என்றார் பிறரு மாகலின்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு :—

"தண்ணறுந் தகர நீவிய கூந்தற்
றூதார் தண்போ தட்டுபு முடித்துத்
தயங்குமணித் தளர்நடைப் புதல்வர் தாயொடுந்
தம்மனை தமரொடுங் கெழீஇத்
தனிநிலைத் தலைமையொடு பெருங்குறை வின்றே"

இது முதலிருசீர்க்கண்ணு முதலெழுத் தொன்றிவரத் தொடுத் தமையா லிணைமோனைத்தொடை.

"கல்லிவர் முல்லைக் * களிவண்டு வாய்திறப்பப்
பல்கதிரோன் செல்லும் பகனீங் கிருண்மாலை
† மெல்லியலாய் மெல்லப் படர்ந்த திதுவன்றோ
சொல்லியலார் சொல்லிய போழ்து"

இது முதலிருசீர்க்கண்ணு மிரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா லிணையெதுகைத்தொடை.

"கருங்கால் வெண்குருகு கனைதுயின் மடியு
மிடுகுதுறை யகன்கழி யினமீன் மாந்தி
‡ யோங்கிருங் கனிக்கோட் டிருஞ்சினை யுறையுந்
தண்டுறை வெஞ்செலன் மான்றேர்ச் சேர்ப்பன்
பகல்கழீஇ யெவ்வந் தீரக்
கங்குல் யாமத்து வந்து நின்றனனே"

இது முதலிரு சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையா லிணைமுரண்.

---

* 'கணவண்டு' எனவும் பாடம். † 'சொல்லியார்' எனவும் பாடம்.

‡ 'ஓங்கிருங் குளிர்தோட்டிருஞ்சினை' எனவும் 'ஓங்கிருந்துளிர் கோட் டிருஞ்சினை' எனவும் பாடம்.

" பிரிந்துறை வாழ்க்கையை யாமும் பிரிந்தும்
இருந்தெய்க்கு நெஞ்சே † யிருந்து—பொருந்தும்
பெரும்பணைத் தோளி குணனு மடனு
மருஞ்சுரந் துள்ளும் வரும் "

இது கடையிருசீர்க்கண்ணும் ஈற்றெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா லிணையியைபு.

" உலாஅ வலாஅ தொருவழிப் படாஅ
தெலாஅ வெலாஅ வென்றிது வினவும்
வெரீஇ வெரீஇ வருதியோ நீ
யொரீஇ யொரீஇ யூரல ரெழவே "

இது முதலிருசீர்க்கண்ணு மளபெடுத்தமையா லிணையளபெடை. அஃதே யெனின், இணைமுதலாகிய தொடைவிகற்பங்கட் கிலக்கியம் ஈண்டன்றே காட்டற் பாலது; மேற்காட்டிய தென்னை? எனின், முதலேழு விகற்பமு முறையானே ஒருசெய்யுளுள்ளே வந்தது கண்டு கற்பார்க் கெளிமை நோக்கித் தத்தந் தொடைகளோடு மியையக் காட்டிய தல்லது இலக்கண முறையாய நீண்டுக் காட்டப் பட்டதெனக் கொள்க. (சஉ)

[பொழிப்பு மோனை ஆமாறு]

43. முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே.

என்பது என்னுதலிற்றோவெனின், பொழிப்பாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :—முதற் சீர்க்கண்ணு மூன்றுஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்புத்தொடை யெனப்படு மென்றவாறு.

அவை பொழிப்புமோனை, பொழிப்பெதுகை, பொழிப்பு முரண், பொழிப்பியைபு, பொழிப்பளபெடை எனக் கொள்க. " சீரிடை விட்டினி தியாப்பது பொழிப்பாம் " எனவும் " ஒருசீ ரிடைவிடிற் பொழிப்பொரூஉ விருசீர் " எனவும் பிறரும் சொன்னாராகலின்.

† 'புகழும்-பொருளும்' எனவும் பாடம்

வரலாறு:—

“கணங்கொள் வண்டினங் கவர்வன *மேய்ப்பக்
கழிசே ரடைகரைக் கதிர்வாய் திறந்த
கண்போ னெய்தல் கமழு மாங்கட்
கலிமாப் பூண்ட கடுந்தேர்
கவ்வைசெய் தன்றாற் சங்குல் வந்தே”

இது முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ் சீர்க்கண்ணு முதலெழுத் தொன்றி வந்தமையாற் பொழிப்பு மோனை.

“பல்கால் வந்து †மெல்லக் கூறிச்
சொல்வன் மையி னல்லவை புணர்ந்து
செல்புன லெடுத்த பல்பூங் கழனி
நல்வய லூரன் வல்ல
னெல்லா னுணர்த்தும் பல்குறை மொழியே”

இது முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ் சீர்க்கண்ணு மிரண்டா மெழுத் தொன்றிவரத் தொடுத்தமையாற் பொழிப்பெதுகை.

“ஓங்குவரைத் தொடுத்த தாழ்ந்திலங் கருவி
சேங்குர லேனற் பைங்கிளி யிரியச்
சிறுகுடித் ததும்பும் பெருங்கன் னாடனை
நல்ல னென்று மியாமே
தீய னென்னுமென் றடமென் றோளே”

இது முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ் சீர்க்கண்ணு மறுதலைப் படத் தொடுத்தமையாற் பொழிப்பு முரண்.

“பெருங்கண் கயலே சீறியாழ் சொல்லே
முருந்தம் பல்லே புருவம் வில்லே
மயிலே மற்றிவ ளியலே
தண்கதுப் பறலே திங்களு நுதலே”

இது கடைச்சீர்க்கண்ணு மிரண்டாஞ் சீர்க்கண்ணு மீற்றெழுத் தொன்றிவரத் தொடுத்தமையாற் பொழிப்பியைபு.

---

* ‘மாய்ப்ப’ எனவும் ‘மொய்ப்ப’ எனவும் பாடம்.

† ‘மெல்ல கூறி’ எனவும் பாடம்.

" சுறாஅக் கொட்கு மறாஅ விருங்கழிக்
கராஅங் கலித்தலின் விராஅ மீனினம்
படாஅ வென்னையர் வலைமேயன
கெடாஅ நாமிவை விடாஅம் விலக்கே"

இது முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ்சீர்க்கண்ணும் அளபெடுத்து ஒன்றிவரத் தொடுத்தமையாற் பொழிப்பளபெடை. (சங)

[ஒரூஉத்தொடை அமாறு]

44. சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத்தொடை.

என்ப தென்னுதலிற்றோ வெனின், ஒரூஉத்தொடை யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற் சீர்க் கண்ணு நாலாஞ்சீர்க்கண்ணு மோனை முதலாயின வரத் தொடுப்பது ஒரூஉத்தொடை யெனப்படும் என்றவாறு.

அவை ஒரூஉ மோனை, ஒரூஉ வெதுகை, ஒரூஉ முரண், ஒரூஉ வியைபு, ஒரூஉ வளபெடை யென வழங்கப்படும்.

" சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉ" வென்றது மதி கார வசத்தா லப்பொருளைப் பயக்கும்;

" இருசீ ரிடையிடி னொரூஉவென மொழிப"

என்றார் தொல்காப்பியனு ராகலானும். பெயர்த்துந் "தொடை" யென்று சொல்ல வேண்டியதென்னை எனின், தொடைவிகற்ப மெல்லா நாற்சீரடியுள்ளே வழங்கப்படு மென்ப தெல்லா வாசிரியர்க்கு மொப்ப முடிந்த துணிபென்பது அறிவித்தற் கொரு தோற்ற முணர்த் திய தெனக்கொள்க.

வரலாறு :—

" புயல்வீற் றிருந்த காமர் புறவிற்
புல்லா ரினநிரை யேறுடு புகலப்
புன்கண் மாலை யுலகுகண் புதைப்பப்
புரிவளைப் பணைத்தோட் குறுமகள்
புலம்பு கொண்டனளா நம்வயிற் புலந்தே"

இஃதிடை யிருசீர்க்கண்ணு மின்றி முதற்சீர்க்கண்ணுங் கடைச்சீர்க்கண்ணு முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையால் ஒரூஉ மோனை.

"பரியல் யாவதும் பைந்தொடி யரிவை
பொரியரை மராஅத்து வாலிணர்ச் சுரிமலர்
எரியிணர்க் காந்தளோ டெல்லுற விரியும்
வரிவண் டார்க்கு நாடன்
பிரியா னாதல் பேணின்மற் றரிதே"

இஃதிடை யிருசீர்க்கண்ணு மின்றி முதற்சீர்க்கண்ணு நான்காஞ்சீர்க்கண்ணு மிரண்டா மெழுத்தொன்றிவரத் தொடுத்தமை யான் ஒரூஉ வெதுகை.

"குறுங்கா னாழல் கொங்குசேர் நெடுஞ்சினை
யோங்குதிரை புதைப்ப மருங்கிற் றாழ்ந்த
தண்ணறுந் துறைவன் பின்னிலை வேம்படர்
பிரிந்துநாங் களையா மாயிற் பிரியான்
பெருங்கடற் படப்பைநஞ் சிறுகுடிப்
போங்கரைப் பெண்ணை மடலொடு வருமே"

இஃதிடை யிருசீர்க்கண்ணு மின்றி முதற்சீர்க்கண்ணுங் கடைச்சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையா னொரூஉ முரண்.

பல்லோர் முத்தம் புருவம் வில்லே
சொல்லே யமுதம் *பிறையவ னுதலே
யியலே யெண்ணினுந் தெரியினு மயிலே
கயலே கண்ணுநற் கூந்தலு மறலே

இஃதிடை யிருசீர்க்கண்ணு மின்றி முதற்சீர்க்கண்ணுங் கடைச்சீர்க்கண்ணு மீற்றெழுத் தொன்றிவரத் தொடுத்தமையா னொரூஉ வியைபு.

"வழாஅ நெஞ்சிற் றெய்வமுந் தொழாஅள்
செறாஅச் செய்தியின் யாங்கணும் பெறாஅள்

* 'அணங்கவனுதலே' எனவும் பாடம்.

தேஎம் பல்பக லொரீஇத்
தாஅன் *செய்வதுவே செய்வ மெனாஅ"

இது முதற்சீர்க்கண்ணும் கடைச்சீர்க்கண்ணும் அளபெடுத்து வந்தமையால் ஒரூஉ அளபெடை.

" ஒரூஉத்தொடை, யிருசீ ரிடைவிடி லென்மனார் புலவர்"
என்றார் அவிநயனார். (சச)

[கூழை ஆமாறு]

45. மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே.

என்ப தென்னுதலிற்றோ வெனின், கூழைத்தொடையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—கடைச்சீர்க்கண்ணின்றி யொழிந்த முதன் மூன்றுசீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பின், அவற்றைக் கூழைமோனை, கூழையெதுகை, கூழைமுரண், கூழையியைபு, கூழையளபெடை யென்று சொல்வர் புலவ ரென்றவாறு.

பிறரும்,

" மூன்றுவரிற் கூழை நான்குவரின் முற்றே"

என்றார்.

வரலாறு:—

" அருவி யரற்று ‡மணிதிகழ் சிலம்பின்
அரக்கி னன்ன வவிழ்மலர்க் காந்தள்
அஞ்சிறை யணிவண் டரற்று நாடன்
அவ்வளை யமைத்தோ ளழிய
அகன்றன னல்லனோ வளிய §னெம்மே"

இது முதன் மூன்றுசீர்க்கண்ணு முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையாற் கூழை மோனை.

* 'செய்வதே செய்வ தாஅனள்' எனவும் பாடம்.
† 'அவை வருமாறு' எனவும் பாடம்.
‡ 'மனைதிகழ்' எனவும் பாடம்.
§ 'னெமையே' எனவும் பாடம்.

" பொன்னி னன்ன புன்னை நுண்டா
தன்ன மென்பெடை தன்னிற மிழக்கும்
பன்மீன் முன்றுறைத் தொன்னீர்ச் சேர்ப்பன்
பின்னிலை யன்வயி னின்றனன்
என்னோ நன்னுத னின்வயிற் குறிப்பே "

இது கடைச்சீர்க்கணின்றி முதன் மூன்று சீர்க்கண்ணு மிரண்டா மெழுத்தொன்றிவரத் தொடுத்தமையாற் கூழை யெதுகை.

" கரிய வெளிய செய்ய கானவர்
பெரிய சிறிய விட்டிய பிறழ்ந்த
நெடிய குறிய நிகரி னீலம்
படிய பாவை யொண்கண்
கடிய கொடிய தன்மையு முளவே "

இது கடையொழித் தொழிந்த முதன் மூன்று சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையாற் கூழை முரண்.

" நின்றழல் செந்தீயுந் தண்புனலு மிவ்விரண்டும்
மின்கலி வானம் பயந்தாங்கு—மென்றும்
பெருந்தோளி கண்ணு மிலங்கு மெயிறும்
மருந்தும் பிணியுந் தரும் "

இது கடைமூன்று சீர்க்கண்ணு மீற்றெழுத் தொன்றிவரத் தொடுத்தமையாற் கூழை யியைபு.

" விடாஅ விடாஅ வெரீஇப் பெயரும்
தொடாஅத் தொடாஅத் தொடாஅப் பகழியர்
பெறாஅப் பெறாஅப் பெறாஅப் பெயர்கள்
செறாஅச் செறாஅச் செறாஅ நிலையே "

இது முதன் மூன்று சீர்க்கண்ணு மளபெடுத் தொன்றி வரத் தொடுத்தமையாற் கூழை யளபெடை. (சரு)

---

* 'பின்னிலை யன்வயி னிந்நிலை செய்து
நன்னுத லின்னமு மன்னுத லிலனே' என்றும் பாடம்.

[மேற்கதுவாய் ஆமாறு]

46. முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே.

என்பதென் னுதலிற்றோவெனின் மேற்கதுவாயாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—இரண்டாஞ் சீர்க்கண்ணின்றி யேனை மூன்று சீர்க்கண்ணு மோனை முதலாயின வரத் தொடுத்தா லவை மேற்கதுவாய் மோனை, மேற்கதுவா யெதுகை, மேற்கதுவாய் முரண், மேற்கதுவா யியைபு, மேற்கதுவா யளபெடையென்று வழங்கப்படு மென்றவாறு.

அவை வருமாறு :—

" கணைக்கா னெய்தற் கண்போல் கடிமலர்க்
கருங்கான் ஞாழலொடு கவின்பெறக் கட்டிக்
கமழ்தார் மார்பன் கவளங் கடிப்பக்
கங்குல் வந்த கறங்குமணிக் கலிமா
கடல்கெழு பாக்கங் கல்லெனக் கடுப்பக்
கங்குல்வந் தன்றாற் கதழ்பரி கலந்தே"

இஃதிரண்டாஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணு முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் மேற்கதுவாய் மோனை.

" கண்டலங் கைதையொடு விண்ட முண்டகந்
தண்டா நாற்றம் வண்டுவந் துண்டலி
னுண்டா துறைக்கும் வண்டலந் தண்டுறை
கண்டன வருதல் விண்ட
தெண்டிரைச் சேர்ப்பனைக் கண்டவெங் கண்ணே"

இஃதிரண்டாஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணு மிரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் மேற்கதுவா யெதுகை.

" வெளியவும் வெற்பிடைக் கரியவுஞ் செய்யவும்
ஒளியுடைச் சார லிருளவும் வெயிலவும்

பரியவும் பன்மணி சிறியவு நிகரவும்
முத்தொடு செம்பொனும் விரைஇச்
சிற்றிலு மெங்கள் பேரிலு நடுவே"

இஃதிரண்டாஞ்சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க் கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையான் மேற்கதுவாய் முரண்.

"இருங்கண் விசும்பின்க *ணீன்ற முகங்காண்
கருங்கண் முலையின்கண் வேங்கை மலர்காண்
குறுந்தண் சுனைக்கண் மலர்ந்த †வுவைக்காண்
நறுந்தண் கதுப்பினுள் கண்"

இஃதிரண்டாஞ்சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க் கண்ணு மீற்றெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் மேற்கதுவா யியைபு.

"கூஉம் புடைக்கலஞ் சுறாஅ வுறாஅ
வறாஅ விடைக்கழிக் கராஅ முராஅம்
வேள மெமக்குள்ள மாஅலே நாஅந்
தாஅஞ் சொல்லவும் பெறாஅ ரிதோழ"

இஃதிரண்டாஞ்சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க் கண்ணு மளபெடுத் தொன்றிவரத் தொடுத்தமையான் மேற்கதுவா யளபெடை. (சசு)

[கீழ்க்கதுவாய் மோனை யாமாறு]

47. ஈற்றயற் சீரொழித் தெல்லாந் ‡தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்.

என்பது என்னுதலிற்றோ வெனின், கீழ்க்கதுவா யாமா றுணர்த் துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—மூன்றாஞ் சீர்க்கணின்றி முதலிரு சீர்க் கண்ணுங் கடைச்சீர்க்கண்ணு மோனைமுதலாயின வரத்தொடுத்தால் அவை கீழ்க்கதுவாய் மோனை, கீழ்க்கதுவா யெதுகை, கீழ்க்கதுவாய் முரண், கீழ்க்கதுவா யியைபு, கீழ்க்கதுவா யளபெடை யெனப்படு மென்றவாறு.

---

* 'மான்றமுகம்' எனவும் பாடம்.
† 'உதுக்காண்' எனவும் பாடம்.
‡ 'தொடுப்பின்' எனவும் பாடம்.

"கீழ்க்கது வாயின் கிழமைப தாகு"மென்பது கீழ்க்கதுவாயென்னும் பெயரினை யுரிமையாக வுடைத்தா மென்றவாறு.

"முடிவதன் முதலயல் கதுவாய் கீழ்மேல்"
என்றார் பிறரும் எனக்கொள்க.

அவை வருமாறு:—

"குழலிசைக் குரற்றும்பி காணக் குறைத்த
குண்டுசுனைக் குற்ற மாயிதழ்க் குவளை
கோலேவேற் குறவன் பாசிலேக் குளவியொடு
குறுநெறிக் குரல்வருத் தடைச்சிய
குறிஞ்சிசூழ் குவட்டிடைச் செய்தநங் குறியே"

இது மூன்றாஞ் சீர்க்கண்ணின்றி, யொழிந்த மூன்று சீர்க்கண்ணு முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் கீழ்க்கதுவாய் மோனை.

"அடும்பி னெடுங்கொடி யாழி யடுப்ப
கடுந்தேர் நெடும்பகற் றேன்றுங்—கொடுங்குழாய்
பாடுவண் டாடும் *பனிமலர் நீடுறை
நாடுவாங் கூடும் பொழுது"

இது மூன்றாஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணு மிரண்டா மெழுத்தொன்றி வரத் தொடுத்தமையாற் கீழ்க்கதுவா யெதுகை.

"விரிந்துஞ் சுருங்கியும் வில்லென வோசிந்துங்
குவிந்து மலர்ந்துங் குலையுறக் குலாவியும்
பெருகியுஞ் சிறுகியும் பின்னை நிமிர்ந்து
மிருந்து முண்கண் மலர்ந்தும் பொருந்தா
பொருந்திய புருவம் புடைபெயர்ந் தனவே"

எனவும்,

"கருங்கண் வெள்ளை வார்குழைச் சேயிழை
இரும்பும் பொன்னு மியல்காழ் மணியும்"

---

* 'மணிமலர்' எனவும் பாடம்.

எனவும் இவை மூன்றுஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையாற் கீழ்க்கதுவாய் முரண்,

" அன்னையு மென்னையுந் தன்னில் கடியும்
பன்னாளும் பாக்கமு மோவா தலர்தூற்றும்
பூக்கமழு மெல்லம் புலம்பன் பிரியினும்
இன்னுமியா மின்னுயி ரிறந்தி ரேமுமேம் "

இது மூன்றுஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணும் ஈற்றெழுத் தொன்றிவரத் தொடுத்தமையாற் கீழ்க்கதுவாய் இயைபு.

" ஆஅம் பூஉ மணிமலர் தொடாஅ
யாஅந் தேஎந் தண்புனந் தழாஅ
நாஅங் குறியிடை நண்ணூந்
தேஎ மாஅம் பொருப்பிடை யெறூஅ "

இது மூன்றுஞ் சீர்க்கண்ணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணும் அளபெழுந்தமையாற் கீழ்க்கதுவா யளபெடை. அஃதேதெனின், 'ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது-கீழ்க்கதுவா யாகு' மென்றாலுங் கருதிய பொருளைப் பயக்கும். கிழமையதாகு மென்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை? கையனார் முதலாகிய வொரு சாராசிரியர் இரண்டாஞ் சீர்க்கண்ணில்லாததனைக் கீழ்க் கதுவா யென்றும், *ஈற்றயற் சீர்க்கண்ணில்லாததனை மேற் கதுவா யென்றும் வழங்கிய தறிவித்தற்கொரு தோற்ற முணர்த்திய தெனக் கொள்க. (சஎ)

[முற்றுமோனை முதலாயின.]

48. சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே.

என்ப தென்னுதலிற்றோ வெனின், முற்றுத்தொடை யாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—நான்கு சீர்க்கண்ணு மோனை முதலாயின வரத் தொடுத்தா லவை முற்றுமோனை, முற்றெதுகை, முற்று முரண்

---

* 'மூன்றுஞ் சீர்க்கணில்லாததனை' எனவும் பாடம்,

முற்றியையு, முற்றளபெடை யென்று சிறப்பித்துச் சொல்லப்படு மென்ற வாறு.

சீர் தொறுந் தொடுப்பது முற்றென்னாது முற்றெனப்படுமே யென்று சிறப்பித்ததனாற் கரியவும் வெளியவுஞ் செய்யவும் பசியவு மென்றாற் போல முற்று முரணாது, முதலிரு சீரு முரணிப் பின்னைக் கடையிரு சீரு மற்றொரு வாற்றான் முரணினு முற்று முரணையாம், இணைமுதலாகிய விகற்பமும் கடையிணை முதலாகிய விகற்பமும் அடி தோறும் வருவது சிறப்புடைத்து, ஓரடியுள்ளே வரப் பெறுமாயினு முற்றேற்கும் எனக்கொள்க; "விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்" என்பதாகலின்.

"மூன்றுவரிற் கூழை, நான்குவரின்முற்றே"
என்றார் பிறரு மெனக்கொள்க.

அவை வருமாறு:—

" அணியிழை யமைத்தோ ளம்பசப் படைய
அரிமத ரலர்க்க ணரும்பனி யரும்ப
அரும்பொருட் ககன்ற * வறவோ
ரருளிலா ரற்பி னழியுமென் னறிவே "

இஃது எல்லாச் சீர்க்கண்ணு முதலெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் முற்று மோனை.

" கல்லிவர் முல்லையு மெல்லியலார் பல்லரும்பும்
† புல்லார்ந்து கொல்லேறு நல்லானைப்—புல்லின
பல்கதிரோ னெல்லைக்கட் செல்லுமா றில்லைகொல்
‡ சொல்லியார் சொல்லிய சொல் "

இது சீர்தொறு மிரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் முற்றெதுகை.

" நெடுந்தோட் குறுந்தொடி வீங்குபிணி நெகிழ
வரும்பொரு ளளிதெனச் சென்றவர் வருதல்

* 'அறவோர்க் கருளிலர்' எனவும் பாடம்.
† 'புல்லருந்து' எனவும் பாடம்.
‡ 'சொல்லியலார்' எனவும் பாடம்.

சேய்த்தன் றணித்தெனத் தேற்றவுந் தேறா
யகஞ்சுடப் புறஞ்செவி நிறுத்தனை கிடத்தல்
சின்மொழிப் பல்லிருங் கூந்தற்
பெருந்தகு சீறடி நன்னுத நீயே"

இஃதெல்லாச் சீர்தொறு மறுதலைப்படத் தொடுத்தமையான் முற்று முரண்.

" கண்ணும் புருவமு மென்றோளு மிம்மூன்றும்
வள்ளிதழும் வில்லும் விறல்வேயும்—வெல்கிற்கும்
பல்லும் பகரு மொழியு மிவையிரண்டு
முல்லையும் யாழு மிகும்"

இஃதெல்லாச் சீர்தொறும் ஈற்றெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் முற்றியைபு.

" கராஅம் விராஅம் *மராஅ முராஅந்
தொழாஅ வழாஅள் விடாஅ டொடாஅள்
இதோஒ விதோஒ வெண்மக
ளலாஅ வெலாஅ யாங்குற் றனளே"

இது சீர்தொறும் அளபெழுந்தமையான் முற்றளபெடை.

பிறவுமன்ன.

" அவைதாம்
முதலோ டயல்கொள்வ திணையய லின்றி
மூன்றாஞ் சீரது பொழிப்பிரண் டிடைவிட்
டிறுதியொடு கொள்வ தொரூஉ விறுதிச்
சீரொழித் தேனைய தொன்றிற் கூழை
முதலீ றடைந்தவற் றின்மை யிருவகைக்
கதுவாய் முற்று நிகழ்வது முற்றே
முதலோ டெட்டாகு மென்மனார் புலவர்"

என்றார் பரிமாணனார். அவர் இயைபுத்தொடைக்கு விகற்பம் வேண்டிற்றிலர். என்னை?

* 'பராஅம்' எனவும் பாடம்.

"செந்தொடை யிரட்டை யல்லா நான்கு
முதற்சீ ரடியால் விகற்பங் கொள்ப"

என்றாராகலின்.

இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉ
இருசீரிடைவிட்ட தீறிலி கூழை முதலிறுவாய் [உவாம்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின் முற்றென்ப மற்றவையே.
(யாப்பெருங்கலக்காரிகை.)

மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னுமிமையிற்
கேனை யெதுகைக் கிளம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப தாழ்குழலே.
(ஷை உதாரண முதற்குறிப்பு.)

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. (சஅ)

[செந்தொடை, இரட்டைத்தொடை, அந்தாதித்தொடை ஆமாறு.]

49. செந்தொடை யிரட்டையொ டந்தாதி யெனவும்
வந்த வகையான் வழங்குமன் பெயரே.

என்பது என்னுதலிற்றோ வெனின், இன்னுஞ் சில தொடைகளது பெயர்வேறுபா டுணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்றுளிச்சூத்திரஞ் செந்தொடையு மிரட்டைத்தொடையு மந்தாதித் தொடையுமாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—செந்தொடையும், இரட்டைத்தொடையும், அந்தாதித்தொடையு மென்றுபெயரிட்டு வழங்கப்படும்; மற்றொழிந்த தொடைகளும் வரலாற்று முறையானே பெயரிட்டு வழங்கப்படும் என்றவாறு.

செந்தொடையும் இரட்டைத்தொடையும் ஆமாறு *போக்கிக் கூறுதும். 'எனவும் வந்தவகையான் வழங்குமன் பெயரே' என்றதனாற் றொடையெல்லா மாராய்ந்து விகற்பித்துக் காணியபுகிற் பெரிதும்

* 'போக்கிச் சொல்லுப' எனவும் பாடம்.

பல்கு மாகலிற் சொல்லிப் புலப்பிக்க லாகா. அவற்றை வந்த வகை யாற் பெயர் கொடுத்து * வழங்கவேண்டு மென்பதாயிற்று. அவை தாம் பதின் மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றென்ப தென்பா ரும், வரம்பில வென்பாரு மென இருதிறத்தாசிரிய ரென்க. என்னை?

" முந்திய மோனை யெதுகை யளபெடை
யந்தமின் முரணே செந்தொடை யியைபே
பொழிப்பே யொரூஉவே யிரட்டை யென்று
மியற்படு தொடைக ளிவைமுத லாகப்
பதின்மூ வாயிரத் தறுநூ றன்றியுந்
தொண்ணூற் றென்பதென் றெண்ணினர் புலவர்"

" வல்லொற்றுத் தொடர்ச்சியு மெல்லொற்றுத் தொடர்ச்சியு
மிடையொற்றுத் தொடர்ச்சியு முறைபிறழ்ந் தியலும்"

என்றார் சங்கயாப்புடையார்.

"† மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
யையீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்று மென்ப வுணர்ந்திசி னோரே"

என்றார் தொல்காப்பியனார்.

---

* 'வழங்கிப்போக்கினல்ல தென்பது சொல்லப்பட்டதாயிற்று' எனவும் பாடம்.

† இச்சூத்திரத்துக்குத் தொடைவகை பதின் மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றென்பது என்று பொருளுரைத்தவர் உரையாசிரியர். இவர் கொண்ட பாடம் எழுநூற்றொன்று மென்ப வென்பது. இதன்கண் ஒன்றும் என்பது முற்றுவினை. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுநூற்றொன்பஃ தென்ப என்றே பாடங்கொண்டு முறையே பதின்மூவாயிரத் தெழுநூற் றெட் டெனவும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன் றெனவும் வேறுவே றுரைத்தார். இன்னு மிதற்குப் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண் ணூறென் றுரைத்தாரு முண்டென் றுணர்க. தொண்டுதலையிட்ட பத்துபத் தொன்பது அது குறைந்த எழுநூறு அறுநூற் றெண்பத் தொன்று அஃது ஒன் பஃதுடனுறின் அறுநூற்றுத்தொண்ணூறாதல் காண்க. பத்துக்குறை யெழுநூறு அறுநூற்றுத் தொண்ணூறு தொண்டுதலையிட்ட அறுநூற்றுத் தொண்ணூறு

" மோனை யெதுகை முரணே யளபெடை
யேனைச் செந்தொடை யிரைபே பொழிப்பே
யொரூஉவே யிரட்டை யொன்பதும் பிறவும்
வருவன விரிப்பின் வரம்பில வென்ப"

என்றார் பல்காயனார்.

பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது தொடையாமாறும், அவற்றுண் மிக்கு வருமாறு முபதேச முறைமையா னுறழ்ந்து கொள்க. உபதேசமுறைமையா லுறழுமாறு நான்கு பாவும் பெற்ற ஐம்பத்தொரு நிலத்தவாகி விரிந்த அறுநூற்றிருபத் தைந்தடியும் அவற்றொரோவடி யிருபத்திரண்டு தொடையும் பெறப் பதின்மூவாயிரத் தெழுநூற்றைம்பதாய் வரும். அவற்றுள் ஐம்பத்தொரு நிலமும் களையப்பதின் மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது தொடையாம். அடியிரண்டு இயைந்தவழித் தொடையாமென்பதாகலின் ஐம்பத்தொரு நிலமுங் களையப்பட்டன. என்னை?

" ஆறிரண்டோ டைந்தடியை யைந்நான் கிருதொடையான்
மாறி நிலமைம்பத் தொன்றகற்றத்—தேறு
மொருபதின்மூ வாயிரத்தோ டொன்றான மாகி
வருமெழுநூ றென்னும் வகை"

அறுநூற் றிருபத்தைந்தடியாவன:—ஆசிரியவடி யிருநூற்றறு பத்தொன்றும்; வெண்பாவடி யிருநூற்று முப்பத்திரண்டும்; கலியடி நூற்று முப்பத்திரண்டுமென விவை. என்னை?

---

அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது ஆதல் காண்க. இக்கணக்கிட்டவர் உரையாசிரியர். பத்துக்குறை யெழுநூற்றொன்பஃது அறு நூற்றுத் தொண்ணூற்றொன்பஃது தொண்டுதலையிட்ட அறுநூற்றுத் தொண்ணூற் றொன் பஃது எழுநூற்றெட்டாதல் காண்க. இக் கணக்கிட்டவர் பேராசிரியர். இனி நச்சினார்க்கினியர் பத்துக்குறை யெழுநூற்றொன்பஃது அறு நூற்றுத் தொண்ணூற்றொன்பஃது எனக்கொண்டு அதனைத் தொண்டுதலையிடுதலாவது ஒன்ப தாற் பெருக்கல் என்று கருதி ஒன்பதாற் பெருக்கிய அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது ஆறாயிரத் திருநூற்றுத் தொண்ணூற் றொன்றென்று கொண்டு இதனை ஐயீராயிரத் தாறைந்நூற்றொடு கூட்டித் தொடைவகை பத்தொன்பதி னாயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றொன் றென்றார்.

" இருநூற் றிருமுப்பத் தொன்றகவற் கேனை
யிருநூற்றெ டெண்ணான்கு வெள்ளைக்—கொருநூற்று
முப்பத் திரண்டா முறற்கைக் கிவையறுநூற்
றற்றமி லையந் தடி"

இருபத்திரண்டு தொடையாவன:—

" மோனை யிரண்டா மெதுகையோ ரெட்டாகு
மேனை முரணைந் தியைபொன்று—மேனைப்
பொழிப்பாதி யைந்துங் குறிப்புத் தொடையோ
டிழுக்கா விருபத் திரண்டு"

என விவை.

மோனை யிரண்டாவன, அடிமோனையும், கிளைமோனையு மென விவை.

எதுகை யெட்டாவன, இரண்டாமெழுத் தொன்றியதூஉம், மூன்றா மெழுத்தொன்றியதூஉஞ், சீர்முழுதொன்றியதூஉங், கிளை யெதுகையும், வன்பா லெதுகையும், மென்பா லெதுகையும் இடைப்பா லெதுகையும், உயிர்ப்பா லெதுகையுமென விவை.

முரணைந்தாவன, சொல்லுஞ் சொல்லு முரணுதலும், பொருளும் பொருளு முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லினோடும் பொருளினோடு முரணுத லும் என விவை.

" இயைபுத் தொடைகிளை யின்மையி னென்றே "

பொழிப்பாதி யைந்தாவன, பொழிப்பும், ஒரூஉவும், செந் தொடையும், இரட்டைத் தொடையும், நிரனிறையு மெனவிவை.

குறிப்புத் தொடையாவது, எழுத்தல்லாத மொழிக்குறிப் போசை. அது மாத்திரை குறித் தலகுபெற வைக்கப்படுமென்று வேண்டினமையான் அதனானும் தொடை கொள்ளப்படும்.

இருபத்திரண்டு தொடையாவன:—

"அடிமோனை யேனைக் கிளைமோனை யென்று
முடியுமா மோனைப் பெயர்"

"இரண்டா மெழுத்தொன்றன் மூன்றுவ தொன்றல்
திரண்டமைந்த சீர்முழுது மொன்றல்—முரண்டீர்
கிளைவன்பான் மென்பா லிடைப்பா லுயிர்ப்பால்
விளையு மெதுகையோ ரெட்டு"

"மொழியு மொழியும் பொருளும் பொருளு
மொழியும் பொருளு மொழியோ—டழியாத
சொல்லும் பொருளும் பொருளோடு சொற்பொருளும்
சொல்லும் பொருளுமோ ரைந்து"

"பொழிப்பொரூஉச் செந்தொடை பொய்தீ ரிரட்டை
யழிப்பி னிரனிறையோ டைந்து—மெழுத்தல்
குறிப்புத் தொடை *யிவையுங் கொண்டுரைப்பார்க் கல்லா
னெறிப்படுமோ †நூலி னிலை"

ஐம்பத்தொரு நிலமாவன:—

"வெள்ளை நிலம்பத் தகவல் பதினேழு
துள்ள லிருநான்கு தூங்கல்பத்—தெள்ளா
விருசீ ரடிமுச்சீ ரைந்தாறே ழெண்சீர்
ஒருவா நிலமைம்பத் தொன்று"

இவற்று ளடியுந் தொடையு நிலமு மாமா றுரைத்துக் கொள்க.

வரம்பிலவென்பார் கருத்து, ஈண்டுரைத்த தொடையும் பிறவாற்றாற் பெருகிவருமென்பதும், இவ்வாற்றானும் பிறவாற்றானு முறழப் பெருகுமென்பதும். அவை போக்கி 'நிரனிறை முதலிய பொருள்கோட் பகுதி'யென்னுஞ் சூத்திரத்துட் கூறுதும்.

"இணைகூழை முற்றே டிருகதுவா யுள்ளிட்
டிணையுந் தொடையனைத்துங் கூட்டிக்—கணிதநூல்

* 'இயையும்' எனவும் பாடம்.

† 'தொன்னூனிலை' யென்றும் பாடம்.

வல்லார் தொடைப்பெருமை நோக்கி வரம்பின்மை
*சொல்லார்மற் றதொன்றோ தாம்" (சகூ)

[செந்தொடை ஆமாறு.]

50. செந்தொடை யொவ்வாத் திறத்தன வாகும்.

என்ப தென்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே செந்தொடையா மாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—செந்தொடை யென்பது மேற் சொல்லப் பட்ட தொடையுந், தொடைவிகற்பமும் †போலாது வேறுபடத் தொடுக்குந் திறத்தனவா மென்றவாறு.

"ஒன்றிய தொடையொடும் விகற்பந் தன்னொடு
மொன்றாது கிடப்பது செந்தொடை ‡யாமே."

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

"சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப"

என்றார் தொல்காப்பியனார்.

செந்தொடை யொவ்வாத் திறத்தனவாகு மென்பது நேரசைக்கு நிரையசை வந்தும், நிரையசைக்கு நேரசை வந்தும், நேரசைக்கு நேரசையே வரினும், நான்கு நேரசையுந் தம்முள் ஒவ்வாது வந்தும், நிரையசைக்கு நிரையசையே வரினும், நான்கு நிரையசையுந் தம்முளொவ்வாது வந்தும், இயற்சீருக் குரிச்சீர் வந்தும் உரிச்சீர்க் கியற்சீர் வந்தும், இயற்சீருக் கியற்சீரே வரினும், தம்முளொவ்வாது வந்தும், உரிச்சீருக் குரிச்சீரே வரினும், தம்முள் ஒவ்வாது வந்தும், ஓரடி யொரு வண்ணத்தால் வந்து ஏனையடி மற்றொரு வண்ணத்தால் வந்தும், அசை சீர் இசை யென்னு மூன்றுந் தம்முள் ஒவ்வாது வந்தும், அனுவு மினமு மின்றி முரணுக் கிடப்பது செந்தொடை என்றவாறு. என்னை?

* 'சொல்லாய்ந்தார் சொல்லுந் தொகை' எனவும் பாடம்.

† 'போலாமை வேறுபடத் தொடுப்பதென்றவாறு' எனவும் பாடம்

‡ 'தானே' எனவும் பாடம்.

"அசையினுஞ் சீரினு மிசையினு மெல்லா
மிசையா தாவது செந்தொடை தானே"

என்றார் பல்காயனார்.

"ஒன்றா தாவது செந்தொடைக் கியல்பே"

என்றார் நத்தத்தனார்.

"செம்பகை யில்லா மரபினதாந் தம்மு
ளொன்றா நிலையது செந்தொடை யாகும்"

என்றார் காக்கை பாடினியார்.

"மாறல தொவ்வா மரபின செந்தொடை"
என்றார் அவிநயனார்.

அவற்றை அசைவிரளச் செந்தொடை, சீர்விரளச் செந்தொடை, இசைவிரளச் செந்தொடை, முழுவிரளச் செந்தொடை எனப் பெயரிட்டு வழங்குவாரு முளரெனக் கொள்க. அவற்றுட் சில வருமாறு:—

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

"இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீல
*மூன்புலான் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மலையு
மெல்லம் புலம்ப னெகிழ்ந்தன தோளே"

"சேயிறா முகந்த நுரைபிதிர்ப் படுதிரைப்
பராரைப் புன்னை வாங்குசினைத் தொடுத்த
கானலம் பெருந்துறை நோக்கி யிவளே
நற்றேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன
வம்மா மேனித் தொன்னலஞ் சிதையத்
துஞ்சாக் கண்ண ளலமரு நீயே

* 'கயற்புலான் மறுகில்' என்றும் 'மூன்புலான் மறுகில்' என்றும் பாடம்.

கடவுண் மராத்த முண்மிடை குடம்பைச்
சேவலொடு வதியுஞ் சிறுகரும் பேடை
யின்ன துயவுங் கங்குலு
நும்மூ ருள்ளுவை நோகோ யானே "

எனச் செந்தொடை வந்தவாறு.

பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

[இரட்டைத் தொடையாமாறு.]

51. இரட்டை யடிமுழு தொருசீ ரியற்றே.

என்பது என்னுதலிற்றோவெனின், இரட்டைத்தொடையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—ஓரடி முடியுமளவு மொருசீரே நடப்பது என்றவாறு. என்னை?

" முழுவது மொன்றி னிரட்டை யாகும் "
என்றார் பல்காயனார்.

" சீர்முழு தொன்றி னிரட்டை யாகும் "
என்றார் நத்தத்தனார்.

" ஒருசீ ரடிமுழு தாயி னிரட்டை "
என்றார் அவிநயனார்.

" ஒருசீ ரடிமுழுதும் வருவ திரட்டை "
என்றார் பிறைமுடிக் கறைமிடற்றவர் பெயர்மகிழ்ந்த பேராசிரியர்.*

" அடிமுழு தொருசீர் வரினஃ திரட்டை "
என்றார் பரிமாணனார்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

" ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் †சீரெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம் "

* 'மயேச்சுரர்' என்றும் பாடம்.
† 'சீறெரி' எனவும் பாடம்.

எனவும்,

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவிற் றிருந்த புலவீர்காள்—பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிமிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்தான் குடை"

எனவும்,

"சிறப்பவே சிறப்பவே சிறப்பவே சிறப்பவே
செந்நெறிக் கண்ணும் புகழ்க்கண்ணும் சால்பினும்
மெய்ந்நெறிக் கண்ணும்வாழ் வார்"

எனவும் இரட்டைத்தொடையாமாறு கண்டுகொள்க.

இரட்டையடி முழுதும் ஒரு சீர் நிற்றென்றது ஒருசீரியற்றே என்று மிகுத்துச் சொல்லவேண்டியதென்னை?

"குருத்துக் குறைத்துக் கொணர்ந்து நமது
கருப்புச் செறுக்குப் பரப்பு"

எனவும்,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் *செய்வான் வினை"

எனவும்,

"மாயோன் மார்பி லாரம் போலச்
சேயுயர் நெடுவரைப் பெருந்தே னொழுகு
சார னாட னம்மோ டொருசிறை
சாரிற் சாரா நோயே
சாரா னாயி னெய்தணி வின்றே"

எனவும் இவ்வாறு சொல் வேறுபட்டு அடிமுழுவதும் அலகிடுகையா னொருசீராய் வாினகாது; சொல்வேறுபடாது பொருள் பிறிதாகியு மாகாதும் வருவதே கொள்ளப்படு மென்ப தறிவித்தற்கு வேண்டப் பட்டது.

---

* 'செய்யும் வினை' எனவும் பாடம்.

'இயற்று' என்னாது 'இயற்றே' என்ற ஏகார விதப்பால் ஓரடி முழுதும் ஒருசொல்லே வரத்தொடுப்பது சிறப்புடைத்து. ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது; நாற்சீரடியின் மிக்கு வரப்பெறாது எனக்கொள்க.

> "ஓடையே யோடையே யோடையே யோடையே
> கூடற் பழனத்துங் கொல்லி மலைமேலு
> மாறன் மதகளிற்று வண்பூ நுதன்மேலுங்
> கோடலங் கொல்லைப் புனத்துங் கொடுங்குழாய்
> நாடி யுணர்வார்ப் பெறின்"

இது பொருள் வேறு யொருசொல்லே வந்த விரட்டைத் தொடை.

இன்னும் அவ்வேகாரத்தான் ஓரடி முற்றெதுகையாய், மற்றையடி மற்றொரு முற்றெதுகையாய் வந்தா லதனை யிருமுற்றிரட்டை யென்பர். நிரனிறையினையு மிரட்டைத் தொடைப்பாற்படுத்து வழங்குவ ரொருசா ராசிரிய ரெனவுங் கொள்க.

அவை வருமாறு :—

> "அடியியற் கொடியன மடிபுனம் விடியன்
> மந்தி தந்த முந்து செந்தினை
> யுறுபார்ப் பருத்து நாடனொடு
> சிறிதா லம்ம நம்மிடைத் தொடர்பே"

இஃது இருமுற்றிரட்டை.

> "நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பு
> மொழிந்த வந்தவற் றியலான் முற்றுமென்ப"

என்னும் சூத்திரத்து (தொல்காப்பியனார்) காட்டிய நிரனிறைத் தொடைக்குதாரணம்,

> "*அடல்வேன் மாறேனுக்கி நின்முகங் கண்டே
> யுடலு மிரிந்தொடு மூழ்மலரும் பார்க்குங்

* இச்செய்யுள் தொல்காப்பியம் செய்யுளியல் 91-ஆவது சூத்திரமாகிய 'நிரனிறு......மென்ப' என்பதனுரையில் பேராசிரியர் காட்டியது.

கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்பும்
தடமதிய மாமென்று தான் "

என்பதுங் கொள்க. இவற்றை பொருபொரு ளிரட்டை, பல பொருளிரட்டை, ஒரு முற்றிரட்டை, இருமுற்றிரட்டை என்று பெயரிட்டு வழங்குவாரு முளர் எனக்கொள்க. (ருக)

[அந்தாதித்தொடை யாமாறு]

52. ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென்
றோதினர் மாதோ வுணர்ந்திசி னோரே.

என்பது என்னுதலிற்றோவெனின் அந்தாதித்தொடையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—எழுத்தும், அசையும், சீரும், அடியும் இறுவா யெழுவாயாகத் தொடுப்பது அந்தாதித் தொடையென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

ஈறு முதலாவெனவே எழுத்தும், அசையும், சீரும், அடியும் இவற்றது முதலாகவே யடங்கு மெனக்கொள்க ; என்னை?

" அடியுஞ் சீரு மசையு மெழுத்து
முடிவு முதலாச் செய்யுண் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறியல் வேண்டும் "

எனவும்,

" அசையினுஞ் சீரினு மடிதொறு மிறுதியை
முந்தா விசைப்பினஃ தந்தாதித் தொடையே "

எனவும் பிறருங் கூறினாராகலின். பிறநூன் முடிந்தது தானுடம் படுதலென்னுந் தந்திரவுத்தியா னிவ்வாறுரைக்கப்பட்ட தெனினு மிழுக்காது.

ஈறு முதலாவென்றது இறுதிமுதலாக வென்றவாறு.

வரலாறு:—

" இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்

அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென்செய்த திளவே
என்றாற் போலக் கொள்க. [னில் ”

'ஈறு முதலாத் தொடுப்பதந்தாதி என்ப வுணர்ந்தி சினோரே' யென்னாது, 'ஓதினர் மாதோ' வென்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை? இறுதியடியி னிறுதியும், முதலடியின் முதலு மொன்றாய் வருவனவற்றை மண்டல வந்தாதியென்றும், அவ்வாறு வாராதனவற்றைச் செந்நடை யந்தாதியென்றும், பலவிரவி வருவனவற்றை மயக்கந்தாதியென்றும், எழுத்தசை சீர்களா லிடையிட்டு வருவனவற்றை யிடையிட்டந்தாதியென்றும் * வழங்குவரொரு சாராசிரிய ரென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது. அவர் கூறுமாறு, மண்டல வெழுத்தந்தாதி, செந்நடை யெழுத்தந்தாதி, மண்டல அசையந்தாதி, செந்நடை அசையந்தாதி, மண்டலச் சீரந்தாதி, செந்நடைச் சீரந்தாதி, மண்டல வடியந்தாதி, செந்நடை யடியந்தாதி, மண்டல மயக்கந்தாதி, செந்நடை மயக்கந்தாதி, மண்டல விடையிட்டந்தாதி, செந்நடை யிடையிட்டந்தாதி யெனக்கொள்க.

அவற்றுட் சில வருமாறு:—

“ வேங்கையஞ் சார லோங்கிய மாதவி
விரிமலர்ப் பொதும்பர் மெல்லியன் முகமதி
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே ”

இது மண்டல வெழுத்தந்தாதி.

“ பேதுற விகந்த பெருந்தண் காவிரி
விரிதிரை தந்த வெறிகமழ் சந்தனக்
குழம்பு முலைமிசைத் தடவிய
வியனறுங் கோதைக்கு மெல்லிதா னுசுப்பே ”

இது மண்டல வசையந்தாதி.

“ முந்நீ ரீன்ற வந்நீ ரிப்பி
யிப்பி யீன்ற விலங்குகதிர் நித்தில

* ஈண்டு 'எழுத்தசை சீர்களால் இடையிட்டு வந்த அடியந்தாதியை இடையிட்ட வடியந்தாதி யென்றும்' எனக் கூட்டிச் சில பிரதிகளில் பாடங் காட்டப்பெற்றுள்ளது.

நித்திலம் பயந்த நேர்மணி லெக்கர்
ளக்க ரிட்ட வெறிமீ னுணங்க
லுணங்கல் * கவருஞ் செந்தா ளன்னம்
அன்னங் காக்கு நன்னுதன் மகளிர்
மகளிர் கொய்த மயங்குகொடி யடம்ப
மடம்பி னயலது நெடும்பூந் தாழை
தாழை யயலது வீழ்குலைக் கண்டல்
கண்ட லயலது முண்டகக் கானல்
கான லயலது காமரு நெடுங்கழி
நெடுங்கழி யயலது நெடுங்குடிப் பாக்கம்
பாக்கத் தோளே பூக்கம ழோதி
பூக்கம ழோதியைப் புணர்குவை யாயி
னிடவ குடவ தடவ ஞாழலும்
இணர துணர்புணர் புன்னையுங் கண்டலுங்
கெழீஇய கானலஞ் சேர்ப்பனை இயின்றித்
தீரா நோயொடு நடுங்கி
வாரா ளம்ம வருதுயர் பெரிதே."

த்தொடக்கத்தன செந்நடைச் சீரந்தாதி.

"உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இது மண்டல மயக்கந்தாதி.

"பொன்னலர் துதைந்த பொரிதாள் வேங்கை
வேங்கை யோங்கிய வியன்பெருங் குன்றம்
குன்றத் தயலது கொடிச்சியர் கொய்புனம்
புனத்தயற் சென்ற சிலம்பன்
சிலம்படி மாதர்க்கு நிறைதோற் றனனே"

---

* 'கவரு மொய்தாளன்னம்' எனவும் பாடம்.

இது சீரந்தாதியு மசையந்தாதியும் வந்த செந்நடைமயக்கந்தாதி.

" வேத முதல்வ *வேதமி லகணித
தத்துவர் தலைவ முத்தி முதல்வ
வழுவா ஞானக் குழுவுடன் வந்து
துன்னுப் பாவ மன்னரை யவித்த
தரும நேமிப் பிரமனென வியந்து
துன்னினா ராகி மின்னென மிளிர்ந்த
தகைமுடி சாய்த்துத் தத்துவர் வணங்குவ
வகைமுடி வல்வினை வாடுக வெனவே "

இஃதெழுத்தந்தாதியும், அசையந்தாதியு மயங்கிவந்த மண்டல மயக்கந்தாதி. இதனை யெழுத்தந்தாதியென்று வேண்டுவாரு முளர்.

" ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி பரவுதும் "

இஃதடியந்தாதி.

" இரங்குகுயின் முழவா" என்னும் பாட்டினுள் இடையிட்டடியந்தாதி வந்தது.

" கழிமலர்ந்த காவிக் களிவண்டு பாடக்
†குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளுங்
குழிமலர்ந்த நீலங் குறுமுறுவல் கொள்ளப்
பொழின்மலர்ந்த பூம்புன்னை நுண்டாது சிந்தும் "

இதுவு மிடையிட்டடியந்தாதி. பன்மணி மாலையும், மும்மணிக் கோவையும், உதயணன் கதையும், தேசிகமாலையும் முதலாவுடைய தொடர்நிலைச் செய்யுட்களும் ‡அந்தாதியாய் வந்தவாறு கண்டு கொள்க.

செந்நடை யெழுத்தந்தாதியுஞ், செந்நடை யசையந்தாதியும், மண்டலச் சீரந்தாதியும், மண்டலஇடையிட்டந்தாதியும், செந்நடை யிடையிட்டந்தாதியும் வந்தவழிக் கண்டுகொள்க.

---

* 'வேதமி லணிந்த' எனவும் பாடம்.
† 'குழியலர்ந்த' எனவும் பாடம்.
‡ 'அந்தாதியுமாய்' எனவும் பாடம்.

மோனையாய் வந்தன மோனையந்தாதி, எதுகையாய் வந்தன வெதுகையந்தாதி, முரணாய்வந்தன முரணந்தாதி, இயைபாய் வந்தன இயைபந்தாதி, அளபெடையாய் வந்தன அளபெடையந்தாதி யென இவ்வாற்றால் வந்தவகையாற் பெயர் கொடுத்து வழங்கப்படும்.

வரலாறு:—

"* மேன்மக்கட் கருளும் வியனருங் கலமே
மேலக விசும்பின் விழவொடு வருமே
மேருவரை யன்ன விழுக்குணத் தவமே
மேவதன் றிறநனி மிக்கதென் மனமே"

இது மோனையந்தாதி. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"அந்த முதலாத் தொடுப்ப தந்தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடைநாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே"
(யாப்பருங்கலக் காரிகை.)

"மாவும் புண்மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
வோவிலந்தாதி யுலகுடனொக் மொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே"
(ஷை-உதாரண முதற்குறிப்பு.)

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. (௫௨)

[ஒரு செய்யுளிற் பல தொடையும் பல அடிகளும் வரின்
அவற்றை வழங்குமாறு.]

53. தொடைபல தொடுப்பினுந் தளைபல விரவினும்
முதல்வந் ததனான் மொழிந்திசிற் பெயரே.

என்பதென்னுதலிற்றோ வெனின், ஒரு செய்யுட்கட் பல தொடையும் பல தளையும் வந்தால் அவற்றை வழங்குமா றுணர்த்துதல் நுதலிற்று.

* 'மேன்மக்க ளுள்ளும்' எனவும் பாடம்.

இதன் பொருள்:—ஒரு செய்யுளகத்துத் தொடை பல தொடுத்து வந்தாலும், தளைபல விரவி வந்தாலும் அவற்றை முதல் வந்த தொடையாலும் முதல் வந்த தளையாலும் பெயர்கொடுத்து வழங்குக வென்றவாறு. என்னை ?

" மயங்கிய தொடைமுதல் வந்ததன் பெயரா
மியங்கினுந் தளைவகை யின்னண மாகும் "

என்றார் அவிநயனார்.

" பல்வகைத் தொடையொரு பாவினிற் றொடுப்பிற்
சொல்லிய முதற்றொடை சொல்லினர் கொளலே "

என்றார் சிறு காக்கைபாடினியார்.

" தொடையடி யுட்பல வந்தா லெழுவாய்
யுடைய தனாற்பெய ரோட்டப் படுமே "

என்றார் காக்கைபாடினியார்.

" விகற்பங் கொள்ளா தோசையி னமைதியும்
முதற்க ணடிவயின் முடிவ தாகும "

என்றார் பல்காயனார்.

" முதற்சீர்த் தோற்ற மல்ல தேனை
விகற்பங் கொள்ளா ரடியிறந்து வரினே "

என்றார் நத்தத்தனார்.

அவை வருமாறு :—

" தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றி
னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைக லெய்தின்றா லுலகே. "

இதனுட் பொழிப்பெதுகையும் ஒரூஉவெதுகையும், ஒரூஉமோனையும் பிறிதும் வந்தவாயினும் முதல் வந்ததனாலே பெயர்கொடுத்துப் பொழிப்பெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

இதனுள் அடியெதுகையும், பொழிப்புமோனையும், ஒரூஉவெதுகையும், இணைமுரணும், கடையிணை யெதுகையும், பின்முரணும் வந்தவாயினும் முதல் வந்ததனாற் பெயர் கொடுத்து அடியெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்.

"கடிமலர் புரையுங் காமர் சேவடி
கொடிபுரை நுசுப்பிற் பணைத்தேந் திளமுலை
வளையொடு கெழீஇப வாங்கமை நெடுந்தோள்
வளர்மதி புரையுந் திருநுதலரிவை
சேயரி நாட்டமு மன்றி
கருநெடுங் கூழையு முடையவா லணங்கே"

இதனுள் எதுகையும், மோனையும், முரணு முறையே வந்ததாயினும் முதல் வந்ததனாற் பெயர் கொடுத்து அடியெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்.

"பரவை மாக்கடற் றொகுதிரை வரவும்
பண்டைச் செய்தியி னின்றிவண் வரவும்
பகற்பின் முட்டா திரவினது வரவும்
பசியு மார்கையும் வரவும்
பரியினும் போகா துவப்பினும் வருமே"

இதனுள் மோனையும், இயைபும், முரணும் வந்தவாயினும், முதல் வந்ததனாற் பெயர்கொடுத்து அடிமோனைச் செய்யுளென்று வழங்கப்படும் பிறவெனின், அற்றன்று ; முறையானே வேறு வேறு தொடைகளினாற்று வாராது, பலவாய் வந்திறுவா யொத்தமையின் மயக்கியையபு எனக் கொள்க.

"ஓங்குமலை யமன்ற வேங்கை நறுமலரும்
ஊர்கெழு நெய்தல் வார்கெழு மலரும்

பழனத் தாமரை யெழினிற மலரும்
இல்லயற் புறவின் முல்லைவெண் மலரும்
உராஅங் கடற்றிரை விராஅ மலரும்
வேறுபட மிலைச்சிய நாறிருங் குஞ்சி
யேந்தல் பொய்க்குவ னெனவும்
பூந்த ணுண்கண் புலம்பா றுவே''

இதுவும் *மயக்கியைபுத்தொடையென்று வழங்கப்படும். மயக்களபெடைத்தொடையும் வந்தவழிக் கண்டுகொள்க.

"காய்ந்துவிண் டார்நையக் காமரு கூடலிற் கண்சிவந்த
வேந்துகண் டாயென்ன வெள்வளை சோரக் கலைநெகிழப்
போந்துகண் டாரொடும் போந்துகண் டேற்கவன் பொன்முடிமேற்
போந்துகண் டாளென்று போந்ததென் †மாட்டோர்புறனுரையே"

இதனுள் எதுகையு மதற்கேற்ற மோனையும் வந்தனவேனும் முதல் வந்ததனாற் பெயர்கொடுத்து ஆசிடையெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்.

இனித் தளைக்குச் சொல்லுமாறு:—

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டுசிலம் பேறி யோங்கிய விருங்கழைப்
படிதம் பயிற்று மென்ப
மடியாக் ‡கொலைவி லென்னையர் மலையே"

இதனுள் வெண்டளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் வந்தனவேனும் முதல் வந்ததனாற் பெயர் கொடுத்து வெண்டளையால் வந்த ஆசிரியப்பாவென்று வழங்கப்படும்.

"கடுநாக மதனடக்கி நெடுநீர்ப் பொய்கைக்
கடிமலர்வேய்ந் துலகளவும் பரந்து கந்த
நெடுமாலை நறுமுடிமேல் வைத்தி யேனு
நின்னையே போன்யக்க நின்ற ரெல்லாங்

---

* 'வருக்கவியைபுத்தொடை' என்றும் பிரதிபேதம் உண்டு.

† 'மேலோர்' எனவும் பாடம்.

‡ 'கொலைவிலெம்மையர்' எனவும் பாடம்.

கொடுமொலை வினையரக்கர் குறும்பு சாயக்
குளிரிளம்பூம் பிண்டிக்கீ ழமர்ந்த கோமான்
றடிமொற்றந் தலைப்பிரிக்குஞ் சரண மல்லாற்
றலைக்கணியா ளென்றுரைத்த றகவோ வாழி ''

இதனுட் கலித்தளையும், ஆசிரியத்தளையும், வெண்டளையும் வந்த வாயினு முதல் வந்த தளையாற் பெயர் கொடுத்துக், கலித்தளையால் வந்த வாசிரிய விருத்தமென்று வழங்கப்படும். பிறவு மிவ்வாறே பெயர்கொடுத்து வழங்குக.

'தொடையுந் தளையும் பலவிரவி வரின், முதல் வந்ததனுன் மொழிந்திசிற் பெயரே' என்றுலுங் கருதிய பொருள் பயக்கும். 'தொடை பல தொடுப்பினும் தளை பல விரவினும்' என்று மிகுத்துச் சொல்ல வேண்டிய தென்னையெனின், விகற்பமு மினமும் வாராமைத் தொடுத்த மோனை யெதுகை முரண் இயைபு அளபெடைகளைச் செம்மோனை, செவ்வெதுகை, செம்முரண், செவ்வியைபு, செவ்வளபெடை யென்று வழங்கப்படும் என்பதூஉம்; கடையாகு மோனை, கடையா கெதுகைக்கு மேற்று வந்தால், எதுகைத் தொடையானே பெயரிட்டு வழங்கப்படு மென்பதூஉம்; மோனையு மெதுகையுமாய் வந்து முரணினுன் மோனை முரணென்றும், எதுகை முரணென்றும் பெயரிட்டு வழங்கப்படு மென்பதூஉம்; இணைமோனை முதலாகிய தொடை விகற்பங்களும், கடையிணை மோனை முதலாகிய தொடை விகற்பங்களும் ஓரடியுட் பலவிரவி வந்தால் அவற்றை வரன்முறை யாற் பெயரிட்டு வழங்கப்படு மென்பதூஉம்; வரனடை யில்லாத வழியாதானு மொன்றாற் பெயர்கொடுத்து வழங்கப்படு மென்பாரும், விகற்ப மயக்க மென்பாரு மென இருதிறத்தராசிரிய ரென்பதூஉம்; ஓரடியுண் முதற்குறில் விட்டிசைத்து மற்றை யடியுண் முதற்கட் குற்றெழுத்து வல்லொற்றடுத்து வந்தால் அதனை விட்டிசை வல்லொற் றெதுகை யென்று வழங்குவா ரொருசா ராசிரிய ரென்பதூஉம்; இயைபுத்தொடைச் செய்யுளீற் றடியிறுதி யெழுத்தொன்று மிரண்டு மிகினும் இழுக்கா தென்பதூஉம்; இரட்டைத்தொடை இறுதிக்கண் ஓரெழுத்துக் குறையினும் இழுக்கா தென்பதூஉம்; செய்யுளந்தாதி தொடக்கி னீற்றெழுத்தானுஞ் சொல்லானு மிடையிட்டேறத் தொடுப்பினு மிழுக்கா தென்பதூஉம், வேற்றினமும்

வழியெதுகையும் முதலிய வந்து முன் சொல்லப்பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாமைத் தொடுத்து வருவனவற்றைச் செந்தொடை மருளென்றும், மருட் செந்தொடையென்றும் வேண்டுவ ரொருசா ராசிரிய ரென்பதூஉம் ; மகார வகாரங்களருகி யெதுகையாய் வரினு மிழுக்காதென்பதூஉம் அறிவித்தற்கு வேண்டப் பட்டது : விதப்புக்கிளவி வேண்டியது விளக்குமாகலின்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

“ சிலம்படி மாதர் நன்னலங் குறித்துச்
சிலம்பதர் நள்ளென் கங்குற்
சிலம்ப நீ வருத றகுவதோ வன்றே ”

இஃது இனவெழுத்து விகற்பமும் வரத் தொடுத்திலாமையிற் செம்மோனை.

“ கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும் ”

“ வண்டுபடக் குவளைப்பிணை நக்கலர்
விண்டநறப்பரு கிக்கிளி யின்மதர்
கொண்டு நடைக்களி யன்ன மிரைப்பதோர்
மண்டு புனற்புரி சைப்பதி சார்ந்தார் ”

எனவிவை இனமுதலாயின வரத்தொடுத்திலாமையிற் செவ்வெதுகை.

“ கருங்கட லுடுத்த மல்லன் ஞாலத்து
செம்மையின் வழாது கொடைக்கடன் பூண்டு
வாழ்வது பொருந்தா தாகிற்
சாவது மினிதவர் வீவது முறுமே ”

இது செம்முரண்.

“ துப்புறழ் செவ்வாய்க் கிளவியு மணங்கே
கருங்கண் வெம்முலைத் தொய்யிலு மணங்கே
வாணுதற் றிலகமு மணங்கே
சிலம்படி மாதர் நாட்டமு மணங்கே”

இஃது இனமுதலாயின வரத் தொடுத்திலாமையாற் செவ்வியைபு.

" தாஅ மரைமே லுறையுந் திருமகள்
போலு மாத ரிவள் "

இது செவ்வள பெடை.

" நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர் "

" கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு "

என விவற்றுள் முதலாவது வருக்கமோனைக்கும், மெல்லின வெதுகைக்கும் ஒத்து வந்ததாயினும், இரண்டாவது எதுகைக்கும், இனமோனைக்கு மொத்து வந்ததாயினு மெதுகை யென்று வழங்கப் படும்.

" சொல்லுப சொல்லப் பெறுபவோ யாதொன்றும்
சொல்லாது சொல்லப் பெறு "

இது மோனையாய் வந்து முரணினமையான் மோனை முரண்.

" இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண் "

" அறத்துக்கே யன்புசால் பென்ப வறியார்
மறத்துக்கு மஃதே துணை "

இவை யெதுகையாய் வந்து முரணினமையா னெதுகைமுரண்.

" மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனர் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே"

இது கடையிணை முரணென்று காட்டப்பட்ட செய்யுள். 'தண்ணந் துறைவ'னென்னு மடியுள் மேற்கதுவாய் மோனையும், கடையிணை

முரணும் வந்தனவாயினு மவற்றையடியின் வரனடை முறையான் அதனையும் கடையிணை முரணென்று வழங்கப்படும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்" என்னும் பாட்டினுட் சிறுகோட்டுப் பெரும்பழ மென்னு மடியினு ளிணை முரணும் கடையிணை யெதுகையும் வந்தவாயினும் யாதானு மொன்றினாற் பெயர் கொடுத்து இணைமுரணென்றானுங் கடையிணை யெதுகை யென்றானும் வழங்கப்படும். ஏனையடி யொரூஉத் தொடையாகிய வரனடையில்லாமையா லதனை மயக்கமெனினு மிழுக்காது.

"பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
கொாலைய னின்னுட்டை நீ"

"அறி உண்ணிருலுக் கென்னு மைந்தொழித் தல்லாத
வொற்றொலி நீண்டிசை வண்ணமென் றோதுவ தோத்தாமோ
கச்சடதப்ப விந்நா லயனுன்குங் கருதாதே
முத்தொடு கோத்த முழாத்தலை வைப்பது முண்டன்றே"

இவற்றுண் முதற்குறில் விட்டிசைத்து வல்லொற்றடுத்தாற் போன்றல்லாத வடி முதற்கட் குற்றெழுத்து வல்லொற் றடுத்து வந்தமையால் விட்டிசை வல்லொற்றெதுகை.

"மாயோள் கூந்தற் குரலு நல்ல
கூந்தல் வேய்ந்த மலரு நல்ல
மலரே ருண்கணு நல்ல
பலர்புக ழோதியு நனிநல் லவ்வே"

"பூந்தண் பொழிலிடை வாரணந் துஞ்சும்
பூங்கண் ணன்னை யில்லிடைத் துஞ்சும்
பூங்கொடிப் புனத்தயற் குறவர் துஞ்சுவர்
பூசலிக் களவென யாந்துஞ் சலமே"

என இயைபுத்தொடைச் செய்யுளென்று சொல்லப்பட்டனவற் றுள் ஈற்றடி யொன்று மிரண்டு மெழுத்து மிக்கவாறு கண்டுகொள்க.

"ஒக்குமே யொக்குமே" என்னு மிரட்டைத் தொடையினீற் றுச்சீரெழுத்தொன்று குறைந்துவந்தது.

இறுதி குறைந்துவரு மொருபொருளிரட்டையைக் குறையீற் றொருபொருளிரட்டை யென்றும், குறையாததனை நிறையீற் றொருபொருளிரட்டை யென்றும், இறுதி குறைந்த பலபொருளிரட்டையைக் குறையீற்றுப் பலபொருளிரட்டை யென்றும், குறையாததனை நிறையீற்றுப் பலபொருளிரட்டை யென்றும் பெயரிட்டு வழங்குவாரு முளர். குறையீற்றுப் பல பொருளிரட்டையும், நிறையீற்றுப் பலபொருளிரட்டையும் வந்தவழிக் கண்டு கொள்க.

இறுதி யெழுத்துஞ் சொல்லு மிடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம் உதயணன்கதையும், கலியாணகதையும், பன்மணி மாலையும், மும்மணிக் கோவையு மென்னுமவற்றுட் கண்டு கொள்க.

" அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

என்பது இனவெழுத்து முதலாயின பெற்று முன் சொல்லப் பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாமை தொடுத்தமையிற் செந்தொடை மருள் எனக் கொள்க.

" தொடிநெகிழ்ந் தனவே கண்பசந் தனவே
யான்சென் றுரைப்பின் மானமின் றெவனோ
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளி பொதுளிய பல்குர னெடுவெதிர்
பொங்குவர லிளமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்று கிழவோற்கே"

இது பொழிப்பியையும் இடைப்புண ரெதுகையும் வந்து இனமின்றித் தொடுத்தமையாற் செந்தொடை மருள் என்றும், மருட் செந்தொடையென்றும் வழங்குப. இதனைச் செந்தொடையே யென்று வழங்கினார் செய்யுளியலுடையார் எனக் கொள்க.

" தாமரை புரையுங் காமர் சேவடி" என்னும் பாட்டினு ளீற்றடி யிரண்டு மகார வகாரங்க ளெதுகையாய் வந்தன.

" அமரீர் சுரரீ ரழுனு கரையீர்
எமரீர் பிறரீ ரெறிவே லொருவ

ணமரீர *பகவீர் தகவோ தகவென்
றவரூர் திரைபாய்ந் துறையா தொழிதல்''

இதுவுமது. இதனை மூன்று மெழுத்தொன் றெதுகை யென்பாருமுளர்.

இன வெழுத்தாமாறு சொல்லுதும்: அகரம், ஆகாரம், ஐகாரம், ஔகாரம் இவை தம்முளினமாம். †இகரம், ஈகாரம், எகரம், ஏகாரம் இவை தம்முளினமாம். உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முளினமாம். இவ்வாறே இவ்வுயிர்மெய்க்கு மொட்டிக் கொள்க. ஒற்றுக்களுள் சகர தகரமு மினமாம். ஞகார நகாரமு மினமாம். மகார வகாரமு மினமாம். இவற்றை அனுவென்று வழங்குவாரு முளர்.

" அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகார மேஏ—உகரமோ
டூகார மொஓ ஞநம வதசக்கா
மாகாத வல்ல வனு''

இதனை விரித்துரைத்துக் கொள்க.

அ ஆ ஐ ஔ வென்றிவை யெழுத்து
இ ஈ எ ஏ யென்றிவை யெழுத்து
உ ஊ ஒ ஓ வென்றிவை யெழுத்து
தசமவ ஞநவெனு மென்றிவை யெழுத்து
மூந்நா லுயிரு மூவிரு மெய்யுந்
தம்முண் மயங்கினுந் தவறின் றென்ப.

என்றினமாமா றெடுத்தோதினார் நல்லாறனார் எனக் கொள்க.

இனி அவற்றுக்குச் செய்யுள் வருமாறு:—

" அருந்தவர்கட் காதியா மைய நீக்கி
ஔவியந்தீர்ந் தவிரொளிசே ராக்கை யெய்தி
யிருந்திரட்கை யினமருப்பின் யானை யூர்தி
யீரைஞ்ஞூ றெழிலுட்டத் திமையோ னேத்த

* 'அயலீர்' எனவும் பாடம்.

†'இகர ஈகார எகர ஏகாரங்களும் யா என்பதும் தம்முளினமாம்' எனவும் பாடம்.

வொருங்குலகி னூற்கற்ற வோத முந்நீ
றொளிவளர வறம்பகர்ந்த வுரவோன் பாதம்
கருங்கயற்கட் காரிகையார் காத னீக்கிக்
கைதொழுதாற் கையகலுங் கவ்வை தானே"

"வண்டிவரு மலர்வெட்சி மாலை மார்பன்
மால்வேண்ட மண்ணளித்த மலிதோள் வள்ளல்
குண்டிவருந் தண்படப்பை குராழன் மூதூர்
நரபதிக்கு வான்கொடுத்த நகைவே னந்தி
தண்டிவருந் தடவரைத்தோட் சயந்தன் வாடச்
சதுமுகனைச் சயஞ்செய்த சங்க பாலன்
தெண்டிரைவாய்த் திருமகளோ டமிர்தங் கொண்டான்
சீர்பரவச் சென்றகலுஞ் செல்ல றானே"

என இனவெழுத்து வந்தவாறு கண்டுகொள்க.

"மாகந்திவண்டு-கடிமாண கரத்து நாமம்" என்னும் பாட்டின் மூன்றுமடியும், "மாயாத தொல்லிசைச் சாகரதத்த னென்பான்" என்னும் பாட்டினு ணடிவிரண்டடியு மினவெழுத்து வந்திலாமையிற் பிறவெனின் "அருகி யினவெழுத் தணையா வாயினும், வரைவில வென்ப வயங்கியோரே" என்பதாகலி னமையும்.

இனி வழியெதுகை யாமாறு:—

"கொங்குதங்கு.........சித்திதானே"

எனவும்,

"மண்டிலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் றெண்டியின் வாய்க்
கண்டலவந் தண்டுறைக் கண்ட தொன்றுண்டு கனமகரக்
குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொண்டோர் [திங்கள்
மண்டலம் வண்டலம்பக் கொண்ட ருழு வருகின்றதே"

எனவும் கொள்க.

அநுப்பிராசமென்பது வடமொழி. அநு வென்பதும் வழியெதுகை யென்பதும் தமிழ் வழக்கு. வழி முரண் வருவனவற்றை முரணென்று வழங்குவ ரொருசாராசிரியர்.

வரலாறு:—

"செய்யவாய்ப் பசும்பொ னோலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்கு லேவை வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணென் னீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான்"

எனவும்,

"ஒருமால் வரைநின் றிருசுட ரோடிமுந் நீர்க்கிடந்த
பெருமா நிலனுஞ் சிறுவிலைத் தாயுண்டு பேதையர்கண்
பொருமா தவித்தொங்கலெங்கோன் பொரவல்லவன் பொதியிற்
கருமாநிறவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக்கே"

எனவுங் கொள்க.

வல்லியனடை மெல்லியனடை இடையியனடையானு மெடுத்துக்கொண்ட நடையின் வழுவாது வரத்தொடுத்துச் செய்யுண் முடிப்பது சிறப்புடைத்து. வல்லியனடையாவது வல்லெழுத்துமிகத் தொடுப்பது; மெல்லியனடை யாவது மெல்லெழுத்து மிகத்தொடுப்பது; இடையியனடையாவது இடையெழுத்து மிகத்தொடுப்பது.

பிறவும் வல்லார்வாய்க் கேட்டுணர்க.*

"எழுத்து மொழிபொருளென் றெண்ணிய மூன்றின்
வழுக்கின் முறைமை வகையா—லிழுக்கி
லடியோ டடியியைந்து மந்தரித்தும் வந்தாற்
றொடையென்பர் தொன்னூ லவர்"

"தொடையுந் தொடைவிகற்புந் தொல்புலவோர் சொற்ற
நடையின் வழுவாமை நாடிக்—கடல்பயந்த
சீரார் †திருவிசுஞ் செய்யுட் ‡கெழுவாயு
மாராயத் தீரு மரில்."

உறுப்பியலோத்து முற்றியது.

---

* 'கேட்டுக்கொள்க' எனவும் பாடம்.

† 'திருவிலத்து' எனவும் பாடம்.

‡ 'கெழுகாண்ட' மெனவும் பாடம்.

# செய்யுளியல்

[செய்யுட்களின் வகையாமாறு.]

54. செய்யுட் டாமே மெய்பெற விரிப்பின்
பாவே பாவின மெனவிரண் டாகும்.

இவ்வோத் தென்ன பெயர்த்தோவெனின் தொடையினு னும் அடியினுனுஞ் செய்யுளாமா றுணர்த்திற்றுகலான் செய்யுளோத் தென்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுள் இச்சூத்திர மென்னுதலிற்றோவெனின் செய் யுட்களது பெயர் வேறுபாடும், அவற்றதெண்ணும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :—செய்யுளெனப்படுவனதாம் பொருள்பெற விரிக்குங்காற் பாவும் பாவினமுமென் றிரண்டு திறத்தனவா மென்ற வாறு.

தாமென்பது செய்யுட்களைச் சிறப்பித்தற்குச் சொல்லப்பட் டது. *தேவர்தாமே தின்னினும் வேம்பு கைக்கும் என்றாற்போ லக் கொள்க. அவ்வாறு சிறப்பிக்கவே, சொற் பொரு ளுணர்வு வண்ணங்கடொடர்ந்து குற்றமின்றி யவை †தத்தமுட்டமூவுங் கோளு டையவா யின்பம் பெருக்கி அம்மை முதலாயின வனப்பலங்கார மும், செம்மையும், செறிவும், பெறுவுழிப்பெற்று இம்மை மறு மைக்கு நன்மை பயந்து எல்லார்க்கும் ‡புலனுற நடைபெறுவது யாப்பு, பாட்டு, செய்யுளென்று சொல்லப்படுவதாயிற்று. எனவே செய்யுளென்னும் பெயர்பெற்றும் ஓசைப்பொலிவு முதலாகிய வுறுப்பொடு புணர்ந்து உரையு நூலும் வசையும் மந்திரமும் முது

---

* "கைக்குமாந்தேவரே தின்னினும் வேம்பு" என்பது நாலடி—112.

† 'தத்தமுள் தழூஉங் கோளுடையவாய்' எனவும் பாடம்.

‡ 'புலனாய்' எனவும் பாடம்.

சொல்லும் பிசியுமாகிய செய்யுளல்ல ஈண்டு வேண்டப்படுஞ் செய்யுளென்பதூஉம் சொல்லப்படுமெனக் கொள்க.

'மெய்பெற' என்று மிகுத்துச் சொல்லியவதனால் செய்யுட்கள் இடத்தினானும், தொழிலினானும், பொழுதினானும், பிறவாற்றானும் பெயர் பெற்று நடப்பனவும் உளவெனக் கொள்க.

அறம் பொரு ளின்பம் வீடென விவற்றைப் பாவிநடத்தலிற் பாவென்பதூஉங் காரணக்குறி. ஒருபுடையாற் பாவினோடொத்த இனத்தவாய் நடத்தலிற் பாவின மென்பதூஉங் காரணக்குறி. இவற்றை யிடுகுறி யெனினு மிழுக்காது. (க)

[பாக்களின் பெயர்வேறுபா டாமாறு.]

55. வெண்பா வாசிரியங் கலியே வஞ்சி யெனப்
பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்.

இஃதென்னுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே பாக்களது பெயர்வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :—வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும், வஞ்சிப்பாவு மெனத் தத்தந் தன்மையாற் றெரிந்து சொல்லப்பட்ட பா நான்கு வகைப்படும் என்றவாறு.

ஏகாரம் எண்ணேகாரம். கலியேயென்ற வழியதால் ஏகாரம் ஒழிந்தவழியில்லையால் அஃதியாங்ஙன மெண்ணுமோ வெனினும், ஒருவழி நின்றேயு மொழிந்தவற்றைக் கொள்ளுமோ வெனினும், கொள்ளும். என்னை?

"எண்ணே கார மிடையிட்டுக் கொளினும்
எண்ணுக் குறித்தியலு மென்மனார் புலவர்" (தொல்-சொல்-இடை-40.)

* என்றாராகலின். நான்கென்ற தென்னை? அவ்வெண்ணேகாரத்தா லெண்ணப்பட்ட நான்குமென்பது பெறலாமன்றோ வெனின், ஆம்; ஆயினுமது நூனடையெனக் கொள்க.

"கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே" (தொல்-சொல்-இடை-4.)

---

* 'என்பது இலக்கணை மாகலின்' எனவும் பாடம்.

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே" (இறையனார்-35.)

எனப் பிறரும் சொன்னா ராகலின்.

வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியெனப் பா நான்காகு மென்றது, 'பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட தென்னை யெனின், வெண்பாமுதல்வந்து ஆசிரிய மா யிறுவன சிறப்பின்மையான் மருட்பாவென்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது. என்னை?

"வெள்ளை முதலா வாசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்"

என்றாராகலின்.

அவ்வாறு வருவனதாம் புறநிலைவாழ்த்தும், வாயுறைவாழ்த்தும், செவியறிவுறாஉவுமென விவை. என்னை?

"புறநிலை வாயுறை செவியறி வுறாஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின மென்ப" (தொல்-பொ-செ-162.)

என்றாராகலின்.

அவை வருமாறு:—

"தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரிய முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப—வென்றுந்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே"

இது *'வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப், பழிதீர்செல்வமோ' டொருகாலைக் கொருகாற் சிறந்துபொலிவாயென்றமையாற் புறநிலை வாழ்த்து மருட்பா.

---

* "வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே" (தொ-பொ-செய்-110.)

" பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றச் சுடர்மணித்தே ரூர்ந்து
சிலமுறையி னுண்ட சிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
விலங்கு மெறிபடையு மாற்றலு *மாண்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனே டிவ்வாறி னுலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
வினைத்தாத னீயிருங் காண்டீர் வினைத்தகக்
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே."

இது மெய்ப்பொருள் சொன்னமையான் வாயுறைவாழ்த்து மருட்பா; என்னை?

" வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே" (தொல்-பொ-செ-112.)

என்றாராகலின்.

" பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுக் காற்றிப் பகைஞ
ரடுகளம் வேட்டோன் மருக வடுதிற
லாளி சிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்று
மீர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
யுடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழுவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
† படைத்த வரும்பொரு ளாறன்றி வெளவ
லினத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று

---

* 'அன்பும்' எனவும் பாடம்.
† 'அடைத்த' எனவும் பாடம்.

பெருங்குழிசி மன்றமறுக வகழாதி யென்று
மறப்புற மாக மதுரையா ரோம்பு
மறப்புற மாசைப் படேற்க வரத்தா
னவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துவிற் சேர்ந்தாரை யாக்குதிநீ
யற்ற மறிந்த வறிவினாய் மற்று
மிவையிவை * வீயா தொழுகி † னிலையாப்
பொருகட லாடை நிலமக
ளொருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே"

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கட னென் றரசற்குரைத்தமையாற் செவியறிவுறாஉ மருட்பா எனப் படும்; என்னை ?

"செவியுறை தானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்ப
ணவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே" (தொல்-பொ-செ-114.)

என்றாராகலின்.

இவை யிவ்வாறேயன்றி வெண்பாவேயாயும், ஆசிரியமேயா யும் வரப்பெறும். கலியும் வஞ்சியுமாய் வரப்பெறா. என்னை ?

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ" (தொல்-பொ-செ-110.)
"வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூவென் றவையு மன்ன" (தொல்-பொ-செ-111.)

என்றாராகலின். கைக்கிளையும் வெண்பா முதலாக வாசிரிய வியலா னிறும். என்னை ?

"கைக்கிளை தானே வெண்பா வாகி
யாசிரிய வியலான் முடியவும் பெறுமே" (தொல்-பொ-செ-119.)

என்றாராகலின்.

---

* 'நீயா' தெனவும் பாடம்.

† 'நிலைய' எனவும் பாடம்.

அவை வருமாறு:—

" திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடு
மிருவிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே." (புறப்பொருள்-வெண்பாமாலை-கைக்கிளை-3.)

எனவும்,

" கிழன்மணி யின்றிமைக்கு நீளார மார்பின்
அழன் மணி நாகத் தணையான்—சுழன்மணிசூழ்
பொன்னகரம் போக்கிய பூம்பனிச்சை நன்னீ
ரிளந்தளிர் மாவனுக்கு மேனி விளங்கு
நளிமலர் *நன்னுத லரிவை
†யளிமற் றிஃதோ வகலுமென் னுயிரே "

எனவுங் கொள்க.

கைக்கிளையும் வெண்பா முதலாய் ஆசிரியம் ஈறாய் வருகின்றுழி ஆசிரியவடி இரண்டேயாய், அவற்றுளீற்றடி நாற்சீரா யீற்றயலடி முச்சீரானே வருவதெனக் கொள்க. என்னை?

" இருதலைக் காம மன்றிக் கைக்கிளை
யொருதலைக் காம மாகக் கூறிய
விலக்கண மரபி னியல்புற நாடி
யதர்ப்பட மொழிந்தனர் புலவ ரதுவே
பெறுதி வெண்பா வுரித்தாய் மற்றத
னிறுதி யெழுசீ ராசிரி யம்மே"
" வெண்பா வாசிரி யத்தாய் மற்றதன்
இறுதி யெழுசீ ராசிரி யம்மே"
" கைக்கிளை மருட்பா வாகி வருகா
லாசிரியம் வருவ தாயின் மேவா
முச்சீ ரொருத்திற் றாகி முடியடி
யெச்சீ ராணு மேகாரத் திறுமே"

இது கடியநன்னியார் செய்த கைக்கிளைச் சூத்திரம்.

---

* 'நறுநுதல்' எனவும் பாடம்.
† 'அளிமதி யிஃதோ' எனவும் பாடம்.

"புறநிலை வாயுறை *செவியறி வுறாஉவே
†யறநிலை வஞ்சியுங் கலியு மாகா
வெண்பா வாசிரிய வியலான் வருமே
வஞ்சி கலியவற் றியலா வவற்று
ளிடையிரு செய்யுளும் கைக்கிளைப் பாட்டுங்
கடையெழு சீரிரண் டகவியும் வருமே"

என்றார் ‡நல்லாதனார்.

"வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போ
லாதிசால் பாவு மரசர் வியன்பாவு
மோதியவா றென்ற மருட்பாவா யோங்கிற்றே"
"கங்கா யமுனைச் சங்கமம் போலவுஞ்
சங்கர நாரணர் சட்டகம் போலவும்
வெண்பாவு மாசிரி யமுமாய் விராஅய்ப்
பண்பார் புறநிலை........."

இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

கங்கையமுனைகளது சங்கமம்போலவும், சங்கர நாராயணரது சட்டகக் கலவியேபோலவும் வெண்பாவு மாசிரியமுமாய விராய்ப் புறநிலை வாழ்த்து முதலாகிய பொருள்கண்மேல் யாப்புற்று மருட்சியாகப் பாவிரடத்தலின் மருட்பாவென்று வழங்கப்படுமே யென்பாரு முளர்.

இனியொருசாராசிரியர் வெண்பாவடியு மாசிரியவடியு மொத்து வருவனவற்றைச் சமநிலை மருட்பாவென்றும், ஒவ்வாது வருவன வற்றை §வியநிலை மருட்பாவென்றும் பெரியட்டு வழங்குவர்.

அவை கூட்டி வழங்குமாறு: புறநிலை வாழ்த்துச் சமநிலை மருட்பா, புறநிலை வாழ்த்து வியநிலை மருட்பா, வாயுறை வாழ்த்துச் சமநிலை

---

* 'செவியுறை யவையடக்கு' எனவும் பாடம்.
† 'சமமருட்பா' எனவும் பாடம்.
‡ 'நல்லாறனார்' எனவும் பாடம்.
§ 'வியமருட்பா' எனவும் பாடம்.

மருட்பா, வாயுறை வாழ்த்து வியனிலை மருட்பா, செவியறிவுறாஉச் சமனிலை மருட்பா, செவியறிவுறாஉ வியனிலை மருட்பா, கைக்கிளைச் சமனிலை மருட்பா, கைக்கிளை வியனிலைமருட்பா எனக் கொள்க.

வருமாறு:—

"கண்ணுதலான் காப்பக் கடன்மேனி மாலகாப்ப
*வெண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்—பண்ணியனூல்
சென்னியர் புகழுந் தேவன்
மன்னுக நாளு மண்மிசைச் சிறந்தே"

இது புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா.

"தென்றலிடை போழ்ந்து" என்பது புறநிலைவாழ்த்து வியனிலை மருட்பா.

"இல்லாது செல்வ மிலவா ருடம்படைந்தார்
† செல்லா ரொருங்கென்று சிந்தித்து—‡ நல்ல
வருள்ளம் புரிகுவ ராயி
னிருளறு சிவகதி யெய்தலோ வெளிதே"

இது வாயுறைவாழ்த்துச் சமனிலை மருட்பா. "பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்" என்பது வாயுறைவாழ்த்து வியனிலைமருட்பா.

"இருமூன்றி லொன்றுகொண் டேதங் § களைந்து
பெருநீர்மை யார்தொடர்ச்சி பேணி—யிருநிலங்
காப்பா யாகுமதி கடனென
மாப்பெருந் தானை மன்ன ரேறே"

இது செவியறிவுறாஉச் சமனிலை மருட்பா. "பல்யானை மன்னர்" என்பது செவியறிவுறாஉ வியனிலை மருட்பா. "திருநுதல் வேரரும்ப" என்பது கைக்கிளைச் சமனிலை மருட்பா. "நிழன்மணி நின்றிமைக்கும்" என்பது கைக்கிளை வியனிலை மருட்பா.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

---

* 'எண்ணிரு தோளேந்திழையாடான் காப்ப'வென்றும் பாடம்.

† 'செல்வோரொருங்கொன்று' எனவும் பாடம்.

‡ 'நல்லோர்' எனவும் பாடம்.

§ 'கடிந்' தெனவும் பாடம்.

"பண்ணூர் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகையின்றிப்—பண்ணின்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவ
லிசைமருட்கு மில்லை யினம்"

எனக் கொள்க.

'வெண்பா வாசிரியங் கலியே வஞ்சி' என விவற்றை இடு குறியானும் காரணக் குறியானும் வழங்குப. காரணக்குறியான் வழங்குமாறு:—

வெண்பா—வேற்றுவண்ணம் விரவாது தூய்மைபெற்ற வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளும் சிறப்புடைத்து. அவ்வாறே வேற்றுத் தளையும் அடியும் விரவாது தூய்மைபெற்று எல்லாப் பாவி னுள்ளுஞ் சிறப்புடைத்தாதலின் வெள்ளையென்பது காரணக்குறி. திருவேபோலச் சிறப்புடையாளைத் திருவென்றாற்போலக் கொள்க.

ஆசிரியப்பா—சீரினானும் பொருளினானும் ஓசையினானுமாகிய நுண்மையைத் தன்க ணிறுவிற்றாகலானும், புறநிலை வாழ்த்து முத லாகிய பொருள்களை யாசிரியனேபோலக் * கிளக்குமாற்றலானும் ஆசிரியமென்பது காரணக்குறி. ஆசு—சிறிது; நுண்ணிது எனினு மொக்கும்.

கலிப்பா—சீர்பொரு ளிசைகளா லெழுச்சியும், பொலிவும், கடிப்பும் உடைத்தாகலின் கலியென்பதூஉங் காரணக்குறி.

"கலித்தல் கன்றல் கனறல் பம்மல்
எழுச்சியும் பொலிவும் மெய்தும் பெயரே"
"கம்பலை சும்மை யழுங்கல் கலிமுழக்
கென்றிவை யெல்லா மரவப் பெயரே"

எனவுஞ் சொன்னாராகலின்.

வஞ்சிப்பா—குறளுஞ் சிந்தும் அல்லாத வடிகளை யெல்லாம் வஞ் சித்து வருதலானும், வாயுறை, புறநிலை, அவையடக்கியல், செவியறி வுறூஉ என்றிப் பொருள்களை வஞ்சித்து வருதலானும், வஞ்சிக்

* 'கின்றறிவிக்குமாகலானும்' எனவும் பாடம்.

கொடிபோல் சேர்ந்து நிற்றலானும், வஞ்சியென்னுந் திறமே போல வனப்பும் ஏர்பு முடைமையானும் வஞ்சி யென்பது காரணக்குறி.

இவையெல்லா மொருபுடை யொப்பினாற் பெயர்பெற்றன எனக்கொள்க. ஒன்றுக்கொன்று சிறப்புடைமை நோக்கி வஞ்சியென யிம்முறையே பாற்படுத்து வைத்தாரென்க. வெள்ளை யென்றும் பா வென்றும் நின்று வெண்பாவென்று முடிந்தது. வேதியர் அரசர் வணிகர் சூத்திரர் *என்று சாதிமேற் சார்த்தி வழங்குவாருமுளர்.

> " வெண்பா முதலா நால்வகைப் பாவும்
> எஞ்சா †நால்வகை வருணம் போலப்
> பாவினத் தியற்கையு மதனோ ரற்றே "

என்றார் வாய்ப்பியமுடையாராகலின்.

வெண்பாவினை வன்பாவென்றும், ஆசிரியத்தினை மென்பா வென்றும், கலிப்பாவினை முரற்கை யென்றும் வழங்குப.

> " வெண்பா முதலாக வேதிய ராதியா
> மண்பால் வகுத்த வருணமாம்—வெண்பா
> வினங்கட்கு மிவ்வாறே யென்றுரைப்பார் ‡தொன்னூன்
> மனந்திட்பக் கற்றோர் மகிழ்ந்து "

இன்னும், வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சி §யென்று கிடக் கைக்கொருசாராசிரியர் உரைக்குமாறு:—

நாற்சீரடியா னடைபெறுதலும், வேற்றுப்பாவினோ டிருமையும் எல்லாப் பொருண்மேலுஞ் சொல்லப்படுமென் றிவற்றால் ஆசிரியத் தோ டொத்தலும் உயர்ந்தவோசைத்தாகலும், உத்தம சாதியாகலும் வேற்றுத்தளையும் வேற்றடியும் வேற்றுப்பாவும் விரவாமையும் என் னும் அதிகருணமுடைமை நோக்கி வெண்பா ஆசிரியப்பாவின் முன் வைக்கப்பட்டது.

---

* 'என்னுஞ்சாதி' எனவும் பாடம்.
† 'நாற்பால்' எனவும் பாடம்.
‡ 'தென்னூல்' எனவும் பாடம்.
§ 'என்னுங்கிடைக்கைக்' கெனவும் பாடம்.

அளவடியா னடைபெறுதலும், தனது நடையாற் றூனினிதுறு தலும், எல்லாப் பொருள்களையும் தன்கண்ணே யடக்கலும், ஒரு வாத பொருளிற்றுதலும், ஒருபுடையால் வெண்பாவோ டொத்த லும், அகவிய வோசைத் தாகலும், அரசர் குலத்தின தாகலும், வேற்றுத் தளையும் அடியும் விரவி வருதலு மென்னும் வேறுபா டுடைமை நோக்கி வெண்பாவின் பின் வைக்கப்பட்டது ஆசிரியப்பா வெனக் கொள்க.

நேரடியா னிலைபெறுதலும், அயலடியு மயற்றளையும் விரவிவரு தலும், இவ்வாற்றா னாசிரியத்தோ டொத்தலும், அயற்பாவினு லிறு தலும், புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கண்மேற் புகாமையும், வணிகர் குலத்தின தாகலும், துள்ளலோசைத்தாகலு நோக்கி ஆசிரியத்தின்பின் வைக்கப்பட்டது கலிப்பாவெனக்கொள்க.

புறநிலைவாழ்த்து முதலிய பொருள்கண்மேற் புகாமையும், அயற் றளையு மயலடியும் விரவிவருதலும், அயற்பாவினு லிறுதலும் என் றிவற்றாற் கலிப்பாவினோடொத்தலும், நாற்சீரடியால் நடவாமையும், சூத்திர குலத்தினதாகலும், தூங்கலோசைத் தாகலும், அகப் பொருள்கண்மே லருகியன்றி வாராமையு நோக்கிக் கலிப்பாவின் பின் வஞ்சிப்பா வைக்கப்பட்டது.

அல்லதூஉம் எடுத்துக்கொண்ட வினவெழுத்து இரண்டா மடி முதற்கட் பெற்றும், இடையிட்டெதுகை பெற்றும் பெறாதும் வந்தவொருசா ரீரடி வஞ்சிப்பா விரண்டடியை யுடன்கூட்டி யிடைய றாமை யசைத்துச்சரிப்ப வெழுத்து மெதுகையும் பெற்றும் பெறா தும் வந்த வொலித்தொடர்ச்சியால் கலிப்பாவடியாய்க் கைகலத் தலும், அனுவும் அடியெதுகையும் பொழிப்பெதுகையும் பெற்றும் பெறாதும் வந்த கலிப்பா அடியினைக் கண்டித்து இரண்டாக்கிக் காலவிடையீடும் கடைபற்றியது காகூவும்படவுச்சரிப்பத் *துள்ள லோசை வழுவித் †தூங்கலிசை வஞ்சிபாகலு முடைத்தென்று கலி யும் வஞ்சியு மொருங்குவைக்கப்பட்டனவென்ப. அவர் காட்டுமுதா ரணம்:—

* 'துள்ளல் தவிர' எனவும் பாடம்.

† 'தூங்கலோசைத்தாய் வஞ்சித்தலும்' எனவும் பாடம்.

"தாழிரும் பிணர்த்தடக்கைத் தண்கவு ளிழிகடாத்துத்
தாழ்வாகத் தம்பேணுக் கடுஞ்சினத்த களிற்றெருத்தின்"

எனவும்,

"ஓங்குதிரை வியன்பரப்பி னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன்தூங்கு முயர்சிமைய மலைநாறிய வியன்ஞாலத்து"
(பத்துப்-மதுரைக்-1-4.)

எனவுங் கொள்க. பிறவுமன்ன.

"அறமுதலுன் றென்று மகமுதலுன் றென்றுந்
திறனமைந்த செம்மைப் பொருண்மேல்-குறைவின்றிச்
செய்யப் படுதலாற் செய்யுட் செயிர்தீரப்
பையத்தாம் பாவுதலாற் பா"

இதனை விரித்துரைத்துக் கொள்க. (உ)

[பாவினங்களது பெயரும் வழங்கு முறைமையு மாமாறு.]

56. தாழிசை துறையே விருத்த மென்றிவை
பாவினம் பாவொடு பாற்பட் டியலும்.

இஃதென்னுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே பாவி னங்களது பெயர் வேறுபாடு மவற்றை வழங்கு முறைமையு முணர்த் துதல் நுதலிற்று.

இதன்பொருள்:—தாழிசையுந் துறையும் விருத்தமுமென்று இம்மூன்றும் பாவினமெனப்படும். அவை பாவினோடுகூடிப் பெயர் பெற்று நடக்கும் என்றவாறு.

பாவினோடு கூடி வழங்குமாறு:—வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் எனவும்; ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் எனவும்; கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத் தம் எனவும்; வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் எனவும் இவ்வாறு வழங்கப்படும். இவற்றுக்குச் செய்யுள் போக் கித் தந்த இலக்கணச் சூத்திரத்துள்ளே காட்டுதும். பிறரும் பாவினங்கட் கிவ்வாறே சொன்னார். என்னை?

"வெண்பா விருத்தந் துறையொடு தாழிசை
யென்றிம் முறையி னெண்ணிய மும்மையுந்
தத்தம் பெயராற் றழுவும் பெயரே"

என்றார் காக்கைபாடினியார்,

"பாவே தாழிசை துறையே விருத்தமென
நால்வகைப் பாவு நான்முன் காகும்"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"வெண்பாத் தாழிசை வெண்டுறை விருத்தமென்
றிந்நான் *கல்லவு முந்நான் கென்ப"

என்றார் அவிநயனார்.

"ஒத்தா ழிசைதுறை விருத்த மெனப்பெயர்
வைத்தார் பாவின மென்ன வகுத்தே"

என்றார் †திரிபுரமெரித்த விரிசடை நிருத்தர் பேர் மகிழ்ந்த பேராசிரியர்.

ஒருபுடையாற் றத்தம் பாவினோ டொத்தலானும், ஒத்த ‡தாழ்த்தா லிசைத்தலானும், ஒத்தபொருண்மேற் பெரும்பான்மையு மூன்றாய்த் தாழ்ந்திசைத்தலானும், எல்லாவடியானும் ஒத்து நடத்தலானும் தாழிசை யென்பதூஉங் காரணக்குறி.

ஒருபுடையாற் றத்தம் பாவிற்குத் துறைபோன்று நெறிப்பாடுடைத்தாய்க் கிடத்தலானும், எல்லாத் துறைமேலு மினிது நடத்தலானும் துறையென்பதூஉங் காரணக்குறி.

ஒருபுடையாற் றத்தம் பாவினோ டொத்த வொழுக்கத்தானும், எல்லாவடியு மொத்தலானும், புராணமுதலாகிய விருத்த முரைத்தலானும் விருத்த மென்பதூஉங் காரணக்குறி. இது வடமொழித் திரிசொல்லெனக்கொள்க.

இவை யொருபுடை யொப்புமையாற் பெற்ற பெயரெனக் கொள்க. விருத்தம் துறை தாழிசை யென்று காக்கைபாடினியார்

---

* 'அல்ல முந்நான் காகும்' எனவும் பாடம்.

† 'என்றார் மயேச்சுரர்' எனவும் 'என்றார் திரிபுரமெரித்த எரிசடர்க்கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர்' எனவும் பாடம்.

‡ 'தாழிசை யென்பது தானுடைய துள்ளலோசைத்தாம். இது முறைமையிற் பெற்றபெயர். எனவே..............அவ்வாறு தாழ்வுடைய வன்றியும் வருமென்பதூஉங் கொள்க.' என்பது தொல்-பொரு-செய்-130 பேராசிரியர் உரை.

வைத்த முறைமையின் வையாது தாழிசை துறை விருத்தமென்று தம்மதம்பட வைத்ததன்று ; சிறுகாக்கைபாடினியார் முதலாகிய வொருசாராசிரியர் வைத்த முறைமைபற்றி வைத்தாரென்க.

"விருத்தம் வியன்றுறை தாழிசை யென்று
பொருத்து முறைமை மறுத்தல்—விரித்துச்
சிறுகாக்கை பாடினியார் செய்த முறையே
மறுகாக்கை வைத்தார் வகுத்து"

"பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாம்
வண்ண விகற்ப வகைமையாற்—பண்மேற்
றிறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவ
லிசைமருட்கு மில்லை யினம்"

இதனை விரித்துரைத்துக் கொள்க.

[வெண்பாவாமாறு.]

57. செப்பலி சையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகலும் பெறுமே.

இச்சூத்திரமென்னுதலிற்றோவெனின், அதிகாரம் பாரித்த பாக்களுள் நிறுத்த முறையானே வெண்பாவாமாறு பொதுவகையா னுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—'செப்பலிசையன வெண்பா' என்பது, செப்ப லோசையைத் தமக்கோசையாகவுடைய வைந்து வெண்பாவும் என்றவாறு ; 'மற்றவை யந்தடி சிந்தடியாகலும் அவ்வடி அந்தம் அசைச்சீர் ஆகலும் பெறுமே' என்பது அவ்வெண்பாக்க ளீற்றடி முச்சீராகியும், அவ்வீற்றடியினிறுதி அசைச்சீராகியும் சீர்ச்சீராகியும் நிற்கு மென்றவாறு.

'அசைச்சீராகலும் பெறும்' என்ற வும்மையாற் சீர்ச்சீராகலும் பெறுமெனக்கொள்க. 'அந்தடி சிந்தடியாகிய வடி' யென்றது 'ஆகலும்' என்ற வும்மையால், ஆண்டசைச்சீராய் வருகின்றுழி தனிக் குறி னேரசையும் நெடிலுடைய நிரையசையும் வருதல் சிறப்பின்லை. அல்லது சீர்ச்சீராய் வருகின்றுழி ஆண்டியற்சீரன்றி வாரா. அவற் றுள்ளும் நேர்நேராகிய சீரும் நிரைநேராகிய சீருமன்றி வாரா.

அவைதாம் உகர வீறுயன்றி வாரா. அவற்றுட் குற்றியலுகரம் ஈறாய் வருவது சிறப்புடைத்து. முற்றியலுகர மீறாய் வரினும் பெரிய தோர் சிறப்பில்லை. அவைதாம் அருகியன்றிவாரா எனக்கொள்க. அவற்றிற்கு உதாரணம் காசு, பிறப்பு என வரும்; வெண்பாவின் இறுதிச்சீர்க்கு உகரமீறாகிய வியற்சீரல்லது வேறுதாரணங்காட்டி, அலகிட்டு ஓசையூட்டும்பொழுது பிறவாய்பாட்டா னோசையூட்ட லாகாதாகலின் எனக்கொள்க. அவ்வா றோசையூட்டுமாறு:—

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு" (குறள்-99-4.)

என்பதனை யலகிட்டு முறையானே 'தேமா, கருவிளம், தேமா, புளி மாங்காய்—தேமா, கருவிளம், காசு' எனவும்,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" (குறள்-1-1.)

என்பதனை யலகிட்டு முறையே 'புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா—புளிமா, புளிமா, பிறப்பு' எனவும் ஓசையுண்டவாறு கண்டு கொள்க.

அசைச்சீர்க்குதாரணம் நாள், மலர் எனவரும். அவ்வாற்றா லோசை யூட்டுமாறு:—

"இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள்-62-5.)

என்பதனை யலகிட்டு, 'தேமா, புளிமா, கருவிளங்காய், தேமாங்காய்—தேமா, புளிமாங்காய், நாள்' எனவும்,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை" (குறள்-76-8.)

என்பதனை யலகிட்டு, 'தேமாங்காய், தேமாங்காய், தேமாங்காய், தேமாங்காய்—தேமாங்காய், தேமா, மலர்' எனவும் வெண்பாவோர சைச்சீரிறுதி ஓசையுண்டவாறு கண்டுகொள்க. இவ்வாறு பிறவெண் பாக்களையும் ஓசையூட்டிச் செப்பலோசை வழுவாமற் கண்டுகொள்க.

'செப்பலிசையன வெண்பாவவை—அந்தடி சிந்தடி யாகலு மவ் வடி அந்த மசைச்சீ ராகலும் பெறுமே' என்றது மற்றென்று மிகுத்

துச் சொல்லியதென்னை? ஏந்திசைச் செப்பலும், தூங்கிசைச் செப்பலும், ஒழுகிசைச் செப்பலுமென மூன்று வகைப்படுஞ் செப்பலோசை யென்பதறிவித்தற்கு ஒரு தோற்ற முணர்த்தியதாம். பிறரும் வெண்பாவிற்கு ஓசையு மீறு மிவ்வாறே கூறினார். என்னை

"ஏந்திசைச் செப்பலுந் தூங்கிசைச் செப்பலு
மொழுகிசைச் செப்பலு மூன்றும் வெண்பா
செப்ப லோசை வெண்பா வாகும்"

என்பது சங்கயாப்பு.

"அகவ லென்ப தாசிரி யம்மே" (தொல்-பொரு-செய-81.)

"அஃதான் றென்ப வெண்பா யாப்பே" (தொல்-பொரு-செய்-82.)

என்றார் தொல்காப்பியனார்.

"சிறந்துயர் செப்ப லிசையன வாகி
யறைந்த வுறுப்பி னகற லின்றி
விளங்கக் கிடப்பது வெண்பா வாகும்"

என ஓசை கூறி,

"சிந்தடி யானே யிறுதலு மவ்வடி
அந்த மசைச்சீர் வருதலும் யாப்புற
வந்தது வெள்ளை வழக்கிய லானே"

என் றிறுசொன்னார் காக்கைபாடினியார்.

"ஏந்திசைச் செப்ப லிசையன வாகி
வேண்டிய வுறுப்பின *வெண்பா யாப்பே"

என் றோசை கூறி,

"முச்சீ ரடியா னிறுதலு நேர்நிரை
யச்சீ ரியல்பி னசையி னிறுதியாம்"

என் றிறுசொன்னார் அவிநயனார்.

* 'வெண்பா வாகும்' எனவும் பாடம்.

* "வெண்பாவகவல்.........நறுநுதலே" எனவும் †"நேரிசை யின்னிசை...........தேறுகவே" எனவும் இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

"மாவாழ் புலிவாழ் சுரமுன வாக மணியிறுவா
யோவா தளபெடுத் **தூஉவுங் கெழூஉவு முதாரணமா
நாவார் பெரும்புகழ் நற்றத்தர் யாப்பி னடந்ததுபோற்
றேய்வா முகரம்வந் தாலியற் சீர்க்குச் செப்பியதே."

இதன்கருத்து: மாவாழ்சுரம் புலிவாழ்சுரம் என்னும் இரண்டு வஞ்சியுரிச்சீரும் உளவாக வைத்து, ஒருபயனோக்கித் தூஉமணி கெழூஉமணி யென்றளபெடையாக நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீர் எடுத்துக்காட்டினார் நற்றத்தனாரும் வாய்ப்பியனாரும்; அதுபோல இந் நூலுடையாரும் வெண்பாவிறுதிச் சீருக்கு வேறுதாரண வாய்பாட்டா லோசையூட்டுதற் பொருட்டாக்கிக், குற்றியலுகர மீறாகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டானே நேரீற்றியற்சீருக்கு வேறுதாரண மெடுத் தோதினா ரென்க. அஃதேயெனிற் காசு பிறப்பு என்னு மிரண்டு சீருமே கொண்டு தேமா புளிமா வென்னு மிரண்டுசீருங் களை யாமோவென்னின், அற்றன்று; வெண்பாவிறுதி யோசையூட்ட வேண்டிக் காட்டின குற்றியலுகர மீறாகிய நேரீற்றியற்சீர்களைத் தேமா புளிமாவென் றோசையூட்டற் கஞ்சிக் காசு பிறப்பென் றிறுவ தென்று முன்னோர் சொன்னவாறு குற்றியலுகரமோசை சுருங்கி யீற்றின்கண் இனிது நிற்கும்; அல்லாதவழி ஏந்திசைச் செப்ப லோசை பூண்டுநில்லா, தேமா புளிமாவென்னு மிரண்டு நெட்டெழுத்திறுதி யவ்வேந்திசைச் செப்பலோசையைத் தழுவிநிற்பவாகலின், அந்நுட்பவாராய்ச்சி வகையினால் அவையு மோதினாராதலின், கூறியது கூறினுங் குற்றமாகாது. என்னை?

---

"* வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல்சென் றோங்குதுள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே." (யாப்பருங்கலக்காரிகை.)

"† நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொன்றிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே."
(யாப்பருங்கலக்காரிகை.)

** ஈண்டு அளபெடைகள் அலகுபெற்றில.

"கூறியது கூறினுங் குற்ற மில்லை
வேறொரு பொருளை *விளக்கு மாயின்"

என்பவாகலின். என்னை?

காசு பிறப்புமே காட்டாது தேமாவு
மாசில் புளிமாவு மாயுரைத்தல்—ஓசைமேற்
றேறித்தாஞ் செப்ப றெளிவிப்பா னன்றாகிக்
கூறிற்றே கூறார் கொணர்ந்து.

என்பதனை விரித்துரைத்துக் கொள்க. என்னை?

"வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
யேந்திசைச் செப்ப லென்மனார் புலவர்"

"இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்"

"வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்"

என்றார் சங்கயாப்புடையார்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு :—

"மந்தரமு மாகடலு மண்ணுலகும் விண்ணுலகும்
அந்தரமு மெல்லா மளப்பரிதே—யிந்திரர்கள்
பொன்சகள வாகனமாப் போர்த்து மணிகுயின்ற
வின்சகள வாசனத்தா னீடு"

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" (குறள்-140-7.)

இன்னவை பிறவு மேந்திசைச் செப்பலோசை.

"அரக்காம்ப லாறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையனப் பையனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி"

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" (குறள்-113-1.)

* 'விளக்குமாயின்' எனவும் பாடம்.

இன்னவை பிறவும், நக்கீரர் நாலடி நானூற்று வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை. பிறவும் அன்ன.

"திருநந்து பூம்பொய்கை தேர்ந்துண்ணு நாரா
யொருநன் றுரைத்த றவரோ—கருநந்து
முத்துப்பந் தாடு முழங்கருவி நாடற்கென்
பத்தினிமை யல்குற் பசப்பு"

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு" (குறள்-99-4.)

இன்னவை பிறவும், முத்தொள்ளாயிரத்து வண்ணத்தால் வருவனவு மெல்லா மொழுகிசைச் செப்பலோசை.

இவை அம்மூன்றிசைச் செப்பலோசைக்கும் அவிநயனார் காட்டிய பாட்டு.

இவை யீற்றடி மூச்சீராயினவாறும், இறுதி யசைச்சீராயினவாறும், நேரீற்றியற்சீர் குற்றியலுகரம் வந்து காசு பிறப்பு என்னுஞ் சீரா லிற்றவாறுங் கண்டுகொள்க.

இனியொருசா ராசிரியர் வெண்சீரேவந்து வெண்டளைதட்ப வேந்திசைச் செப்பல் பிறக்கும். இயற்சீரே வந்து வெண்டளைதட்ப வொழுகிசைச் செப்பல் பிறக்கும். வெண்சீரு மியற்சீரும் வந்து வெண்டளைதட்பத் தூங்கிசைச் செப்பல் பிறக்கும் என்ப. அவை வந்தவழி யுச்சரித்துக் கண்டுகொள்க.

இனி மற்றொருசா ராசிரியர் செப்பல், வெண்கூ, அகவலெனை மூவகையோசையுடைத்து வெண்பாவென்ப. என்னை?

"பண்பாய்ந் தடக்கிய பானடை தெரியின்
வெண்பா மூவிசை விரிக்குங் காலே"

"செப்பல் வெண்பா வெண்கூ வெண்பா
அகவல் வெண்பா வென்றன ரவையே"

என்றாராகலின்.

அவற்றுட் செப்பல்வெண்பா வென்பது * எழுசீரானடப்பது;

---

* 'எழுசீர்க்குறள் வெண்பா' எனவும் பாடம்.

"செப்பல் வெண்பா சீரே ழாகி
தொடையிலை பெறாஅ தடியிலை பெறுமே"

என்றாராகலின்.

அவர் காட்டும் பாட்டு:—

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு" (குறள் 4-1.)

எனவும்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை" (குறள்-4-7)

எனவுங் கொள்க.

வெண்கூவெண்பா வென்பது நேரிசைவெண்பா வினவெழுத்து மிக்கிசைப்பது. அஃது ஆசுகவிகள் கூறுமாற்றாற் கூறப் பிறப்பது. என்னை?

"வெண்கூ வெண்பா வெழுத்திறந் திசைக்கும்"

என்றாராகலின்.

வரலாறு:—

"தண்டடைந்த திண்டோளாய் தாங்கலார் தன்மைத்தோ
கண்டடையார் தம்மைக் கனற்றுமா—வண்டடைந்த
நாணிலை நாறுந்தார் நன்னன் கலைவாய
வாணிலைக் கண்ணார் வடிவு"

எனவும்,

"அறந்தருதண் செங்கோலை யன்ன மடந்தை
சிறந்தன சேவலோ டேடி—மறந்தொருகா
றன்ன மகன்றாலுந் தம்முயிர் வாழாவா
லன்ன மகன்றி லிவை"

எனவும் இவை வெண்கூவெண்பா வென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு.

இனி அகவலிசையாவது இன்னிசை வெண்பா, என்னை?

"அகவல் வெண்பா வடிநிலை பெற்றுச்
சீர்நிலை தோறுந் தொடைநிலை திரியாது
நடைவயி னோரடி நேய முடைத்தாய்ப்
பொருளொடு புணர்ந்த வெழுத்தறி யாதே"

என்றாராகலின்.

வரலாறு:—

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்" (நாலடி-4-9.)

இஃது அகவல்வெண்பா வென்று அணியியலுடையார் காட்டிய பாட்டு.

"மனைக்குப்பாழ் *வாணுதலை யின்மைதான் சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு" (நான்மணி-22.)

இஃது அகவல் வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு.

இவ்வோசை விகற்பமெல்லாம் வல்லார்வாய்க் கேட்பினல்லது காட்டலாகா வென்றறிக.

"மருளொடு புணர்ந்தோர் மருட்கை தீரச்
சொல்ல வன்மை வெண்பா வியல்பே"

என்றாராகலின்.

"இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு"

எனவும்,

"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு"

எனவும்,

"அரிமல ராய்ந்தக ணம்மா கடைசி
திருமுகமுந் திங்களுந் தெத்துத்—தெருமந்து

* 'வாணுத லின்மை' எனவும் பாடம்,

வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி
யையத்து ணின்ற தரவு"

எனவும்,

"பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன் றுநீகிடந்தாய் மெய்யென்ப—ராலன்று
வேலைசூழ் நீரதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு"

எனவும்,

"எளிதி †லிரண்டடியுங் காண்பதற்கென் னெஞ்சே
தெளிதிற் றெரிந்துரைப்பன் செவ்வே—யளிகள்
பொருந்தா விரணியனைக் கொல்லுற் றரியா
யிருந்தான் றிருநாம மெண்ணு"

எனவும் இவை முற்றியலுகர மருகிக் காசு பிறப்பு என்னு மிரண்டு சீரானு மிற்றன வாயினுஞ் சிறப்பிலபோலு மெனக் கொள்க. 'அரி மலராய்ந்தகண்' என்பது பொய்கையார் வாக்கு.

"நுண்மைசால் கேள்வி நுணங்கியோர் சொல்லையாய்
தொன்மைசா னன்மருந் து"

எனவும்,

"நெடுநுண் சிலையலைக்கு நீர்மைத்தே பேதை
கொடுநுண் புருவக் குலா"

எனவும்,

* "எளிதி லிரண்டடியும் காண்பதற்கென் னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே—களியில்
பொருந்தா தவனைப் பொரலுற் றரியா
யிருந்தான் திருநாம மெண்"

இது நாலாயிரம் அச்சுப்பிரதியில் உள்ள பாடம். பொய்கையார் அருளிச் செய்தது.

† 'இருவரையும்' எனவும் பாடம்.

" கிழலிடையிஃ தோபுகுந்து *கிற்கவே யென்றேற்
கழலிடை யம்மலரே போன்றாய்—கழலடைகாற்
காம்போச ஞூர்க் கடலார் மடமகளே
வேம்போவென் வாயில் விறு "

எனவும்,

" சொல்லுப சொல்லப் பெறுபவே யாதொன்றுஞ்
சொல்லாத சொல்லப் பெறு "

எனவும் தனிக்குறில் நேரசையும் நெடிலுடை நிரையசையும் இறுதிக்கண் அருகி வந்தனவாயினுஞ் சிறப்பின்மை யுச்சரித்துக் கண்டு கொள்க.

" குற்றுகரச் சீரோ டுகர வகாரச்சீ
ரிற்ற வெழுவாயாப் பின்னிசைத்தா—முற்றுகர
மீறு யருகி வருமென்றே பொய்கையார்
கூறு ரஃதீறுக் கொண்டு "

இதுவு மொருசாராசிரியர் மதம்.

அவர் காட்டுமுதாரணம்:—

" அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்வு " (குறள்-39-2.)
" ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு " (குறள்-22-5.)

என முற்றுகர வீற்றடிக்குச் சீரிவை. குற்றுகர முற்றுகரங்கட்கு மேற்காட்டியனவுங் கொள்க. (௪)

[வெண்பாவின் வகையாமாறு.]

58. குறள்சிந் தின்னிசை நேரிசை பஃறொடை
யெனவைந் தாகும் வெண்பாத் தானே

என்பது என்னுதலிற்றோவெனின், செப்பலோசைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய், வெண்சீரு மியற்சீரும் வந்து வெண்டளைதட்டு, வேற்றுத்தளை விரவாது, ஈற்றடியினிறுதிச்சீர் காசு, பிறப்பு, நாள், மலர் யென்னும் வாய்பாட்டானிறுமென்றும், குற்

* 'கிற்கவே' எனவும் பாடம்.

றியலிகரமும் குற்றியலுகரமும் ஒற்றும் ஆய்தமுமில்லாத வெழுத் தேழு முதலாகப் பதினேழெழுத்தின்காறு முயர்ந்த பத்து நிலமும் பெற்று நாற்சீரடித்தாய், ஐந்தெழுத்து முதலாகப் பதினெழுத்தின் காறு முயர்ந்த வாறு நிலமும் பெற்று முச்சீரடியான் முடியுமென்று வேண்டப்பட்ட வெண்பாவினது விகற்ப முணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்:—குறள்வெண்பாவும், சிந்தியல்வெண்பாவும், இன்னிசைவெண்பாவும், நேரிசைவெண்பாவும், பஃறொடைவெண் பாவும் என ஐந்து வகைப்படும் வெண்பா வென்ப ராசிரியர் என்ற வாறு.

குறள், சிந்து, நேரிசை, இன்னிசை, பஃறொடை யென்று முறையிற் கூறாது குறள், சிந்து, இன்னிசை, நேரிசை, பஃறொடை என்று முறைபிறழச் சொல்லவேண்டிய தென்னையெனில், அஃ தொருபயனோக்கிச் சொல்லப்பட்டது; 'தலைதடுமாற்றந்தந்து புணர்ந் துரைத்தல்' என்பது தந்திரவுத்தியாகலின். யாதப்பயன் எனில், குறள்வெண்பாவினை யோரடிமுக்காலென்றும், சிந்தியல் வெண்பா வினை யீரடிமுக்காலென்றும், நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடிமுக்காலென்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்காலென்றும், பஃறொடை வெண்பாவினைப் பலவடிமுக்கா லென்றும் வழங்குவ ரொருசாராசிரியரென்பது அறிவித்தற்கு வேண் டப்பட்டது என்க. 'குறள்சிந் தின்னிசை நேரிசை பஃறொடை என வைந்து' என்னாது 'ஆகும்' என்று மிகுத்துச்சொல்லவேண்டிய தென்னை யெனில் செப்பலோசையிற் சிறிது சிதைந்த பஃறொடை வெண்பாவினைக் கலிவெண்பாவாகவும், அல்லாத வெண்பாக்களது சிதைவினை ஒருபுடை ஒப்புமைநோக்கித் தத்தம் இனமாகவுங் கொண்டு வழங்கப்படுமென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது என்க.

இவற்றை இடுகுறியானும் காரணக்குறியானும் வழங்குப.

காரணக்குறியான் வழங்குமாறு:—குறளுஞ்சிந்துமென விவற் றை மேல் *அடிக்குச் சொன்னாற் போலக் கொள்க. நேர் என்பது மாறுதற் கண்ணும், ஒத்தற்கண்ணும், தனிமைக்கண்ணும், மிகுதிக் கண்ணும், நட்பத்தின்கண்ணும், சமனுதற் கண்ணும், உடம்படுதற்

* 99-ஆம் பக்கம் பார்க்க.

கண்ணும், பாதிக்கண்ணும், தலைப்பாட்டின் கண்ணும், நிலைப்பாட்டின் கண்ணும், கொடைக்கண்ணும் நிகழும். என்னை? "நேர்ந்தாரரணம் பலகடந்த வடுவேபோர்ச் செழியன்" எனவும், "நேர்பொருணிறுத்தனன்", எனவும், "நாற்சீர்கொண்டது நேரடி" எனவும், "நேரின மணியை நிரல்படவைத்தாங்கு" எனவும், "நேரசை" எனவும் "நேரே நல்லன நேரே செல்வன" எனவும் "நேர்நூல் நேராடை" எனவும் "நாற்சீர்கொண்டது நேரடி" எனவும், "நெட்டெழுத்தா னேரசைப்படும்" எனவும், "நேர் போகி" எனவும், "நேர்பட்ட விரண்டுபெடையும்" எனவும், "நேர்ந்திருந்தன" எனவும், "நேராமற் கற்பது கல்வியன்றே" எனவும் "நேரா நோன்பு" எனவும், "நேராநெஞ்சத்தா னட்டானல்லன்", எனவும் "உப்பு நேர்ந்தார்" எனவும், "புளிநேர்ந்தார்" எனவும், "நேரிழை மகளிர்" எனவும் வழங்குவராகலின்.

இசை யென்பது ஓசைக்கண்ணும், சொல்லின்கண்ணும், புகழின்கண்ணும் நிகழும். என்னை, "இசையெலாமிசைய" "இசையெலா மார்ப்ப" எனவும்,

"நுவற்சி நொடியே இளவி யிசைத்தல்
புகற்சி யனைய சொல்லின் பாலே"

எனவும்,

"இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை"

எனவுஞ் சொல்லப்படுதலின். இனி பொருசா ராசிரியர் *'இயை' யென்பதனை 'இசை' என்று வழங்குவரெனக் கொள்க. முன்னும் பின்னுமொவ்வாத மறுதலைப்பட்ட விகற்பத்தாற் சொல்லுதலானும், ஒத்த ஒருவிகற்பத்தா லிசைத்தலானும், தனிச்சொல்லுடைமையானும், மிக்க புகழிற்றுதலானும், நுண்ணியபொருண்மேற் சொல்லப்படுதலானும், அளவிற்பட்ட நான்கடியாற் சொல்லப்படுதலானும், புலவரா னுடம்பட்ட வோசையும் சொல்லும் புகழுமுடைத்தாகலானும், முதற்குறளோடு தனிச்சொல் இடையே ஒன்றுமிரண்டு மிசைகூட்டி யிசைக்கப்படுதலானும், தலைப்பட்ட சொல்லும் பொருளு முடைத்தாகலானும், புகழ்வேண்டு மொருவற்குத் தாய்ப்பாட்டாய்க் கொடைக்கடன் பூண்பித்துப் பொய்ப்பாடுடைத்தாய்

* 'இசை யென்பதனை 'இசைய' எனவழங்குவரெனக்கொள்க' எனவும் பாடம்.

நிற்றலானும் நேரிசை வெண்பாவென்பதூஉங் காரணக்குறி. இனிதாயிசையும் ஓசையுஞ் சொல்லுமுண்டாய்ப் பொய்ப்பாடுடைத்தாகலின் இன்னிசை யென்பதூஉங் காரணக்குறி. பலதொடை தொடுக்கப்படுதலாற் பஃறொடை யென்பதூஉங் காரணக்குறி.

[குறள்வெண்பாவும் சிந்தியல் வெண்பாவும் ஆமாறு.]

59 ஈரடி குறள்சிந் திருதொடை யியற்றே.

இஃதென்னுதலிற்றோவெனின், அதிகாரம் பாரித்த வைந்து வெண்பாவினுள்ளும் முறையானே குறள் வெண்பாவுஞ் சிந்தியல் வெண்பாவு முணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—'ஈரடி குறள்' என்பது பொதுவிலக்கணத்தோடு மாறுகொள்ளாது பொருந்திய விரண்டடியால் வருவது குறள் வெண்பாவெனப்படும் என்றவாறு.

'ஈரடி குறள்' என்னுஞ் சொற்பொருள், 'இருசீர் குறளடி சிந்து முச்சீரடி' என்றாற்போலக் கொள்க. 'சிந்து இருதொடை இயற்றே' என்பது, மூன்றடியால் வருவது சிந்தியல் வெண்பாவெனப்படும் என்றவாறு. இருதொடையெனவே மூன்றடி யென்பது பெறப்பட்டது; அடியிரண் டியைந்த வழிதொடையொன்றென்பதாகலின். 'ஈரடிகுறள் சிந்திருதொடைத்தே' என்னுது, இயற்றே என்று விகற்பித்துச் சொல்லவேண்டியதென்னை? மோனை யெதுகை முரண் இயைபு அளபெடை யென்னும் ஐந்து தொடையானும் வருவனவற்றை யினக்குறள் வெண்பாவென்றும், செந்தொடையானும், ஒழிந்த தொடைவிகற்பத்தானும் வருவனவற்றை விகற்பக்குறள் வெண்பா வென்றும், மூன்றடியால் நேரிசை வெண்பாவேபோல வருவனவற்றை நேரிசைச் சிந்தியல் வெண்பாவென்றும், இன்னிசை வெண்பாவேபோல மூன்றடியால் வருவனவற்றை இன்னிசைச்சிந்தியல் வெண்பாவென்றும் வழங்குவர் ஒருசா ராசிரிய ரென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது.

அவற்றிற்குச் செய்யுள் :—

" சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (குறள்—27—7.)

எனவும்,

" தன்னுயிர்க் கின்னமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்." (குறள்-32-8.)

எனவும்,

" இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள்-62-5.)

எனவும்,

" சுடிகை நுதன்மடவாள் சொல்லுங் கரும்பு
கதிர்வளைத் தோளுங் கரும்பு"

எனவும்,

" கடாஅக் களிற்றின்மேல் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்" (குறள்-109-7.)

எனவும் முறையானே ஐந்து வகைப்பட்ட முதற்றொடையானும் இனக்குறள்வெண்பா வந்தவாறு *காண்க.

" அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" (குறள்-7-4.)

எனவும்,

" அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு" (குறள்-109-1.

எனவும்,

" அறிஞ ரியம்பிய வுள்ளத்தும் வைக்குமே
நன்னுத லாட்கோர் வளம்"

எனவும் இவை செந்தொடையானும் விகற்பத்தொடையானும் வந்தமையான் விகற்பக் குறள்வெண்பா.

இவற்றை யிவ்வாறன்றி யொருவிகற்பக் குறள்வெண்பா வென்றும், பலவிகற்பக் குறள்வெண்பா வென்றுஞ் சொல்லுவாருமுளர்.

அவற்றிற்குச் செய்யுள் :—

" உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" (குறள்-40-5.)

---

* 'கண்டுகொள்க' எனவும் பாடம்.

எனவும்,

“உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து” (குறள்-67.7.)

எனவும் வரும்.

இவையும் அவற்றினுள்ளே யடங்குமெனக் கொள்க.

“நற்கொற்ற வாயி லுறங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்”

எனவும்,

“காளையோ டாடிக் கதக்காரி தோன்றுங்கால்
வானழுவ மக்கவோ டாகுமாங்—கோவொடும்
பொன்றுமா நங்காய்நங் கேள்”

எனவும்,

“அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைக்குஞ்—சிறந்தாற்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு”

எனவும் இவை யிரண்டாமடியி னிறுதி தனிச்சொன்றாய், மூன்றடி யாய் இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும், நேரிசை வெண் பாவேபோல வந்தமையான் நேரிசைச் சிந்தியல் வெண்பா.

“நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி”

எனவும்,

“சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை”

எனவும்,

“முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த ளுப்பீன்ற போயினர்
திண்டேர் வரவுரைக்குங் கார்”

எனவும் இவை மூன்றடியா யின்னிசைவெண்பாவேபோலத் தனிச் சொலின்றி ஒருவிகற்பத்தானும், பலவிகற்பத்தானும் வந்தமை

யான் இன்னிசைச் சிந்தியல்வெண்பா. இவற்றுக்கிலக்கணம் பிறரு மிவ்வாறே சொன்னார். என்னை ?

" தொடையொன் றடியிரண் டாகி வருமேற்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

" ஈரடி யியைந்தது குறள்வெண் பாவே"

என்றார் அவிநயனார்.

" ஐம்பெருந் தொடையி னினக்குறள் விகற்பம்
*செந்தொடை விகற்பொடு செயிர்தீ ரீரடி"

எனவும்,

" நேரிசைச் சிந்து மின்னிசை சிந்தென்
றீரடி முக்கா லிருவகைப் படுமே "

எனவுஞ் சொன்னாரெனக்கொள்க.

" நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு மிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே" (யாப்பருங்கலக்காரிகை,

என்னும் இவ்வியாப்பருங்கலப் புறனடையை விரித்துரைத்துக் கொள்க. (கூ)

[நே. சை வெண்பா வாமாறு.]

60. நாலோ ரடியாய்த் தனியிரண் டாவத
னீற்றொரு வாய்முற் றிருவிகற் பொன்றினும்
நேரிசை வெண்பா வெனப்பெய ராகும்.

இச் சூத்திர மென்னுதலிற்றோவெனின், நேரிசை வெண்பா வாமா றுணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்:'நா--லோரடியாய்'என்பது, நான் கடியாயென்ற வாறு; 'தனியிரண்டாவதனீறு' என்பது, தனிச்சொல்லிரண்டாமடியி னிறுதியாயென்றவாறு; 'ஒரு வாய் முற்று'என்பது, அவ்விரண்டா மடி ஒரூஉத்தொடையாயும், கதுவாய்த்தொடையாயும், முற்றுத்தொ டையாயு மென்றவாறு; ஆயென்னுஞ்சொல் ஆதிதீபகமாதலின்

* 'செந்தொடை விகற்பத் தொடையொடு சிவணும்' எனவும் பாடம்.

மூவழியுங் கூட்டி யுரைக்கப்பட்டது. 'இருவிகற்பொன்றினு நேரிசை வெண்பா வெனப்பெயராகும்' என்பது, இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவது நேரிசை வெண்பாவா மென்றவாறு.

வாவென்பது பலபொருட்டாயினும், ஒருவினோடும் முற்றினோடும் வைத்தமையாற் கதுவாயைத் தலைக்குறைத்து வாவென்று வைக்கப்பட்டது. என்னை ?

"வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே"

என்பதிலக்கணமாகலின். கண்ணாடி யென்பதனைத் தலைக்குறைத்து 'ஆடி நிழலின் றித்தோன்றி' என்றாற்போலக் கொள்க.

இரண்டாமடி ஒரூஉத்தொடையாய் வருவது சிறப்புடைத் தாகலின் முன் வைக்கப்பட்டது. 'சிறப்புடைப்பொருளை முந்துறக் கிளத்தல்' என்பது தந்திரவுத்தியாகலின். முற்றுத்தொடை யருகி வருதலின் பின்வைக்கப்பட்டது. கதுவாய்த்தொடை யிடையாய வியல்பிற்றாகலின் இடைக்கண் வைக்கப்பட்டது.

அவற்றிற்குச் செய்யுள்:—

"சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது"

எனவும்,

"வண்மை மதம்பொழிந்து மாற்றார் திறல்வாடத்
திண்மை பொழிந்து திகழும்போ—லொண்மைசார்
நற்சிறைவண் டார்க்கு நளிநீர் வயற்பம்பைக்
கற்சிறை யென்னுங் களிறு"

எனவும் இவை யிரண்டாமடி *ஒரூஉத்தொடையா யிரண்டு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா.

* ஈண்டு 'ஒரூஉத்தொடை' என்றது, ஒரூஉ வெதுகைத் தொடையை.

"வில்லுடையான் வானவன் வீயாத் தமிழுடையான்
பல்வேற் கடற்றானைப் பாண்டியன்—சொல்லிகவா
வில்லுடையான் பாலை யிளஞ்சாத்த வேட்டனே
நெல்லுடையா னீர்நாட்டார் கோ"

"ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்" (நாலடி-36-1.)

இவை யிரண்டாமடி யொரூஉத்தொடையா யொருவிகற்பத் தான் வந்த நேரிசை வெண்பா.

"எல்லைநீர் ஞால முதலாய வேழுலகும்
*வல்லனாய் முன்னளந்தா னல்லனோ—சொல்லுங்கால்
வேட்டானை வீய வியன்புலியை வெஞ்சமத்து
வாட்டானைக் கூட்டழித்த மால்"

"எற்றே பலியிரக்கு மிட்டா லதுவேலா
†நெற்றிமே லொற்றைக்க ணீறடி—முற்றத்துப்
பெற்றடிப் பந்தாடிப் பேயாடித் தீயாடிக்
கற்றடி நம்மேற் கழறு"

இவை யிரண்டாமடி கதுவாய்த்தொடையா யிரண்டு விகற்பத் தானும் ஒரு விகற்பத்தானும் வந்த நேரிசை வெண்பா.

"பல்வளையார் கூடிப் பகர்வதூஉம் பண்புணர்ந்த
சொல்லவையா ரெல்லாருஞ் சொல்லுவதூஉ—மெல்லிணர்ப்
பூந்தாம நீண்முடியான் பூழியர்கோன் றாழ்தடக்கைத்
தேந்தாம வேலான் றிறம்"

"பொன்னிணர் ஞாழற் புதல்வதியும் நாரைகாள்
கன்னியம் புன்னைமே லன்னங்காள்—னென்னோநீர்
இன்னொலி சேர்ப்ப னிரவின் வருவதன்முன்
கொன்னே குறிசெய்த வாறு"

என இவை யிரண்டாமடியி னிறுதி தனிச்சொல்லா னடிமூய் முற்றுத் தொடையாய், இரண்டு விகற்பத்தானு மொருவிகற்பத்தானும் வந்த நேரிசைவெண்பா.

* இது மேற்கதுவா யெதுகைத்தொடை
† இது கீழ்க்கதுவா யெதுகைத்தொடை

"வஞ்சியே னென்றவன்றன் னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ"

இது மோனைத்தொடையா யிரண்டாமடி யிறுதி தனிச்சொல்லா னடிமுப் ஒரூஉத்தொடையாயும் ஒரு விகற்பத்தானும் வந்த நேரிசை வெண்பா.

"கானலம் பட்ட கலிமாத்தன் கைக்கொண்டு
கானலம் பட்டினத்துக் கண்ணுற்றான்—கானலம்
போதிற மோதிப் புரிவான்று மால்கடல்வாய்ப்
போதிற மோதிப் புரிந்து"

இது மோனையா யிரண்டுவிகற்பத்தான் வந்தது.

"கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையார்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு" (நாலடி-22-6.)

இது முரணு யிருவிகற்பத்தால் வந்தது.

"தாஅய்த்தா அய்ச் செல்லுந் தளர்நடைப் புன்சிறுவர்
போஒய்ப்போஒய்ப் பூச லிடச்செய்து—போஒய்ப்போஒய்
நிற்குமோ நீடு நெடும்புதல்வன் றனணைந்து
பொற்குமோ வென்னுத போது"

இஃதளபெடையா யிருவிகற்பத்தால் வந்தது. நேரிசை வெண்பாவினுள் முதலிரண்டடியு மோனையும் எதுகையும் ஒருசார் முரணும் அளபெடையு மென்னு மிந்நான்கு தொடையானுமல்லது, செந்தொடையானு மியைபுத்தொடையானும் வாரா வெனக் கொள்க. என்னை ?

"இரண்டா மடியி னீற்றொரூஉ வெய்தி
முரண்ட வெதுகைய தாகியு மாகா
திரண்டு துணியா யிடை:தனி போழ்ந்து
விரந்தடி நான்கி னேரிசை வெண்பா"

என்றார் காக்கைபாடினியார். அஃதே யெனின் முற்றுங் கதுவாயுஞ் சொல்லிற்றிலராம்பிறவெனின், அற்றன்று ; சிறப்புடைமை

நோக்கி யொரூஉத்தொடையை யெடுத்தோதினர் ; அல்லனவும் விதப்பானும், பிறவாற்றானு முடம்பட்டாரெனக்கொள்க. என்னை ?

"குறட்பா விரண்டவை நால்வகைத் தொடையாய்
முதற்பாத் தனிச்சொலி னடிமூ யிருவகை
விகற்பினு நடப்பது நேரிசை வெண்பா"

என்றார் அவிநயனார். இதன் கருத்தியாதோ வெனின், இரண்டு குறட்பாவாய், நடுவுத்தொடைக் கேற்ற தனிச்சொல்லா லடிமூய், முதற்குறட்பாவின் முதற்றொடை, யெதுகை, பகைத்தொடை, அளபெடை யென்னு நான்கு தொடையாய், ஒத்தவிகற்பத்தானு மொவ்வா விகற்பத்தானும் வருவது நேரிசை வெண்பா வென்று மொழி மாற்றுப் பொருள்கோள்வகையால் கூறினாரென் றுணர்க. 'ஆகும்' என்றாலுங் கருதிய பொருளைப் பயக்கும். 'நேரிசை வெண்பா வெனப் பெயராகும்' என்றதனால், இரண்டு வெண்பாவாய் நடுவுத் தொடைக்கேற்ற தனிச்சொற் பெற்று, ஒரு விகற்பத்தானும் இரண்டு விகற்பத்தானும் வருவனவும், ஒற்றுமைப்படாத வுலோகங் களை யொற்றுமைப்படப் பற்றாசிட்டு விளக்கினாற் போல முதற்குறட் பாவினோடு தனிச்சொல்லிடையே வேறுபட்டா லொன்று மிரண்டு மசைகூட்டி யுச்சரிக்கப்பட் டொருவிகற்பத்தானு மிருவிகற்பத் தானுமென் றிவ்வாற்றா லாறு விகற்பம் படுத்துச் சொல்லுவரொரு சா ராசிரிய ரென்பதறிவித்தற் கொரு தோற்ற முணர்த்திய தெனக் கொள்க.

"நாலோ ரடியாய்த் தனியிரண் டாவத
னீறொரு வாய்முற் றிருவிகற் பொன்றினு
நேரிசை வெண்பா"

என்று மொழிமாற்றுப் பொருள்கோள் வகையாற் கூறினாரென்க. என்னை ?

"இருகுற ளடுவெட் டனிச்சொற் பெற்று
மிரண்டொன் றாசு மவணிடை யிட்டு
மொருவிகற் பாகியு மிருவிகற் பாகியு
நிகழ்வன நேரிசை வெண்பா வாகும்"

என்றாராகலின்,

அவர் காட்டும் பாட்டு:—

"*படைகுடி கூழமைச்சு நட்ப ரணுறு
முடையா னரசரு ளேறு"— **
† அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

எனவும்,

"தடமண்டு தாமரையின் ருதா டலவ
னிடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைநெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தாழி நடாயினு னூர்"

எனவும் இவை இருகுறணடுவெட் டனிச்சொற் பெற்ற மாத்திரை யானே வந்த இருவிகற்ப நேரிசை வெண்பா.

"‡ மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு—§ சிறந்தீர்
¶ துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"

எனவும்,

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு"

எனவும் இவை இருகுறட் டனிச்சொற் பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

"††எய்தற் கரிய வியன்றக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயலென்று—வையகத்
‡‡ தீத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு"

இது முதற்குறட்பாவினோடு தனிச்சொலிடை $ இரண்டசையா லாசிட்டு, இருவிகற்பத்தால்வந்த வாசிடைவிகற்பநேரிசைவெண்பா.

---

* குறள்-39-1. ** ஈண்டிருக்கவேண்டிய தனிச்சொல் எல்லா ஏடுகளிலும் விடுபட்டுள்ளது. † குறள்-39-2. ‡ குறள்-21-4.

§ 'பிறந்து' எனவும் பாடம் ¶ குறள் 3-2. †† குறள்-49-9, ‡‡ குறள்-24-1.
$ 'வேறுபட இரண்டசை' எனவும் பாடம்,

"* வஞ்சியேன்" என்பது இரண்டசையா லாசிட்டு ஒரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா.

"† சில்லிலங்கு நீள்புருவம்" என்பது இரண்டு விகற்பத்தாலோரசை யாசிட்ட நேரிசை வெண்பா.

"‡ ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினும்" என்பது ஓரசையா லாசிட்டு ஒரு விகற்பத்தால் வந்த நேரிசை வெண்பா.

'குறள் சிந்தின்னிசை நேரிசை பஃறொடை' என்பது தொல்லாசிரியர் தொல்காப்பியனார் வைத்த முறைமை. (எ)

[இன்னிசை வெண்பா வாமாறு.]

61. விகற்பொன் ருகியு மிக்குந் தனிச்சொ
லியற்றப் படாதன வின்னிசை வெண்பா.

இஃதென் னுதலிற்றோ வெனின், இன்னிசை வெண்பா வாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள் :— ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானுந் தனிச்சொலின்றி நாலடியான் வருவ தின்னிசை வெண்பா வெனப்படு மென்றவாறு.

நான்கடி யென்ப ததிகாரம் வருவித்துரைக்கப்பட்டது. பிறரு மிவ்வாறே சொன்னார் என்க. என்னை ?

"தனிச்சொற் றழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினு மொன்றே வரினு
§ மிதற்பெய ரின்னிசை யென்றிசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

"ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொ
லின்றி வருவன வின்னிசை வெண்பா"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

---

* இச்செய்யுளை 230-ஆவது பக்கத்திற் காண்க.
† இச்செய்யுளை 228-ஆவது பக்கத்திற் காண்க.
‡ இச்செய்யுளை 229-ஆவது பக்கத்திற் காண்க,
§ 'இயற்பெயர்' என்றும் பாடம்.

" ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொ
லின்றி நடப்ப தின்னிசை வெண்பா"

என்றார் அவிநயனார்.

வரலாறு:—

" துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்" (நாலடி-1-2.)

" * வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்"

எனவிவை ஒரு விகற்பத்தால் வந்த வின்னிசை வெண்பா.

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்" (நாலடி-11-3.)

எனவும்,

" தலைக்கட் டலையைந்துங் காணேன் கடைக்கணே
லென்னா விருவருமங் கில்லை பொன்றேடை
யாழியாய் நன்மை யறிந்தே னலைகடல்சூழ்
† ஏழியா னிக்கிடந்த வேறு"

எனவும்,

" வடிமலர்த்தார் நாகர் மணிக்கவரி வீச
முடிமலர்த்தேம் போதிமையோர் தன்னடிக்கீழ்ப் பெய்ய
வினிதிருந்து நல்லறஞ் சொல்லியா னெல்லாத்
துனியிருந்து துன்பந்தீர்ப் பான்"

எனவும்,

" தேனார் மலர்க்கூந்தற் றேமொழியாய் மேனாட்
பொருளைப் பொருளென்று நம்மறந்து போனா
ருருடேர் மணியோசை யோடு மிருடுங்க
வந்த திதுவோ மழை"

---

* இச்செய்யுளை 219-ஆவது பக்கத்திற் காண்க.
† 'மேழி' யெனவும் பாடம்.

எனவும்,

"கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா *விழுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியைப் போலப் பருவத்து
ளேதிலார் துய்க்கப் படும்" (நாலடி-28-4.)

எனவும்,

"கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்." (நான்மணி-16.)

எனவும் இவையெல்லாம் பலவிகற்பத்தான்வந்த வின்னிசை வெண்பா. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

'விகற்பொன் றாகிபு மிக்குந் தனிச்சொற், படாதன வின்னிசை வெண்பா' என்றாலுங் கருதிய பொருளைத் தழுவி நிற்கும் 'இயற்றப் படாதன' என்று மிகுத்துச் சொல்லவேண்டியதென்னை? இரண் டாமடி தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பத்தான் வருவனவு முள வென்பது அறிவித்தற்கொரு தோற்ற முணர்த்தியது.

வரலாறு:—

"பகலவன் செய்தூதிற் பண்பின்றி வந்தா
ரிகலினி னின்றார் வலியு—மிகலுடைய
நன்னயத்தோ டாயக்காற் சந்தியா நட்டாரா
மன்னனடை நட்டாருட் பேறு."

இது பொய்கையார்வாக்கு. இது தனிச்சொற்பெற்றுப் பலவிகற் பத்தால் வந்தவாறு கண்டுகொள்க.

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்"

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்" (நாலடி-16.)

---

* 'இடுக்குடை' என்பது நாலடியார் அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

இவை தனிச்சொற் பெற்றுப் பலவிகற்பத்தான் வந்தன. என்னை ?

" ஒருவிகற் பாகித் தனிச்சொ லின்றியு
மிருவிகற் பாகித் தனிச்சொ லின்றியுந்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியுந்
தனிச்சொ லின்றிப் பலவிகற் பாகியு
மடியடி தோறு மொரூஉத்தொடை யடைநவு
மெனவைந் தாகு மின்னிசை தானே "

என்றாராகலின். தனிச்சொற் பெற்றுப் பலவிகற்பத்தால் வருவன விதப்பினு லுடன்பட்டார் காக்கைபாடினியார். (அ)

[பஃறொடை வெண்பா வாயாறு.]

## 62. பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா.

இஃதென்னுதலிற்றோ வெனின், பஃறொடைவெண்பாவாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—நான்கடியின் மிக்க பலவடியான் வருவன பஃறொடை வெண்பா வெனப்படு மென்றவாறு.

நேரிசை வெண்பாவிற்கு மின்னிசை வெண்பாவிற்கு நான்கடி யுரிமை சொன்னாராகலின், நான்கடியின் மிக்க பலவடியென்பது ஆற்றலாற் பெறப்பட்டது. பலதொடையான் வருவன பஃறொடை வெண்பா வென்று காரணக்குறியோடு வாசகந்தழுவச் சூத்திரஞ் செய்யாது வேறொரு வாய்பாட்டாற் சொல்லவேண்டியதென்னை? ஒத்தவிகற்பப் பஃறொடைவெண்பா, ஒவ்வாவிகற்பப் பஃறொடை வெண்பாவென் றிரண்டுவிகற்பம்படு மென்ப தறிவித்தற்குச் சொல்லப்பட்டது.

வரலாறு:—

" சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேற்
* கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியர் கண் "

*'கூற்றுற்ற' எனவும் பாடம்.

இஃது ஒரு விகற்பத்தான் வந்த ஐந்தடிப் பஃறொடைவெண்பா.

“பன்மாடக் கூடன் மதுரைப் *பெருந்தெருவி
லென்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ணல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்”

இது பலவிகற்பத்தால் வந்த ஆறடிப் பஃறொடை வெண்பா.

“வையக மெல்லாங் கழனியா: வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்: செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு: வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்: சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங்: கச்சியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்”

இது பலவிகற்பத்தால் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

“மலைமேன் மரங்கொணர்ந்து மாண்புடைத்தாச் செய்த
நிலையொத்த வீதி நெடுமாடக் கூடல்
விலைத்தயிர் கொள்ளீரோ வென்பாண் முலையிரண்டுஞ்
சோழ னுறந்தைக் குரும்பையோ தொண்டைமான்
வேழஞ்சேர் வேங்கடத்துக் கோங்கரும்போ வீழத்துத்
தச்சன் கடைந்த விணைச்செப்போ வச்சுற்று
ளன்னமோ வாய்மயிலோ வாரணூர்நோய் செய்தாளை
யின்னந் தெரிகிற் றிலம்”

இஃதெட்டடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

“சிற்றியாறு பாய்ந்தாடுஞ் சேயரி யுண்கணாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப் பிணிக்கு மதிலும் படுகிடங்கும்
ஒப்ப வுடைத்தா யொலியோவா நீர்ப்புட்க
டத்தி யிரைதேருந் தையலாய்கின் னூர்ப்பெய
ரோர்த்தாய வண்ண முரைநீ யெனக்கூறக்

* ‘நெடுந்தெருவில்’ எனவும் பாடம்.

கட்டலர் தாமரையு ளேழுங் கடுமான்றேர்க்
கத்திரிவ ரைவருங் காயா மரமொன்றும்
பெற்றவிழ்தேர்ந் துண்ணாத பேயே யிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியுங் கூட்டியக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வானவன்கை
விற்பொறித்த வேற்புருவத் தாள்"

இது பன்னீரடியாற் பெருவல்லத்தைச் சொன்ன பஃறொ டைவெண்பா.

இன்னும் பல வடியால் வந்த பஃறொடைவெண்பா இராமா யணமும், புராணசாகரமு முதலாகவுடைய செய்யுட்களிற் கண்டு கொள்க.

"தொடையடி யித்துணை யென்னும் வழக்க
முடையதை யன்றி யுறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமஞ் சொலலே"

என்றார் காக்கைபாடினியார்.

"தொடைபல தொடுப்பன பஃறொடை வெண்பா"
என்றார் சிறு காக்கைபாடினியார்.

"தொடைமிகத் தொடுப்பன பஃறொடை வெண்பா"
என்றார் அவிநயனார்.

"ஏழடி யிறுதி யீரடி முதலா
வேறிய வெள்ளைக் கியைந்த வடியே
மிக்கடி வருவது செய்யுட் குரித்தே"

எனவும்,

"ஆறடி முக்காற் பாட்டெனப் படுமே
ஏறிய வடியுஞ் செய்யுள் வரையார்"

எனவு மொருசா ராசிரியர் சிறப்புடைமை நோக்கி யேழடி யெடுத் தோதினார். அல்லனவு முடம்பட்டார். *தொடர்நிலை பஃறொடை வெண்பாப் பலவடியாலும் வருமென் றிவ்வாறு சொன்னா ரெனக் கொள்க.

* 'தொடைநிலை' எனவும் பாடம்.

குறள், சிந்து, நேரிசை, இன்னிசை, பஃறொடையென்னும் ஐந்து வெண்பாவும் இனக்குறள் வெண்பா, விகற்பக்குறள் வெண்பா; நேரிசைச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச் சிந்தியல்வெண்பா; ஒரு விகற்ப நேரிசை வெண்பா, இருவிகற்ப நேரிசைவெண்பா; ஒருவிகற்ப வின்னிசைவெண்பா, பலவிகற்ப வின்னிசைவெண்பா, ஒத்தவிகற்பப் பஃறொடைவெண்பா, ஒவ்வாவிகற்பப் பஃறொடை வெண்பா என றிவ்வாறு விகற்பிக்கப் பத்தாம். அவை தன்சீர்வெண்டளையாலும், இயற்சீர் வெண்டளையாலுங் கூறுபடுப்ப விருபதாம். அவை தன் சீர்ச் சிறப்புடை வெண்டளையாலும் தன்சீர்ச் சிறப்பில் வெண்டளை யாலும், இயற்சீர்ச் சிறப்புடை வெண்டளையாலும், இயற்சீர்ச் சிறப்பில் வெண்டளையாலு மிவ்வாறு கூறுபடுப்ப நாற்பதாம். மூன்று செப்பலோசையாலும் பத்து வெண்பாவினையும் உறழ முப்ப தாம். ஓசையுந் தளையுங்கூட்டி யுறழ நூற்றிருபதாம். மற்றும் பிற வகையாலும் விகற்பித்துநோக்கப் பலவுமாம்.

*'ஒன்றும் பலவும்—தூமொழியே' என்னுமிக் காரிகையை விரித்துரைத்துக் கொள்க.

"பண்பாய்ந்த வேழு பதினொ றிழிபுயர்பாய்
வெண்பா வடிக்கெழுத்து வேண்டினார்—வெண்பாவின்
ஈற்றடிக் கைந்தாதி யீரைந் தெழுத்தளவும்
பாற்படுத்தார் நூலோர் பயின்று"

"குற்றிகரங் குற்றுகரஞ் செய்யு ளடிக்கு
முற்றுகரந் தானு முதற்பாவி னீற்றடிப்பின்
னிற்றல் சிறுபான்மை நேர்ந்தமையான் மற்ற
வடிமருங்கி னேயிரண்டோ டோரெழுத்து மாகத்
துடிமருங்கின் மெல்லியலாய் சொல்லு"

இதனீற்றடி யெழுத்துப் பதினொன்று.

"ஆதியா யாற்ற லுடைத்தாய் வரம்பிகவா
நீதிசா னூல்பொருந்தி நிற்றலா—லோதநீர்
மண்பாவு தொல்சீர் மறைவாணர் பாற்சார்த்தி
வெண்பா வுரைத்தார் விரித்து"

---

* "ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொ
லின்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்ப பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே"
(யாப்பருங்கலக்காரிகை.)

"வெண்பாவோ ரைந்தும் விகற்பத்தாற் பத்தாகித்
தண்பாற் றளைநான்கி ளுற்பதாய்த்—திண்பான்மை
செப்ப லொருமூன்றின் * வந்துறழச் சேர்ந்தபாத்
தப்பாத மூன்றாற்ப தாம்"

எனவிவற்றை விரித்துரைத்துக் கொள்க.

[வெண்பாவி னினமாமாறு.]

63. ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே.

இஃதென்னுதலிற்றோ வெனின், வெண்பாவி னினமாமா றுணர்த்துவா னெடுத்துக்கொண்டார்; அவற்றுளிச் சூத்திரம் வெண்செந்துறையாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—ஒழுகிய வோசையினை யுடைத்தாய்த், தம்முளொத்துவந்த விரண்டடித்தாய், விழுமியபொருளைப் பயந்துநிற்பது யாது, அது வெண் செந்துறையென்றும், செந்துறை வெள்ளையென்றும் வழங்கப்படும் என்றவாறு.

சீர் வரையறுத்திலாமையின் எனைத்துச் சீரானும் வரப்பெறும்.

"அந்தங் குறையா தடியிரண் டாமெனிற்
செந்துறை யென்னுஞ் சிறப்பிற் றாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

"ஈரடி யியைந்தது குறள்வெண் பாவே
யொத்த வடித்தே செந்துறை வெள்ளை"

என்றார் அவிநயனார்.

இனி அதற்குச் செய்யுள் வருமாறு:—

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" (முதுமொழிக்காஞ்சி-1.1.)

எனவும்,

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோம் யாமே" (கொன்றைவேந்தன்-1.)

எனவும் இவை நாற்சீ ரிரண்டடியால்வந்த செந்துறை வெள்ளை.

---

* 'வைத்துறழ' எனவும் பாடம்.

"நன்றி யாங்கள் சொன்னக்கா லொரு நாளு நல்லுயிர்கள்
கொன்று தின்னு மாந்தர்கள் குடிலஞ் செய்து கொள்ளாரே"

இவை அறுசீரடியால்வந்த செந்துறைவெள்ளை.
பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

[குறட்டாழிசையாமாறு.]

64. அந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவுஞ்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே.

இஃதென்னுதலிற்றோவெனின், குறட்டாழிசையாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—'அந்தடி குறைநவும்' என்பது இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வருவனவும் என்றவாறு; இரண்டடியென்பது அதிகாரம் வரைவினால் உரைக்கப்பட்டது. 'செந்துறைச் சிதைவும்' என்பது விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி வெண்செந்துறையிற் சிதைந்து இரண்டடியு மொத்து வருவனவும் என்றவாறு; 'சந்தழிகுறளும்' என்பது, செப்பலோசையிற் சிதைந்து வந்த குறள் வெண்பாவும் என்றவாறு; 'தாழிசைக் குறளே' என்பது, குறட்டாழிசையென்றும், தாழிசைகுறளென்றும் வழங்கப்படும் என்றவாறு.

வரலாறு:—

"நீல மாகட லீடு வார்திரை யின்றபோற் பொங்கிப் பொன்று மாங்கவை
காலம்பல காலஞ் சென்று செல்வர் யாக்கை கழிதலுமே."

"நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணினா னடியே யடைவார்கள் கற்றவரே."

"பாவடி மதயானை மன்னர்பைம் பொன்னணி னீண்முடிமே னிலாவிய
சேவடி யெங்கோமான் செழும்பொன் னெயிலவனே."

"தண்ணாந் தூநீ ராடச் சேர்ந்த
வண்ண வோதி கண்."

இவை யிரண்டடியாய் ஈற்றடி குறைந்த குறட்டாழிசை.

'உறிபோ னரம்பெ ழுந்தும் பளத்தி
சிறியள் செவிசிந் திலபொரித் தனவே,"

எனவும்,

"திடுதிம் மெனனின் றுமுழா வதிரப்
படிதம் பயில்கூத் தருமார்த் தனரே"

எனவும்,

"அறந்தருவா னென்றே புறந்தருவா னென்றே
மறந்தேயு மையாங் கிறுங்கிடுதிர் கண்டீர்"

எனவும்,

"அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வயி னீரே"

எனவும்,

"பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டிலந் தோன்றுமால் வாழி யன்னாய்"

எனவும்,

"என்னே செல்லுதி வாழி நங்காய்
பொன்னே *சொல்லுவன் போகு நங்காய்"

எனவும் இவை யொழுகிய வோசையும் விழுமிய பொருளுமின்றி இரண்டடியு மொத்துவந்த செந்துறைச் சிதைவுக் குறட்டாழிசை.

"கோடன்மன்னு பூங்கானற் குயில்கண்மன்னு நீள்சோலை
காடலரிதா மினியா நயந்து"

எனவும்,

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி"

எனவும் இவை நாலசைச்சீரால் வந்தும், வேற்றுத்தளை விரவியும், செப்பலோசை யழிந்து வந்தமையால் சந்தழிகுறட்டாழிசை. பிறவுமன்ன.

† அந்தமில் பாதந்.........தாழிசையே" என்னுமிக் காரிகையை விரித்துரைத்துக்கொள்க. (கக)

---

* 'சொல்லுதி' எனவும் பாடம்.

† அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின் வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவா
யந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்
சந்தஞ் சிதைந்த குறளும் குறளினத் தாழிசையே"

—யாப்பருங்கலக்காரிகை.

[வெண்செந்துறையும், குறட்டாழிசையும்
இன்னபாவின் இனமென்பது.]

65. உரைத்தன விரண்டுங் குறட்பா வினமே.

இஃதென்னுதலிற்றோ வெனின், வெண்செந்துறையும், குறட்டாழிசையு மின்னபாவினின மென்ப துணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள் :—இங்ஙனஞ் சொல்லப்பட்ட செந்துறை வெள்ளையும், தாழிசைக்குறளும் குறள்வெண்பாவி னினம் என்ற வாறு.

பிறரு மிவற்றிற் கிலக்கணச் சூத்திரஞ் சொல்லிப் பின்னையும் 'கூறிய விரண்டுங் குறட்பாவினமே' என்றாரெனக் கொள்க.

செந்துறை வெள்ளையுந் தாழிசைக்குறளும் ஏழு தளையாலுங் கூறுபடுப்ப விரண்டுமாய்ப் பதினான்கு செய்யுளாம். சிறப்புடைத் தளையுஞ் சிறப்பில் தளையுமென்றிவ்வாற்றாற் கூறுபடுப்ப விருபத் தெட்டாம். மற்றும் விகற்பிக்கப் பலவுமாம். வெண்பாவிற்கின மாய்ச் செவ்விதா யொழுகிய வோசைத்தாய், விழுமிய பொருளை உள்புகுத்துத் துறைபோ னெறிப்பாடுடைத்தாய்க் கிடத்தலின் வெண் செந்துறை, செந்துறை வெள்ளை யென்பதூஉம், இரண்டடியாய் நேரடியாய்த் தாழ்ந்திசைத்தலானும் ஒழுகலோசையினானும் விழு மியதாய்த் தாழ்ந்த வோசைத் தாகலானும், விழுப்பமின்றித் திண்ணி தாகிய பொருளைச் சொல்லுதலானும், குறட்டாழிசை யென்ப தூஉந், தாழிசைக்குறளென்பதூஉங் காரணக்குறி. (கஉ)

[வெண்டாழிசையாமாறு.]

66. அடிமொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும்.

இஃதென்னுதலிற்றோ வெனின், வெண்டாழிசையாமாறுணர்த் துதனுதலிற்று.

இதன்பொருள்:—அடி மூன்றாய் ஈற்றடி முச்சீரா யிறுவன யாவை, அவை வெள்ளொத்தாழிசை யென்றும், வெண்டாழிசை யென்றும் வழங்கப்படும் என்றவாறு.

'விடினது' என்று மிகுத்துச் சொல்ல வேண்டியதென்னை? சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேன் மூன்று வந்து நடப்பன வெள்ளொத்தாழிசை யெனப்படும் என்றற்கும், வெள்ளொத் தாழிசை கொள்ளாது பிறதளைதட்டு ஒன்றாயு மிரண்டாயும் ஒரு பொருண்மேன் மூன்றாயும் மூன்றின் மிக்குவருவனவும் எல்லாம் வெண்டாழிசை யெனப்படும் என்பதறிவித்தற்கும் வேண்டப்பட்டது; பிறரும்,

> "ஈரடி முக்கா லிசையினுந் தளையினும்
> வேறுபட் டியல்வன வெண்டா ழிசையே"

என்றாராகலின். வெள்ளோசைகொண்டு வேற்றுத்தளை விரவாது ஒருபொருண்மேன் மூன்றாயும், வெள்ளோசை தழுவாது வேற்றுத் தளைவிரவி ஒரு பொருண்மே லொன்றாயும், இரண்டிணைந்தும், மூன்றின் மிக்கும், மூன்றடுக்கிப் பொருள்வேறாயும் வருவனவெல்லாம் ஈரடி முக்காலென்னும் வெண்பாவி னினமெனக்கொள்க.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

> "அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
> பொன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
> துன்னான் றுறந்து விடல்"

> "ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
> கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
> நீடான் றுறந்து விடல்"

> "பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
> மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
> காவான் றுறந்து விடல்"

என இவை வெள்ளோசை கொண்டு வேற்றுத்தளை விரவாது ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையின் வெள்ளொத்தாழிசை.

> "போதார் நறும்பிண்டிப் பொன்னார் மணியணையான்
> றாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்
> தீதார் வினைகெடுப்பார் சிறந்து"

இது வெள்ளோசை தழுவி வேற்றுத்தளைவிரவி முதற்கண் வெண்டளைதட்டு வந்தமையான் வெண்டாழிசை.

> "நண்பி தென்று தீய சொல்லார்
> முன்பு நின்று முனிவு செய்யார்
> அன்பு வேண்டு பவர்"

இஃது ஆசிரியத்தளையான் வந்த வெண்டாழிசை.

"சீர்கொண்ட கருங்கடலிற் றிரைமுகந்து வலனேந்திக்
கார்வந்த ததனோடுங் கமழ்குழலாய் சிற்பிரிந்தார்
தேர்வந்த திதுகாணாய் சிறந்து"

இது கலித்தளையான் வந்த வெண்டாழிசை.

"முழங்கு கடன்முகந்து மூரிக் கொண்மூ
தழங்கு குரன்முரசிற் றலைசிறந் ததிர்ந்து
வழங்கின விவைகாணாய் வந்து"

இது வஞ்சித்தளையான் வந்த வெண்டாழிசை. பிறவும் வந்த வழிக் கண்டுகொள்க. வெள்ளொத்தாழிசை, வெண்டாழிசை யென்றவற்றை வேறுபடுத்தாது வெள்ளொத்தாழிசையே யென்று வழங்கவுமமையும்.

"தன்பா வடித்தொகை மூன்றா யிறுமடி
வெண்பாப் புரைய விறுவது வெள்ளையின்
றன்பா வினங்களிற் றாழிசை யாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

"அடிமூன் றாகி வெண்பாப் போல
விறுவன மூன்றே வெள்ளொத் தாழிசை"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"அடிமூன் றாகி வெண்பாப் போல
விறுவ தாயின் வெள்ளொத் தாழிசை"

என்றார் அவிநயனார். (௬௬)

[வெண்டுறையாமாறு.]

67. மூன்றடி முதலா வேழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்.

இஃதென்னுதலிற்றோ வெனின், வெண்டுறையாமா றுணர்த்துத லுதலிற்று.

இதன்பொருள்:—மூன்றடி முதலாக ஒன்றுதலைச்சிறந்து ஏழடி காறும் வந்து, கடைக்கண் ஓரடியும் பலவடியும் ஒருசீரும்

இருசீரும் பலசீருங்குறைந்து, அவை எல்லா மோரிசையாய் வரினும் முதலோரிசையாய்ப் பின்னே ரிசையாய் வரினும் வெண்டுறையாம் என்றவாறு.

இவற்றை யோரொலிவெண்டுறையென்றும், வேற்றொலி வெண்டுறை யென்றும் வழங்குவர்.

வரலாறு:—

"தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானை தன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே"

இது மூன்றடியாய் ஈற்றடியிரண்டு மிருசீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சசைந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்"

இது நான்கடியாய் ஈற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்துவந்த ஓரொலிவெண்டுறை.

"வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வருவன வுரைப்ப வுரைப்பன்மற்
செறிவுறு தொழிலினர் சிறந்தவ ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்"

இஃது ஐந்தடியாய் ஈற்றடி யொன் றொருசீர் குறைந்துவந்த ஓரொலி வெண்டுறை.

"கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற் கருமம் யாதா
மில்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே யேமுற்று வியைவ தென்னும்
பொல்லாதார் நன்கலன் மெய்புதைப்பப் பூண்டாலும் பொலிவ தென்னும்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவதென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவே லமையாதோ"

இஃது ஐந்தடியாய் ஈற்றடியிரண்டு மிரண்டுசீர் குறைந்துவந்த வேற்றொலி வெண்டுறை.

"முழங்கு களியானை மூரிக் கடற்படை முறிதார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழசையுட் சிறந்ததுநா ளுஞ்செய
வெழுந்த சேதிகத் துள்ளிருந்த வண்ணலடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துவின் றவ்வினை துறந்துபோ மாலரோ"

இஃது ஆறடியாய் முதலடியிரண்டு மறு சீராய்ப், பின்னான் கடியு நாற்சீராய், முதலிரண்டடியு மோரிசையாய்ப் பின்னான் கடியு மற்றோ ரிசையாய் வந்தமையால் வேற்றொலி வெண்டுறை எனப்படும்.

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மேவல்செய
முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றுக்கரிய
வைவேல் பாடிக்
கலங்கிவின் றொரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டிரு விருகைகவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துவின் றொரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுபவே"

இஃது ஏழடியாய் முதலிரண்டடியு மறுசீராய் வேறோரோசை யாய் வந்து, பின்னைந்தடியும் நாற்சீராய் வேறோரோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை; என்னை?

"அடியைந் தாகியு மிக்கு மீற்றடி
யொன்று மிரண்டுஞ் சீர்தபின் வெண்டுறை"

என்றார் அவிநயனார்.

"பெற்றவடி யைந்தினும் பிறவினும் பாட்டாய்
இற்ற வடியு மீற்றய லடியும்
யொன்று மிரண்டு நின்ற வதன்சீர்
கண்டன குறையின் வெண்டுறை யாகும்"

என்றார் மயேச்சுரர்.

"ஐந்தா றடியி னடந்தவு மந்தடி
யொன்று மிரண்டு மொழிசீர்ப் படுனவும்
வெண்டுறை நாமம் விதிக்கப் படுமே"

என்றார் காக்கை பாடினியார்.

இவர்களும் விதப்பால் மூன்றடி முதல் ஏழடி காறும் இவ்வாறே யுடன்பட்டார் எனக்கொள்க.

[வெளிவிருத்தம் ஆமாறு.]

68. நான்கடி யானு நடைபெற் றடிதொறுந்
தான்றனிச் சொற்கொளின் வெளிவிருத் தம்மே.

இஃதென்னுதலிற்றோ வெனின், வெளிவிருத்தமாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—'நான் கடியானு நடைபெற்று' என்பது, நான் கடியால் வந்து என்றவாறு; நான்கடியானும் என்ற வும்மையான் மூன்றடி யானு மருகி வரப்பெறு மெனக்கொள்க. 'அடிதொறுந் தனிச்சொற்கொளின் வெளிவிருத்தம்மே' என்பது, அடிதொறு மிறுதிக்கண் ஒரு சொல்லே தனிச்சொல்லாய்ப் பொருள் கொண்டு முடியின் வெளிவிருத்த மெனப்படும் என்றவாறு; 'இறுதி' என்பது மேலைச்சூத்திரத்தினின்று மதிகாரத்தாற் பெற்றும்.

தான் என்று மிகுத்துச் சொல்லியவதனால், தனிச்சொல்லே யடியுட்படச் சொன்னால் இயைபுத்தொடையாம். இஃதப்பெற்றியின்றித் தனிச்சொல்லேயென்று பிரித்தலிடப்படும். அல்லாது அடிதொறும் பொருளற்று மண்டிலமாய் வருவன மண்டில வெளிவிருத்தம்; அல்லாதன நிலைவெளிவிருத்தம் என்க.

வரலாறு:—

"சொல்லல் சொல்ல நீயவை சொல்ல—லெஞ்ஞான்றும்
புல்லல் புல்ல நீநெறி புல்ல—லெஞ்ஞான்றும்
கொல்லல் கொல்லல் செய்நலங் கொல்ல—லெஞ்ஞான்றும்
இல்ல னில்ல னீசரைச் சார்ந்தக்—கெஞ்ஞான்றும்"

எனவும்,

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்"

எனவும்,

"மாலை மணங்கமழு மௌவன் முகைவிரியு—மெந்தைகுன்றம்
காலை மணிக்குவளை காதலர்போற் கண்விழிக்கு—மெந்தைகுன்றம்
நீல மழைமுழங்கி நின்று சிலம்பதிரு—மெந்தைகுன்றம்
மாலை மயிலகவ வந்தண் டுவணமே—யெந்தைகுன்றம்"

எனவும் இவை நான்கடியா யடிதோறும் பொருளற்று அடிமறியாய் வந்தமையால் அடிமறி மண்டில வெளிவிருத்தம்.

"சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ—வம்மானாய்
ஆய்மலருந் தொண்டையு மாழியுந் திண்டேரு—மம்மானாய்
மாயிருந் தானை மயிடன் றலையின்மே—லம்மானாய்
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே—யம்மானாய்"

இஃது அடிமறியாய் வாராமையின் நிலைவெளிவிருத்தம்.

"உற்றபடையினா் பெற்ற பகையினா்—புறுவே
பெற்ற முடையார் பெருஞ்சிறப் பாண்டகை—புறுவே
மற்றை யவர்கண் மனையிற் களிப்பதே—புறுவே"

எனவும்,

"ஆடு கழைநிழிக்கு மந்தண் புயலிற்றே—யெந்தைகுன்றம்
நீடு கழைமே னிலாமதி நிற்குமே—யெந்தைகுன்றம்
கூடு மழைதவழுங் கோடுயர் சந்தமே—யெந்தைகுன்றம்"

எனவும் இவை மூன்றடியாய் வந்த மண்டில வெளி விருத்தம்

"ஏதங்க ணீங்க வெழிலிளம் பிண்டிக்கீழ்ப்—புறுவே
வேதங்க ளன்கும் விரித்தான் விரைமலர்மேற்—புறுவே
பாதம்ப ணிந்து பரவுதும் பல்காலும்—புறுவே"

இது மூன்றடியால் வந்த நிலைவெளி விருத்தம்.

பிறரு மிலக்கண மிவ்வாறே சொன்னார். என்னை ?

"ஒருமூன் றொருநான் கடியடி தோறும்
தனிச்சொற் றழுவி நடப்பன வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

"நான்கு மூன்று மடிதொறுந் தனிச்சொற்
றோன்ற வருவன வெளிவிருத் தம்மே"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"மூன்று நான்கு மடிதொறுந் தனிச்சொற்
* கொளீஇய வெல்லாம் வெளிவிருத் தம்மே"

என்றார் அவிநயனார்.

* 'கொளுவிய' எனவும் பாடம்,

"மூவடி யாகியு நாலடி யாகியும்
பாவடி வீழ்ந்து பாடலு ணடந்தும்
கடிவரை யில்லா வடிதொறுந் தனிச்சொற்
றிருத்தகு நிலைய விருத்த மாகும்"

என்றார் *நீர் மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்.

மூன்றடியால் வரும் வெளிவிருத்தமும், மூன்றடியால் வரும் வெண்டுறையும், வெள்ளொத்தாழிசையும் சிந்தியல் வெண்பாவி னின மென்றும், தனிச்சொலுடைமையால் நான்கடியாய் வரும் வெளிவிருத்தம் நேரிசை வெண்பாவி னினமென்றும், நான்கடிவெண்டுறை யின்னிசை வெண்பாவி னினமென்றும்; †ஐந்தடி முதலா ஏழிய அடியுடைய வெண்டுறைகள் பஃறொடை வெண்பாவி னினமென்றும் ஒரு புடை யொப்புமை நோக்கி யப்பாற் சார்த்தி ‡வழங்கப்படும்.

வெண்பாவிற் கினமாகிய தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றும், வெள்ளொத்தாழிசை, வெண்டாழிசை, ஒரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை, மண்டில வெளிவிருத்தம், நிலைவெளி விருத்தம் என்று கூறுபடுப்ப ஆறும். அவற்றுள் வெள்ளொத்தாழிசை வெண்டாளை நான்கிளுலும் கூறுபடுப்ப நான்கேயாவது, வேற்றுத்தளைவிரவாதாகலின்.

வெண்டாழிசை முதலாகிய வைந்துஞ் சிறப்புடைய வேழுதளை யாலும், சிறப்பிலேழுதளையாலும் கூறுபடுப்ப வெழுபதாம். வெள்ளொத்தாழிசையோடு கூட்டிச் சொல்ல வெழுபத்து நாலாம். பிற வாற்றால் விகற்பிக்கப் பலவாம்.

மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.

—யாப்பருங்கலக் காரிகை.

இவ்வியாப்பருங்கலப் புறனடையை விரித்துரைத்துக்கொள்க.

வெண்பாவும் வெண்பாவினமும் முடிந்தன.

---

* 'நீர்மலி வேணியோன்' எனவும் 'நீர் மலிந்த நெடுவேணியான்' எனவும் பாடம்.
† 'நான்கடியின் மிக்கவடியால் வரும் வெண்டுறைகள்' எனவும் பாடம்.
‡ 'வழங்குவாரு முளர்' எனவும் பாடம்.

[ஆசிரியப்பா வாமாறு.]

69. அகவ லிசையன வகவன் மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐயென் றிறுமே.

இஃதென்னுதலிற்றோ வெனின், சிறுத்த முறையானே ஆசிரியப்பா வாமாறு பொதுவகையா னுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்: — அகவலோசையைத் தமக்கோசையாக வுடைய நான் காசிரியப்பாவும் ஏ என்றும், ஓ என்றும், ஈ என்றும், ஆய் என்றும், என் என்றும், ஐ என்று மிறும் என்றவாறு.

அகவலென்பதாசிரியம் என்றவாறு. என்னை ?

"அகவ லென்ப தாசிரியப் *பெயரே"

என்றாராகலின். ஏ ஓ ஈ என்புழி ஏ என்னும் அசைச்சொல்லை முன் வைத்தமையால் ஏ என்றிறுவது சிறப்புடைத்து. என்னை ? 'சிறப் புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்' என்பது தந்திர வுத்தியாக லின். 'அகவ லிசையன வகவலவை, ஏ ஓ ஈ ஆய் என் ஐ என்றிறும்' என்னாது 'மற்று' என்று மிகுத்துச் சொல்ல வேண்டியது என்னை ? ஏந்திசை யகவலும், தூங்கிசை யகவலும், ஒழுகிசை யகவலும் என மூன்று வகைப்படும் அகவலோசை யென்பதறிவித்தற்கு வேண்டப் பட்டது.

"நேர்நே ரியற்றளை யான்வரு மகவலு
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலு
மாயிரு தளையுமொத் தர்கிய வகவலு
மேந்த றூங்க லொழுக லென்று
வாய்ந்த பிரனிறை யாகு மென்ப"

என்றாராகலின். †"போது சாந்தம்" என்பது ஏந்திசையகவலோசை. ‡"அணிநிழ லசோகமர்ந்து" என்பது தூங்கிசை யகவலோசை. §"குன்றக் குறவன்" என்பது ஒழுகியலகவலோசை.

---

* 'பாவே' எனவும் பாடம்.
† இச்செய்யுளை 49-ஆம் பக்கத்திற் காண்க.
‡ இச்செய்யுளை 52-ஆம் பக்கத்திற் காண்க.
§ இச்செய்யுளை 60-ஆம் பக்கத்திற் காண்க.

இன்னும் பிறவாற்றான் வருவன:—

“கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி *கேட்டே” (குறுந்தொகை-138.)

இன்னவை பிறவுந் தூங்கிசை யகவலோசை எனப்படும்.

“பொழிலே,
யிரவோ ரன்ன விருளிற் றாகியு
நிலவோ ரன்ன வெண்மண லொழுகியு
மரைசமண நயந்த பந்தர்ப் போலவும்
வரைவா ழியக்கிய ருறைவிடம் போலவும்
†வண்ணனை முற்று தாகியு மொண்ணிழற்
பூவிரி நாற்றமு மன்றியு மோவாக்
குங்குமங் கமழு ‡ மெங்கோன் மேற்றென”

§“வியந்தன ளிருந்து வீணை பண்ணி
நயந்த கீதம் பாடு மென்ப
வயந்த மாகிய பொழிலி னானே”

இன்னவை பிறவு மேந்திசை யகவலோசையெனப்படும்.

“ இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாத
தமிழியல் வரைப்பிற் றனினிது விளங்க
யாப்பிய றானே யாப்புற விரிப்பி
னெழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா மரபி னிவற்றொடு பிறவு
மொழுக்கல் வேண்டு முணர்ந்திசி னோரே”

எனவும், ¶“முழுதுல கிறைஞ்ச முற்றொருங் குணர்ந்தோன்” எனவும் இன்னவையெல்லாம் நூற்பாவகவலோசையாய் ஒழுகிசையகவலோசை எனப்படும். இவை ஏ என்றிற்றவாறு கண்டுகொள்க.

---

* ‘ஒர்ந்தே’ எனவும் பாடம்.

† ‘வண்ண முற்று தாகியு’ மெனவும் பாடம்.

‡ ‘எனுங்கொன் மற்றென’ எனவும் ‘எனுங்கொண்டு மற்றென’ எனவும் பாடம்.

§ ‘வியந்தன ளிருந்து’ எனவும் பாடம்.

¶ இஃது இந்நூற் பாயிரம்.

"பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவ
ளொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமவிற் றகைகுநர் யாரோ"

இஃது ஓ என்றிற்ற வாசிரியம்.

"குவளை யுண்க ணிவள்வயிற் பிரிந்து
பெருந்தோள் கதுப்பொடு விரும்பினை நீவி
யிரங்குமென் றழுங்கல் வேண்டா
செழுந்தே ரோட்டிய வென்றியொடு சென்றீ"

இஃது ஈ என்றிற்ற வாசிரியம்.

"முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ ஞம்ப லறுக்குந்
தண்டுறை யூரன் றணிப்பவு
முண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்"

இஃது ஆய் என்றிற்ற வாசிரியம்.

"அலந்த மஞ்ஞை யாமங் கூவப்
புலந்தது மாதோ புரவலர்க் கிரவென்"

இன்னவை பிறவும் உதையணன்கதையின்கண் என் என்றிற்ற ஆசிரியம் எனக்கொள்க.

"நின்றன னின்று தன்றுணை யொருசிறைப்
பூந்தண் சிலம்பன் றேந்தழை யிவையெனக்
காட்டவுங் காண்டல் செல்லாள் கோட்டிப்
பூண்முலை நோக்கி யிறைஞ்சி
வாண்முக வெருத்தங் கோட்டினண் மடந்தை"

இஃது ஐ என்றிற்ற வாசிரியம்.

என்னென்னும் அசைச்சொல் ஆசிரியத்துள் அருகியன்றி வாரா; வரினுஞ் சிறப்பில வெனக்கொள்க.

"தன்பா லுறுப்புத் தழுவிய மெல்லிய
வின்பா வகவ லிசையதை யின்னுயிர்க்
கன்பா வரைந்த வாசிரிய மென்ப"

என்றோரசை சொல்லி,

"ஏனைச் சொல்லி ளுசிரிய மிறுமே
ஓ ஈ ஆயு மொரோவழி யாகும்"

"என்னென் சொல்லும் பிறவு மென்றிவற்
றன்னவும் பெறாஉ நிலைமண் டிலமே"

என்றார் அவிநயனார்.

" இயற்சீர்த் தாகியு மயற்சீர் விரவியும்
தன்றளை தழுவியும் பிறதளை தட்டும்
அகவ லோசைய தாசிரி யம்மே"

என்றோசை சொல்லி,

"ஏயென் றிறுவ தாசிரி யத் தியல்பே
ஓஆ யிறுதியு முரியவா சிரியம்"

"நின்ற தாதி நிலைமண்டி லத்துள்
என்று மென்னென் றிறுதி வரைவின்றே"

" அல்லா வொற்று மகவலி னிறுதி
நில்லா வல்ல நிற்பன வரையார்"

என்று சொன்னார் *நீர் மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியார்.

ஈ என்றும் ஐயென்று மிறுமென்று இவர்கள் சொற்றிலரா லெனின், அவர்களு மிலேசெச்சவும்மை விதப்புக்களால் உடம்பட்டார்; இந்நூலுடையா ரெடுத்தோதினார்; இது வேற்றுமை.

" அகவ லோசை யாசிரி யம்மே"

என்று பிறருஞ் சொன்னா ரெனக்கொள்க. (கசு)

[ஆசிரியப்பாவினது பெயர் வேறுபா டாமாறு.]

70. நேரிசை யிணைக்குறண் மண்டில நிலைப்பெய
ராகுமண் டிலமுமென் றகவ னான்கே.

இஃதென்னுதலிற்றோ வெனின், அகவலோசையோ டளவடித் தாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளை தழுவி யும், அயற்றளை மயங்கியும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வாராது அயற்பாவடி மயங்கியும், மயங்கா தும், ஐஞ்சீரடியா லருகி வரு மென்றும், நாலெழுத்து முதலா விருபதெழுத்தின்காறு முயர்ந்து பதினேழ் நிலமும் பெற்ற நாற்சீரடியா னடைபெறு மென்றும்

* 'மயேச்சுரர்' எனவும் பாடம்.

வேண்டப்பட்ட வாசிரியப்பாவினது பெயர் வேறுபாடுணர்த்துத லுதலிற்று.

இதன்பொருள்:—நேரிசை யாசிரியமும் நிலைமண்டில வாசிரியமும் என ஆசிரியப்பா நான்காகும் என்றவாறு.

இது மொழிமாற்றுச் சூத்திரம். 'நிலைப்பெயராகு மண்டிலமுமென் றகவனுன்கே' என்றவழி, நிலையென்பதனையும், மண்டில மென்பதனையுங் கூட்டி நிலைமண்டில மென்றும்; பின் அகவ லென்பதனையும் பெயரென்பதனையும் நான் கென் பதனையுங் கூட்டி அகவற்பெயர் நான்காகு மென்றுங் கொள்க.

செவ்விதாகிய இசை யாகலினானும், மிக்கபுகழும், சொல்லும், ஓசையு முடைத்தாகலினானும் நேரிசை யென்பதூஉங் காரணக் குறி. குறளடி யிணைந்துவருதலின் இணைக்குற ளென்பதூஉங் காரணக்குறி. எல்லாவடியு முதனடு விறுதியாக வுச்சரித்தாலு மோசையும் பொருளு மொத்து வருதலின் மண்டில மென்பதூஉங் காரணக் குறி. ஒரு பெற்றியாய் நின் றெல்லாவடியு மொத்து நடத்தலின் நிலைமண்டில மென்பதூஉங் காரணக்குறி. என்னை ?

> "நேரிசை யிணைநிலை மண்டில மண்டில
> மீரிரண் டியல வெண்ணுங் காலை"

என்றார் பிறரும்.

மூன்றகவலோசையானு நான்காசிரியப்பாவு முறழப் பன்னிரண்டாம். நான் காசிரியப்பாவினையும் சிறப்புடைய வேழ்தளை, சிறப்பிலேழ்தளை யெனக் கூறுபடுப்ப ஐம்பத்தாறும். அவை யோசையுந் தளையுங் கூட்டி யுறழ நூற்றறுபத்தெட்டாம்.

'பெயர்' என்ற விதப்பு என்னையெனின், ஒருசா ராசிரியர் வேற்றடி விரவிவந்த வாசிரியங்களை விரவிய லாசிரிய மென்றும், விரவாவதனை இன்னிய லாசிரிய மென்றுஞ் சொல்லுவரென்ப தறிவித்தற் கெனக்கொள்க.

நான் காசிரியத்தினையு மிவ்விருபெயராற் கூறு படுப்ப எட்டாம். ஓசையுந்தளையுங் கூட்டியுறழ முந்நூற்றுமுப்பத்தாறும். பிறவாற்றான் விகற்பிக்கப்பலவாம். (கஎ)

[நேரிசை யாசிரியப்பா வாமாறு.]

71\. அந்த வடியி னயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரி யம்மே.

இஃதென்னுதலிற்றோவெனின், மேலதிகாரம் பாரித்த நான்களுள் நேரிசையாசிரியப்பா வாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்.—ஈற்றடியினயலடி முச்சீரான் வருவது நேரிசையாசிரியப்பா வெனப்படும் என்றவாறு.

வரலாறு:—

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" (குறுந்தொகை-3.)

இஃதிற்றயலடி முச்சீரான் வந்தமையின் நேரிசையாசிரியப்பா.

"சிறு வெள்ளா—யோரே" என்பது தூங்கிசையகவற் சிறப்புடை யியற்சீரான் வந்த நேரிசையாசிரியப்பா.

பிறவும் வந்தவழிக்காண்க.

'சிந்து வந்தன' வென்றது பெயர்த்தும் 'அடி'யென்ற தென்னை யெனின், கைக்கிளைப்பொருண்மே லாசிரியம் வரும்வழி எருத்தடி முச்சீரான் வரப்பெறுவென்பர் *கடியநன்னியார் என்பதறிவித்தற் கெனக்கொள்க. என்னை?

"கைக்கிளை யாசிரியம் வருவ தாயின்
முச்சீ ரெருத்தின் ருகி முடிவடி
யெச்சீ ரானு மேகாரத் திறுமே"

என்றாராகலின்.

"ஈற்றதன் மேலடி யொருசீர் குறையடி
நிற்பது நேரிசை யாசிரி யம்மே"

என்றார் அவிநயனார்.

"இறுசீ ரடிமே லொருசீர் குறையடி
பெறுவன நேரிசை யாசிரி யம்மே"

என்றார் சிறுகாக்கைபாடினியார். (கஎ)

---

* 'தடிநன்னியார்' எனவும் பாடம்.

[இணைக்குறளாசிரியப்பா வருமாறு.]

72. இணைக்குற ளிடைபல குறைந்திறு தியல்பே.

இஃதென்னுதலிற்றோவெனின், இணைக்குற ளாசிரியப்பா வாமா றுணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்:—இணைக்குறளாசிரியப்பா ஈற்றடியின் மேலை யடி இரண்டும் பலவுங் குறைந்திறுத லியல் பெனப்படு மென்றவாறு.

ஈற்றடியின் மேலையடியென்பது அதிகாரம் வருவித்துரைத்தது.

'இயல்பே' என்ற விதப்பான், முதலடியு மீற்றடியும் ஒழித்து ஏனையடி சில ஒருசீரு மிருசீருங் குறைந்து வருவது இணைக்குற ளாசிரியப்பா வெனப்படும் என்றவாறு. வரலாறு:—

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

இது சிறப்புடை நேரொன் றாசிரியத்தளையான்வந்து ஈற்றயலடி யிரண்டும் முச்சீரான் வந்த விணைக்குறளாசிரியப்பா.

"இவளினு மிவளினு மிவள்வருந் தினளே
இவளினும் வருந்தின னிவனே யிவளைக்
கொடுத்தோ னொருவனு முளனே தொடிக்கை
பிடித்தோ னொருவனு முளனே
நன்மலை நாடனு முளனே
புன்னையங் கானற் சேர்ப்பனு முளனே"

இது சிறப்புடை நிரையொன் றாசிரியத்தளையான் வந்த விணைக் குறளாசிரியப்பா.

"குன்றுவாழ் கொடிச்சியர் சீறா ரெடுத்த
வம்மெல் லாகத் தலரிவ ளனைது
நீங்கிய வண்ணமு *நீங்கிப்
பாங்கியற் றமரொடும் வந்து
தாங்கிய வின்பந் தணந்தனை பெரிதே"

இது சிறப்பில் கலித்தளையான் வந்த விணைக்குற ளாசிரியப்பா.

* 'நீங்கிய' எனவும் பாடம்.

" சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா
மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறுமென் றலைதை வருமன்னே
யருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவ
னருநிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லை
பாடு நர்க்கொன் றீகுநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே " (புறம்-235.)

இதனுள் இருசீரு முச்சீரு மிடை யிடையே வந்தன.

பிறவுமன்ன. என்னை?

" இடைபல குறைவ திணைக்குற ளாகும் "

என்றார் அவிநயனார்.

" அளவடி யந்தமு மாதியு மாகிக்
குறளடி சிந்தடி யென்றா யிரண்டு
மிடைவர நிற்ப திணைக்குற ளாகும் "

என்றார் காக்கைபாடினியார்.

" இடையிடை சீர்தபி னிணைக்குற ளாகும் "

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

" ஈற்றயல் குறைந்த நேரசை யிணையா
மேற்ற வடியி னிடைபல குறைந்தன "

என்றார் மயேச்சுரர் (கக)

[அடிமறி மண்டில வாசிரியப்பா வாமாறு.]

73. மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம்.

இஃதென்னுதலிற்றோவெனின், அடிமறி மண்டில வாசிரியப்பா வாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—யாதானு மனப்பட்டதோரடி முதலாகச் சொல்லப்பட்டு முடிவது மண்டிலவாசிரியப்பா வெனப்படு மென்றவாறு. உதாரணம்:—

" மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் *கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே "

இது தன்சீர் நேர்த் தளையான் வந்த மண்டிலவாசிரியப்பா.

" பூங்கட் குறுந்தொடி யாங்குற் றனளே
புனல்சே ரூரன் பொதுமக னன்றே
ஏதின் மாக்கட் கெவனோ கியரோ
போதி பாணநின் பொய்மொழி யெவனோ "

இது சிறப்புடை யியற்சீர்வெண்டளையான் வந்த மண்டில வாசிரியப்பா.

" சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே "

இது சிறப்புடை யாசிரியத்தளையான் வந்த மண்டில வாசிரியப்பா.

* 'கண்ணீர் வரலா னாதே' எனவும் பாடம்.

இவற்றை மனப்பட்டதோர் அடிமுதலாக வுச்சரித்து ஓசையும் பொருளும் பிழையாவாறு கண்டு கொள்க. என்னை?

"உரைப்போர் குறிப்பி னுணர்வகை யின்றி
யிடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்
மதிக்கப் படாதன மண்டில யாப்பே"

என்றார் காக்கைபாடினியார்.

"கொண்ட வடிமுத லாயொத் திறுவது
மண்டில யாப்பென வகுத்தனர் புலவர்"

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

"கொண்ட வடிமுத லாயொத் திறுவது
மண்டில மொத்திறி னிலைமண் டிலமே"

என்றார் அவிநயனார்.

"எவ்வடி யானு முதனடு விறுதி
அவ்வடி பொருள்கொளின் மண்டில யாப்பே"

என்றார் மயேச்சுரர்.

அஃதேல் அடிமுதலாய் வரினென்னுது இறினென வேறு தந்திசைப்பக் கூறியதென்னை? நேரிசை, இணைக்குறள், நிலைமண்டில வாசிரியங்கள், முதலும் இறுதியும் ஒன்றிவந்தால் அவற்றை நேரிசை மண்டில வாசிரியப்பா, இணைக்குறண் மண்டில வாசிரியப்பா, மண்டில வாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா எனப் பெயரிட்டு வழங்குவ ரொருசா ராசிரிய ரென்பதறிவித்தற்கு எனக்கொள்க. என்னை?

"எழுவா யிரட்டித் திறுதி யொன்றாய்
வரினது மண்டில வாசிரி யம்மே"

என்றாராகலின்.

வரலாறு:—

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

இது நேரிசை மண்டிலவாசிரியப்பா.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (உ0)

[நிலைமண்டில வாசிரியப்பா வாமாறு.]

74. ஒத்த வடியின தாகியு மொற்றிற
நிற்பவு மென்னு நிலைமண் டிலமே.

இஃதென்னுதலிற்றோ வெனின், நிலைமண்டில வாசிரியப்பா வாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:—நேரிசை இணைக்குறள் போலாது, எல்லா வடியுஞ் சீரொத்து நின்றவாறே நின்று முடிவனவாகியும், அவ்வாறின்றி யாதேனும் ஓரொற்றிணையு மீறாக நிற்பனவும், என் என்னும் அசைச் சொல்லீறாக நிற்பனவும் நிலைமண்டில வாசிரியப்பா வெனப்படும் என்றவாறு.

'நிற்பவும்' என்றவும்மையான் நாற்பா நிலைமண்டிலமும், பிறவும் ஏ, ஓ, ஈ, ஆ, ஐ என்னும் ஐந்து உயிரும் அல்லாப் பிறவுயிரும் இசைவன வெல்லாம் ஈறாகி வரப்பெறும் எனக்கொள்க.

வரலாறு:—

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந்தொகை-18.)

இஃதெல்லா வடியு மொத்துச் சிறப்புடை நேர்த்தளையான் வந்த நிலைமண்டில வாசிரியப்பா.

"பானலொடு கமழுங் கானலந் தண்கழி
* முத்துக் கன்ன கொத்துதிர் புன்னைக்
கொடுஞ்சினை நெடுங்கோட் டிருந்த பார்ப்பிற்குக்
குண்டுறை யன்ன மீன்கவர்ந்து கொடுக்குந்
தண்டுறை யூரன் †றக்காளெனல் கொடிதே"

இது சிறப்பில் வஞ்சித்தளை யொன்றி வந்த நிலைமண்டில வாசிரியப்பா.

* 'முத்துகுத்தன்ன' எனவும் பாடம்.
† 'தகாளெனல்' எனவும் பாடம்.

இவை யெல்லா வடிபு மொத்து நின்றவாறே நின்று இற்றன. பிறதளையானும் வந்த வாறு கண்டுகொள்க.

“சோண்மாக் கொட்குமென் றஞ்சவ லொன்னார்க்
கிருவிசும்பு கொடுக்கு நெடுவேல் வானவன்
கூட லன்ன குறுந்தொடி யரிவை
யாடமை மென்றோ ணசைஇ நாடொறும்
வடிநுனை யெஃகம் வலவயி னேந்திக்
கைபோற் காந்தட் கடிமல ரவிழும்
மைதோய் சிலம்ப னள்ளிருள் வருமிடம்”

இது மகரவீறாய் வந்த நிலைமண்டிலம். உதையணன்கதையும், கலியாணகதையும் என் என்னும் அசைச்சொல்லாலிற்ற நிலைமண்டிலம்.

“ ஆற்றுச் செலவு மளைமறி நாகமுந்
தாப்பிசைத் தளையுந் தனிநிலைப் பெய்தியோ
டேற்கும் பொருள்கோ ளிவையா மெனலான்”

இது னகரமீறாய் வந்த நூற்பா நிலைமண்டிலம்.

பிறவும் வந்தவழிக்காண்க. என்னை ?

“ ஒத்த வடித்தா யுலையா மண்டிலம்
என்னென் கிளவியை யீறா கப்பெறும்
அன்ன பிறவு மந்நிலைமண் டிலமே”

என்றார் அவிநயனார்.

“ ஒத்த வடியின நிலைமண் டிலமே”

“ என்னெனு மசைச்சொலும் பிறவு மொன்றித்
துன்னவும் பெறூஉ நிலைமண் டிலமே
என்னென் றிறுதல் வரைநிலை யின்றே”

“ அல்லா வொற்றினு மதனினு மிறுதி
யில்லா வல்ல நிற்பன வரையார்”

என்றார் மயேச்சுரர்.

“ நான்கு முதலாக நாலைந் தெழுத்தளவு
மான்ற வகவ லடிக்கென்ப—மூன்றுடைய
பத்தாதி யாகப் பதிற்றிரட்டி யீறாக
வைத்தார் முரற்கைக் கெழுத்து”

"எல்லா நிலமு மடிப்படுத் தீரிரண்டு
நல்லா கமப்பொருளை நண்ணுதலாற்—பல்லோர்க்குஞ்
சீரா சிரியத்தைத் தேர்வேந்த னென்றுரைத்தார்
பேரா சிரியர் பெயர்"

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. (௨௧)

[ஆசிரியத்தாழிசை யாமாறு.]

75. மூன்றடி யொத்த முடிவின வாய்விடின்
ஆன்ற வகவற் றாழிசை யாமே.

இஃதென்னுதலிற்றோ வெனின் ஆசிரியப்பாவுணர்த்தி, இன முணர்த்துவா னெடுத்துக்கொண்டார்; அவற்றுள் இச் சூத்திரந் தாழிசையாமா றுணர்த்துதனுதலிற்று.

இதன் பொருள்:—அடிமூன்றாய்த் தம்முள் ளளவொத்து வருவனவாயின் அவை அமைதிபெற்ற வாசிரியத் தாழிசையும், ஆசிரிய வொத்தாழிசையுமா மென்றவாறு.

சீர் வரையறுத்திலாமையான் எனைத்துச் சீரானும் அடியாய் வரப்பெறும். 'ஆன்ற' என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்து; தனியே வரப் பெறுமாயினு மெனக்கொள்க. என்னை?

"ஒத்த வொருபொருண் மூவடி முடியினஃ
தொத்தா ழிசையா முடன்மூன் றடுக்கின்"

என்றார் மயேச்சுரர்.

அவ்வாறே ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவன வொத் தாழிசை யென்றும் ஒரு பொருண்மேல் ஒன்றாயும், இரண்டாயும், மூன்றடுக்கிப் பொருள் வேறாகியும், மூன்றின் மிக்கனவும் ஆசிரியத் தாழிசை யென்றும் விகற்பித்துக் கூறுவ ரொருசா ராசிரிய ரெனக் கொள்க.

வரலாறு:—

"சாரல் நாடன் சாய்சோ லிடையன்
நேர்கொண் முல்லை நெற்றி வேய
வாரான் வாரா னெற்றே யெல்லே;

"அத்தூண் ணாடை யாய்கோ விடையன்
னற்கார் முல்லை நெற்றி வேய
வாரான் வாரா னெற்றே யெல்லே;

"துவருண் ணாடைச் சாய்கோ விடையன்
கவர்கார் முல்லை நெற்றி வேய
வாரான் வாரா னெற்றே யெல்லே"

இவை யொரு பொருண் மேன் மூன்றடுக்கி நாற்சீரடியான் சிறப்புடை யாசிரிய நேர்த்தளையான் வந்த வாசிரிய வொத்தாழிசை.

"கன்று குணிலாக் *கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ;

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ;

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
† எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ" (சிலப்பதிகாரம்-ஆய்ச்சியர்குரவை.)

இவை இயற்சீர்ச் சிறப்புடை வெண்டளையான் வந்த வாசிரிய வொத்தாழிசை.

"நீடற்க வினையென்று நெஞ்சி னுள்ளி
நிறைமலரஞ் சாந்தமொடு புகையு நீவி
வீடற்குந் தன்மையினான் விரைந்து சென்று
விண்ணோடு மண்ணினிடை நண்ணும் பெற்றி
பாடற்கும் பணிதற்குந் தக்க தொல்சீர்
பகவன்ற னடியிணையைப் பற்று நாமே"

இஃது ஒருபொருண்மே லொன்றாய், எண்சீர்க் கழிநெடிலடி யாற் சிறப்புடைக் கலித்தளையாற் றனியே வந்த வாசிரியத்தாழிசை.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ண நின் னிரைகழ றொழுதனம்"

இது சிறப்புடையாசிரியத் தளையான் வந்த ஆசிரியத் தாழிசை.

---

* 'தனியுகுத்த' எனவும் பாடம். † 'எல்லை' எனவும் பாடம்.

இனி யொருபொருண்மே லிரண்டாகியும், மூன்றாகியும், பொருள் வேறாகியும், அதின்மேன் மிக்கனவும் வந்தவழிக் கண்டுகொள்க. ஆசிரியத்தாழிசை யெனினும் ஆசிரியவொத்தாழிசையெனினு மிழுக்காது. என்னை?

"அடிமூன் றொத்திறி னொத்தா ழிசையே"

என்றார் சிறுகாக்கை பாடினியார். (உஉ)

[ஆசிரியத்துறை யாமாறு.]

76. கடையத னயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
யிடையடி குறைநவு மகவற் றுறையே

என்பது சூத்திரம். இஃதென்னுதலிற்றோவெனின், ஆசிரியத்துறை யாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—ஈற்றயலடிகுறைந்து நான்கடியாய் வருவனவும், ஈற்றயலடிகுறைந்து இடைமடக்காய் நான்கடியாய் வருவனவும், * இடை யிடை குறைந்து நான்கடியாய் வருவனவும், இடை யிடை குறைந் திடைமடக்காய் நான்கடியாய் வருவனவும் எல்லா மாசிரியத் துறையெனப்படும் என்றவாறு.

'நடுவடிமடக்காய்' என்பதனை யொருகா லிருதலையுங் கூட்டி மத்திமதீபமாக வுரைக்கப்படும். சீர்வரையறை யின்மையின் எனைத்துச் சீரானு மடியாய் வரப்பெறும். 'நடையவும்' என்ற மிகையான் முதலயலடி குறைந்தும், நடுவீரடி குறைந்தும், மிக்கும் வருவனவும் ஆசிரியத்துறையாம். அல்லது ஓரடி குறைந்துவருவன ஆசிரிய நேர்த் துறையென்றும், ஈரடி குறைந்துவருவன ஆசிரிய விணைக்குறட்டுறை யென்றுஞ் சொல்லப்படும்.

வரலாறு:—

"கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்றுபோக
நரையுருமே றுங்கைவே லஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ"

எனவும்,

* 'இடைகுறைந்து' எனவும் பாடம்.

"வானகச் சோலை வரையத ரெம்முள்ளி வருதி ராயின்
யானைகண் டார்க்கு மரியேறு நும்மஞ்சி யகன்று போக
யானையோ நுங்கைவே லஞ்சுக நும்மை
வானர மகளிர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ"

எனவும் இவை யீற்றயலடிகுறைந்து இயற்சீர்ச் சிறப்புடைவெண் டளையானும், சிறப்பில்வெண்டளையானும் வந்த வாசிரியநேர்த்துறை.

"வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேஎய் வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித் தணந்தோன் யாரே
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி வந்தும்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து படர்ந்தோனன்றே"

எனவும்,

"கண்ணியோர் * கண்ணே வலத்தசைத்த காரி
கமழ்தண்டார் காமம் புனைபவே காரி
பண்ணியோர் † பாட லெழுப்பண்ணி காரி
‡ பணைமுழவின் சீர்தயங்கப் பாடானே காரி
சீர்தயங்கத் தார்தயங்கச் செய்யாத § செய்திவ
ணீர்தயங்கு கண்ணினளாய் நிற்கவோ காரி
நினக்கினியார்க் கெல்லா மினையையோ காரி"

எனவும் இவை யீற்றயலடிகுறைந் திடை மடக்காய் நான்கடியாய் வெண்டளையான் வந்த வாசிரிய நேர்த்துறை.

$ "கொன்றூர்ந்தலமந்த * * *
* * * கற்பன்றே"

என்பது முதலடியு மூன்றாமடியும் பதினான்கு சீராய், அல்லாத வடியிரண்டும் பதினாறு சீராய் இடையடிகுறைந்து வந்த வாசிரிய விணைக்குறட்டுறை.

---

* 'கண்ணி' எனவும் பாடம்.
† 'பாட லெழுப்பண்ணி' எனவும் பாடம்.
‡ 'பணைமுழவஞ்சீர்' எனவும் பாடம்.
§ 'செய்தவள்' எனவும் பாடம்.
$ இச்செய்யுளை 81-ஆம் பக்கத்திற் காண்க.

"இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
அரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்த திளவேனில்"

எனவும்,

"போதுறு முக்குடைப் பொன்னெயி லொருவன்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தீதுறு தீவினை யிலரே."

எனவும் இவை யிடையிடை குறைந் திடைமடக்காய் வந்த வாசிரிய விணைக்குறட்டுறை.

"வரிகொ ளரவு மதியுஞ் சுழலக்
கரிகா லேந்தி யாடுமே
கரிகா லேந்தி யாடு மிறைவன்
புரிபுன் சடைமேற் புனலும் பிறழ்வே"

இது முதலயலடி யொருசீர் குறைந்து, ஏனையடிமூன்றும் நாற்சீரடியாய், இடைமடக்காய் வந்த வாசிரிய நேர்த்துறை.

"பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கனைகழற்கா லொருபாற் றோன்றும்
நீடு குழலொருபா னீண்ட சடையொருபால்
வீடிய மானி னதளொருபான் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுருவ மாண்பெண்ணென் றறிவார் யாரே"

இது நடுவிரு சீர்குறைந்து மற்றை யிரண்டடியு மறுசீரான் வந்த வாசிரிய விணைக்குறட்டுறை.

"கோடல் விண்டு கோப மூர்ந்த கொல்லைவாய்
மாடு நின்ற கொன்றை யேறி மௌவல் பூத்த பாங்கெலாம்
ஆடன் மஞ்ஞை யன்ன சாய லஞ்சொல் வஞ்சி மாதராய்
வாடன் மைந்தர் தேரும் வந்து தோன்றுமே"

இது நடுவிரண்டடியு மிக்குவந்த வாசிரியத்துறை.

பிறவும்வந்தவழிக் காண்க.

மடக்கு மூவகை; அடிமடக்கு, சீர்மடக்கு, அசைமடக்கு என. என்னை?

" இரண்டா மடியை யினிதினின் மடக்கலும்
இரண்டா மடியி னிறுதிச்சீர் மடக்கலும்
இரண்டா மடியி னீற்றசை மடக்கலும்
இவ்வா றென்ப மடக்குத லுனே."

என்றாராகலின்.

வரலாறு:—

"வண்டுளர் பூந்தார்" எனவும் "இரங்குகுயின்" எனவும் இவை யடிமடக்கு. "கண்ணியோர் கண்மேண" என்பது சீர்மடக்கு.

" மூத்தரும்பிப் பைம்பொன் மலர்ந்து முகுகுயிர்த்துத்
தொத்தலருங் கானற் * றுறையேந்
துறைவழி வந்தெனது தொன்னலனு நாணு
நிறைவளையும் வெளவி † னினையா னச்சேர்ப்பன்"

இஃது அசை யிடைமடக்கு.

பிறவும் வந்தவழிக் காண்க. என்னை ?

" அடித்தொகை நான்குபெற் றந்தத் தொடைமேற்
கிடப்பது நாற்சீர்க் கிழமைய தாகி
யெடுத்துரை பெற்ற விருநெடி லீற்றின்
அடிப்பெறி ஞசிரி யத்துறை யாகும்"

" அளவடி யைஞ்சீர் நெடிலடி தம்மு
ளூறழத் தோன்றி யொத்த தொடையாய்
விளைவது மப்பெயர் வேண்டப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

" எண்சீ ரடியீற் றயலடி குறைநவும்
ஐஞ்சீ ரடியினும் பிறவினு மிடையொன்ற
வந்த தொடையா யடிநான் காகி
யுறழக் குறைநவுந் துறையெனப் படுமே"

என்றார் மயேச்சுரர்.

" நாற்சீ ரடிநான் கந்தத்தொண்ட டைந்தவும்
ஐஞ்சீ ரடிநடந் துறழடி குறைந்தவும்

---

* 'துறையெம்' எனவும் பாடம்.
† 'னினையானஞ் சேர்ப்பன்' எனவும் பாடம்.

அறுசீ ரெழுசீர் வலிய நடந்தவும்
எண்சீர் நாலடி யீற்றடி குறைந்தும்
தண்சீர்ப் பாதியி னடிமுடி வுடைத்தாய்
அந்தத் * தொடையிவை யடியா நடப்பிற்
குறையா வுறுப்பினது துறையெனப் படுமே"

என்றார் அவிநயனார். (௨௨)

[ஆசிரியவிருத்தம் ஆமாறு.]

77. கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவ லாகும்.

இஃதென்னுதலிற்றோ வெனின், ஆசிரியவிருத்த மாமா றுணர்த் துத லுதலிற்று.

இதன்பொருள்:—கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அள வொத்து முடியின், அஃது ஆசிரியவிருத்தமெனப்படும் என்றவாறு.

'அழியா மரபினதகவல்' என்று ஆசிரியப்பாவினைச் சிறப்பித்துச் சொல்லவேண்டியதென்னை யெனின், விதப்புக்கிளவிவேண்டியது விளக்குமாகலின், ஒரு சாராசிரியர், அகப்பாவகவல், புறப்பாவகவல், நூற்பாவகவல், சித்திரவகவல், உறுப்பினகவல், ஏந்திசையகவல் என்று ஆறுவிகற்பிற் றகவலோசை என்பர் என்பது அறிவித் தற்கு வேண்டப்பட்டது. என்னை?

† "வெண்பா மூன்று மகவ லாறும்
பண்புறத் தெரியும் பகுதி மற்றது
நன்றறி புலவர் காட்டின ரென்ப"

எனவும்,

"ஆறு வகையி னகவலொடு கொள்ளாது
வேறுபட வரினது வெண்பா வாகும்"

எனவும்,

"அவைதாம்,
அகப்பா வகவல் புறப்பா வகவல்
நூற்பா வகவல் சித்திர வகவல்

---

* 'தொடையின வவ்வடி' எனவும் பாடம்.

† 'அகவ லாறும் வெண்பா மூன்றும்' எனவும் பாடம்.

உறுப்பி னகவ லேந்திசை யகவலென்
றவ்வா றென்ப வறிந்திசி னோரே"

எனவுஞ் சொன்னாராகலின்.

அவற்றுள், அகப்பாவகவலாவன—அகப்பொருளைத்தழுவி, ஐயீ ருறுப்பினவாய், வஞ்சி விரவாது வந்து முடியு மாசிரியப்பா வெல்லா மெனக்கொள்க. என்னை?

"அகப்பா வகவல்,
ஐயீ ருறுப்பி னாசிரி யம்மே"

"அவைதாம்,
முன்னும் பின்னும் தூங்க லின்றிச்
சென்னெறி மருங்கிற் சென்றிசைக் கும்மே"

என்றாராகலின்.

புறப்பாவகவலாவன—பாடாண்டுறைமேற்பாடும் ஆசிரியமெனக் கொள்க. என்னை?

" புறப்பா வகவல் பொருந்தக் கூறிற்
பாடாண் பகுதி நாடுங் காலை "

என்றாராகலின்.

நூற்பாவகவலாவன—விழுமிய பொருளைத் தழுவிய சூத்திர யாப்பினவாய் வருவன. என்னை?

"நூற்பா வகவ லுணங்க நாடின்
சூத்திரம் வகுத்த யாப்பின வாகி
யிசைவரம் பின்றி விழுமியது பயக்கும்"

என்றாராகலின்.

சித்திரவகவலாவன—சீர்தொறு மகவி வருவன. என்னை?

"சித்திர வகவல்,
சீர்தொறு மகவுஞ் சித்திர முடைத்தே

என்றாராகலின்.

உறுப்பினகவலாவன—ஒரு பொருண்மேற் பரந்திசைப்பன. என்னை?

"உறப்பி னகவ லொருபொரு ளுதலி
யிசைபரந் தியலு மியற்கைத் தென்ப"

என்றாராகலின்.

ஏந்திசையகவலாவன—எழுத்திறந்திசைப்பது. என்னை?

"ஏந்திசை யகவ லெழுத்திறந் திசைக்கும்
பாங்கறிந் துணர்ந்தோர் பகருங் காலை"

என்றாராகலின்.

அல்லதூஉம் 'அந்து' என விகற்பித்தவதனால், அடிமறியாய் வருவனவற்றை ஆசிரிய மண்டிலவிருத்த மென்றும், அடிமறியாது நிற்பனவற்றை ஆசிரிய நிலைவிருத்த மென்றும் வழங்குவ ரொருசாராசிரிய ரெனக்கொள்க.

வரலாறு:—

"விடஞ்சூ ழரவி னிடைநுடங்க *மினல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் †காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்க ணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் ‡தன்கைத் தண்ணு
[மையே"

இது அறுசீர்க் கழி நெடிலடியான் வந்த சிறப்புடையாசிரிய விருத்தம்.

"படையொன்று மில்லை யணியில்லை சுற்ற
மதுவில்லை பற்ற மினியொன்
றடைகின்ற தில்லை யமிழ்துண்ட தில்லை
யறிவென்று மெண்ணி யறியார்
புடைநின்று நான்ற மணிமாலை போக
நிலவீசு மாக முறநீள்
குடையென்ற தொன்று மதன்மேல தொன்று
முடையார்க்கி தென்ன குணனே"

இது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த சிறப்புடை யாசிரிய விருத்தம்.

---

* 'மின்வாள்' எனவும் பாடம்.

† 'காளிம்பன்' எனவும் பாடம்.

‡ 'தந்தை' எனவும் பாடம்.

"அருகிவரும் இனிமொழியா லமிழ்தந் தோற்றி
அதன்பொழில்வா யுளைப்பரவி யடைந்த மாந்தர்
கருதியதே கொடுத்துயர்ந்த காட்சி நோக்கிக்
கற்பகத்தோ டொப்புரைப்பர் சிலர்வாய் வல்லார்
வருதளிரி னறுமேனி மயிலஞ் சாயல்
வாணுதலாட் கரிதில்லை யதற்க னுண்டென்
றொருதலையா யொவ்வாமை யுரைப்பர் யானே
வொளியியக்க விருதிறமு முடன்பட் டேனே"

இது சிறப்புடைக் கலித்தளை தட்டு எண்சீர்ச் சிறப்புடைக் கழிநெடிலடியான் வந்த வாசிரிய நிலைவிருத்தம். எண்சீரின் மிக்க வொன்பதின் சீராலும் பதின்சீராலு மாகிய விடையாகு கழிநெடிலடியா லும், பதினொருசீர் முதலாகிய கடையாகு கழிநெடிலடியாலும் வந்த வாசிரிய நிலை விருத்தங்கள் அடியோத்தினுட் கண்டுகொள்க.

இனியாசிரிய மண்டில விருத்தம் வருமாறு:—

"செங்கயலுங் கருவிளையுஞ் செவ்வேலும் பொருகணையுஞ்
செயிர்க்கு நாட்டம்
பங்கயமு மிலவலரும் பனிமுருக்கும் பவளமுமே
பழிக்குஞ் செவ்வாய்
பொங்கரவி னிரும்படமும் புனைதேரும் பொலிவழிக்கும்
புடைவீங் கல்குல்
கொங்கிவருங் கருங்கூந்தற் கொடியிடையாள் வனமுலையுங்
கூற்றங் கூற்றம்"

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் அடிமறியாய்க் கூறப்படு தலால் அடிமறிமண்டில வாசிரிய விருத்தம்.

"வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரக்கும்
விறல்விசய னகத்தும் வெள்ளம் பரக்கும்
கறைவிரவு நஞ்சுண்டு கண்டங் கறுக்குங்
கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்
பொறிவிரவு பூண்முலையாள் போகத் தனுகும்
பொதுநீக்கித் தனையடைந்தார் போகத் தனுகும்
நெறிவிரவு காஞ்சிநெறிக் காரைக் காட்டான்
நிழலடைந்தார் தம்மைநெறிக் காரைக் காட்டான்"

"இலங்கா ரணமாக நீர்க்கங்கை யேற்றான்
நீண்டதா ளாலங்கோர் நீர்க்கங்கை யேற்றான்
சலங்கா ரணமாகச் சங்குவாய் வைத்தான்
தாயலா ளவியநஞ் சங்குவாய் வைத்தான்
துலங்காச்சீர்த் தானவரைத் துன்னத்தா ளட்டான்
துன்னலார்க் கின்னயிர்தந் துன்னத்தா ளட்டான்
இலங்கா புரத்தார்தங் கோமானை யெய்தான்
* எய்தாதார் நெஞ்சத்து ளொன்றுன்று மெய்தான்"

இவை எல்லாவடியு முதனடி விறுதியாகச் சொன்னாலும் பொருள்கொண்டு நிற்குமாகலின் ஆசிரியமண்டில விருத்தம். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக்காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறுல் சீரகவல்
விருத்தங் கழிநெடி லன்கொத் திறுவது மெல்லியலே"
—யாப்பருங்கலக் காரிகை.

இக்காரிகையை விரித்துரைத்துக்கொள்க.

"அறுசீர் முதலா நெடியவை யெல்லா
நெறிவயிற் றிரியா நிலத்தவை நான்காய்
விளைகுவ தப்பா வினத்துள விருத்தம்"

என்றார் காக்கைபாடினியார்.

"அறுசீ ரெழுசீ ரடிமிக வருஉ
முறைமைய நாலடி விருத்த மாகும்"

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

"அறுசீ ரெழுசீ ரடிமிக நின்றவும்
குறைவி லன்கடி விருத்த மாகும்"

என்றார் அவிநயனார்.

"ஆறு முதலா வெண்சீர் காறும்
கூறு நான்கடி யாசிரிய விருத்தம்"

என்றார் பிறைமுடி யோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்.

* 'எத்தாதார்' எனவும் பாடம்.

ஆசிரியத்தினமாகிய தாழிசை, துறை, விருத்தமென்னும் மூன்றும்; ஆசிரிய வொத்தாழிசை, ஆசிரியத்தாழிசை, ஆசிரிய நேர்த் துறை, ஆசிரிய விணைக்குறட்டுறை, ஆசிரிய நிலைவிருத்தம், ஆசிரிய மண்டிலவிருத்தம் என்று கூறுபடுப்ப வாறும். அவை சிறப்புடையேழ் தளையாலும் சிறப்பி லேழ்தளையாலுங் கூறுபடுப்ப எண்பத்துநான்காம். பிறவாற்றானும் விகற்பிக்கப் பலவாம். அவற்றில் ஓரடி குறைந்து வருவனவற்றை நேரிசையாசிரியப்பாவி னினமென்றும், ஈரடி குறைந்து வருவனவற்றை யிணைக்குறளாசிரியப்பாவின் இனமென்றும், அடிமறியாய் வருவனவற்றை மண்டிலவாசிரியப்பாவினின மென்றும், அடிமறியின்றியே நின்றவாறே நின்று பொருள் பயப்பன நிலைமண்டில வாசிரியப்பாவி னினமென்றும் இவ்வாறே யொருபுடை யொப்புமை நோக்கிச் சார்த்தி வழங்கப்படுமெனக் கொள்க. என்னை?

"அகவற் கினமாய வாறிணையு மீரேழ்
பகுதித் தளையவற்றாற் பார்க்கத்—தொகுதிக்க
ணெண்பத்து நான்கா மினியவற்றின் மிக்கனவும்
பண்புற்றுப் பார்த்துக் கொளல்." (உஅ)

ஆசிரியப்பாவு மினமும் முடிந்தன.

[கலிப்பாவாமாறு.]

78. துள்ள லிசையன கலிப்பா மற்றவை
வெள்ளையு மகவலு மாய்விளந் திறுமே.

இஃதென்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே பொது வகையாற் கலிப்பாவுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:— துள்ளலோசையைத் தமக்கோசையாக வுடைய *வெல்லாங் கலிப்பா; அவை வெண்பாவு மாசிரியப்பாவுமா யிறுமென்றவாறு.

"பிறிதி னடப்பினும் வஞ்சியுங் கலியு
மிறுதி மருங்கி னசிரி யம்மே."

"கலியே வெண்பா வாயினும் வரையார்"

என்றாராகலின்.

---

* 'கலிப்பா வெல்லாம்' எனவும் பாடம்.

'துள்ளலிசையன கலியே—வெள்ளையு மகவலு மாய்விளைந் திறும்' என்றானும் சார்ச்சியால் 'அவை' என்பது பெறலாம்; 'மற்றவை' யென்று மிருத்துச் சொல்லவேண்டிய தென்னை? ஏந்திசைத் துள்ளலும், அகவற்றுள்ளலும், பிரிந்திசைத்துள்ளலுமென மூன்று வகைப்படும் துள்ளலோசை யென்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது. 'வெள்ளையு மகவலுமாய்' என்பதனை வெண்பாவு மாசிரியப்பாவுமாய் விராயும், ஆசிரியப்பாவும் வெண்பாவுமாய் விராயு மிறுமென்று கொள்ளாமோவெனின், கொள்ளாம். என்னை? பிறநூலு ளிவ்வாறு சொல்லிற்றிலராகலானும், பிறநூன் முடிந்தது தானுடம் படுதல் என்பதாகலானும், பலபொருட்கேற்பினல்லது கொள்ளல் என்பது தந்திரவுத்தியாகலானும், வெண்பாவாயும் இறும் ஆசிரியமாயுமிறும் என்று வேறுவேறே கூட்டித் தீபகப்பொருளாகக் கொள்ளப்படும். வெள்ளையுமகவலுமாயிறும் என்றது 'விளைந்திறும்' என்று மிருத்துச் சொல்லவேண்டியதென்னை? ஒருசார்க் கொச்சகக்கலிப்பாக்கள் கலியடியானே யிறுவனவு முளவென்பதூஉம், ஆசிரிய நேர்த்தளையாற் கலிப்பா மிக்கு வாரா வென்பதூஉ மறிவித்தற்கு வேண்டப்பட்டது. 'விதப்புக்கிளவி வேண்டியதுவிளைக்கும்' என்பதாகலின்.

இனியம்மூன்றோசையானுஞ் செய்யுள் வருமாறு:—

"முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினனா தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுறியா வெதிரியகா தியையெறியா
திருமலரா யருவினராய் சிலவுவர்சோ தியினிடையே"

இஃதேந்திசைத்துள்ளலோசை.

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

இஃதகவற்றுள்ளலோசை.

"மணிகிளர் நெடுமுடி வானவனும் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைசிவந்த வையன்ன *நொப்பறைய சிறையன்ன
யிரைநயந் திரைகூரு மேமஞ்சார் துறைவகேள்"

இஃது பிரிந்திசைத்துள்ளலோசை.

---

* 'நொவ்வுப்பறை' எனவும், 'நொய்ப்பறை' எனவும் பாடம்.

"முற்றொட்டு *மறவினையை முறைமையான் முயலாதார்
சொற்றொட்ட வாய்மையாற் சோர்வுமங் குளதாமோ
தொன்மைக்கண் வினைசெய்யார் தப்புரவிற் றிரங்குவார்
பன்மைக்கண் ணுள்ளங்தேர் பயமின்றிக் கழிவாரே
செல்வதூஉம் வருவதூஉஞ் சிறந்தாங்குத் தமக்கெறிந்து
நல்லறமே புரிவதூஉ நல்லார்கள் கடனன்றே"

இன்னவை பிறவும் பிரிந்திசைத்துள்ள லோசையால் வந்தன வெனக்கொள்க.

சுரிதகத்திறமாறு இனிக்காட்டுங் கலிப்பாவினுட்கண்டு கொள்க. என்னை?

"வகுத்த வுறுப்பின் வழுவுத லின்றி
யெடுத்துயர் துள்ள லிசையன வாகல்
கலிச்சொற் பொருளெனக் கண்டிசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

"ஆய்ந்த வுறுப்பி னகவுத லின்றி
யேந்திய துள்ள லிசையது கலியே"

என்றார் அவிநயனார்.

"சீரிற் கிளர்ந்த தன்றளை தழுவி
நேரீற் றியற்சீர் சேரா தாகித்
துள்ள லோசையிற் றள்ளா தாகி
யோதப் பட்ட வுறுப்புவேறு பலவாய்
யேத மில்லன கலியெனப் படுமே"

என்றார் நீர்மலிந்த வார்சடையோன் †பேர்மகிழ்ந்த பேராசிரியர்.

[கலிப்பாவின் வகையுமாறு.]

79. ஒத்தா ழிசைக்கலி வெண்கலிப் பாவே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்.

இஃதென்னுதலிற்றோவெனின், துள்ளலோசைத்தாய், நேரீற் றியற்சீரு நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது, நிரைமுதலா

* 'அறிவினை' எனவும் பாடம்.
† 'மயேச்சுரர்' எனவும் 'கறைமிடற்றோன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்' எனவும் பாடம்.

கிய வெண்பாவுரிச்சீர் மிக்கு, நேரடித்தாய்த், தன்றளையும் அயற்றளையுந் தட்டு வருமென்றும், புறநிலைவாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறூஉவு மென்னும் அப்பொருண்மேல் வாராது, பதின்மூன்றெழுத்து முதலாக விருபதெழுத்தின்காறும் உயர்ந்த எட்டுநிலமும் பெற்று, அளவடிமிகுத்து வரும் கலிப்பாவி னது பெயர்வேறுபாடும் அவற்றதெண்ணு முணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:— ஒத்தாழிசைக்கலியும், கலிவெண்பாவும், கொச்சகக்கலியும் என மூன்று வகைப்படுங் கலிப்பா வென்றவாறு.

அளவிற்பட்டு ஆழமுடைத்தாகிய பொருளைச் சொல்லுதலானும் ஓதப்பட்ட கலிப்பாவினது பொது இலக்கணத்தோடு ஒத்து ஆழமுடைத்தா யிசைத்தலானும், ஒத்துத் தாழ்ந்த புகழிற்றாகலானும் ஒத்தபொருண்மேல் மூன்றாய்த் தாழ்ந்திசைக்கும் ஒத்தாழிசையைத் தனக்குச் சிறப்புறுப்பாக வுடைத்தாகலானும் ஒத்தாழிசைக்கலி யென்பதூஉங் காரணக்குறி. கலியாய்வந்து ஈற்றடிமுச்சீராய் வெண்பாவேபோன்றிறுதலானும், வெண்பாவினிற் சிறிது வேறுபட்டுக் கலித்தவோசைத்தாகலானும் கலிவெண்பா வென்பதூஉம் வெண்கலிப்பாவென்பதூஉங் காரணக்குறி. கொச்சகம்போல மிக்குங் குறைந்தும் பிறழ்ந்துறழ்ந்துங் கிடக்கு முறுப்பிற்றாகலானும், கலியோசைக்குச் சிறப்பில்லாத நேரீற்றியற்சீரை யுட்கொண்டு நிற்றலானும் கொச்சகக் கலிப்பாவென்பதூஉங் காரணக்குறி. சிறப்பில்லாததனை ஒரு சாரார்கொச்சையென்றும் கொச்சகமென்றும் வழங்குவர் எனக் கொள்க. ஒத்தாழிசைக்கலி சிறப்புடைத்தாகலின் முன்னர்வைக்கப் பட்டது. வெண்கலி யளவிற்படாத வமைதித்தாய் ஈற்றடி முச்சீராக லின் இடைக்கண்வைக்கப்பட்டது. கொச்சகக்கலி சிறப்பின்மையின் இறுதிக்கண்வைக்கப்பட்டது எனக்கொள்க. என்னை?

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்"

என்றார் நத்தத்தனார்.

"வெண்கலி யொத்தா ழிசைக்கலி கொச்சக
மென்றொரு மூன்றே கலியென மொழிப"

என்றார் காக்கைபாடினியார்.

"கொச்சகம் வெண்கலி யொத்தா ழிசையென
முத்திற மாகும் கலியின் பகுதி"

என்றார் சங்கயாப்புடையார்.

இவர்களும் ஒருபயனோக்கி முறை பிறழவைத்தார்.

ஒத்தா ழிசைக்கலி வெண்கலிகொச் சகமென
முத்திறத் தான்வரும் கலிப்பா வென்ப"

என்றா அவிநயனார்.

"ஒத்தாழி சைக்கலி வெண்கலி கொச்சகம்
முத்திறத் தடங்கு மெல்லாக் கலியும்"

என்றார் பெண்ணொருபாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்.

[ஒத்தாழிசைக்கலியின் வகையாமாறு.]

80. நேரிசை யம்போ தரங்கம் வண்ணகமென்
றோதிய மூன்றே யொத்தாழி சைக்கலி.

இஃதென்னுதலிற்றோ வெனின், பொதுவகையாற் கலிப்பா வினைத் தொகுத்தும் வகுத்துஞ் சொன்னார். விரித்துணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்றுள் இஃது ஒத்தாழிசைக்கலிப்பா வின் பெயர் வேறுபாடும் எண்ணும் உணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—நேரிசையொத்தாழிசைக்கலிப்பாவும், அம் போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவும், வண்ணகவொத்தாழி சைக்கலிப்பாவுமென மூன்று வகைப்படும் ஒத்தாழிசைக் கலிப்பா என்றவாறு.

'ஓதிய' என்று மிகுத்துச் சொல்லவேண்டியதென்னை? பொது வகையா லொத்தாழிசைக் கலிப்பாவினுள் நேரீற்றியற்சீர் புகப்பெறா வென்று சொல்லப்பட்டதாயினும் கலியொலிவழுவாது வருந் தரவு தாழிசைகளுள் வரப்பெறா; வேற்றொலியால் வரும் அம்போதரங்க வுறுப்பினுள்ளும், ஒரு சார் அராகத்துள்ளும் வரப்பெறும் என்று மயக்கந் தீர்த்தற்கு வேண்டப்பட்டது.

தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்றளவிற்பட்ட நான் குறுப்பினாற் கூறப்படுதலானும், உடன்பட்ட வொலியிற்றாகலானும்,

* நுண்பொருள்மேற் சொல்லப்படுதலானும், மிக்க †புகழிற்றாகலா னும், நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா வென்பதூஉங் காரணக் குறி.

அழுகிற்றாயொழுகித் தரங்கப்பட்ட வுறுப்பிற்றாகலானும், உயர்ந் தெழுந்து ஒருகாலைக் கொருகால் கலிசார்ந்து சுருங்கித் தரங்கப் பட்ட நீர்த்திரைபோலும் உறுப்புக்களை யுடைத்தாகலானும், அம் போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா வென்பதூஉங் காரணக்குறி. அம்போதரங்கம் என்பது நீர்த்திரையைச் சொல்லுமோவெனிற் சொல்லும்; அம்புத்தரங்கம் என்னும் வடமொழியை அம்போதரங் கம் என்று திரித்துச் சொன்னாராகலின்.

தேவரது விழுப்பமும் வேந்தரது புகழும் வண்ணித்து வருத லானும், வாராநின்ற வொலியிற்றிரிந்து வேறொரு வண்ணத்தாற் சொல்லப்பட்ட முடுகியலடி யுடைத்தாகலானும் வண்ணக வொத்தா ழிசைக்கலிப்பா வென்பதூஉங் காரணக்குறி.

ஒன்றுக்கொன்று ஒரோவுறுப்பு மிக்கு வருதலின் நேரிசை யம்போதரங்கம் வண்ணகம் என்று இம்முறையே வைக்கப் பட்டது. (உஎ)

[வெண்கலிப்பா, கொச்சகக் கலிப்பா இவற்றின் வரையறை யாமாறு.]

81. வெண்கலி யொன்றே கொச்சக மைந்தெனப்
பண்பறி புலவர் பகுத்துரைத் தனரே.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், வெண்கலிப்பாவையும், கொச் சகக் கலிப்பாவையும் வரையறை யுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—கலிவெண்பா வொன்றெனவும், தரவு கொச் சகக்கலிப்பாவும், தரவிணைக் கொச்சகக்கலிப்பாவுஞ், சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவும், பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவும், மயங் கிசைக் கொச்சகக்கலிப்பாவுமென வைந்து வகைப்படுங் கொச்சகக் கலிப்பாவென விவ்வாற்றாற் கூறுபடுத்துச் சொன்னார் புலத்துறை முற்றிய பொய்தீர்புலவர் என்றவாறு.

---

* 'நுண்பொருள்பட' எனவும் பாடம்.
† 'பொருளிற்றாகலானும்' எனவும் பாடம்.

'பண்பறிபுலவர்' என்று சிறப்பித்தவதனால் நேரீற்றியற்சீர் வருந் தாழிசைக்கலிப்பா வுளவாயினும், ஒருபுடையொப்புமை நோக்கிக் கொச்சகக் கலிப்பாவின்பாற்படுத்து வழங்கப்படும் எனக்கொள்க.

ஏந்திசைத்துள்ளலும், அகவற்றுள்ளலும், பிரிந்திசைத்துள்ளலும் என்னு மிம்மூன்று துள்ளலோசையானும் ஒன்பது கலிப்பாவினையுங் கூறுபடுப்ப விருபத்தேழாம். ஒன்பது கலிப்பாவினையும் ஆசிரிய நேர்த்தளை இரண்டொழித்துச் சிறப்புடை யாறுதளையானுஞ் சிறப்பிலாறுதளையானுங் கூறுபடுப்ப நூற்றெட்டாம். ஓசையுந் தளையுங் கூட்டியுறழ முந்நூற்றிருபத்து நான்கு கலிப்பாவாம். கலிவெண்பாவினுள்ளுங் கொச்சகக்கலிப்பாவினுள்ளும் ஆசிரிய நேர்த்தளையிரண்டு மருகிவரப்பெறுமென் றவற்றொடுகூட்டிச் சொல்லுங்கால் முந்நூற்றறுபது கலிப்பாவாம். பிறவாற்றானும் விகற்பிக்க எழுநூற்றிருபதாம். என்னை ?

"ஒத்தா ழிசைக்கலியென் றோதிய வாறினையு
முத்திறத் தோசையின் முன்முரணி—வைத்து
வழுவற்ற வாறிரண்டு வான்றளையான் மாற
எழுநூற்றிருபத் தாறு மெனல்"

"கொச்சக மீரைந்தும் வெண்கலி யோரிரண்டும்
வைத்திசையோர் மூன்றினான் மாறியபின்—மற்றவற்றை
மாசில் பதினொன்கு வான்றளையான் மாறவே
யாசுநீ ரைஞ்ஞூற்று நான்கு"

ஒத்தாழிசைக்கலி இருநூற்றெழுபத்தாறும், வெண்கலியெண் பத்துநான்கும், கொச்சகக்கலி நானூற்றிருபதுமாக எழுநூற்றிருபதாம். பிறவாற்றானும் விகற்பிக்கப் பலவுமாம். தரவு கொச்சக முதலாக வுடையன வப்பெயரானே காரணக்குறியாய் நின்றன. அவற்றை விரித்துரைத்துக்கொள்க. (உஅ)

[நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவாமாறு.]

82. தரவொன்று தாழிசை மூன்றுஞ் சமனாய்த்
தரவிற் சுருங்கித் தனிநிலைத் தாகிச்
சுரிதகஞ் சொன்ன விரண்டினு ளொன்றாய்
நிகழ்வது நேரிசை யொத்தா ழிசைக்கலி.

இஃதென்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா வாமா றுணர்த்துத னுதலிற்று. தரவெனி னும் எருத்தமெனினும் ஒக்கும். தாழிசையெனினும் இடைநிலைப் பாட்டெனினும் ஒக்கும். தனிச்சொல்லெனினும் இடைநிலையெனி னும் கூனெனினும் ஒக்கும். சுரிதகமெனினும், அடக்கியல் எனி னும், வாரமெனினும், வைப்பெனினும், போக்கியல் எனினும் ஒக் கும்.

இதன்பொருள்:—'தரவொன்று' என்பது, தரவென்னு முறுப்பு முதற்கண்ணே வந்து என்றவாறு; 'தாழிசை மூன்றும் சமனாய்' என் பது, தரவின் பின்னர்த் தாழிசையென்னு மிரண்டா முறுப்புத் தம்முளொத்து மூன்றாய்வந்து என்றவாறு; 'தரவிற் சுருங்கி' என்பது, அத்தாழிசை யோரோவொன்றாய்த் *தரவிற் குறைந்து என்றவாறு; தரவிற் சுருங்கியென்பதனை மூன்று தாழிசையுமாய்த் தரவிற் சுருங்கி யென்று கொள்ளாமோவெனிற் கொள்ளாம். என்னை ?

"இடைநிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபிற் றென்ப" (தொல்-பொ-செய்-134.)

என்றார் தொல்காப்பியனா ராகலானும், ஓரோவொன்றே யத் தரவி னகப்பட்டதென்றே சொல்லப்பட்டதாகலானும், 'பலபொருட் கேற்பினல்லது கொள்ளல்' என்பது தந்திரவுத்தியாகலானும் அதுவே துணிபு. 'தனிநிலைத்தாகி' என்பது, தாழிசைப்பின் தனிச்சொல்லென்னு மூன்றாமுறுப்புடைத்தாய் என்றவாறு; 'சுரித கஞ்சொன்ன விரண்டினுள் ஒன்றாய்' என்பது, சுரிதகமென்னு நான் காமுறுப்பு மேற்சொல்லப்பட்ட வெண்பாவானும், ஆசிரியப்பாவா னும் வந்து என்றவாறு; 'நிகழ்வதுநேரிசை யொத்தாழிசைக்கலி' என்பது, நான் குறுப்பினானும் வந்து நிகழ்வது யாது அது நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா வெனப்படும் என்றவாறு.

எல்லாவுறுப்பின் பொருளையுந் தொடுத்துக்கொண்டு தந்து முன்னிற்றலிற் றரவென்பதூஉங் காரணக்குறி. ஒத்தவொருபொருண் முடிவினால் ஒத்த தாழ்ச்சியால் இசைத்தலானும், தரவிற்குறைந் திறுதலானும் ஒத்தாழிசையென்பதூஉம், தாழிசையென்பதூஉங் காரணக்குறி. தனிச்சொல் ஒரு சொல்லாய்ப் பொருணிரம்பித்

* 'தரவடியிற் சுருங்கி' எனவும் பாடம்.

தனியே நிற்றலிற் றனிநிலையென்பதூஉங் காரணக்குறி. ஓரிடத்தோ டாநின்ற நீர், குழியானுந் திடரானுஞ் சார்ந்தவிடத்துச் சுரிந்தோடு மதனைச் சுரிந்தென்றும் சுழியென்றும் வழங்குவதுபோலத் தான் கலியோசையான் வாரா நின்றது வெள்ளையானு மாசிரியமானுமாய்த் தக்கதொருபொருளை யுட்கொண்டு நிற்றலாற் சுரிதகமென்பதூஉங் காரணக்குறி; பிறரும்,

"தந்துமுன் னிற்றலிற் றரவே தாழிசை
* யொத்தாழத் திறினஃ தொத்தா ழிசையே"

"தனிதர நிற்றலிற் றனிநிலை குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்
சோர்ச்சியில் புலவர் சுரிதக மென்ப"

என்றாராகலின்.

நிகழ்வதென்று விதந்தவதனால் அம்போதரங்கமும், வண்ணகமும் இருமூன்றடியே தரவின் பெருமை; அல்லன மூன்றடிச்சிறுமையின.

"அம்பு வண்ணக மிருமூன் றடியின
மூன்றடி சிறுமை யாறடி பெருமை
தந்துமுன் னிற்றலிற் றரவா கும்மே"

"இரண்டடி சிறுமை பெருமை யிரட்டி
† தரவடி யதனிற் குழ்ந்திறுந் தாழிசை"

"தனிநிலை சுரிதகம் வரைநிலை யிலவே"

"சிறுமை யிரண்டடி பெருமை பொருண்முடிபே
சுரிதக மென்ப ‡தொன்மொழிப் புலவர்"

இவற்றை விரித்துரைத்துக்கொள்ள.

கலியுறுப்புக்கு அளவை செயன்முறையுள்ளும், செயிற்றியத்துள்ளும் அகத்தியத்துள்ளுங் கண்டுகொள்க. அவை மீண்டுரைப்பிற் பெருகும். வல்லாரவாய்க் கேட்டுணர்க.

---

* 'ஒத்ததாழத்தின' எனவும் பாடம்.
† 'தரவிற் குறைந்தன தாழிசை யாகும்' எனவும் பாடம்.
‡ 'தொல்லை யோரே' எனவும் பாடம்.

வரலாறு:—

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாம்
*பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ"

இது தரவு.

"சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே;

"சேணுடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே ;

"சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே"

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

† "அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே"

இது மூன்றடி யாசிரியச் சுரிதகம்.

இது, தரவு மூன்றடியாய்வந்து, தாழிசை மூன்று மிரண்டடியாய் வந்து, தனிச்சொற்பெற்று, மூன்றடி யாசிரியச் சுரிதகத்தா லிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

இது சிறப்புடைக் கலித்தளையான் வந்தது.

"முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனாய்
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு காவதம் பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த வொளிவரை ‡செலவினோய்"

இது தரவு.

---

* 'பூணடங்கு' எனவும் பாடம்.

† 'அருளேனும்' எனவும் பாடம்.

‡ 'செவ்வியோய்' எனவும் பாடம்.

"எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட * பொன்னெயிலின்
உள்ளிருந்த வுன்னையே † யுயிர்த்துணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ ;

"குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டி லுறைகென்றல் பெருமையோ ;

"விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கவின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின் றகுதியோ"

இவை தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"எனைத்துணையை யாயினு மாகமற் றன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று"

இது சுரிதகம்.

இது நான்கடியாய்த் தரவுவந்து, தாழிசை மூன்றடியாய்த், தனிச்சொல்வந்து, வெள்ளைச் சுரிதகமாய், ஆசிரியச் சிறப்பினிரைத் தளையால்வந்த நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா. பலவடியானும், வேற்றுத்தளையானும் வருவன, வந்தவழிக் கண்டு கொள்க. பிறரு மிவ்வாறே இதற்கிலக்கணஞ் சொன்னார். என்னை?

"தரவே தாழிசை தனிச்சொல சுரிதக
மெனநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி"

"தன்னுடை யந்தமுந் தாழிசை யாதியுந்
துன்னு மிடத்துத் துணிந்தது போலிசை
தன்னொடு நிற்ற றரவிற் கியல்பே"

"தத்தமி லொத்துத் தரவி னகப்பட
நிற்பன மூன்று நிரந்தவை தாழிசையே"

* 'பொன்னெயில்' எனவும் பாடம்.
† 'உயர்துணை' எனவும் பாடம்.

"ஆங்கென் கிளவி யடையாத் தொடைபட
நீங்கி யிசைக்கு நிலையது தனிச்சொல்"

"ஆசிரியம் வெண்பா வெனவிவை தம்முள்
ஒன்றாகி யடிபெற் றிறுதி வருவது
சுழிய மெனப்பெயர் சுரிதக மாகும்"

என்றார் காக்கை பாடினியார்.

"விட்டிசை முதற்பாத் தரவடி யொத்தாங்
கொட்டிய மூன்றிடைத் தாழிசை யதன்பின்
மிக்கதோர் சொல்லாத் தனிநிலை சுரிதகம்
ஆசிரி யத்தொடு வெள்ளை யிறுதலென்
றோதின ரொத்தா ழிசைக்கலிக் குறுப்பே"

என்றார் அவிநயனார்.

"தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொ லிடைக்கிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி"

* "தரவி னளவிற் சுரிதக மயற்பா
விரவு மென்ப ராசிரியம் வெள்ளை"

என்றார் †பெருமான் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்.

தரவின்றுணையே சுரிதக மாவது சிறப்புடைமையால் எடுத்தோதினார், மிக்குங் குறைந்தும் வருவனவுளவாயினும் எனக்கொள்க.

[அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா வருமாறு.]

83. முந்திய தாழிசைக் கீறாய் முறைமுறை
ஒன்றினுக் கொன்று சுருங்கு முறுப்பின
தம்போ தரங்கவொத் தாழிசைக் கலியே.

இதன்பொருள்:—தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் உடைத்தாய், மேற்கூறிய் தாழிசைக்குப் பின்னாக வடியினானும் சீரினானும் முறையே யொன்றினுக் கொன்று சுருங்கிவரும் உறுப்புடையது அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா வெனப்படும் என்றவாறு.

---

* 'தரவி னளவே' எனவும் பாடம்.

† 'மயேச்சுரர்' எனவும் 'காமவேளைக் கறுத்த புத்தேள் நாமந்தாங்கிய நல்லாசிரியர்' எனவும் பாடம்.

தரவு, தாழிசை அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்றதிகாரம் வருவித்துரைக்கப்பட்டது. அம்போதரங்கவுறுப் பெனினும், அசையடியெனினும், பிரிந்திசைக் குறளெனினும், சொற்சீரடி யெனினும், எண்ணெனினும் ஒக்கும். அவற்றை முறையே பேரெண், சிற்றெண், அளவெண் என்றுஞ்சொல்லுவர்.

அவ்வுறுப்புத் தாழிசைக்குப்பின் ஈரடியா லிரண்டும், அதன் பின் நாற்சீரடியா லொன்கும், அதன்பின் முச்சீரடியா லெட்டும், அதன் பின் இருசீரடியாற் பதினாறுமாய்வரும். என்னை?

"ஈரடி யிரண்டு மோரடி நான்கும்
முச்சீ ரெட்டு மிருசீ ரிரட்டியு
மச்சீர் குறையினு மம்போ தரங்கம்"

என்றாராகலின்.

முச்சீரடியாலெட்டும், இருசீரடியாற் பதினாறும் என்று சொல்லப்பட்டன குறைந்து வரவும்பெறும். இப்பொருளெல் லா மெற்றாற் பெறுதுமோ வெனின், உரையிற் கோடலென்னுந் தந் திரவுத்தியானும், 'முறை முறை' என்னும் விதப்பினானும், பிறநூன் முடிந்தது தானுடம்படுதல் என்பதனானும் பெறுதும்.

வரலாறு:—

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாறுளை இ
யழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புனலி னிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்"

இது தரவு.

"முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்ல
ரடியோடு முடியிறப்புண் டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

"கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு

மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ;

"படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
* வேரிஞெடு மருப்பொசிய வீழ்ந்ததிறல் வேருக
† வேருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமே"

இவை தாழிசை.

"இலங்கொளி மரகத வெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை"

இவை பேரெண்.

"கண்கவர் கதிர்மணி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை"

இவை சிற்றெண்.

"போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ;
நீரகல மளந்தோய் நீ; நிழறிகழும் படையோய் நீ;

இவை இடையெண்.

"ஊழி நீ; யுலகு நீ; யுருவு நீ; யருவு நீ;
ஆழிநீ; யருளுநீ; யறமுநீ; மறமுநீ"

இவை அளவெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்

* 'வெரிஞெடு' எனவும் பாடம்.
† 'வெருமலி' எனவும் பாடம்.

றொன்று முதிர்கட லுலக முழுதுட
னொன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே”

இது சுரிதகம்.

இஃது எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்ட முச்சீரடியம்போதரங்கமும், இருசீரடியம்போதரங்கமும் குறைந்து முச்சீரடி நான்காய் இருசீரடி யெட்டாய்க் குறைந்து சிறப்பிலியற்சீர் வெண்டளையான்வந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

“நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகா
ரிலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மே
லிருபுடையு மியக்கரச ரிணைக்கவரி பெடுத்தெறிய
விரிதாமந் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்குந்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே”

இது தரவு.

“ஒல்லாத பிறப்புணர்த்து மொளிவட்டம் புடைசூழ
வெல்லார்க்கு மெதிர்முகமா யின்பஞ்சேர் திருமுகத்துள்
ஏர்மலர மணிப்பொய்கை யெழிலாம்பற் பொதியவிழ
வூர்களோ டுடன்முளைத்த வொளிவட்டத் தமர்ந்தன்றே;

“கனல்வயிரங் குறடாகக் கனல்பைம்பொன் சூட்டாக
வினமணி யாரமா வியன்றிரு ளிரிந்தோட
அந்தரத் துருளுகின் னலர்கதி ரறவாழி
இந்திரனும் பணிந்தேத்த விருவிசும்பிற் றிகழ்ந்தன்றே;

“வாடாத மணமாலை வானவர்க ளுள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த விறஞ்சேர்ந்த பெருங்கண்ணு
முகிழ்பரிதி முகநோக்கி முறுவலித் துண்ணெகிழ்ந்து
*திகழ்தகைய குடைபுடைசூழ் திருந்துசுழ றிளைத்தன்றே”

இவை தாழிசை.

“மல்லல் வைய மடிதொழு தேத்த
வல்ல னீத்தக் கறப்புணையாயினை;

* ‘திகழ்ந்திலங்கு கோட்டைசூழ் திருந்துதிகழ் திளைத்தன்றே’ எனவும் பாடம்.

ஒருதுணி வழிய வுயிக்கர ணுகி
யிருதுணி யொருபொருட் இயல்வகை கூறினே"

இவை நாற்சீரீரடி யிரண்டம்போதரங்கம்.

"ஏடலர் தாமரை யேந்து மின்னடி;
வீடொடு கட்டினை விளக்கு மின்மொழி;
விருப்புறு தமனியம் விளக்கு மின்னிறம்
ஒருத்தல் கூறற வுளுற்று மின்புகழ்"

இவை நாற்சீரோரடி நான்கம் போதரங்கம்.

"இந்திரற்கு மிந்திர னீ; யிணையில்லா விருக்கையை நீ;
மந்திர மொழியினை நீ; யாதவர்க்கு முதல்வனு நீ;
அருமைசா லறத்தினை நீ; யாருயிரு மளித்தனை நீ;
பெருமைசால் குணத்தினை நீ; பிறர்க்கறியாத் திறத்தினை நீ"

இவை முச்சீரோரடி யெட்டம்போதரங்கம்.

"பரம நீ; பகவ னீ; பண்ணவ னீ; புண்ணிய னீ;
உரவ னீ; குரவ னீ; யூழி நீ; யுலகு நீ;
யருளு நீ; யறமு நீ; யன்பு நீ; யணைவு நீ;
பொருளு நீ; பொருப்பு நீ; பூமி நீ; புணையு நீ"

இவை யிருசீரோரடிப் பதினாறம்போதரங்கம்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"அருநெறி யொருவனிற் பரவுது மெங்கோன்
திருமிகு சிறப்பிற் பெருவரை யகலத்
தெண்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்
செருமுனை செருக்கறத் தொலைச்சி
யொருதனி வெண்குடை யோங்குக வெனவே"

இது சுரிதகம்.

இதனு ளெட்டும் பதினாறு மென்று சொல்லப்பட்ட உறுப்புக் குறையாதே வந்தவாறு கண்டுகொள்க.

இஃது ஆசிரியச் சிறப்பில் நிரைத்தளையான்வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

பிறதளையானும் வந்தவழிக் கண்டுகொள்க.

“ தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொல் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோன்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு வேமடுப்ப
தரவொன்று மல்குல தம்போ தரங்கவொத் தாழிசையே”

—யாப்பருங்கலக் காரிகை.

இக்காரிகையை விரித்துரைத்துக்கொள்க. என்னை ?

“ நீர்த்திரை போல நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி * யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச் சுரிதகம்
தாக்கித் † தழுவுந் தரவினோ ‡டேனவும்
யாப்புற் றமைந்தன வம்போ தரங்கம்”

என்றார் காக்கை பாடினியார்.

“ தரவே தாழிசை தனிச்சொற் சுரிதகம்
வருவன வெல்லாந் தாழிசைக் கலியே”

“ சேர்த்திய தரவொடு தாழிசைப் பின்னர்
நீர்த்திரை போல நெறிமையிற் சுருங்கி
மூவகை யெண்ணு முறைமையின் வழாஅ
வளவின வெல்லா மம்போ தரங்கம்’

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

“ உரைத்த வுறுப்பொடு தாழிசைப் பின்னர்
நிரைத்த வடியா னீர்த்திரை போல
வசையடி பெறினவை யம்போ தரங்கம்”

என்றார் அவிநயனார்.

‘ தாழிசைக் கீழ்ய் முறைமுறை
ஒன்றினுக் கொன்று சுருங்கு முறுப்பின
தம்போ தரங்கவொத் தாழிசைக் கலியே’

என்பது சூத்திரமாகக்கொண்டு தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் உடைத்தாய் என்று அதிகாரம் வருவித்துரைத்தாலும் கருதிய

---

* ‘அசையடித் தாகி’ எனவும் பாடம்.
† ‘தொடுத்த’ எனவும் பாடம்.
‡ ‘ஐந்தும்’ எனவும் பாடம்,

பொருளைப் பயக்கும்; 'மூந்திய' என்று மிகுத்துச் சொல்லவேண்டியதென்னை? ஒரு சாராசிரியர் தரவு ஆறடியால் வந்து, நான்கடித் தாழிசை மூன்றுவந்து, அதன்பின் இரண்டடியால் ஓராரகம்வந்து அதன்பின் இரண்டடியால் இரண்டு பேரெண்வந்து, ஓரடியால் நான்கு இடையெண்வந்து, சிற்றெண் இருசீராலெட்டாய் அவை யிரண்டுகூடி யோரடியேபோன்று இம்முறையே இம்மூன்று அம்போதரங்க வுறுப்புப்பெற்றுத், தனிச்சொல்வந்து, சுரிதகம் ஆறடியால் வந்து முடிவது தலையளவம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவென்றும்; தரவு ஐந்தடியான்வந்து, மூன்றடித் தாழிசை மூன்றுவந்து, தாழிசைப்பின் இரண்டடியால் ஓர் அராகம்வந்து, பேரெண் அறுசீரால்வந்து, இடையெண் முச்சீரால்வந்து, சிற்றெண் ஒருசீரும் ஓரசையுமாய், இம்முறையே இம்மூன்று அம்போதரங்க வுறுப்புப்பெற்று, அதன்பின்னர்த் தனிச்சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் பெற்றுமுடிவது இடையளவம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவென்றும்; தரவு நான்கடியான் வந்து, ஈரடித்தாழிசை மூன்றுவந்து, அதன்பின் இரண்டடியால் ஓர் அராகம்வந்து, ஓரடியா லிரண்டு பேரெண்வந்து, இருசீரால் நான்கு இடையெண்வந்து, ஒரு சீரால் எட்டுச் சிற்றெண்வந்து இம்முறையே இம்மூன்று அம்போ தரங்கவுறுப்புப்பெற்று தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும்வந்து முடிவது கடையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா என்றும் வழங்குவர். என்னை?

"தாழிசைப் பின்னர் தனிச்சொன் முன்னர்
ஆழ்புனற் றிரைபுரை யம்போ தரங்க
மும்பர் மொழிந்த தாழி சைவழி
யம்போ தரங்கம் வண்ணகமு மாகும்"

"அவையே,
தேவ பாணியென் றேவவும் படுமே"

"வழிபடு தெய்வம் வழுத்தி வழிமொழியிற்
றலையிடை கடையென வம்போ தரங்கம்
நிலையி னவ்வளவி னிலையுங் காலை
அராகம் பேரெண் ணிடையெண் சிற்றெண்
*விராக வென்ப தாழிசைப் பின்னர்க்
கூறிய தரவே யாறடித் தாகும்"

* 'விராக மென்ப' எனவும் பாடம்.

“தரவின் வழிமுறை தாழிசை மூன்றும்
வரன்முறை பிறழா நாலடிக் குரிய
தந்துமுன் னிறீஇத் தரவினிற் றாழிசை
யுறுப்பினுங் குணத்தினு நெறிப்படப் புணரும்”

“தாழிசைப் பின்ன ரராகவடி யிரண்டே
அராகத் திறுதி பேரெண் ணிரண்டு
விராக வெண்ப விரண்டிரண் டடியான்
பேரெண் வழியா லிடையெண் ணாலடி
நேர வேண்டு நெறியறி புலவர்”

“பெற்ற நாலடி யரையடி முடிவின
சிற்றெண் பகுதி யிருநான் காகும்”

“மூவகை யெண்ணின் பொருள்வகை முடிவும்
யாவகை யெண்ணிற்கு மகப்பட முடியும்”

“சிற்றெ ணகத்தே *சேர்க்கப் படுவோன்
பெற்றபுகழ் தொடுப்பினும் பிழைப்ப தில்லை”

“அடக்கிய வுறுப்பு மாறடித் தாகத்
தொடுக்கு மாகிற் றொல்லையோர் துணிவே”

“கொள்ளப் பட்ட வுறுப்போ டிருதலையுந்
தள்ளாது வருவது தலையள வாகும்”

“உடையதம் முறுப்பி னொன்று குறைவின்றி
யிடையள விலக்கண மிருதலை யுறுப்பும்
ஐயைந் தடியா யமைவுறு தாழிசை
மூன்று மூன்றடியான் மூன்றுமுடி வெய்திப்
பேரெண் ணறுசீ ரிடையெண் முச்சீர்
சேருஞ் சிற்றெண் சீருமோ ரசையு
நேர வேண்டு நெறியறி புலவர்”

“கடையள வெண்ப துடையுறுப் பெஞ்சாது
முடிவு முதலு நாலடித் தாகி
யடிவகை யிரண்டிற் றாழிசை மூன்றாய்ப்
பேரெண் ணிரண்டடி பெற்றபின் னிடையெண்
ணோர்ப நான்கு மரையடி முடிவிற்
சிற்றெண் ணெட்டுஞ் சீர்நா லிரட்டியும்
பெற்ற தாயி னதுகடை யளவே”

---

*‘சேர்த்தப் படுவோன்’ எனவும் பாடம்.

"அம்மூ வளவிற்கு மராகவடி யிரண்டே
ஈறு முதலு மெல்லா வளவிற்கும்
கூறிய முறைமையிற் கொள்ள வேண்டும்"

என்றாராகலின்.

அவர்கள் காட்டு முதாரணம்:—

"அலைகடற் கதிர்முத்த மணிவயிர மவையணிந்து
மலையுறைமா சுமந்தேந்து மணியணைமேன் மகிழ்வெய்தி
யோசனைசூழ் திருநகருண் ணுலகொருமூன் றுடனேத்த
ஈசனையா மினிதமர்ந்தங் கிருடிகட்கு மிறைவற்கும்
அருளறமே யறமாக வயலார்கண் மயலாக
விருளறநன் கெடுத்தியம்பி யிருவினைகள் கடிந்தினையோய்"

இது தரவு.

"துன்றாத வினைப்பகையைத் துணிசெய்யுந் துணிவினையாய்
யின்றாத பகைமுனைபோ லெரித்தடக்கு நினைப்பினை
யிருளில்லா வுணர்வென்னு மிலங்கொளியா லெரித்தனையா
யருளெல்லா மடைந்தெங்க ணருளுவதுன் னருளாமோ;

"மதிபுரைமுக் குடைநீழன் மகிழ்வெய்தி யடைந்தோரைக்
கதிர்பொருதக் கருவரைமேற் கதிர்பொருத முகம்வைத்துக்
கொன்முனைபோல் வினைநீக்கக் குளிர்நிழற்கண் மகிழ்ந்தனிர்போ
னின்மினீ ரென*வுரைத்த னிருமலநின் பெருமையோ;

"மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்க லுறுவீரேல்
வினையறுக்க லுறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென்றிங்
கலகில்லாப் பெருஞ்செல்வத் தமரரசர் புடைசூழ
வுலகெல்லா முடன்றுறவா வுடைமையுநின் னுயர்வாமோ"

இவை தாழிசை.

"அரைசரு மமரரு மடிநிழ லமர்தர
முரைசதி ரிமிழிசை முரணிய மொழியினை"

இஃது அராகம்.

"அணிகிள ரவிர்மதி யழகெழி லவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி னின்னிறம்;
மழையது மலியொலி மலிகட லலையொலி
முறையுறை யரியது முழக்க நின்மொழி"

இவை பேரெண்.

---

* 'உணர்த்தல்' எனவும் பாடம்.

"வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை;
சொலற்கரு மெய்ப்பொருண் முழுவதுஞ் சொல்லினை;
அருவினை வெல்பவர்க் கரும்புணை யாயினை;
யொருவனை யாகி யுலகுட னுணர்ந்தனை"

இவை இடையெண்.

"உலகுட னுணர்ந்தனை; யுயிர்முழு தோம்பினை;
திலவுறழ் திறத்தினை; திழலிய லியாக்கையை;
மாதவர் தாதையை; மலர்மிசை மகிழ்ந்தனை;
போதிவர் பிண்டியை; புலவருட் புலவனை"

இவை சிற்றெண். அரையடியெண் ணனவு மமையும்.
எனவாங்கு,

இது தனிச்சொல்.

"அருளுடை யொருவநிற் பரவுது மெங்கோன்
இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
யொருவனை வேண்ட விருதிறங் கொடுத்த
நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி
யொற்றைச் செங்கோ லோச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக வெனவே"

இது சுரிதகம்.

இது தலையளவம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா: பெருந்தேவபாணி.

இவை யெல்லாதன சேயன்முறையோடுஞ் சேயிற்றியத்தோடும் அகத்தியத்தோடும் ஒக்கப் பாடின வில்லை யென்ப.

இடையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா வருமாறு:—

"பிறப்பென்னும் பிணிநீங்கப் பிரிவரிய வினைக்கடலை
யறப்புணையே புணையாக மறுகரைபோய்க் கரையேறி
யிறப்பிலநின் னருள்புரிந்தாங் கெமக்கெல்லா மருளினையாய்
மறவாளி யொளிமழுங்க மனையவர்க்கும் முனையவர்க்கு
மறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்"

இது தரவு.

"அருளெல்லா மகத்தடக்கி யடிநிழலை யடைந்தோர்க்குப்
பொருளெல்லா நீவிளங்கப் புகரில்லா வகையினு
லிருளில்லா மனஞான மியம்பியதுன் னியலாமோ;

"நீதில்லா நயமுதலாத் திருந்தியநல் லளவைகளாற்
கோதில்லா வரும்பொருளைக் குறைவின்றி யறைந்ததற்பின்
பேதில்லா வியற்காட்சி யருளியதுன் பெருமையோ;

"துணையில்லாப் பிறப்பிடைக்கட் டுயரெல்லா முடனகல
புணையில்லா வுயிர்கட்குப் பொருளில்லா வருளினு
லிணையில்லா நல்லொழுக்க மிசைத்ததுநின் னிறைமையோ"

இவை தாழிசை.

"அருள்புரி திருமொழி யமரரு மரசரு
மருள்வரு மனிதரு மகிழ்வுற வியம்பினை"

இஃது அராகம்.

"பூமலர் துதைந்த பொழிலணி கொழுநிழற் றேமல ரசோகினை;
மாமலர் விசும்பின் விஞ்சையர் பொழியு மாமலர் மாரியை"

இவை பேரெண்.

"காமரு கதிர்மதி முகத்தினை;
சாமரை யிடையிடை மகிழ்ந்தனை;
தாமரை மலர்புரை யடியினை;
தாமரை மலர்மிசை யொதுங்கினை"

இவை இடையெண்.

"அறிவனை நீ; யதிசய நீ; யருளினை நீ; பொருளினை நீ;
உறுவனை நீ; யுயர்ந்தனை நீ; யுலகினை நீ; யலகினை நீ"

இவை சிற்றெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"இனையை யாதலின் முனைவருண் முனைவ
நினையுங் கால நின்னடி யடைதும்
ஞானமுங் காட்சியு மொழுக்கமு நிறைந்து
துன்னிய தீவினைத் துகடீர்
முன்னிய பொருளது முடிகவெமக் கெனவே"

இது சுரிதகம்.

இஃது இடையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா; பெருந்தேவபாணி,

கடையளவம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, பெருந் தேவபாணி வருமாறு:—

" கடையில்லா வறிவோடு ஞானமுங் காட்சியு
முடைமையா யுலகேத்த வொண்பொருள் நியல்புணர்ந்து
மறவாழி யிறையவரு மாதவரும் புடைசூழ
வறவாழி வலனுயரி யருணெறியே யருளியோய்"

இது தரவு.

" வினையென்னும் வியன்பகையை வேரோடு முடன்கீழ்ந்து
முனையவர்க டொழுதேத்த விருப்பதுநின் முறைமையோ;

" பொருளாடல் புரியீரேற் புகர்தீரு மெனவருளி
மருளாறு மணியணைமேன் மகிழ்வதுநின் மாதவமோ;

" வேந்தர்க்கு முனிவர்க்கு விலங்கிற்கு மருடுறவா
தோந்நீரத் துறந்தநின் றுறவரசுந் துறவாமோ"

இவை தாழிசை.

" முழுவது முணர்பவர் முனிவருண் முனிவர்க
டொழுதெழு துதியொலி துதைமல ரடியினை"

இஃது அராகம்.

" கிழன்மணி வினையொளி கிகர்க்கு நின்னிறம்;
எழின்மதி யிதுவென விகலு நின்முகம்"

இவை பேரெண்.

கருவினை கடந்தோய் நீ; காலனை யடர்ந்தோய் நீ;
யொருவினையு மில்லோய் நீ; யுயர்கதிக்கு முனைவ னீ"

இவை இடையெண்.

" அறவ னீ; யமல னீ; யருளு நீ; பொருளு நீ;
யுறவு நீ; யுயர்வு நீ; யுலகு நீ; யலகு நீ"

இவை சிற்றெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்,

"அருளுடை யொருவனின் னடியிணை பரவுதும்
இருளுடை நாற்கதி யிடர்முழு தகலப்
பாடுதற் குரிய பல்புகழ்
வீடுபே றுலகங் கூடுக வெனவே"

இது சுரிதகம்.

இது கடையளவம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா: பெருந்தேவபாணி.

இவ்வாறு விரித்து வெளிப்படச்சொன்னார், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற்கவிஞர். இம் மூன்றினையும் அளவியல் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா வென்றும், அல்லாதனவற்றை அளவழியம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா வென்றும் வழங்குவாருமுளரெனக்கொள்க. (௩௦)

[வண்ணக வொத்தாழிசைக்கலிப்பா வாமாறு.]

84. அவற்றொடு முடுகிய வடியுடை யராக
மடுப்பது வண்ணக வொத்தா ழிசைக்கலி.

இஃதென்னுதலிற்றோ வெனின், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—மேற்சொல்லப்பட்ட தரவும், தாழிசையும், அம்போதரங்க வுறுப்பும், தனிச்சொல்லும், சுரிதகமும் என்று இவற்றொடு கடுகிநடக்குமடியுடை யராகவுறுப்புத் தாழிசைப் பின்னைக் கூட்டிச் சொல்லப்படுவது யாது, அது வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா வெனப்படும் என்றவாறு. 'தாழிசைக்கீறாய்' என்பததிகாரம் வருவித்துரைக்கப்பட்டது.

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் எனக்கொள்க. அராக மெனினும் வண்ணகமெனினும் அடுக்கிய லெனினும் *முடுகியலெனினுமொக்கும். 'அவற்றொடு மராக மடுப்பது வண்ணக வொத்தா ழிசைக்கலி' என்றாலும் முடுகியலுடைய அராகமென்பது பெறலாம்; அராகவடி முடுகிநடக்கு மியற்கையதாகலானும், 'அச்சொல்லப்பட்ட வுறுப்போடு அராகவடி வைத்தநடையது வண்ணகமாகும்' என்றார் காக்கைபாடினியா ராகலானும்,

* 'முடுகிசை' யெனவும் பாடம்.

முடுகியலடியே சொல்லப்பட்ட தாகலானும்; பெயர்த்தும் 'முடுகிய லடியுடையராகம்' என்று எடுத்தோதவேண்டியதென்னை? அவ்வராக வுறுப்பு அளவடி முதலாகிய வெல்லாவடியானும் வரப்பெறும்; அடிவரையாது சிறுமை நான்கடி, பெருமை யெட்டடி, இடையிடை யெத்துணையானும் வரப்பெறும் என்பதூஉம், ஒரு சாரனவற்றுள் அகவலும் வெள்ளையும்விரவி யராகமாயும் அருகிவரப் பெறு மென்பதூஉம், அம்போதரங்கவுறுப்புச் சில குறைந்தும் வரப் பெறுமென்பதூஉம் அறிவித்தற்கு வேண்டப்பட்டது. என்னை ?

" அளவடி முதலா வனைத்தினு நான்கடி
முதலா விரட்டியு முடுகிய னடக்கும்"

எனறூராகலின். அஃதேயெனின், 'அவற்றொடு முடுகடி யுடையராக மடுப்பது' என்றூலு முரைத்தவெல்லாம் பெறலாம், 'விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்' என்பதாகலின்; 'இயல்' என்று விதப்படுக்கி யெடுத்தோதியதென்னை யெனின், இதன்பயன் இவற்றிற்கு உதார ணங்காட்டிப் பின்னர்ச் சொல்லுதும்.

வரலாறு:—

"விளங்குமணிப் பசும்பொன்னின் விசித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்
பருஉத்தடக்கை மதயானைப் *பணையெருத்தின் மிசைத்தோன்றுங்
குருஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை † யூரகேள்"

இது தரவு.

" காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் பிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
வணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ;

" அன்பினா லமிழ்தளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்

* 'பகட்டெழி லெரிகுஞ்சி' எனவும் பாடம்.
† 'யூரசீ' எனவும் பாடம்.

பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோன் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ;

"பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகும்
தேங்காத காவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுகின் றகுதியுந் தகுதியோ"

இவை தாழிசை.

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவன பொழில்;
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி;
தீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவன துறை;
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கடிதொடர் புடையது கடல்"

இவை நான்கும் அராகம்.

"கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனு
விடுங்கழி யிராவருதல் வேண்டாமென் றிசைத்திலமோ;
கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகானி லிராவார லென்றிலமோ"

இவை நாற்சீ ரீரடியிரண்டம்போதரங்கம்.

"நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே;
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே;
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே;
நயப்பொடு கழிந்தன்றா னவது நன்னுதற்கே"

இவை. நாற்சீரோரடி நான்கம்போதரங்கம்.

"அத்திறத்தா லசைந்தன தோள்; அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்; பொன்னிறத்தாற் போர்த்தன [முலை;
அழலினு லசைந்தது நகை; யணியினு லொசிந்த திடை;
குழலினு னிமிர்ந்தது முடி; குறையினுற் கோடிற்று நிறை"

இவை முச்சீரோரடி யெட்டம்போதரங்கம்.

"உட்கொண்ட தகைத்தொருபால்; உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்ட றுளித்தொருபால்; கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉந் தகைத்தொருபால்; *படிறுறூஉம் பசப்பொருபால்;

---

* 'பசப்புவந் தடைந்தொருபால்.' எனவும் பாடம்.

இரவுறாஉந் துயரொருபால்; இளிவந்த வெளிற்றொருபால்;
மெலிவுறாஉந் தகைத்தொருபால்; விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்; பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்; கட்படாத் துயரொருபால்;
ஏதில்சென் றிணைந்தொருபால்; இயனணிற் செறிவொருபால்"

இவை யிருசீரோரடிப் பதினாறம்போதரங்கம்.

எனவாங்கு

இது தனிச்சொல்.

"இன்னதிவ் வழக்க மித்திற மிவணலம்
என்னவு முன்னாட் டுன்னா யாகிக்
கலந்தவ ணிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தலையவிழ் கோதையைக்
கற்பொடு காணியம் யாமே
பொற்பொடு பொலிக*நின் புணர்ச்சி தானே"

இது சுரிதகம்.

இஃது ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

"தெரிவில்லா வினைகெடுத்துத் தீவினையிற் றெரிந்தோங்கிச்
சரிவில்லா வின்பத்தாற் சங்கரனும் முழுதுலகுந்
தெரிந்தொன்றி யுணர்ந்தநின் றிப்பியஞா னந்தன்னால்
விரிந்தெங்குஞ் சென்றமையால் விண்ணுமாய் மண்ணின்மிசைத்
தேர்வுற்ற வாரீட நான்மையினுந் திரிவில்லாச்
சார்வுற்ற நன்மையினுஞ் சதுமுகனு யுயர்ந்தனையே"

இது தரவு.

"இருக்கையு நூனெறிய தியலவகையுந் தன்னாலும்
வருத்தாத கொள்கையான் மன்னுயிரைத் தலையளிப்போய்த்
தொடர்த்தழுக்கும் பிணியரசன் றொடர்ந்தோட ஞானத்தால்
அடர்த்தழுக்க வென்றதுநின் னறமாகிக் காட்டுமோ;

"ஏதிலா வுயிர்களை யெவ்வகைக் கதியகத்தும்
காதலா னுழப்பிக்குங் காமனைக் கறுத்தவன்

* 'நும் புணர்ச்சி' எனவும் பாடம்.

வடிவுகெடச் சிந்தையா லெரித்ததூஉம் வல்வினையைப்
பொடிபட வென்றதுநின் பொறையுடைமை யாகுமோ;

"எவ்வுயிர்க்கு மோரியல்பே யென்பவை தமக்கெல்லாம்
செவ்விய நெறிபயந்து சிறந்தோங்கு குணத்தகையாய்க்
கொலைத்திறத்தாற் கூட்டுண்ணுங் கூற்றப்பே ரரசனுங்க
அலைத்தவனை வென்றதுநின் னருளாகிக் கிடக்குமோ"

இவை தாழிசை.

"தாதுறு நனைசினை தழுவெழில் சுழல்சுழற்
சைவகை முகைநகு நடமல ரசோகினை;
சீருறு கெழுதகு செழுமணி முழுதணி
செறியுளை விலங்கரை சணிபொனி னணையினை;
வாருறு கதிரெதிர் மரகத நிரைநிரை
வரிபுரி தெளிமதி வெருவரு குடையினை;
போருறு தகையன புயலுளர் வியலொளி
புதுமது நறவின புனைமலர் மழையினை;
பொறிகிள ரமரர்கள் புகலிட மெனமனு
பொலிமலி கவிவெலும் பொருவறு மெயிலினை;
வெறிகிள ருருவின விரைவினி னினிதெழ
வெறிவரு தெரிதக வினிதுளர் கவரியை;
* விறலுணர் பிறவியை வெருவரு முரைதரு
வியலெரி கதிரென மிடலுடை யொளியினை;
அறிவுள ரமரர்க ளதிபதி யிதுவெனக்
கடலுடை யிடிபட வெறிவன விசையினை"

இவை அராகம்.

"மன்னுயிர் காத்தலான் மறம்விட்ட வருளினோ
டின்னுயி ருய்கென்ன வில்லறமு மியற்றினையே;
புன்மைசா லறநீக்கிப் புலவர்க டொழுதேத்தத்
தொன்மைசால் குணத்தினாற் றுறவரசாய்த் தோற்றினையே"

இவை பேரெண்.

"பீடுடைய விருக்கையைநின் பெருமையே பேசாதோ;
வீடுடைய நெறிமையைநின் மேனியே விளக்காதோ;

---

* 'விறலுள' எனவும் பாடம்.

ஒல்லாத வாய்மையையின் னுறுபுகழே யுரையாதோ;
கல்லாத வறிவுஙின் கட்டுரையே காட்டாதோ"

இவை யிடையெண்.

"அறிவினு ளளவிலை நீ; யன்பினு ளசைவிலை நீ;
செறிவினுற் சிறந்தனை நீ; செம்மையாற் செழுங்கதிர் நீ;
காட்சியாற் கடையிலை நீ; கணஞ்சூழ்ந்த கதிர்ப்பினை நீ;
மாட்சியான் மகிழ்வினை நீ; மணிவரைபோல் வடிவினை நீ"

இவை சிற்றெண்.

"வலம்புரி கலந்தொருபால்; வால்வளை ஞிமிர்ந்தொருபால்;
நலந்தரு கொடியொருபால்; நலம்புணர் குணமொருபால்;
தீதறு திருவொருபால்; திகழொளி மணியொருபால்;
போதுறு மலரொருபால்; புணர்கங்கை யாறொருபால்;
ஆடியி னொளியொருபால்; அழலெரி யதுவொருபால்;
மூடிய முரசொருபால்; முழங்குநீர்க் கடலொருபால்;
பொழிலொடு கயமொருபால்; பொருவறு களிறொருபால்;
எழிலுடை யேறொருபால்; இணையரி மானொருபால்"

இவை யளவெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"இவைமுத லாகிய விலக்கணப் பொறிகளர்
நவையில் காட்சி நல்லறத் தலைவஙின்
றொல்குணந் தொடர்ந்துஙின் றேத்துதும் பல்குணப்
பெருநெறி யருளியெம் பிறவியைத் தெறுவதோர்
வரமிகத் தருகுவை யெனநனி
பரவுதும் பரமஙின் னடியிணை பணிந்தே"

இது சுரிதகம்.

இஃது அராகவடி யெண்சீரலெட்டாய் அல்லாவுறுப்புக் குறை யாதே வந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

"கல்லின்மே லுறிய கனபவளக் கொடியேய்ப்பக்
கொல்சின மதவெருமைத் தலையொதுங்கி மற்றதன்
சில்குருதிச் சீறடிமேற் சிலம்போடு கழனனைப்ப
விளங்குபொன் னெடுவரைமேல் வெய்துறுமி யெழுந்தாங்குத்
துளங்காச்சீர்ப் படையோடுந் தொழிலோடும் பொலிந்தோடக்
களங்கொண்டு முடியுகைத்த கலைமானேற் றூர்தியோய்"

இது தரவு.

"பெருந்தகைமை பிறிதொழியப் பிடிக்கோடுங் களிறேபோ
லருஞ்சமத்து வினக்குடைந்த வவுணரை வினைக்குங்காற்
கரும்புருவ நுதல்வியர்ப்பக் கச்சிஞல் விசித்தவின்
மருங்குல தளவெண்ணின் மாயமும் போலுமே ;

"பேழ்வாய் விறற்கூளி பின்ஞர்ப்ப முன்சென்று
வீழ்வாயா னீயெறிந்த வீரரை வினைக்குங்காற்
கேழ்கிள ரவிர்முன்கைக் கிளியிருப்ப வெடுக்கில்லா
மாழமை காணுங்கான் மம்மரும் போலுமே ;

"வாளுற முயர்விசும்பின் வாய்மடித்து விறற்சுட்டித்
தாள்சோர வினக்குடைந்த தானவரை வினைக்குங்காற்
பூளையார்ந் தெழிலெய்தப் பொறியணை புரையுவின்
தோளின தளவெண்ணிற் றேற்றரும் *போலுமே"

இவை தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"கடிகமழ் பூங்குலைக் கலங்கிருந் துடுப்பிற்
சாராராக் காந்தண்முகை வென்றன விரல்;
விரலுற விரித்தமைத்து விசும்பு தைவந்து
முலையொடு முத்தொடு மாறின பந்து;
பந்தவிழ் பணிச்சென்னி கையற் றெரீஇய
யசோகி னந்தளி ரணியியற்ற வணிகொண்டது நுதல்;
நுதலிவர் கதுப்புக் குதவியபொன் கஞலின மணி;
மணிமகர முருவாக விசரொத்தன முத்து;
முத்துநகைக் கதிர்மின்ஞக வவிர்துகிலிடைப்பூங் கண்ணினுக்கு"

இவை அராகம்.

"அரியொண்க ணம்பிற் பிறழும் வரியல்குல்
வண்டிருப் பன்ன தகைத்து;
கூழை புறமுறத் தாழ்ந்தன வாழை
வருமுகி ழேய்க்கு முலை"

இவை பேரெண்.

"பெருமட மான்பிணை வென்றது நோக்கு;
சிறுமருங்குற் கொல்கின முல்லைக் கொடி"

இவை சிற்றெண்.

---

* 'போலரோ' எனவும் பாடம்.

"படுமணி படுமொருகை; பைங்கிளி யதுவொருகை;
வடிநுதி வேலொருகை; வாள்கொண்ட தகைத்தொருகை;
சேடகத்தாற் சேடொருகை; சிலைசேர்ந்த தொழிற்றொருகை"

இவை இடையெண்.

"கோடொருகை; யியமொருகை"

இவை அளவெண். இவை யம்போதரங்கம்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"இருபாற் பட்டமின் னிணையடி பரவுதும்
ஒருபாற் பட்டெமக் கருளுவோ வெனவே"

இது சுரிதகம்.

இஃது அகவலும் வெள்ளையும் விரவிய வோசையால் அராகம் வந்து, பேரெண் வெண்குறளாய்ச், சிற்றெண் இரண்டாய், இடையெண் மூன்றாய், அளவெண் இரண்டாய், இவற்றிற் சில வம்போதரங்கவுறுப்புக் குறைந்து உரிச்சீர்ச் சிறப்பில் வெண்டளையால் வந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

"நுழைதுகி லகலல்கு னுசுப்பின்கீழ்க் கலையிமைப்ப
விழைதகுபூண் முலைநெருங்க விற்கிடந்த திருநுதல்

* * * * *

என்னும் வண்ணகத் தாழிசைக்கலிப்பா அகவலும் வெள்ளையுமாய் அராகம்வந்து, பேரெண் குறள் வெண்பாவாய், அல்லாவம்போதரங்க வுறுப்புக் குறைந்து, ஆறுறுப்பு முடைத்தாய் வந்ததெனக்கொள்க.

'அவற்றொடு முடுகியலுடையராகம்' என்று விதப்படுக்கிச் சொல்லவேண்டிய தென்னை ? ஒரு சாராசிரியர், தலையளவம் போதரங்கவொத்தாழிசைக் கோதப்பட்ட தரவும், தாழிசையும் பெற்ற வடியளவு பெற்றும், தாழிசைப்பின்னர்த் தனிநிலை பெற்றும், அதன் பின் அராகவடி நான்குமுத லெட்டீறாக நாற்சீர் முதலாகப் பதின் மூன்று சீரீறாக விடையந்தாதித்து எத்துணைச் சீரானு மராகவடி பெற்று, அம்போதரங்கத்துக் கோதப்பட்ட அராகவடியின்றிக் குறிலிணை பயின்ற வடிபெற்று அடுக்கிசை, முடுகியல், அராகம் என்னு மூன்று பெயரும் பெற்றுத் தேவரது விழுப்பமும், வேந்தரது

புகழும் வண்ணித்துவருதலின் வண்ணக மெனப்படும் ; இடையர்தாதித் தொடையாலும் வரப்பெறு மென்று இவ்வாற்றாற் சொன்னார். அஃது இந்நூலுள்ளு முடம்பட்டது என்பதறிவித்தற்கு ஒரு தோற்றமுணர்த்தியது. என்னை?

" வண்ணகத் தியற்கை திண்ணிதிற் கிளப்பிற்
றரவொடு தாழிசை தலையள வெய்தித்
தாழிசைப் பின்னர்த் தனிநிலை யெய்திப்
பேரெண் ணிட்ட வெண்ணுடைத் தாகிச்
சிற்றெண் வழியா லராகவடி நான்கும்
கீழள வாகப் பேரள வெட்டாச்
சீர்வகை நான்கு முதல்பதின் மூன்றா
நேரப் பட்ட விடைநடு வெனைத்துஞ்
சீர்வகை முறைமையி னராகம் பெற்று
மம்போ தரங்கத் தராகவடி யின்றி
மடக்கடி மேலே முச்சீ ரெய்திக்
குறிலிணை பயின்ற வசைமிசை முடுகி
யடுக்கிசை முடுச்கிய லராக மென்னு
முடைப்பெயர் மூன்றிற்கு முரிமை யெய்தி
விண்ணோர் விழுப்பமும் வேந்தரது புகழும்
வண்ணித்து வருதலின் வண்ணக மென்ப "

" அந்தாதித் தொடையினு மடிநடை யுடைமையு
முந்தையோர் கண்ட முறைமை யென்ப "

என்றார் பிறைநெடுமுடிக் கறைமிடற்றோன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்.

வரலாறு:—

" சிலம்பொலிக்கு மிணையடியுஞ் செறிகுறங்கும் பணைத்தோளும்
நலம்புகழ்தற் கரிதாய நகைமுகமும் புரிகுழலும்
இலங்கிழையாற் பொலிவுற்ற வெழினிறமு மிவைகவற்ற
வந்தணனு யறமொரீஇ யணியிழைநின் பணிபிழைத்து
முந்துணரான் பிரிவாற்றா முகிலுறங்கு மணிவரைமேல்
வந்தவிழ்ந்த மலரயனும் வரம்வேண்ட வருளியோய் "

இது தரவு.

"போதிவரு மலர்ப்பிண்டிப் புங்கவன்ற னறநெறியைத்
*தீதகல மிசைபெருகத் திருநலமு மொருமனத்தாற்
பேதிவரும் பிறவிகளைப் †பிரித்தருளு கெனவணங்கிக்
காதிவரு மணிக்குழையாய் கடவுளடி யடைந்தனையே;

"மதுவார்ந்த மலர்ப்பிண்டி மாதவன தருணெறியைக்
கதுவாய்ப்பட் டியலாமை கழிசாவன் மிகைபூண்டு
பொதுவாய்வண் டறைசோலைப் பொழிலணியுஞ் சந்தத்து
ளிதுவாகு மறநெறியென் றினிதமர்ந்த வியல்பினையே;

"தேனுலா மலர்ப்பிண்டித் தேவாசோன் றிருந்தடியை
வானுலா மமரர்களும் விஞ்சையரும் வந்தேத்த
ஆனுலா முடம்பெய்தி யுச்சந்த மால்வரைமேல்
வேனிலான் மனங்கனல விதூடகனை விரும்பினையே."

**இவை தாழிசை.**

**எனவாங்கு,**

**இது தனிச்சொல்.**

"அணிகிளர் துகிலல்குல் மணிமலி கலையினை;
பணிமொழி யினதருள் பலரிவ ணருளென மருள்குவை;
கறையறு துறவுடை யிறைவன திருவடி கவவுறு காதலை;
முறையற முழுவது மலிபொரு ணிலைமையைமலமற வுணர்தலு மகிழ்ந்தனை;
திருமலர் கஞலிய சிகழிகை திகழ்தரு மணிமலி மகரமு
மறுவறு திலகமு மணிந்தனை;
முழுமதி யிதுவென முதுபுதன் மதுவிரி திருமல ரிதுவென
மொழியினு மளியின மிகலிய முகத்தினை;
நகையென மினலென நளிர்சுட ரொளியென வகையமை யமிழ்தென
வளைசுடன் மணியென முகைவிரி மலரென முறுவலை;
குழலென வமிழ்தென நனியினி கனியென மலியொலி மருவிய மலருறை
மிஞிறென மகிழ்தரு குயிலென மழலைய மொழியினை;
பெறலரு மரபின திருவம ரருண்மொழி யுருவரு ளுறுவர்க ளொழிவிலர்
வினவலின் மருளற வருளிய வறிவன தருண்மொழி மகிழ்ந்தனை"

**இவை அராகம்.**

---

* 'தீதிலாவினைபெருக' எனவும் பாடம்.
† 'பிரித்தருளுமென' எனவும் பாடம்.

"குரும்பையும் பொற்செப்புங் கோங்கி னரும்பும்
விரும்பின வீங்கு முலை;
முலைத்தலைச் செஞ்சுணங்கு வேங்கை மலரோ
டுலைத்தன வம்பொற் பிதிர்"

இவை பேரெண்.

மணிபுனைந்த முடியினை நீ; மாணிகலு நோக்கினை நீ;
அணிபுனைந்த வல்குலை நீ; யரும்பாரு முறுவலை நீ;
காதணிந்த குழையினை நீ; கதுப்பணிந்த கண்ணியை நீ;
போதணிந்த குழலினை நீ; பொருவரிய புகழினை நீ"

இவை சிற்றெண்.

அதனால்,

இது தனிச்சொல்.

"அருணெறி பயந்த வறிவரு ளறிவன்
பொருணெறி புகன்ற வாய்மொழி வழாது
குணந்துறை போகிய வெண்ணரும் பெருமை
கணந்துறை போகிய காவலன் கண்ணி
யுலவுபுக ழுரவோன் றிருநகர்
நிலவி யெம்மிடர் நீக்குமதி நீயே"

இது சுரிதகம்.

இது வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவிற் கோதப்பட்ட வுறுப்புப் பிழையாது வந்தவாறு: தரவுந் தாழிசையுந் தலையளவு பெற்றுத், தாழிசைப்பின்னர் அராகம் பெறாது தனிச்சொற் பெற்று, அம்போதரங்கத்திற் கோதிய வராகவடி பெறாதாய், வண்ணகத்துக் கோதப்பட்ட வராகம் நான்கும் எட்டுமென்னும்படி எட்டடியால் அராகமவை நாற்சீர் முதலாகப் பதின்மூன்றுசீ ரிறுதி யாக அராகவடி வருகவென்னு மோத்தினால் வந்து அராகத் திறுதி வெண்பாவாய் இரண்டடியால் இரண்டு பேரெண் வந்து, அவை அந்தாதித்தொடையால் வந்து, இடையெண் வாராதாய்ச் சிற்றெண் தலையளவிற் கோதிய வளவடி எண்ணெட்டும் வந்து, தனிச் சொற் பெற்றுக் கடைக்கண் அடக்கியலுள் வண்ணித்து வந்து சுரி தகத்தாலிற்றது.

மற்றையன விவ்வாறு செயிற்றியத்துள்ளும், அகத்தியத்துள்ளும் ஓதிய விலக்கணந் தழுவிக் கிடந்தனவில்லை யென்பது. இவ்வாறு சொன்னார் நீர்மலி வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர். இவ்வாறு வருவனவற்றை அளவியல் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா வென்றும், அல்லனவற்றை அளவடி வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவென்றும் வழங்குவர். என்னை?

> "குறில்வயி னிரையசை கூடிய அடிபெறினே
> வண்ணக மாகும்"

என்றார் அவிநயனார்.

[கலிவெண்பா வாமாறு.]

85. தன்றளை யோசை தழுவிநின் றீற்றடி
வெண்பா வியலது கலிவெண் பாவே.

இஃதென்னுதலிற்றோ வெனின், நிறுத்தமுறையானே கலிவெண்பாவாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:—கலித்தளை தட்டுக் கலியோசை தழுவிக் கடையடி வெண்பா இறுமாறே போல முச்சீரடியால் இறுவது யாது, அது கலிவெண்பா என்று வழங்கப்படும் என்றவாறு. என்னை?

> கலியொலி கொண்டு தன்றளை விரவா
> திறுமடி வரினே வெண்கலி யாகும்"

என்றார் அவிநயனார்.

> "தளைகலி தட்டன தன்சீர் வெள்ளை
> களையுந வின்றிக் கடையடி குறையின்
> விரவர வில்லா வெண்கலி யாகும்"

என்றார் மயேச்சுரர்.

> "வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
> வெண்பா வியலது வெண்கலி யாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

வெண்கலிப்பா வெனினும், கலிவெண்பாவெனினும் ஒக்கும்.

வரலாறு :—

" பண்கொண்ட வரிவண்டும் பொறிக்குயிலும் பயில்வாளு
விண்கொண்ட வசோகின்கீழ் விழுமியோர் பெருமானைக்
கண்ணாலு மனத்தாலு மொழியாலும் பயில்வார்கள்
விண்ணாளும் வேந்தரா வார்"

இது சிறப்புடைக் கலித்தளையால் வந்த கலிவெண்பா.

" நாகிளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனாய் வானிறைஞ்ச
மாசதஞ்சேர் வாய்மொழியான் *மாதவர்க்கு மல்லார்க்கும்
தீதகல வெடுத்துரைத்தான் சேவடிசென் றடைந்தார்க்கு
மாதுயரந் தீர்த லெளிது"

இது சிறப்புடையுரிச்சீர் வெண்டளையான் வந்த வெண்கலிப்பா.

" ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
றார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
† சீர்மலி கொடியிடை சிறந்து"

இது சிறப்பிலாசிரிய நிரைத்தளையான் வந்த வெண்கலிப்பா.

" முழங்குகுரன் ‡முரசியம்ப முத்திலங்கு §நெடுங்குடைக்கீழ்ப்
பொழிந்தமதக் கருஞ்சுவட்டுப் பொறிமுகத்த களிறூர்ந்து
பெருநலம் பொதுநீக்கிப் பெயராத பெருமையாற்
பொருகழற்கால் வயவேந்தர் போற்றிசைப்ப வீற்றிருப்பார்
மருள்சேர்ந்த நெறிநீக்கி வாய்மைசால் குணந்தாங்கி
அருள்சேர்ந்த வறம்புரிந்தா ரமர்ந்து"

இது சிறப்பில் வஞ்சித்தளையான் வந்த வெண்கலிப்பா. ஒழிந்ததளை தட்ட வெண்கலிப்பாவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இச்சூத்திரத்துள் 'தன்றளை யோசை தழுவி நின்று' என்பது வேண்டா. 'ஈற்றடி வெண்பா வியலது கலிவெண்பா' வெனவமையும். என்னை?

" வெள்ளையுட் பிறதளை விரவா வல்லன
வெல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும்" (யாப்பருங்கலம்-22.)

* 'வாசவர்க்கும்' எனவும் பாடம்.
† 'சீர்நிறை' எனவும் பாடம்.
‡ 'முழவியம்ப' எனவும் பாடம்.
§ 'வெண்குடை' எனவும் பாடம்.

என்னுமிலக்கணத்தால் வெண்பாவொழித் தல்லாத செய்யுட்களுள் வேற்றுத்தளை விரவுமென்பதூஉம், விரவினுந் தன்றளையால்வருவது சிறப்புடைத்தென்பதூஉம் கூறப்பட்டன. 'துள்ள லிசையன கலிப்பா' (யாப்பருங்கலம்-78) என்னும் பொது விலக்கணத்தால் கலியெல்லாம் துள்ளலோசையாலே வருமென்பதூஉம் சொல்லப்பட்டதாகலின் பெயர்த்துந் 'தன்றளை யோசை தழுவி நின்று' என்று கூறியது கூறவேண்டியதென்னை ? ஒருசாராசிரியர் செப்பலோசையிற் சிறிது வழுவிற்று வழுவாது என்னும் பெற்றியானும் செப்பலோசையிற் சிதையாதும் ஒரு பொருண்மேல் வெள்ளடியால் வந்து, வெண்பா விறுமாறே யிறுவன கலிவெண்பா வென்னுஞ் சிறப்புடைய வென்று எடுத்தோதினா ரென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது. என்னை ?

"ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலான்
* வழுவின்றி நடப்பது கலிவெண் பாட்டே" (தொல்-பொ-செய்-154.)

என்றார் தொல்காப்பியனாராகலின்.

வரலாறு:—

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." (கலி - குறிஞ்சி - 15.)

---

* 'திரிபின்றி வருவது' எனவும் பாடம்.

இது வெள்ளோசைகொண் டொருபொருண்மேல் வெள்ளடியால் வந்த கலிவெண்பா. வெள்ளோசையில் வழுவி வேற்றுத்தளையால் வருவன வந்துழிக் கண்டுகொள்க. இதுவும் விதப்பினாற் கொள்க. 'கலிவெண்பாவே' என்றவழி ஏகார விதப்பினால் வெள்ளோசையினால் வருவதனைக் கலிவெண்பா வென்றும், பிறவாற்றால் வருவனவற்றை வெண்கலிப்பா வென்றும் வேறுபடுத்துச் சொல்வாருமுளர் எனக்கொள்க.

> " அசையடி முன்ன ரராசம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
> வசையறு வண்ணக வொத்தா ழிசைச்கலி வான்றளைதட்
> டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்
> விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே"
>
> —யாப்பருங்கலக்காரிகை.

இவ்வியாப்பருங்கலப் புறனடையை விரித்துரைத்துக்கொள்க.

[கொச்சகக் கலிப்பா வாமாறு.]

86. தரவே தரவிணை தாழிசை தாமும்
சிலவும் பலவுஞ் சிறந்து மயங்கியும்
மற்றும் விகற்பம் பலவாய் வருநவும்
கொச்சக மென்னுங் குறியின வாகும்.

இஃதென்னுதலிற்றோ வெனின் கொச்சகக்கலிப்பா வாமாறுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—'தரவே தரவிணை தாழிசை தாமும், சிலவும் பலவும் சிறந்து மயங்கியும்' என்பது தரவேவந்தும், தரவிரண்டாய் வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு முதலாகிய வாறுறுப்புந் தம்முண் மயங்கியும், பிறபாவினோடு மயங்கியும் வருவனவெல்லாங் கொச்சகக்கலிப்பாவென்றவாறு.

தரவொன்றேவந்தாற் றரவுகொச்சகக்கலிப்பாவென்றும், தரவிரண்டாய் வந்தாற் றரவிணைக்கொச்சகக்கலிப்பாவென்றும், சிலதாழிசை வந்தாற் சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பாவென்றும், பலதாழிசை வந்தாற் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்றும், தரவுமுதலாகியவாறுறுப்புந் தம்முண் மயங்கியும், பிறபாவினோடு மயங்கியும் வருவனவற்றை மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என்றும் வழங்குப.

'சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்' என்பது தந்திர வுத்தியாகலி னிவ்வாறு கூறப்பட்டது.

'தாழும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் தனிச்சொல் இடையிடையேவர அமையும், அம்போதரங்க உறுப்பும் அருகிவரும், சுரிதகமும் அருகிவரப்பெறும் எனக்கொள்க. 'சிறந்து' என்று மிகுத்துச்சொல்லியவதனால் இவற்றின் றாழிசை யீற்றடிகுறைந்து வரவும் அமையும் எனக்கொள்க.

'மற்றும் விகற்பம் பலவாய் வருநவும், கொச்சக மென்னுங் குறி யினவாகும்' என்பது கலிக்கோதப்பட்ட வுறுப்பெல்லாங் குறை வின்றிக் கலியின்றன்மை பெற்ற வுறுப்புக்கள் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், வண்ணமும் அடியுந் தொடையும் மயங்கியும், அராகவடி யந்தாதித்தொடை தொடுத்தும், அத்தொடை பலவாய் வந்தும், கலிக்கண் வாரா வென்ற நேரீற்றியற்சீர்வந்தும், நிரைநடுவா கிய வஞ்சியுரிச்சீர் வந்தும், ஐஞ்சீரடி வந்தும், முச்சீரானு மிருசீரா னும் அம்போதரங்க வுறுப்புப்பெற்றும், இவ்வாறு ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் *மயங்கிசைக்கொச் சகக்கலிப்பா வென்று வழங்கப்படும் என்றவாறு.

தரவொன்றாய்ச் சுரிதகம் பெற்றதனைச் சுரிதகத்தரவு கொச்சக மென்றும், சுரிதகமில்லாததனை இயற்றரவு கொச்சகமென்றும், தரவு இரட்டித்துச் சுரிதகம் பெற்று வந்ததனைச் சுரிதகத்தரவிணைக் கொச்சகம் என்றும், சுரிதகமில்லாததனை இயற்றரவிணைக்கொச்சகம் என்றும், ஈற்றடிகுறையாது சில தாழிசையால் வந்ததனை இயற் சிஃறாழிசைக் கொச்சகமென்றும், ஈற்றடிகுறைந்து சிலதாழிசை யால் வந்ததனைக் குறைச்சிஃறாழிசைக் கொச்சகக்கலியென்றும், ஈற்றடி குறையாது பலதாழிசையால் வந்ததனை இயற்பஃறாழிசைக் கொச்சகக்கலி யென்றும், ஈற்றடி குறைந்து பலதாழிசையால் வந் ததனைக் குறைப்பஃறாழிசைக் கொச்சகக்கலி யென்றும், கலியுறுப்புக் களோடு மயங்கி வந்ததனை இயன்மயங்கிசைக் கொச்சகமென்றும், பிறபாவினோடு மயங்கிவந்ததனை அயன் மயங்கிசைக்கொச்சகமென்

---

* 'கொச்சகக் கலிப்பா வென்றும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வென் றும், ஒரு போகென்றும் வழங்கப்படும்' எனவும் பாடம்.

றும் இவ்வாறு வேறு பகுத்துச் சொல்வாரும் உளர் எனக் கொள்க. என்னை?

" ஓதப் பட்ட வுறுப்புவகை யெல்லா
மேதப் படாமைக் கலிக்கியல் பெய்தி
மிக்கும் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும்
வண்ணமு மடியுந் தொடையு மயங்கியு
மடுக்கிய லந்தந் தொடுத்தன பல்கியும்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்தும்
நாற்சீ ரிறந்த சீரொடு சிவணியும்
மூச்சீ ரிருசீ ரம்போ தரங்க
மச்சீர் முடிவிடை யழிவில தழுவியும்
கொச்சகக் *கலிவயிற் கூறவும் படுமே"

என்றார் பிறரு மெனக்கொள்க.

அவற்றை இயன்மயங்கிசை யென்று வழங்குவாரு முளரெனக் கொள்க. 'மற்றும் விகற்பம் பலவாய் வருநவுங், கொச்சக மென்னுங் குறியின வாகும்' என்பதனாலே, இப்பொருளெல்லாம் விரித்துரைத்துக்கொள்க. அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

" செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

" வெறிகொண் டலரும் பொழிலார் சிமயமு
முறிகொண் டறையு முரல்வார் சுரும்பி
னொலிகொண் டதனின் னிசைபா டிவர
நலமின் புறுநா டகமா டிவிற்ப
மந்திசென் றந்தி தொழப்படுஞ் சீர்மிக்
நந்திய விஞ்சை யன்வென் றனனே"

இவை யியற்றரவு கொச்சகக்கலிப்பா.

" வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
வூர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப்போந்தான்
கூர்பணிய வேற்றானைக் கொற்கையார் கோமானே"

அவர்க்கண்டு,

* 'கலியெனக் கூறவும் படுமே' எனவும் பாடம்.

" பூமலர் நறுங்கோதை புலம்பலைப்ப நறுங்கொண்டாற்
றாமலர்க்கண் மடவார்க்குத் தொடல்பகையே யன்றியுங்
காவலற்குப் பெரியதோர் கடனாகிக் கிடவாதே "

இது வெண்டளையால் வந்த வியற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

" குடவிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடவிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் *தொன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப "

எனவாங்கு,

" ஆனொடு புல்லிப் †பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே "

இது சுரிதகத் தரவு கொச்சகக்கலிப்பா.

" வடிவுடை நெடுமுடி வானவற்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனங்
கொடிபடு ‡வரைமாடக் கோழியார் கோமானே '

எனவாங்கு,

" துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் §துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ "

அதனாற்,

" செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே "

இது சிறப்புடை யாசிரியத்தளையால் வந்த சுரிதகத் தரவிணைக் கொச்சகக்கலிப்பா.

பிறதளையாலும் வந்தவழிக்கண்டுகொள்க.

---

* 'ஏறப்போய்' எனவும் பாடம்.
† 'பெரும்புறு' எனவும் பாடம்.
‡ 'மணிமாடக் கூடலார்' எனவும் பாடம்.
§ 'தொடர்ப்புண்டாங்கு' எனவும் பாடம்.

"பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே"

இது தரவு.

ஆங்கொருசார்,

"உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்,

"அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,

"மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையான் விம்மிதராய் நின்றனரே"

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று,

இது தனிச்சொல்.

"கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நிறைபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே."

இது சுரிதகம்.

இஃது இடையிடை தனிச்சொற்பெற்று வந்து, நேரிசையொத் தாழிசைக்கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தாழிசை மூன்றே யாய்த் தன்றளையான் வந்த வியற்கைஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

"மாயவனும் முற்றேன்றி மணிவிரைகாத் தணிபெற்ற்
வாயநீள் குடையினரா யரசர்கள் பலர்கூடி
மணிநின்ற மேனியான் மதநகையைப் பெறுகுவார்
அணிநின்ற விடைகொண்டா ரெனச்சொல்லி யறைந்தனரே"

இது தரவு.

தானவ்வழி,

"எழுப்பற்றிச் சனந்துறுமி யெவ்வழியு மியமியமப
விழுக்குற்று நின்றாரும் பலர்;

ஆங்கே,

"வாளுற்ற கண்ணுளை மகிழ்விப்பா மெனக்கருதி
கோளுற்று நின்றாரும் பலர்"

ஆண்டே,

"இத்திறத்தாற் குறையென்னை யிருங்கிளைக்குங் கேடென்னப்
பற்றுது நின்றாரும் பலர்"

இவை மூன்றுந் தாழிசை.

அதுகண்டு,

இது தனிச்சொல்.

"மைவரை நிறத்தன மாலை யியராழக்
கைவரை நில்லாது கடிதேற் றெருத்தொடிப்ப
வழுங்கின ராய மமர்ந்தது சுற்றம்
எழுந்தது பலசன மேறுதொழு விட்டன
கோல வரிவளை தானுங்
கால்வன போலுங் கடிமகிழ் வோர்க்கே"

இது சுரிதகம்.

இஃது இடையிடை தனிச்சொற் பெற்று ஈற்றடிகுறைந்து வந்த மூன்று தாழிசை பெற்றுவந்தமையாற் குறைச்சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா. சிறப்பில் வெண்டளையால் வந்து, நாலடித் தரவாகி யிரண்டடித் தாழிசையாலும், ஆறடிச் சுரிதகத்தாலும் வந்த தெனக்கொள்க. பிறதளையாலும் வந்தவழிக் கண்டுகொள்க.

"தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னுட்கண்

* கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தவின் பேரருளும் பிறிதாமோ"

இது தரவு.

" இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ;
" தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ;
" அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேன்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ;
" நாம்பிரியோ மினியென்று நன்னுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ †மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ;
" குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா ‡ லருளியது மருளாமோ;
" சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ"

இவை யாறுந் தாழிசை.

அதனால்,

இது தனிச்சொல்.

" அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமதி யறிவாங்
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே."

இது சுரிதகம்.

இது சிறப்புடைத்தன்றலையால் நாலடித்தரவும் இரண்டடித் தாழிசை ஆறும் தனிச்சொல்லும் நாலடிச் சுரிதகமும் பெற்றுவந்த இயற்பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா. குறைப்பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா வந்தவழிக் கண்டுகொள்க.

" மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சார் துறைவகேள்;

* 'கண்மதியொப் பிவையின்றி' எனவும் பாடம்.
† 'என்றவின்' எனவும் பாடம்.
‡ 'அருளுவதும்' எனவும் பாடம்.

"மலையென மழையென மஞ்ஞெனத் திரைபொங்கிக்
கடலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கில்லா
தெழுமுந்நீர் *பரந்தோங்கு மேமஞ்சார் துறைவகேள்."

இவை யிரண்டுந் தரவு.

"கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்;
"கண்கவர் மணிப்பைம்பூண் கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்;
"நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்னெருசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;
"கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;
"வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கில்லா
தாழுமென் †னிலைகண்டு மகல்கிலனே யென்றியால்;
"கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்."

இவை யாறுந் தாழிசை.

அதனால்,

இது தனிச்சொல்.

"அடும்பயி விறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;
"செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;
"அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;
"அலங்கொளி ரவிர்சுட ரிலங்கொளி ‡மலர்தொறுங்
கலந்தெறி காலொடும் புலம்பின பொழில்."

இவை நான்கும் அராகம்.

---

* 'பரந்தொழுகும்' எனவும் பாடம்.

† 'நிலைகண்டுந் தாங்கலனே' எனவும் பாடம்.

‡ 'மறைதொறும்' எனவும் பாடம்.

"விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு மிறப்பாயோ;

"ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு மிறப்பாயோ;

"தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு மிறப்பாயோ."

இவை மூன்றும் தாழிசை.

"மறவாத *வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;
"காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;
"இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்."

இவையுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"பகைபோன் றதுதுறை; பரிவா யினகுறி;
நகையிழந் ததுமுகம்; நனிநா ணிற்றுளம்;
தகையிழந் ததுதோள்; தலைசிறந் ததுதுயர்;
புகைபரந் ததுமெய்; பொறையாயிற் றென்னுயிர்."

இவையிருசீ ரெட்டம்போதரங்க வுறுப்பு.

அதனால்,

இது தனிச்சொல்.

இனையது நினையா லனையது பொழுதால்
இனையல் வாழி தோழி † துனைவரல்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே."

இது சுரிதகம்.

---

* 'அருளுடையேன்' எனவும் பாடம்.

† 'தொலையா' எனவும் பாடம்.

இது தரவிரட்டித்துத் தாழிசையாறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்துந் தாழிசையும், தனிச்சொல்லும், எட்டம் போதரங்கவுறுப்பும், தனிச்சொல்லும், சுரிதகமும் இவ்வாறு கலிக்கோதப்பட்ட ஆறுறுப்புமே மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்து மயங்கியும் வந்தமையால் இயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணாக நறும்பைந்தார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே"

* அவனுந்தான்,

"ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி †னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்கும்
கானக நாடன் மகன் ;

"சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்றொடா
கொல்லை குரல்வாங்கி யீனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான் ;

"காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வற் றொழுதெழலாற் ‡றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல் ;

எனவாங்கு,

"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய் ;

அவரும்,

தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை;

---

* 'அவன்றானும்' எனவும் பாடம்.
† 'அவ்வரைக்கண்' எனவும் பாடம்.
‡ 'தன்னையரும்' எனவும் பாடம்.

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண் ;
நல்லாய்,
நன்னாட் டலைவரு மெல்லை நமர்மலைக்கட்
டந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல் ;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடியுமா மன்றோ ;
விண்டோய்கன் னாடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ ;
மைதவழ் வெற்பன் மணவணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ;
என்னைமன்,
நின்கண்ணாற் காண்பென்மன் யான் ;
நெய்த லிதழுண்கண், நின்கண்ணா தென்கண் மன"

எனவாங்கு,

இது தனிச்சொல்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகை வகைதொகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் *புகுந்தனன்
† போதெழி லுண்கணும் பொலிகமா வினியே" (கலி-குறிஞ்-3.)

இது சுரிதகம்.

இது வெள்ளை பலவுமயங்கி ஆசிரியவடியும் விரவிவந்தமையால் அயன்மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா. இதன் முதற்கண் வேணீற் றியற்சீர் வந்தவாறு கண்டுகொள்க.

---

* 'வந்தனன்' என்பது கலித்தொகை அச்சுப்பிரதியிலுள்ள பாடம்.
† 'பூவெழில்' என்பது கலித்தொகை அச்சுப்பிரதியில் உள்ள பாடம்.

"நறுவேங்கைத் துறுமலர் நன்னுதலார் கொண்டணிய
வுறுபாங்கர்ப் புனத்தருக ரொருசிறைநின் றேமாகக்
கடிகாவற் குறவர்தங் காப்பினாற் கதஞ்சிறந்திட்
டிடியோடு முழக்கிற்றா யிருங்களிறு தோன்றலு
மஞ்செமக்கு வந்தடைய வருளினால் வேல்விடலை
வெஞ்சினத்தா லதன்றிறல்வீழ்த் தென்றடந்தோள் கவைஇக்கொளப்
பொற்பினான் முலைபொருதிர்த்த வென்பதினா லென்றோழி
கற்பினா லுலகினுட் கருதியதே யாகுமே."

இது தரவு.

அவனே,
அயன்மலைக் காவலன் காதல னாமே
இவளே,
அதற்கொண் டும்பயப் பெய்தினளே
யானே,
இதற்கொண்டும் பெரும்பட ரெய்தினனே
அதனால்,
இதுவித னிலைமை யெனுமது விதியுணரா
மதுவிரி மலரிய னாறுவன ளலர் ;
அலர்சில பலரறி குறியுறு வகைகொடி
தனையிது மிகநொது மலர்வரை வதைகட னுமர்;
நுமர்தரு விதியென நுணுகிய விலகிடை
தமர்பல ருடன்மகிழ் தகையின திவ டகை ;
தகைபெறு குழலெழி லழல்சுழல் பழியினள்
பழிபட ரிடரொடு பல
பலதுயர் செலப்புரி
புரிதெரி விலர்தமர்
தமர்பல தகுதியொ டெமரிவர்
தகுதகை மிகைநல விறலது விதி

இவை அராகம்.

இனியே,
ஆட னடைப் புரவிச் செம்பூட் சேஎய்க்
கூடலெனக் குயின்றன தோள் ;
மறந்தரு தானைச் செங்கோற் கிள்ளி
யுறந்தையிற் சிறந்தன முலை;
மஞ்சுவரைத் திணிதோட் பூழியர் மன்னவன்

வஞ்சியென மலர்ந்தன கண்"
இன்றே,
பொலிகநும் வினையே பொலிகநும் வினையே
நாணணி கொண்ட நன்னுத லரிவைக்கும்
பூணணி கொண்ட பொங்குவரை மார்பற்கும்
மனையீ ரோதி வாழ்வொடு மல்கிய
புனையீ ரோதிக்கும் பொலிகநும் வினையே ;
இவ்வகை,
† வினைசெய் மாக்களும் விரும்பினர் வாழ்த்திப்
புனைநல மெய்தின் றிப்பதியே
நொதுமலர்க் கனைந்தன்று முரசு
மணமொடு மகிழ்ந்தது மனை
கண்ணொடு கெழீஇயின கிளை ;
அஃதான்று,
முன்னாட் களவொடு பழகிப்
பின்னாட் கற்பொடு புணர்ந்தன்று விதுவே"

இதுவும், பிரிந்திசைக் குறளடிகளும் அந்தாதித் தொடையாகிய அராகவடிகளும் தனிச்சொற்களும் விரவி,மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் வந்தும், இடையிடை ஆசிரியங்களும் வெள்ளைகளும் மயங்கியும் வந்தமையின், மயங்கிசைக்கொச்சகக் கலிப்பா எனப்படும். பிரிந்திசைக் குறளடியாவன, இருசீரடியு முச்சீரடியுமாய்வரும் அம்போதரங்கமெனக் கொள்க. பிறருமிவற்றுக் கிலக்கண மிவ்வாறே சொன்னார். என்னை ?

" தரவே யாகியு மிரட்டியுந் தாழிசைச்
சிலவும் பலவு மயங்கியும் பாவே
றொத்தா ழிசைக்கலிக் கொவ்வா வுறுப்பின
கொச்சகக் கலிப்பா வாகு மென்ப "

என்றார் அவிநயனார்.

" தரவே தரவிணை தாழிசை சிலபல
வரன்முறை பிறழ வயற்பா மயங்கியும்
தனிச்சொற் பலவா யிடையிடை நடந்தவும்
ஒத்தா ழிசைக்கலி யுறுப்பினிற் பிறழ்ந்தவும்

* 'வளையீரோதி மகிழ்வொடு மல்கிய' எனவும் பாடம்.
† 'வினையே மாக்களும்' எனவும் பாடம்.

வைத்த வழிமுறையால் வண்ணக விருவாய்
மயங்கி வந்தவு மியங்குநெறி முறையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர்"

என்றார் காமவேளைக் கறுத்தபுத்தேள் நாமந்தாங்கிய நல்லாசிரியர்.

"எருத்திய லின்றி யிடைநிலை பெற்றும்
இடைநிலை யின்றி யெருத்துடைத் தாயும்
எருத்த மிரட்டித் திடைநிலை பெற்றும்
இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்
இடையு மெருத்து மிரட்டுற வந்தும்
எருத்த மிரட்டித் திடைநிலை யாறாய்
அடக்கியல் சாறு மமைந்த வுறுப்புக்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயுந்
தரவொடு தாழிசை யம்போ தரங்கம்
முடுகியல் போக்கிய லென்றிவை யெல்லாம்
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
யிடைநிலை வெண்பாச் சிலபல சேர்ந்து
மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன
கொச்சக மென்னுங் குறியின வாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

இனி ஒருசார் கொச்சகங்களை ஒருபோகு என்று வழங்கு வாருமுளர். மயேச்சுவரராற் சொல்லப்பட்ட அம்போதரங்கமும், வண்ணகமும் என்றிரண்டு தேவபாணியுந் திரிந்து, தரவொழித்து அல்லாவுறுப்புப் பெறினும், தாழிசை யொழித்து அல்லாவுறுப்புப் பெறினும், அம்போதரங்கத்து ளோதப்பட்ட மூவகை யெண்ணும் நீங்கினும், வண்ணகத்துக் கோதப்பட்ட விருவகை யெண்ணு நீங் கினும், நீங்கிய உறுப்பொழியத் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வருவன ஒருபோகு எனப்படும். அவை, அம்போதரங்க உறுப்புக் குறைஇயின அம்போதரங்க ஒருபோகு எனவும், வண்ணக உறுப்புக் குறைஇயின வண்ணக ஒருபோகு எனவும் படும். என்னை?

"கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய விரண்டு தேவ பாணியும்
தரவே குறையினுந் தாழிசை யொழியினும்

இருவகை முத்திறத் தெண்ணே நீங்கினும்
ஒருபோ கென்ப வுணர்ந்திசி னோரே"

என்றார் மயேச்சுவரர்.

வரலாறு :—

" கரைபொருநீர்க் கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற் கடைந்தனையே ;
முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடைபெயர
வகல்விசும்பி னமரர்க்கு மாரமுதம் படைத்தனையே ;
வரைபெரிய மத்தாக வாளரவங் கயிறாகத்
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப் படைத்தனையே"

இவை மூன்றுந் தாழிசை.

" அமரரை யமரிடை யமருல கதுவிட
நுமரது புகழ்மிக மிகவிக லடுத்தனை"

இஃது அராகம்.

" அலைகட லுலகமு மந்தணர்க் கீந்தனை ;
உலகொடு நிலவிய வொருபுகழ் சுமந்தனை"

இவை பேரெண்.

" ஆதிக்க ணரசெய்தினை ;
நீதிக்கண் மதிநிரம்பினை ;
விளங்கெரி முதல்வேட்டனை ;
துளங்கெரியவர் புகழ்துளக்கினை"

இவை இடையெண்.

" அலகு நீ; உலகு நீ; அருளு நீ; பொருளு நீ;
நிலவு நீ; வெயிலு நீ; நிழலு நீ; நீரு நீ"

இவை யளவெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

" பவழ மெறிதிரைப் பரவைக் கோவே
புகழ்துறை நிறைந்த பொருவே னந்தி

யுலகுட னளந்தனை நீயே
யுலகொடு நிலவுமதி யுதயவரை யொத்தே"

இது சுரிதகம்.

இவ்வைந்து அம்போதரங்க வொருபோகு. பிறவும் அம்போதரங்க வுறுப்புப்பெற்று வந்த வம்போதரங்க வொருபோகு வந்த வழிக்கண்டுகொள்க. வண்ணகவுறுப்புப் பெற்றுவந்தன எல்லாம் வண்ணகவொருபோகு. அவை வருமாறு:—

"அகலிடமு மமருலகு மமர்பொருது மறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமரணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மாற்புகழு நிலைதளரப்
புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருகளம் வெறிதாக
மண்ணுலகு மறிகடலு மாமலையு நிலைகலங்க
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்து ளலைத்தனையே"

அதனால்,

"கனைகட லுடைதிரை கரைபொரக் கடைந்தனை;
முனைவரு மமரரு முறைமுறை வந்துநின்
னிணைமலர் பலர்புகழ் பயில்வதோர் பண்பினை;
மருளுறு துதைகதிர் மணியது மணிநிற மருளுநின்குடை;
குடையது குளிர்நிழ லடைகுண வுயிர்களை அளிக்கு நின்கோல்;
கோலது செம்மையிற் குறைகடல் வளாக மாலையுங்காலையு மகிழ்தூங்
[கின்று"

இவை அராகம்.

"ஆருயிர்க் கெல்லா மமிழ்தின் றமையா
நீரினு மினிதுநின் னருள்
அருளு மலைகடலு மாயிரண்டு மொக்கும்
இருள்கொடி மேற்கொண்டாய் நினக்கு"

இவை பேரெண்.

"நீர்கலங்காத் தோயநீ; நிலவுலக மீந்தோய்நீ;
போரமர்க் கடந்தோய்நீ; புனையெரிமுன் வேட்டோய்நீ;
ஒற்றைவெண் குடையோய்நீ; கொற்றச்செங் கோலோய்நீ;
*பாறையந் துறைவனீ பரியவ நிறைவனீ"

இவை சிற்றெண்.

---

* 'பாறைய' எனவும் பாடம்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"பொருகுடை வளாக மொருகுடை நிழற்றி
யிருபிறப் பாளர்க் கிருநிதி யீந்து
மனமகிழ்ந் தருள்புரி பெரும்புக ழச்சுத
கோவே யினையை யாதலிற் பனிமதி
தவழு நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுத றுவலர்க் கரிதே"

இது வண்ணக வொருபோகு. பிறவும் வண்ணக வுறுப்புப் பெற்று வந்த வண்ணக வொருபோகு வந்தவழிக் கண்டுகொள்க; என்னை?

"தரவின் றாகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப" (தொல்-பொ-செய்-149.)

என்றார் தொல்காப்பியனார். அவை யெல்லாம் வந்தவழிக் கண்டு கொள்க. இவை யெல்லாம் 'மற்றும் விகற்பம் பலவாய் வருநவும்-கொச்சக மென்னுங் குறியின வாகும்' என்பதனு லுரைத்துக் கொள்க.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என்னும் ஒன்பது கலிப்பாவும் வெள்ளைச் சுரிதக நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா, அகவற் சுரிதக நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, அளவியலம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, அளவழியம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, அளவியல் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, அளவழி வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, வெண்கலிப்பா, இயற்றரவு கொச்சகக்கலிப்பா, சுரிதகத்தரவு கொச்சகக்கலிப்பா,

இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா, சுரிதகத் தரவிணைக் கொச்சகக் கலிப்பா, இயற்சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, குறைச்சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, இயற் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, குறைப்பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, இயன் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, அயன் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என விவ்வாறு விகற்பிக்கப் பதினெட்டாம்.

அவை மூன்று துள்ளலோசையானு முறழ வைம்பத்துநான் காம்.

பதினெட்டுக் கலியினையும் ஆசிரிய நேர்த்தளை யிரண்டு மொழித்து, அல்லாத பன்னிரு தளையானுங் கூறுபடுப்ப விருநூற்றொரு பத்தாறும்.

* [ஓசையுந் தளையுங் கூட்டியுறழ அறுநூற்று நாற்பத்தெட்டாம். ஒத்தாழிசைக் கலிப்பா வொழித்து அல்லாக் கலியுள் ஆசிரிய நேர்த் தளை யிரண்டும் அருகிவரப் பெறும் என அவற்றோடுங் கூட்டியுரைக் குங்கால் எழுநூற்றிருபது கலிப்பாவாம்.] பிறவகையாலும் விகற் பிக்கப் பலவுமாம். என்னை?

"ஒத்தா ழிசைக்கலியென் றோதிய வாறினையும்
முத்திறத் தோசையான் முன்முரணி—வைத்து
வழுவற்ற வாறிரண்டு வான்றளையான் மாற
வெழுமுப்பத் தாறு மெனல்"

"கொச்சக மீரைந்தும் வெண்கலி யோரிரண்டும்
வைத்திசையோர் மூன்றினான் மாறியபின்—மற்றவற்றை
மாசில் பதினொன்கு வான்றளையான் மாறவரு
மாசிகந்த வைந்நூற்று நான்கு"

இவை இருதிறமுங் கூட்டினால் எழுநூற்றிருபது கலிப்பாவாம். பிறவாற்றானும் விகற்பிக்கப் பலவாம்.

"நான்கு முதலாக நாலெந் தெழுத்தளவு
மான்ற வகவ லடிக்கெழுத்தா—மூன்றுடைய
பத்தாதி யாகப் பதிற்றிரட்டி யீறாக
வைத்தார் முரற்கைக் கெழுத்து"

* இத்தொகை விவரம் சில ஏடுகளிலில்லை.

"ஏதந் தழுவா திசைசேர்ந் திருநான்கு
நீதி நலஞ்சேர்ந்து நிற்றலா—லோதிய
மூன்றுங் கிடக்கை முறைமை முரற்கைக்கு
மூன்றுங் குலம்வகுத்தார் முன்"

வணிகர்க் கெண்ணில மாவன:—

"தனிமை யாற்றன் முனிவில னாதல்
இடத்துத் தெருமரல் பொழுதொடு புணர்தல்
உறுவது தெரித லுறுவதஞ் சாமை
வகுத்த லீட்டல் வாணிகன் றுறையே"

இவற்றை விரித்துரைத்துக் கொள்க.

"தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே"
—யாப்பருங்கலக்காரிகை.

இவ்வியாப்பருங்கலப் புறநடையை விரித்துரைத்துக்கொள்க.

[கலித்தாழிசையாமாறு.]

87. அடியினைத் தாகியு மொத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே.

என்பது சூத்திரம். இஃதென்னுதலிற்றோ வெனின், கலிப்பா வாமாறுணர்த்திக் கலிப்பாவின் இனமாமாறுணர்த்துவா னெடுத்துக் கொண்டார். இச்சூத்திரம் கலிப்பாவின் இனத்தினுள் தாழிசை யாமாறுணர்த்துத லுதலிற்று.

இதன் பொருள்:—அடிசிலவாயும் பலவாயும் வந்து, தத்தமி லொத்து ஈற்றடிமிக்கு வருவன வெல்லாங் கலியொத்தாழிசை யென்றும், கலித்தாழிசையென்றும் வழங்கப்படும் என்றவாறு.

'அடியினைத்தாகியு மொத்துங் கடையடிமிகுவது கலித்தா ழிசையே' என்னாது 'வந்து' என்றும் 'அளவினில்' என்றும் மிகுத்துச் சொல்லவேண்டியது என்னை ?

'வந்து' என்று மிகுத்துச் சொல்லியதாவது, இரண்டடியினவாய் ஈற்றடி மிக்கு வருவனவும், ஈற்றடி மிக்கு ஏனையடி தம்முளொவ்வா தருகிவருவனவு முள வொருசார்த் தாழிசை யென்ப தறிவித்தற் கெனக்கொள்க.

'அளவினில்' என்று மிகுத்துச் சொல்லியதாவது, ஒரு பொருண் மேன் மூன்றாய் வருவனவற்றைக் கலியொத்தாழிசை யென்றும், ஒன்றாயும் இரண்டாயும் மூன்றின் மிக்கும், மூன்றாய்ப் பொருள் வேறாயும் வருவனவற்றைக் கலித்தாழிசை யென்றும் பெயர் வேறு படுத்துச் சொல்லுவாருமுள ரொருசாராசிரிய ரென்பதறிவித்தற் கெனக்கொள்க.

'கலித்தாழிசையே' என்ற ஏகாரவிதப்புச் சொல்லவேண்டிய தென்னை? ஈற்றடி மிக்கு ஏனையடி யொத்து வருவனவற்றை யெல் லாஞ் சிறப்புடைக் கலித்தாழிசை யென்றும், ஒவ்வாது வருவனவற் றைச் சிறப்பில் கலித்தாழிசை யென்றும், ஈரடியானும் ஈற்றடி மிக்கு வருவனவும் சிறப்பில் கலித்தாழிசை யென்றுஞ் சொல்லுவ ரொரு சாராசிரியரென்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டதெனக் கொள்க.

வரலாறு:—

"கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் *சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின் ;
"ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின் ;
"மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்"

இவை யிரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருண்மேன் மூன் றடுக்கி வந்தமையாற் கலியொத்தாழிசை எனப்படும்.

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழாதாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்"

இஃது ஒரு பொருண்மேல் ஒன்றாய் ஈற்றடி மிக்கு ஏனையடி தம் முள் ஒத்து வந்தமையாற் சிறப்புடைக் கலித்தாழிசை எனப்படும்.

"திலமகள் கேள்வனு நேர்கழலி னானும்
நலமிகு கச்சியார்கோ வென்பவே
நலமிகு கச்சியார் கோவாகி னானுஞ்
சிலைமிகுதோட் சிங்கனவ னென்பவே செருவிடை யானையவ னென்பவே"

எனவும்,

* 'சிறுகுடி' எனவும் பாடம்.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சண்டயா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே"

எனவும் இவை பொரு பொருண்மே லொன்றாய் ஈற்றடிமிக்கு இரண்டாமடிகுறைந்து ஏனையடி இரண்டுமொத்துவந்த சிறப்பில் கலித்தாழிசை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

கலியொத்தாழிசை, கலித்தாழிசையென்று வேறுபடாதே அவற்றைக் கலித்தாழிசையென்று வழங்கவு மமையும். இவற்றை யெல்லாம் விகற்பித்துச் சிறப்புடைக் கலியொத்தாழிசை, சிறப்பில் கலியொத்தாழிசை, சிறப்புடைக் கலித்தாழிசை, சிறப்பில் கலித் தாழிசை என்று கூறுபடுப்ப நான்காம். அவை சிறப்புடைத் தளையானும், சிறப்பில் தளையானுங் கூறுபடுத்து நோக்க ஐம்பத் தாறும். அவையெல்லாம் வந்தவழிக் கண்டுகொள்க. என்னை?

"அந்தடி மிக்குப் பலசில வாயடி
*தந்தமி லொன்றிய தாழிசை யாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

"அந்த வடிமிக் கல்லா வடியே
தந்தமு ளொப்பன கலித்தா ழிசையே"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"ஈற்றடி மிக்கள வொத்தன வாகிப்
பலவுஞ் சிலவு மடியாய் வரினே
கலிப்பா வினத்துத் தாழிசை யாகும்"

என்றார் அவிநயனார்.

"அடிபல வாகியுங் கடையடி சீர்மிகிற்
†கடிவரை யில்லைக் கலித்தா ழிசையே"

என்றார் காமனைக் காய்ந்தவர் நாம மகிழ்ந்த நல்லாசிரியர். (௯௪)

---

* 'தந்தமிலொன்றி' எனவும் பாடம்.
† 'கடிவரை யில்லா' எனவும் பாடம்.

[கலித்துறையாமாறு.]

## 88. நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை.

இஃதென்னுதலிற்றோவெனின், கலித்துறையாமா றுணர்த்துதனுதலிற்று.

இதன் பொருள்:—ஐஞ்சீரடி நான்காய் நடப்பது கலித்துறை எனப்படும் என்றவாறு.

'நெடிலடி நான்காயது கலித்துறை' என்னாது 'நிகழ்வது' என்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை? அடிமறியாய் ஐஞ்சீர் நாலடியாய் வருவனவற்றைக் கலிமண்டிலத்துறை யென்றும், அடிமறியாகாதே யைஞ்சீர் நாலடியால் வருவனவற்றைக் கலிநிலைத்துறை யென்றும் வழங்கப்படு மென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது.

அவை வருமாறு:—

"மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளக்கும்
தக்க தானங்க டணப்பரும் போகத்தைப் பிணிக்கும்
தொக்க சீலங்க ளியக்கமி றுறக்கத்தைப் பயக்கும்
சிக்கெனப் பூசனை திகழொளிப் பிழம்பினைத் திருத்தும்"

இஃதடிதோறும் பொருண்முடிந்து, அடிமறியாய் ஐஞ்சீரடியான் வந்தமையாற் கலிமண்டிலத்துறை எனப்படும்.

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே"

இஃதடிமறியாகாதே ஐஞ்சீரடியான் வந்தமையாற் கலிநிலைத்துறை எனப்படும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இவை பதினறு தளையாலுங் கூறுபடுத்து நோக்க விருபத்தெட்டுத் துறையாம்போலு மெனக்கொள்க. என்னை?

"ஐஞ்சீர் முடிவி னடித்தொகை நான்மையொடு
எஞ்சா மொழிந்தன வெல்லாங் கலித்துறை"

என்றார் காக்கைபாடினியார்.

" ஐஞ்சீர் நான்கடி கலித்துறை யாகும்"

என்றார் அவிநயனார். (௯௫)

[கலிவிருத்தமாமாறு.]

89. அளவடி நான்கின கலிவிருத் தம்மே

இஃதென்னுதலிற்றோவெனின், கலிவிருத்தமாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள்:—நாற்சீராலாகிய நான்கடியுடையன வெல்லாங் கலிவிருத்த மெனப்படும் என்றவாறு.

'அளவடி நான்கின கலிவிருத் தம்மே' என்றவழி ஏகார விதப்பினால் அடிமறியாய் நாற்சீர் நாலடியால் வருவன கலிமண்டில விருத்தமென்றும், அடிமறியாகாதே நாற்சீர் நாலடியால் வருவன கலிநிலைவிருத்தமென்றும் வழங்கப்படும் எனக் கொள்க.

வரலாறு:—

" இந்திரர்க ளேத்துமடி யீண்டுயிர்க ளோம்புமடி
வெந்திறன் ஞாயிற்றெழில் வீவிலொளி வெல்லுமடி
மந்திரத்தி னோதுமடி மாதுயரந் தீர்க்குமடி
யந்தரத்தி னுயவிதழ்த் தாமரையி னங்கணடி"

இஃதடிமறியாய் நிற்றலின் கலிமண்டில விருத்தம் என்று வழங் கப்படும் எனக்கொள்க.

" விரிகதிர் மதிமுக மடநடை கணவனோ
டரியுறு கொழுங்கிழ லசையின பொழுதினி
*னெரிகரு தளிர்சினை யிதழ்மிசை யுறைவோன்
றரவில னெனின்மன முரைமின் மெனவே"

இஃதடிமறி யாகாதே நின்றவாறே நின்று பொருள்பயத்தலிற் கலிநிலை விருத்தம் என்று வழங்கப்படும். இவை தளையாற் கூறு படுத்து நோக்க விருபத்தெட்டு விருத்தமாம். அவையெல்லாம் வந்த வழிக் கண்டுகொள்க. 'அளவடி நான்கின' என்று பன்மை சொல்லியவதனான் கலியொலி வழுவாது நாற்சீர் நாலடியான் வரு வன வெல்லாம் தரவு கொச்சகக் கலிப்பாவென்று வழங்கப்படும் எனக்கொள்க. வரலாறு:—

* 'னெரிதரு' எனவும் பாடம்.

*"செல்வப்போர்க் கதக்கண்ணன்" என்பது கலித்தளையான் வந்தது.

"நாற்சீர் நாலடி வருவ தாயி
னெலியி னியைந்த கலிவிருத் தம்மே"

என்றார் அவிநயனார்.

"ஐஞ்சீர் நாற்சீ ரடிநான் காயி
னெஞ்சாக் கலியின் றுறையும் விருத்தமும்"

என்றார் மயேச்சுவரர்.

"நாலொரு சீரா னடந்த வடித்தொகை
யீரிரண் டாகி யியன்றவை யாவுங்
காரிகை சான்ற கலிவிருத் தம்மே"

என்றார் காக்கைபாடினியார்.

"நாற்சீர் நாலடி கலிவிருத் தம்மே"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

கலிக்கினமாகிய தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றினுள்ளும் ஒரு பொருண்மேல் மூன்றாய் வருந் தாழிசையை ஒருபுடையொப்புமைநோக்கி ஒருபொருண்மேன் மூன்றாய்வருந்தாழிசையைச் சிறப்புறுப்பாகவுடைய வொத்தாழிசைக் கலிப்பாவின் இனமென்றும், ஒரு பொருண்மே லொன்றாயும், இரண்டாயும், மூன்றின் மிக்கும் வருந் தாழிசையை மிக்குங் குறைந்துங் கிடத்தல் என்னு மொப்புமை நோக்கிக் கொச்சகக் கலிப்பாவின் இனமென்றும், ஐஞ்சீரடி கொச்சகத்துள் அருகிவருமாகலின் அவ்வொப்புமையாற் கலித்துறையையுங் கொச்சகக்கலிப்பாவின் இனமென்றும், விருத்தம் நாற்சீர் நாலடியால் வருதலிற் கலிவெண்பாவின் இனமென்றும், அவற்றொரு புடை யொப்புமை நோக்கிப் பாச்சார்த்தி வழங்கப்படும் எனக் கொள்க.

"அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே"

—யாப்பருங்கலக்காரிகை.

இவ் வியாப்பருங்கலப் புறநடையை விரித்துரைத்துக் கொள்க.

கலிப்பாவும் இனமும் முடிந்தன.

---

* இச்செய்யுளை 313-ஆம் பக்கத்திற்காண்க.

[வஞ்சிப்பாவாமாறு.]

90. தூங்க லிசையன வஞ்சி மற்றவை
யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே.

இஃதென் னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே வஞ்சிப் பாவிற் கோசையு மீறுமாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன்பொருள் :—தூங்கலோசையைத் தமக்கோசையாக வுடைய வஞ்சிப்பாக்கள்; அவைதாம் தனிச்சொல்லோடு புணர்ந்து ஆசிரியச் சுரிதகத்தால் இறும் என்றவாறு.

'தூங்கலிசையன வஞ்சி யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே' என்றாலுங் கருதிய பொருளைப் பயக்கும். 'மற்றவை' என்று மிகுத்துச் சொல்லவேண்டிய தென்னை? ஏந்திசைத் தூங்க லும், அகவற்றூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும் என மூன்று வகைப்படுந் தூங்கலோசை என்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது. இரண்டு வஞ்சிப்பாவினையு மூன்று தூங்கலோசையானும் உறழ ஆறாம்; இரண்டு வஞ்சிப்பாவினையும் பதினன்கு தளையானுமுறழ விருபத்தெட்டாம்; ஓசையுந் தளையுங் கூட்டியுறழ எண்பத்து நான்காம் எனக் கொள்க.

'தூங்க லிசையன வஞ்சி மற்றவை தனிச்சொலோ டகவலி னிறுமே' என்னாது 'ஆய்ந்த' என்று மிகுத்துச் சொல்லியது ஒரு சாரார் வேற்றடி விரவாத வஞ்சிப்பாக்களை இன்னியல் வஞ்சிப்பா எனவும், வேற்றடி விரவிவந்த வஞ்சிப்பாக்களை விரவியல் வஞ்சிப்பா எனவும் வேண்டுவ ரென்ப தறிவித்தற்கு வேண்டப்பட்டது.

இவ் விரண்டு வஞ்சிப்பாவினையும் இவ் விருபெயரானுங் கூறு படுப்ப நான்காம்; அவை, இன்னியற்குறளடி வஞ்சிப்பா, விரவியற் குறளடி வஞ்சிப்பா, இன்னியற் சிந்தடிவஞ்சிப்பா, விரவியற் சிந்தடி வஞ்சிப்பா என. இவை மூன்று தூங்கலோசையானு முறழப் பன் னிரண்டாம். அவை பதினாலு தளையானுங் கூறுபடுப்ப வைம்பத்தா றாம். அவை ஓசையுந் தளையுங் கூட்டியுறழ நூற்றறுபத்தெட்டாம். பிறவகையானும் விகற்பிக்கப் பலவுமாம் எனக்கொள்க.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

"பார்பரவிய பருவரைத்தாய்க்
கார்கவினிய கதழொளியாய்

நீர்மல்கிய நீண்மலரவாய்
திறமல்கிய தேனினமுமாய்,
அதனால்
மொய்மலர் துவன்றிய தேம்பாய்
மலரடி யிணையை வைத்தவா மணனே "

என்பது ஏந்திசைத் தூங்கலோசையான் வந்த குறளடி வஞ்சிப்பா.

" பூந்தாமரைப் போதலமர
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
*மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே "

என்பது ஏந்திசைத் தூங்கலோசையான் வந்த குறளடி வஞ்சிப்பா.

" பானல்வாய்த் தேன்விரிந்தன
கானல்வாய்க் கழிமலர்ந்தன
ஞாழலொடு நறும்புன்னை
தாழையொடு முருகுயிர்ப்ப
வண்டல்வாய் நறுநெய்தல்
கண்டலொடு கடலுடுத்துத்
தவளமுத்தஞ் சங்கீன்று
பவளமொடு ஞெமிர்ந்துராஅய்
இன்னதோர்,
கடிமண முன்றிலு முடைத்தே
படுமீன் பரதவர் பட்டினந் தானே "

இஃது அகவற்றூங்கற் குறளடி வஞ்சிப்பா.

" தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
நறைகமழ் சாந்தநீவினன்
செற்றோரை வழிதேய்த்தனன்
நட்டோரை யுயர்வுகூறினன்

---

* 'மகிழ' எனவும் பாடம்.

வலியரென வாய்மொழியலன்
மெலியரென மேற்செல்லலன்
பிறரையொன் றிரப்பறியலன்
இரப்போர்க்கு மறுப்பறியலன்
வருபடையை யெதிர்கழறினன்
பெயர்படையைப் புறங்கண்டனன்
நெடுந்தெருவிற் றேரோட்டினன்
*கடும்பரிய மாகடாயினன்
உடல்சினத்த களிறூர்ந்தனன்
தீஞ்சொற்றசும்பு தொலைச்சினன்
வானுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன்
ஆங்குச்,
செய்வகை யெல்லாஞ் செய்தன னதலி
னிடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிவ் விகல்வெய்யோன் றலையே."

இது பிரிந்திசைத் தூங்கற் குறளடிவஞ்சிப்பா.

"கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
யெயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன்
புணையெனத்,
திருவுறு திருந்தடி திசைதொழ
†வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே"

இஃது ஏந்திசைத் தூங்கற் சிந்தடி வஞ்சிப்பா.

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
யென்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தினிற் சிறந்தாங்கெனப்
பெரிதும்,
கலங்கஞ ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே"

---

* 'கடும்பரி யூர்கடாயினன்' எனவும் பாடம்.
† 'விரிவுறு' எனவும் பாடம்.

இஃதேகவற்றூங்கற் சிந்தடி வஞ்சிப்பா.

" பாலத்தஞ் செலவிவளொடு படுமாயி
னீரவத்தை நடைவேண்டா வினிநனியெனு
நஞ்சிறு குறும்பிடை மூதெயிற்றியர்
சிறந்துரைப்பத் தெறுகதிர் சென்றுறு
மாங்கட் டெவிட்டினர் கொல்லோ
வெனவாங்கு,
நொதுமலர் வேண்டி னின்னொடு
மதுகர முற்ற வாடவர் தாமே."

இது பிரிந்திசைத்தூங்கற் சிந்தடி வஞ்சிப்பா.

" அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசை
கொங்கிவரசோகின் *கொழுநிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
வந்தரதுந்துமி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்து,
அருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே"

இது பொதுச்சீரான் வந்த குறளடி வஞ்சிப்பா. பட்டினப் பாலை யென்னும் வஞ்சி நெடும்பாட்டு ஆசிரியவடி விரவி வந்த வேந் திசைத்தூங்கல் விரவியற் குறளடி வஞ்சிப்பா. விரவியற் சிந்தடி வஞ்சிப்பா வந்தவழிக் கண்டுகொள்க. தனிவிகற்பங்களால் வரு வனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

---

* "குளிர்நிழல்" எனவும் பாடம்.

"தன்றளை பாதந் தனிச்சொற் சுரிதக
மென்றிவை நான்கு மடுக்கிய தூங்கிசை
வஞ்சி யெனப்பெயர் வைக்கப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

"தூங்க லிசையாய்த் தனிச்சொற் சுரிதகந்
தான்பெறு மடிதளை தழீஇ வரைவின்றா
யெஞ்சா வகையது வஞ்சிப் பாவே"

என்றார் அவிநயனார்.

"தூங்க லோசை நீங்கா தாகி
நாற்சீர் விரம்பா வடியிரண் டுடைத்தாய்
மேற்சீ ரோதிய வைஞ்சீர் பெற்றுச்
சுரிதக மாசிரிய முரியதனி னடுத்து
வந்த தாயின் வஞ்சிப் பாவே"

என்றார் நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்.

"ஈரிரண்டோ டீரா றெழுவா யிறுவாயாச்
சேரு மெழுத்திருசீர் வஞ்சிக்கா—மோரு
கெடிலடிக்கு நேர்ந்தனவு மூவொருசீர் வஞ்சிக்
கடிவகுத்தா ரெட்டாதி யாய்ந்து"

"பன்னிய சீர்பயின்று பத்து நிலத்தவாய்
மன்னவனைச் சேர்ந்து வனப்பெய்தி—மன்னுதலால்
நான்காம் பாவென் றுரைக்கு நாமநூல் வஞ்சியை
நான்காங் குலமென்றார் நன்கு"

இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இருசீரடி வஞ்சிக் கொன்பதுநிலத்தொடு முச்சீரடி வஞ்சி சிறப்பின்மையால் ஒரு நிலமேயாகக் கொண்டு வஞ்சி யெல்லாமாய்ப் பத்து நிலமென்ப தொல்காப்பியனார் முதலிய தொல்லாசிரியர். அதுவே இந்நூலுள்ளுந் துணிபு.

நான்காங் குலத்திற்குப் பத்து நிலமாவன.

"ஆணைவழி நிற்றன் மாண்வினை தொடங்கல்
கைக்கட னாற்றல் கசிவகத் துண்மை

யோவா முயற்சி யொக்கல் போற்றல்
மன்றிடை மகிழ்த லொற்றுமை கோடல்
திருந்திய வறத்திற் றீரா தொழுகல்
விருந்து புறந்தருதல் வேளாண் டுறையே"

என்று ஓதப்பட்டன.

"மன்னவ னென்ப தாசிரியம்
வெண்பா முதலா நால்வகைப் பாவு
மெஞ்சா நாற்பால் வருணர்க் குரிய"

என்றார் வாய்ப்பியமுடையாராகலின். இதனை விரித்துரைத்துக் கொள்க. (௯௭)

[வஞ்சித்தாழிசையும் வஞ்சித்துறையு மாமாறு.]

91. குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரிற்
றுறையென மொழிப துணிந்திசி னோரே.

இஃதென்னுதலிற்றோ வெனின், வஞ்சித்தாழிசையும் வஞ்சித் துறையுமாமா றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:—இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேன் மூன்றாய் வருவன வஞ்சித்தாழிசை; அச்செய்யுள் நான்கடியாய் ஒரு பொருண்மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறை யென்று நூற் றுணிவுடையார் கூறுவார் என்றவாறு.

ஒரு பொருண் மேலாகிய தொடர்ச்சி யீண்டுங் கோவைக் கிளவியாற் கூறுபடுப்பதெனக் கொள்க. 'தனிவரிற் றுறையென மொழிப துணிந்திசி னோரே' என்றாலுங் கருதிய பொருளைக் கொண்டு நிற்கும், 'வருவன' என்று மற்றொரு வாய்பாட்டாற் சொல்லவேண்டிய தென்னை ?

ஒரு பொருண்மேன் மூன்றாய் அடிமறியாகாதே வருவனவற்றை வஞ்சி நிலைத்தாழிசை யென்றும், அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலத்தாழிசை யென்றும், ஒரு பொருண்மே லொன்றாய் அடிமறியாகாதே வருவனவற்றை வஞ்சி நிலைத்துறை யென்றும், அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலத்துறை யென்றும்

வழங்குவ ரொருசாராசிரிய ரென்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

" இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையால் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்;
" மடப்பிடியை மதவேழந்
தடக்கையால் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்;
" பேடையை யிரும்போத்துத்
தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனேகாண்"

இவை யொருபொருண்மேல் மூன்று யடிமறியாகாதே வந்தமை யால் வஞ்சிநிலைத்தாழிசை. வஞ்சி மண்டிலத்தாழிசை வந்தவழிக் கண்டுகொள்க.

" மார்வுற வணிந்தாலு
மார்வுறாய் மணிவடமே
தோளுறச் செறித்தாலுந்
தோளுறாய் வளைவளையே"

இஃது ஒரு பொருண்மே லொன்றாய் அடிமறியாகாதே வந்தமையால் வஞ்சி நிலைத்துறை.

" முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய்க் குருந்தீன்றன
மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் வரவுகாண்குமே"

இஃது ஒரு பொருண்மே லொன்றாய் அடிமறியாய் வந்தமை யான் வஞ்சிமண்டிலத்துறை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. பிறரு மிவ்வாறே சொன்னார், என்னை?

" ஒன்றினை நான்மை யுடைத்தாய்க் குறளடி
வந்தன வஞ்சித் துறையென லாகும்"

"குறளடி நான்கிவை கூடின வாயின்
முறைமையி னவ்வகை மூன்றிணைந் தொன்றி
வருவன வஞ்சித் தாழிசை யாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

"எஞ்சா விருசீர் நாலடி மூன்றெனில்
வஞ்சித் தாழிசை தனிவரிற் றுறையே"

என்றார் சிறுகாக்கைபாடினியார்.

"இருசீர் நாலடி மூன்றிணைந் திறுவது
வஞ்சித் தாழிசை தனிவரிற் றுறையே"

என்றார் அவிநயனார்.

"இருசீர் நாலடி மூன்றிணைந் தொன்றி
வருவது வஞ்சித் தாழிசை தனிசின்
ஞொருபொருண் முடிந்தது துறையென மொழிப"

என்றார் மயேச்சுவரார். (கூ௧)

[வஞ்சி விருத்தமாமாறு.]

92. சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்த மென்மனார் புலவர்.

இஃதென் னுதலிற்றோவெனின் வஞ்சிவிருத்தமாமா றுணர்த் துதனுதலிற்று.

இதன்பொருள்:—முச்சீரடி நான் குடைத்தாய் வருஞ்செய்யுள் வஞ்சிவிருத்த மென்றார் புலவர் என்றவாறு.

'சிந்தடி நான்காய் வருவது வஞ்சியது விருத்த மென்மனார் புலவர்' என்றாலுங் கருதியபொருளைப் பயக்கும். 'எஞ்சா' என்று மிகுத்துச் சொல்லவேண்டியதென்னை? முச்சீரடி நான்காய் அடிமறி யாகாதே வருவனவற்றை வஞ்சி நிலைவிருத்தம் என்றும், அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலவிருத்தம் என்றும் வழங்குவர் ஒரு சா ராசிரிய ரென்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது. வரலாறு:—

"*வாளார் வார்கழல் வீக்கிய
தாளார் தாமுடைத் தோடினார்

* "வாளா" எனவும் பாடம்.

நாளை நாணுடை மங்கைமார்
தோளை நாணிலர் தோயவே"

எனவும்,

"மூந்து கொன்ற மொய்ம்பினான்
வந்து தோன்ற வார்சிலை
யம்பி னெய்து கொன்றுதாய்க்
கின்ப மெய்து வித்தபின்"

எனவும், இவை யடிமறியாகாதே வந்தமையால் வஞ்சி நிலை விருத்தம்.

"சொல்வ லோம்புமின் றூநனி
செல்வ லோம்புமின் றீநெறி
கல்வ லோம்புமின் கைதவம்
மல்லன் ஞாலத்து மாந்தர்காள்"

இஃதடிமறியாய் வந்தமையான் வஞ்சி மண்டிலவிருத்தம். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. என்னை?

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னுலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.

—யாப்பருங்கலக்காரிகை.

இக்காரிகையை விரித்துரைத்துக் கொள்க.

"மூச்சீர் நாலடி யொத்தவை வரினே
வஞ்சி விருத்த மென்றனர் கொளலே"

என்றார் சிறுகாக்கை பாடினியார்.

'சிந்தடி நான்காய்வருவது வஞ்சியது, எஞ்சாவிருத்தம்' என்று பிறிதொரு வாய்பாட்டாற் சொல்ல வேண்டியதென்னை? எல்லாப் பாவுந் தன்சீரானும், தன்றளையானும் வருவன தலையாகின்பாவென்றுந், தன்சீருந் தன்றளையும் பிறபாவின் சீரோடுந் தளையோடு மயங்கி வருவன இடையாகின்பாவென்றும், தன்சீரும் தன்றளையுமின்றியே வருவன கடையாகின்பாவென்றும் வழங்குவ ரொருசா ராசிரியர் என்பதறிவித்தற்கு வேண்டப்பட்டது. என்னை?

"தன்சீர் நிலையிற் றளைதம தழீஇய
வின்பா வென்ப வியல்புணர்ந் தோரே

யேனையவை விரவி னிடையெனப் படுமே
தானிடை யில்லது கடையெனப் படுமே"

என்றார் மயேச்சுவரர்.

வஞ்சிநிலைத்தாழிசை முதலாகவுடையன செய்யுள் சிறப்புடை எழுத்தினாலும், சிறப்பில் எழுத்தினாலுங் கூறுபடுப்ப ஒரோ ஒன்று பதினன்கு பாகுபாட்டைச் சொல்லும். பிறவகையாலும் விகற்பிக்கப் பலவுமாம்.

" வஞ்சிப்பா நான்குந் தணவாழுன் றோசையா
லெஞ்சாத வீராறு மீண்டவற்றை—யெஞ்சாத
பந்தம் பதினன்கின் மாறப் பழுதின்றி
வந்தன நூற்றறுபத் தெட்டு"

" அந்தத்திற் பாவிற் கினமாய வாறினையும்
பந்தம் பதினன்கி னுற்பகுப்ப—வந்தன
வெண்பத்து நான்கா மினியவற்றின் மிக்கனவும்
பண்புற்றுப் பார்த்துக் கொளல்"

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. (௯௬)

வஞ்சிப்பாவும் இனமும் முடிந்தன.

[புறநடை.]

93. மிக்குங் குறைந்தும் வரினு மொருபுடை
யொப்புமை நோக்கி யொழிந்தவுங் கொளலே.

இஃதென்னுதலிற்றோ வெனின், மேற்சொல்லப்பட்ட பாக்கட்கெல்லா.மெய்தியதோர் இலக்கண முணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்:—மேற் சீரும் அடியும் வரையறுக்கப் பட்ட பாவும், பாவினமும் சொன்னபெற்றியிற் றிரிந்து, மிக்குங் குறைந்தும் வந்தாலும், அவற்றை யொருபுடை ஒப்புமை நோக்கி யொழிந்த செய்யுட்களையும் அவற்றின்பாற் சார்த்தி வழங்கப்படும் என்றவாறு.

வரலாறு:—

" கோழியுங் கூவின *குக்கி லழைத்தன
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் †தறிவ னடியேத்தி

* 'குக்கில் குரலியம்பும்' எனவும் 'குக்கில்குரல்காட்டும்' எனவும் பாடம்.
† 'அண்ண லடிபோற்றி' எனவும் பாடம்.

கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்"

நாற்சீர் நாலடியால் வருவது கலிவிருத்தம் என்று வரையறுத்துச் சொன்னார். இஃது ஐந்தடியால் வந்ததாயினும் ஒரு புடையொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின்பாற்படுத்து வழங்கப்படும். இதனைத் தரவு கொச்சகமெனினு மிழுக்காது. இஃது அவிநயனார் காட்டிய பாட்டு.

"நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே"

எனவும்,

"வித்தகர் செய்த விளங்குமுடி கவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டான் மயங்காதே
உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்க ணின்றாக்கஞ் செய்தியேற்
சித்தி படர்த றெளிவாழி நெஞ்சே"

எனவும் இத்தொடக்கத்தன ஒருசார் வனையாப்பதிப்பாட்டும்,

* "கல்வினைக் கதிர்மணிக் கவண்பெய்து கானவூர்
கொல்லையிற் களிறேறி வெற்பே யாதே
கொல்லையுட் களிறேறி வெற்பனிவ் வியனாட்டார்
பல்புகழ் வானவன் றாளே யாதே
பல்புகழ் வானவன் †றாளொடுசார் மன்னர்க்கோர்
நல்ல படாஅ பறையே யாதே"

எனவும், .

"ஈரித ழிணர்நீல மிடைதெரியா தரிந்திடூஉம்
ஆய்கதி ரழற்செந்நெ லரியே யாதே
யாய்கதி ரழற்செந்நெ லகன்செறுவி லரிந்திடூஉங்
காவிரி வளநாடன் கழலே யாதே

* 'கல்விணை' எனவும் பாடம்.
† 'தாள்சேரா' எனவும் பாடம்.

காவிரி வளநாடன் கழல்சேர் மன்னர்க்
காரர ணிற்ற லரிதே யாதே"

எனவும்,

"சித்திலங் கழலாக கிரைதொடி மடநல்லார்
எக்கர்வா னிடுமணை லிணரே யாதே
எக்கர்வா னிடுமணை லிணர்புணர்ந் திசைந்தாடும்
கொற்கையார் கோமானே கொடியே யாதே
கொற்கையார் கோமான் கொடித்திண்டேர் மாறற்குச
செற்றர ணிற்ற லரிதே யாதே"

எனவும், இத்தொடக்கத்தன முப்பெட்டுச்செய்யுளும் ஆறடியான் மிக்கனவேனும், ஒருபுடை யொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின்பாற்படுத்து வழங்கப்படும். கொச்சகக்கலியின்பாற் படுத்தினும் ஆம். இவை மிக்கன.

இனிக் குறைந்து வருவன ஆசிரியப்பாவிற்கு மூன்றடிச் சிறுமை என்றாராயினும், கலிக்கும் வஞ்சிக்கும் சரிதகமாய் இரண்டடியால் வந்தனவுமுள. அவற்றையும் இவ்விலக்கணத்தாற் குற்றமில்லையென்று வழங்குப. மருட்பாவு மவ்வாறே எனக்கொள்க.

வரலாறு:—

"சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர்
நல்வய லூரன் கேண்மை
*யல்லிருங் கூந்தற் கலரா னதே"

வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச் சிறுமை என்று வரையறுத்துச் சொன்னார். இஃதிரண்டடியால் வந்ததாயினும், ஒருபுடை யொப்புமை நோக்கி வஞ்சிப்பாவின்பாற்படுத்து வழங்கப்படும். இரண்டடியால் வஞ்சிவரும் என்றெடுத்தோதினார், மயேச்சுவரர் முதலாகிய ஒருசாராசிரியர் எனக்கொள்க. என்னை?

"வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியென
நுண்பா வுணர்ந்தோர் நுவலுங் காலை

* 'சில்லிருங் கூந்தல்' எனவும் பாடம்.

இரண்டு மூன்று நான்கு மிரண்டுந்
திரண்ட வடியின சிறுமைக் கெல்லை"

என்றாராகலின். அவர்காட்டும் பாட்டு:—

"பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்
அதனால்,
அறிவன தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவா நெறியே"

இதனை முச்சீர் வஞ்சியாக வலகிட்டுக் கண்டுகொள்க. *"சிறி யகட்டெபறினே" என்னு மிணைக்குற ளாசிரியப்பாவினுள் ஐஞ்சீரடி யும் அருகிவந்தன எனக்கொள்க.

"அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர்த் †தொட்டுழந்து மலர்ந்தனையே"

இக்கலியுள் ஐஞ்சீரடியும் வந்தன எனக்கொள்க.

"கலியொடு வெண்பா வகவல் கூறிய
வளவடி தன்னு ளடக்குமன் னவையே" (யாப்பருங்கலம்-27.)

என்ற சூத்திரத்தில் 'அவை' என்ற விதப்பினாலும், இச்சூத்தி திரத்தாலும் இவற்றையுங் குற்றமில்லையென்று கொண்டு வழங்குப, புராண கவிஞராற் சொல்லப்பட்டவாகலின்.

"இலம்பாஅய்ப்பாஅய்ப் பட்டன்று நீலமா மென்றேன்
கலம்போஒய்ப்போஒய்க் கௌவை செயல்"

இவ்வெள்ளையுள் ஐஞ்சீரடியும் வந்தனபிற வெனின் அளபெடை சீரும், தளையும், அடியும், தொடையுங் கெடாமைப்பொருட்டு வேண்டுவதல்லது, அளபெழுந்து கெடாநின்றவிடத்து வேண்டப் படாது; என்னை?

"மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்"

என்றாராகலின்.

அதனால் முதற்சீர் புளிமாங்காயாகவும் இரண்டாஞ்சீர் தேமாங்காயாகவும் அலகிட்டு நாற்சீரேயாகக் கொள்க. ஐஞ்சீர வெள்ளை யுட் புகாமை யெற்றாற் பெறுதுமெனின்,

---

* இச்செய்யுளை 258 ஆம் பக்கத்திற் காண்க.
† 'தொட்டுத்துயி லமர்ந்தனையே' எனவும் பாடம்.

" ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல'

என்று நக்கீரனா ரடிநூலுள் எடுத்தோதப்பட்டமையாற் பெறுதும்; "பிறநூன்முடிந்தது தானுடம்படுதல்" என்பது தந்திரவுத்தியாகலின்.

இனி ஆசிரியத்துள்ளும், கலியுள்ளும் ஐஞ்சீரடிவரும் என்பது எற்றாற்பெறுதுமெனின்,

" வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப" (தொ-பொ-செய்-63,)

என்று தொல்காப்பியனார் எடுத்தோதினமையாற் பெறுதும். இப்பாட்டுக்களுஞ் செய்யுளியலுட் காட்டினவெனக் கொள்க.

" தாழிரும் பிணர்த்தடக்கைத்
தண்கவு ளிழிகடாத்துக்
தாழ்வாகத் தம்பேணுக்
கடுஞ்சினத்துக் களிற்றெருத்தி
னிலனெளியத் தொகுபிண்டிக்
கடன்மருளப் படைநடுவண்
ஏற்றுரியி னிமிழ்முரசங்
கூற்றுட்க வெழீஇச்சிலைப்பக்
கேளல்லவர் மிடல்சாய
வாள்வலியா னிலம்வெளவி
முழுதாண்டவர் வழிகாவல்
குன்றுமருளச் சோறுகுவைஇப்
புனன்மருளாநன் னெய்சொரிந்து
திருமறைமுதல்வர் வழிகாட்ட
வாகுதியி னழலருத்திப்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லிசையான் மீக்கூறுங்
கொற்கையார் குலவேறே
கூடலா ரடுபொருந
வென்றியா
னல்கியார்த்த வரிக்கிணையின்
மர்புளியின் வரவிசைப்ப
னனிவிரும்பி நயனேக்கி

யினிவேண்டாவின் இணைத்தொழிலென
வெனக்கொவ்வாமைப் பெரிதருளி
தனக்கொப்பத் தலையளித்தனன்
அதற்கொண்டும்,
கலங்கொண்டன கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ
நெய்தனிந்த வறையென்கோ
கும்கொண்டன துவையென்கோ
வெனைப்பலவெமக்குத் தண்டாது
வைகற்றும் கைகவிசொரிதரலை
விலங்குகதி ரவிர்வெள்ளி
யலங்குபெண்ணை வழியுறையினும்
குளஞ்சேர்ந்து சனிகொட்பினு
மருந்தே மார்ந்தனம் யாமே
வருந்தல் வேண்டா *வாழ்கவின் றுளே.''

முப்பத்தாறடியான் வந்த இக்குறளடி வஞ்சியுள், 'வென்றியான்' எனவும், 'அதற்கொண்டும்' எனவும் சீர்கூறாய் வந்தன.

' தூங்க லிசையன வஞ்சி மற்றவை
யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே '

என்றார். சுரிதகத்தருகு தனிச்சொலின்றி வந்ததாயினும் வஞ்சிப்பாவென்றே வழங்கப்படும். பிறவும் புராணகவிஞரான் பாடப்பட்டு மிக்கும், குறைந்தும் வருவனவற்றை இவ்விலக்கணத்தான் ஒருபுடை யொப்புமைநோக்கிப் பெயரிட்டு வழங்கப்படும். என்னை?

" உணர்த்திய பாவினு ளொத்த வடிகள்
வகுத்துரை பெற்றியு மன்றிப் பிறவும்
நடக்குன வாண்டை நடைவகை யுள்ளே''

என்றார் காக்கைபாடினியார்.

" ஒத்த வடியினு மொவ்வா விகற்பினு
மிக்கடி வரினு மப்பாற் படுமே''

என்றார் அவிநயனார்.

" பாவு மினமு மேவிய வன்றி
வேறுபட நடந்துங் கூறுபட வரினு
மாறறி புலவ ரறிந்தனர் கொளலே.''

* 'வாழ்கவின் னருளே' எனவும் பாடம்.

என்றார் பிறைநெடுமுடிக் கறைமிடற்றோன் பெயர் மகிழ்ந் பேராசிரியர்.

“வரிசை பெரிதுடையர் கட்கலமுந் தூயர்
புரிசை யொருசாரா ரம்பலமுந் தண்ணீருந் தன்னிலத்த வல்ல-
தெற்கொற்றித் தோன்றுந் திருநெடு மலையேநம் [புரிசைக்குத்
பொற்கொற்றி புக்கிருக்கு மூர்.”

எனவும்,

“கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கட் டடங்கட் டளிரியலார் கொல்லார்-கிடங்கில்
வளையாற் பொலிந்ததோள் வையெயிற்றுச் செவ்வாய்
இளையாட்டி கண்ணுக்கு மென்று.”

எனவும்,

“வஞ்சி வெளிய குருகெல்லாம்
பஞ்சவ னுன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியிற் காக்கை கரிது.”

எனவும் வரும் இத்தொடக்கத்துப் பொய்கையார் வாக்கும், குடமூக்கிற் பகவர்செய்த வாசுதேவனார் சிந்த முதலாகிய வொருசார் செய்யுட்களும் எப்பாற் படுமோவெனின், ஆரிடச் செய்யுள் எனப் படும். ஆரிடமென்பது உலகியற்செய்யுட்கட் கோதிய உறுப்புக் களின் மிக்கும், குறைந்துங் கிடப்பன எனக்கொள்க.

“வரிசை பெரிதுடையர்” என்பது மிக்கது. அல்லன மிக்குங் குறைந்தும் வந்தன. அவ்வாரிடச்செய்யுள் பாடுதற்குரியார் ஆக்கு தற்கும், கெடுத்தற்கும் ஆற்றலுடையராகி இம்மைமறுமை முக்கா லப் பண்புமுணர்ந்த விருடிக ளெனக்கொள்க. என்னை?

“உலகியற் செய்யுட் கோதிய வளவையிற்
குறையவும் விதப்பவுங் குறையா வாற்றல்
இருடிகண் மொழிதலி னாரிட மென்ப.”

எனவும்,

“ஆரிடச் செய்யுள் பாடுதற் குரியோர்
கற்றோ ரறியா வறிவுமிக் குடையோர்

மூவகைக் காலப் பண்பு முறையுணரு
மாற்றல் சான்ற வருந்தவத் தோரே."

எனவுஞ் சொன்னார் பாட்டியன் மரபுடையாராகலின், வடநூ லுடையாரும் பிங்கல முதலாகிய சந்தோபிசிதிகளுள் விருத்தச்சாதி விகற்பங்களாற் கிடந்த உலகியற் சுலோகங்களின் மிக்குங் குறைந்துங் கிடப்ப இருடிகளாற் சொல்லப்படுவனவற்றை ஆரிடம் என்று வழங் குவர் எனக்கொள்க. அஃதே எனின்,

"எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவாச்—சீரிய
வத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு."

"உடையராய்ச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்ற
முடைவராய்க் கோலூன்றிச் சென்றக்காற்-சுற்ற
முடைவயிறும் வேறு படும்."

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியி* லோஒ கிடந்ததே—கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பண்டு
ளழுதகண்ணீர் துடைத்த கை."

என்றித் தொடக்கத்துப் பெருஞ்சித்திரனார் செய்யுளும், ஔவையார் செய்யுளும், பத்தினிச்செய்யுளும் முதலாக வுடையன வெல்லாம் எப்பாற்படுமெனின், ஆரிடப்போலியென்றும், ஆரிடவாசகமென்றும் வழங்கப்படுமென்க. இவைகளெல்லாம் இருடிகளல்லா வேனையோராகி மனத்தததுபாடவும், ஆகவும், கெடவும் பாடறும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்தலைச்சாத்தர் இத்தொடக்கத்தோராலும், பெருஞ்சித்திரர் தொடக்கத்தோராலும் ஆரிடச் செய்யுட்போல மிகவும், குறையவும் பாடப் படுவன எனக் கொள்க. என்னை ?

"மனத்தது பாடு மாண்பி னோருஞ்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வி யோரு
முனிக்கணச் செய்யுண் மொழியவும் பெறுப"

என்பது பாட்டியன் மரபாகலின்.

---

* 'லோடு கிடப்பதே' எனவும் பாடம்.

வரலாறு:—

" இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுணா லாகா விலையாண்
முலைநலங் * கண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை † வேறுகொ ளீரே." (திருமந்திரம்-204.)

இம் மூலர்வாக்கு மிக்கு வந்தவாறு கண்டுகொள்க.

" வச்சிரம் வாவி நிறைமதி முக்குடை
நெற்றிநேர் வாங்கல் விலங்கறுத்த
வுட்சக் கரவடத் துட்புள்ளி யென்பதே
புட்கரனார் கண்ட புணர்ப்பு."

இது மந்திர நூலிற் புட்கரனார் கண்ட வெழுத்துக்குறிவெண்பா. இஃதிரண்டாமடி குறைந்து வந்தது. "கிடங்கிற் கிடங்கில்" என்னும் பொய்கையார் வாக்கு மிக்குவந்தது.

" கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய்
மறைக்க வறியாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் ‡ கூர்ங்கத்தி கொண்டு."

இது பூதத்தாருங் காரைக்காற் பேயாரும் பாடியது. இதுவும் இரண்டாமடி குறைந்து வந்தவாறு கண்டுகொள்க. அறிவுடைய நம்பியார்செய்த சிந்தம் எப்பாற் படுமோவெனின், தூங்கலோசைத் தாய்ச் சுரிதகந் தருகு தனிச் சொலின்றித் "தாழிரும் பிணர்த் தடக்கை" என்னும் வஞ்சிப்பாவேபோல வந்தமையாற் றனிச்சொலில்லா வஞ்சிப்பாவென்று வழங்காமோவெனின், வழங்காம்; செவியறிவுறூஉவாய் வஞ்சியடியால்வந்து பொருளுறுப் பழிந்தமையால் உறுப்பழி செய்யுள் எனப்படும்; புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும், செவியறிவுறூஉவும் என்னும் பொருண்மேற் கலியும் வஞ்சியுமாய் வரப்பெறா என்றாராகலின். என்னை?

" வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சி யும்பெறா." (தொல்-பொ-செய்-110.)

---

* 'கொண்டு' எனவும் பாடம்.

† 'வெய்து கொள்ளீரே' எனவும் பாடம்.

‡ 'கூன்கத்தி' எனவும் பாடம்.

"வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉவென வவையு மன்ன" (தொல்-பொ-செ-111.)

என்றார் தொல்காப்பியனார்.

"புறநிலை வாயுறை செவியறி யவையடக்
கெனவிவை வஞ்சிக் கலியவற் றியலா"

என்றார் நல்லாறனார்.

அஃதேயெனின், விளக்கத்தனார் பாடிய 'கெடலருமாமுனிவர்*' என்னுங் கலிப்பா புறநிலைவாழ்த்தாய் வந்தது பிறவெனின், அஃது ஆசிரியச்சுரிதகத்தான் வந்தமையாற் குற்றமின்றெனக் கொள்க.

"திருக்கொண்டு பெருக்க மெய்திவீற் றிருந்து
குற்றங் கெடுத்து விசும்பு தைவரக்
கொற்றக் குடையெடுப் பித்து நிலநெளிய
படைபரப்பி யாங்காங்குக் களிறியாத்து
நாடுவளம் பெருகக் கிளைகுடி யோம்பி
நற்றாய் போல வுற்றது பரிந்து
நகத்துக்குப்பகலாணி போலவும்
மக்கட்குக் கொப்பூழ் போலவும்
உலகத்துக்கு மந்தரமே போலவும்
நடுவு நின்று செங்கோ லோச்சி
யாறில்வழி யாறு தோற்றுவித்துக்
குளனில்வழி குளந்தொடு வித்து
முயல்பாய்வழிக் கயல்பாயப் பண்ணியும்
களிறு பிளிற்றும்வழி பெற்றம் பிளிற்றக்கண்டும்
களிறூர் பலகாற் சென்று தேன்றேயவும்
தண்புனற் படைப்பைத் தாகியும்
குழைகொண்டு கோழியெறிந்து
இழைகொண் டான்றட்டும்
இலக்கங்கொண்டு செங்காலுறை யெறிந்தும்
உலக்கை கொண்டு வாளை யோச்சியுந்
தங்குறை நீக்கியும் பிறர்குறை தீர்த்தும்
நாடாள்வதே யரசாட்சி."

எனவித் தொடக்கத்தனவும், பாசாண்டங்களும், ஒருசார்ச் சொற்கட்டும், கரிப்போக்கு வாசகத்து ஒருசார்ச் சொற்கட்டும், எப்

* இச்செய்யுளை 286-ஆம் பக்கத்திற் காண்க.

பாற் படுமெனில், அவையெல்லாஞ் சொற்சீரடி எனப்படும் எனக் கொள்க ;

"கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து
முற்றடி யின்றிக் குறைவு சீர்த் தாகியு
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே"

என்பது இலக்கணமாதலின்.

செய்யுளியன் முற்றும்.

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 2 | ருங்கணை | ருங்கனை |
| 9 | 26,27 28,29 | இயனிலை | வியனிலை |
| 12 | 3 | ஈண்டு | ஈண்டுத் |
| 14 | 5 | ஈண்டு | ஈண்டுத் |
| ” | 12 | முதல் | முதலிற் |
| ” | 16,17 | மொழிச் | மொழி |
| ” | 17 | அடுத்தன | அடுக்கன் |
| ” | 19 | கிழவனைப் | கிழவனை |
| 18 | 6 | ருமினிது | ருனினிது |
| 19 | 5 | தூக்கு | தூக்குத் |
| 20 | 9 | றன்மையி லாசாங் | றன்மை யியலாசாங் |
| ” | 14 | கலைக்காக்கைப் | கலைக்காக்கை |
| 21 | 9,10 | இவ்விருவரிகளையும் நீக்கிவிடுக. | |
| ” | 30 | வருஉங் | வரூஉங் |
| 22 | 10 | ஒவென்னு | ஒ என்னு |
| ” | 17 | ஒ விவை குறியமற்றை | ஒ இவை குறிய |
| ” | 18 | யேழ்நெட்டெழுத்தா | மற்றையேழ் நெட்டெழுத்தா |
| 23 | 14 | அவ்வெளபெடை | அவ்வளபெடை |
| 24 | 11 | கைநொடி | கைந்நொடி |
| 28 | 21 | அக்கேன | அஃகேன |
| ” | 27 | ஒன்றரை மாத்திரையாம் | ஒன்றரை மாத்திரையும் ஒரு மாத்திரையுமாம் |
| ” | 29 | ஒரு மாத்திரையுமாம் | மாத்திரையாம் |
| 29 | 18 | ஒரு மாத்திரை | மாத்திரை |
| ” | 30 | மளவினதாய | மளவினவாய |
| ” | 31 | ஒரு மாத்திரை யளவினதாகக் | மாத்திரை யளவினவாகக் |
| 31 | 7 | சொன்னாராகலானுங் கொள்க. | சொன்னாராகலின். |
| 32 | 1 | மளபெடை யைகாரக் | மளபெடையை காரக் |
| ” | 29 | கற்கக் | கற்க |
| 33 | 2 | நாகாக்கக் | நாகாக்க |
| ” | 5 | வழாஅலே லாஅய்வின் | வழாஅலெல் லாஅவின் |
| ” | 15 | வாரார் வர | வாரா ரவர் |
| ” | 18 | செருப்புப் | செறுப்புப் |
| ” | 27 | வழாஅ......கடை | வழாஅல்......இடை |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 33 | 28 | ஏலாதுய் யென்......இடை | எல்லாஅ என்......கடை |
| 34 | 28,29 | இவ்விருவரிகளையும் நீக்கிவிடுக | |
| 35 | 19 | மஃஃகான | மஃஃகான் |
| 38 | 9 | றளைதப | றளைதம |
| ,, | 10 | யாமைமின் | யாமையென் |
| ,, | 12 | னஃஃஃகிய வெஃஃஃகுணர் | னஃஃகிய வெஃஃகுணர் |
| ,, | 13 | வெஃஃஃகுவர் | வெஃஃகுவர் |
| ,, | 21 | பவள | பவள்ள் |
| ,, | 22 | பவளக் | பவள்ள் |
| 40 | 24 | கூறுமாற்றே | கூடுமாற்றுற் |

,, இப்பக்க முடிவில்,

'வெள்ளையுட் பிறதளை விரவா' என்னும் இலக்கணத்தோடு மாறு கொள்ளுமாகலின், ஆண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெறா என்று விலக்க வேண்டுளையாம். 'அருளல்லதியாது' என்புழிக் குற்றியலிகரமாமாறு—என்னும் இவ்வரிகளைச் சேர்த்துக்கொள்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 41 | 10 | அழியா | அழிய |
| ,, | 11 | ஆண்டுக் | ஈண்டுக் |
| ,, | 22 | ஆண்டுக் | ஈண்டுக் |
| 43 | 5 | அலகியல்பல | அலகியல்பில |
| ,, | 25 | கூற்றிசைப்பப் | கூற்றிசைப்ப |
| 44 | 6 | தூஉபத் | தூஉஉத் |
| ,, | 8 | மிசையான் சொன்ன நறுநுதலா | மிசையான்கொ ன்ன னறுநுத |
| ,, | 9 | ராஅமெ | லார்மாமை |
| ,, | 23 | றளைதப | றளைதம |
| ,, | 28 | என்றும் | என்று |
| ,, | 29 | ஒருகாற் | ஒருசார் |
| 45 | 8 | றளைதப .....ஙின்றள | றளைதம......யென்றள |
| ,, | 17 | யிசைப்பப் | யிழைப்பப் |
| ,, | 27 | யெழுந்தள | யெழுத்தள |
| ,, | 28 | வியற்பா | யியற்பா |
| 46 | 16 | தேட்டிடத்து | தெட்டிடத்து |
| 50 | 16 | வேண்டிப் | வேண்டிப்— |
| 57 | 16 | இயற்சீரை, | இயற்சீரை |
| ,, | ,, | உரிச்சீரை | நேரீற்றுரிச்சீரை |
| ,, | ,, | பொதுச் | நிரையீற்றுரிச் |
| ,, | 17 | நூலுடையார் ; என்னை ? | நூலுடையார். |
| ,, | 26 | என்றாராகலின் என்பதை நீக்கிவிடுக. | |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 61 | 1 | ஒரோ அசை | " ஒரோ வகை |
| ,, | 2 | சீரெனப் படுமே | சீரெனச் செப்பினர் புலவர்" |
| ,, | 9 | நான்கினும் | நான்கினுள் |
| 63 | 33 | வளவயலி டைக் | வள வயலிடைக் |

64 26,27 இவ்வரிகளின் பாடபேதத்தையே பாடமாகக் கொள்க.

65 21-வது வரிக்குக்கீழ், 'கருவிளந்தண்ணிழல் கூவிளந்தண்ணிழல்' என்றும்,

,, 22-வது வரிக்குக்கீழ், 'கருவிளந்தண்பூ கூவிளந்தண்பூ' என்றும்,

,, 23-வது வரிக்குக்கீழ், 'கருவிளநறும்பூ கூவிளநறும்பூ' என்றும்,

,, 24-வது வரிக்குக்கீழ், 'கருவிளநறுநிழல்' கூவிளநறுநிழல்' என்றும் சேர்த்துக்கொள்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 66 | 2 | முன்னிறீ இக்-காக்கு | முன்னிறீ இ-நீக்கா |
| ,, | 4 | ஞலசைச்சீர்ச் | ஞலசைச்சீர் |
| ,, | 22 | குடை நவை | குட னவை |
| ,, | 24 | துபி | துமி |
| 67 | 29 | பனிமொழி | பணிமொழி |
| 68 | 25 | 'பெரூது' | 'பெரூதும்' |
| ,, | ,, | வஞ்யுரிச்சீர் | வஞ்சியுரிச்சீர் |
| 69 | 2 | பெரூது | பெரூதும் |
| 69 | 15 | வகரமியையின்மகரமுங் | வகார மிசையு மகாரங் |
| ,, | 21 | எனவும் | என்னும் இதன் புறனடையா னும், |
| ,, | 27 | லானெனக. | லானும் எனக. |
| 70 | 2 | முண்மையி | முறைமையி |
| ,, | 10 | றந்த......வந்தனகூறிய | ரூகலுமந்த......வந்தன |
| ,, | 11 | வஞ்சிக் குரைத்தன | கூறிய வஞ்சிக் குரியன |
| ,, | 19 | அதனுட் | அகவலுட் |
| ,, | 22 | நேருற்ற | நேரிற்ற |
| 71 | 24 | உடல்......வொண்ணுத | துடல்......வொன்ணுத |
| 72 | 11 | துழுத | வுழுத |
| 73 | 21 | இது | இஃது |
| ,, | 25 | பருந்தே நல்குறு | மருந்தே......நல்குறு |
| ,, | 26 | இது | இஃது |
| 75 | 1 | ஓரடியிற் | ஓரடியில் அருகிக் |
| ,, | 3 | ஆசிடையிட்டும் | ஆயிடையிட்டு |
| ,, | 5 | வுறுப்பினிறுதிக் | வுறுப்பின் |
| 76 | 13 | என்னுங் | எனவும் |
| ,, | 16 | யுருவிக்குப் | யுருவக்குப் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ,, | 26 | வளிதலைஇய | வளித்தலைஇய |
| ,, | 30 | மணியணிப்புனற் | மணியணைப்புன் |
| 77 | 4 | என | எனஇவ் |
| 78 | 4-வது வரிக்குக்கீழ், | என்னும் இவ்வஞ்சி விருத்தத்துள் ஓரசைப் பொதுச் சீர்வந்தது.—என்று சேர்த்துக்கொள்க. | |
| ,, | 9 | இவ்வரியை நீக்கிவிடுக. | |
| ,, | 10 | "குர......எனவும் | எனவும், "குர......... எனவும் வரும் |
| ,, | 24 | பாவே | பெயரே |
| ,, | 26 | செய்யுளகத்தும்-என்றவத | செய்யுளகத்து'-என்றத |
| 79 | 2 | தாகலின் | னவாகலின் |
| ,, | 25 | வந்தது. | வந்தன. |
| 80 | 3 | ரன்ன | ரன்னவென் |
| ,, | 4 | டுறவாய் நீயே | டுறவா நீமே |
| ,, | 6 | "வரைவிலவே" | 'வரை' |
| ,, | 23 | தாக | துள்ளாக |
| ,, | 29 | நிகழ்விப்பது நியம | நிகழ்விப் பதுநியம |
| 81 | 10 | நின்ற | நின்றன |
| 82 | 4 | நடுநே ரியலா | நடுவு நேரியல் |
| ,, | 7 | வியலா | வியல |
| 84 | 3 | என்றாராகலின், | என்றாராகலின். |
| ,, | 5 | கூறியதனாற் | கூறியவதனாற் |
| 86 | 5 | யிரண்டு | அவ்விரண்டு |
| ,, | 14 | சிறப்பிலாசிரிய | சிறப்புடையாசிரிய |
| ,, | 15 | நேரசைத்தளை | நேர்த்தளை |
| ,, | 18 | யத்தளை | யநேர்த்தளை |
| ,, | 23 | யத்தளை | யநிரைத்தளை |
| ,, | 27 | யத்தளை | ய நிரைத்தளை |
| 87 | 15 | வருஞ்சீர் நேரீற்றுச் | வருஞ்சீரும் நேரீற்றுரிச் |
| 88 | 6 | அசைச்சீர் | அச்சீர் |
| ,, | 10 | வாசிரியச் சீர்க்கென்று | வாசிரியக் கென்றமையான் |
| ,, | 12 | மென்கவக | மென்றக |
| ,, | 21 | முதலசைச்சீர் | முதலசை |
| 89 | 9,10, 11,12 | இவ்வரிகளில் 'எலாம்' என்பவைகளை 'எல்லாம்' எனத் திருத்திக் கொள்க. | |
| ,, | 31 | புக்காரே | புக்கார் |
| 93 | 8 | வரினும்.........வரினும் | வருதலும்.........வருதலும் |
| ,, | 13 | கலித்தளை | கலியடி |
| ,, | 16 | வெண்டளையும் என்பதை நீக்கிவிடுக. | |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 96 | 18 | பிறதளை | வெண்பாவினமும் பிறதளை |
| „ | 24 | சாரார் | சாராரும் |
| 97 | 4 | 'கோவின்மையோ வென்புழி' | 'கோவின்மையோ'வென்புழி, |
| 98 | 6 | மாறும் | மாறும், |
| „ | 7 | யறையும், | யறையும் |
| „ | 24 | பட்டதெவமையும் | பட்டதெனவுமமையும், |
| „ | „ | இதுவுங்......கலின் | இது.........கலின் |
| 99 | 11 | லரிபறக் | லரிதுபடக் |
| „ | 21 | முதலிய | முதலாகிய |
| „ | 27 | சென்றதென | சென்றவென |
| 101 | 6 | ளுகையாய | ளுகையாய் |
| | 7,8,9 | இவ்வரிகளின் கடை மூன்று சீர்களை,<br>......வுண வின் ஞெழியா துமுற்றுஞ்<br>......சுடர்சூ ழொளிமூர்த் தியாகி<br>......பணிந்தார் வினைநீங் கினின்றார்"<br>என்றிவ்வாறு பிரித்துக் கொள்க. | |
| „ | 20 | முதலாகப் | முதலாக ஒன்றுதலைச் சிறந்து |
| 102 | 20 | இவ்வடியை 'திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள் களைக் கரைமேல்வைத்' என்றிவ்வாறு பிரித்துக்கொள்க. | |
| „ | 26 | இவ்வடியை 'துணிகொண் டிலங்கு சுடர்வேலி ளுேடு வரு வானி தென்கொ றுணிவே' என்றிவ்வாறு பிரித்துக் கொள்க. | |
| 103 | 26 | மாறுபொருண்மேன் | மாறு பொருண்மேன் |
| 106 | 2 | அருகிவரும்; என்னை ? | அருகிவரப் பெறும் என்றும் கூறினார் ஆசிரியர் தொல் காப்பியனார் என்பதறிவித் தற்கு வேண்டப்பட்டது, |
| „ | 3,4 | இவ்விருவரிகளையும்நீக்கிவிடுக | |
| „ | 19 | தெண்ணுழிக் | தெண்ணுகின்றுழிக் |
| 107 | 12 | உரிச்சீரடி | உரியடி |
| „ | 13 | இருசீர் | இருசீரும் |
| „ | 16 | றைக் | றுற் |
| „ | 26 | புலவரெனச் | புலவரென்பதனைச் |
| 108 | 1 | சிந்தடி | குறளடி |
| 110 | 4 | வரும்: 'அவையே' | வரும் எனக்கொள்க. 'அவை' |
| 111 | 5 | கன்னே | கண்ணே |
| 113 | 23 | வேந்தன்போ னின்ற | வேந்தன் போனின்ற |
| „ | 24 | யேங்தெழி லாக | யேங் தெழிலாக |
| 114 | | இப்பக்கத்தில் வரும் 'அறிவா ரறியும்' என்னும் செய்யுளில் அடிதோறும் ஐந்தாஞ் சீரையும் ஒன்பதாம் சீரையும் காய்ச் சீர்களாகவும் ஏனைச்சீர்களை மாச்சீர்களாகவும் பிரித்துக் கொள்க. | |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 115 | 7 | வதனையென்று | வதனை * * |
| ,, | 9 | னம் பிறவும் | னம். பிறவும் |
| 116 | 20 | வெள்ளடி | இயற்சீர் வெள்ளடி |
| ,, | 25 | மனைக் கலங்கி | மனைக்கலங்கி |
| 118 | 12 | மொழியசை | மொழியிசை |
| ,, | ,, | வழியிசை | வழியசை |
| ,, | 16 | பெருமைய வணங்கு | பெருமை யணங்கு |
| 119 | 3 | பாவினம் | பா |
| ,, | 18 | விதவகையா | விதிவகையா |
| ,, | 29 | மயங்கியும் | மயங்கி |
| 122 | 11 | 'வாசிரியப்பாவிற்கு' என்பதை நீக்கிவிடுக | |
| ,, | 31 | "விரைப்பைம்பூண்" | "அவிர்பைம்பூண்" |
| 125 | 7 | "ஆசிரிய...... | "அவற்றுள், ஆசிரிய |
| 126 | 8 | நலமென்றற் | நயமென்றற் |
| 127 | 25 | †...........* | *...........† |
| 129 | 2 | 6 கீழ்க்கதுவாய் | 6 மேற்கதுவாய் |
| ,, | 3 | 7 மேற்கதுவாய் | 7 கீழ்க்கதுவாய் |
| ,, | 6 | டை.........வழங்காது | டையை......வழங்குகின்றுழி |
| ,, | 27 | சிறப்புடைத்து. | சிறப்புடைத்து |
| ,, | 28 | கொள்க | கொள்க. |
| 136 | 31 | வல்லின | மெல்லின |
| ,, | 32 | சங்கயாப்பிற் | வந்தவழிக் |
| 137 | 1 | வல்லினவெதுகை | வல்லினவெதுகை, |
| 143 | 8 | பௌவம் வார்முகந் | பௌவ மறமுகந் |
| 144 | 25 | உவை | அவை |
| 145 | 11 | தழங்குரன் | தழங்குகுரன் |
| 146 | 1,2 | * நெடுநீர......பொருள். இதன்பாட பேதமாகக் கீழே குறிக்கப்பட்டிருப்பதே சரியான பாடம். அதனையே கொள்க. | |
| 147 | 3 | 'பொருளால் வந்து' என்பதை நீக்கிவிடுக | |
| 151 | 2 | மயிலும் | குயிலும் |
| 155 | 9 | திறுவாய் | திறுவா |
| ,, | 21 | வந்ததாயினு | வந்ததாயினுமா |
| 159 | 16 | வது வரிக்குக்கீழ்—இணைத்தொடையாமாறு.—என்பதைச் சேர்த்துக்கொள்க. | |
| ,, | 17 | 2. | 42. |
| ,, | 23 | யெழுத்தோன்றின் | யெழுத்தொன்றின் |
| 161 | 8 | வினவும் | வினவவும் |
| ,, | 18 | பொழிப்புமோனை | பொழிப்புத்தொடை |
| 164 | 20 | பல்லேர் | பல்லே |
| 165 | 7 | கூழை | கூழைத்தொடை |
| 167 | 1 | மேற்கதுவாய் | மேற்கதுவாய்த்தொடை |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 168 | 20 | கீழ்க்கதுவாய்மோனை | கீழ்க்கதுவாய்த்தொடை |
| 170 | 24 | முற்றுமோனை | முற்றுத்தொடை |
| 171 | 4 | சிறப்பித்ததனுற் | சிறப்பித்தது |
| ,, | 6 | முரணையாம் | முரணையாம் என்றற்கும், |
| ,, | 9 | முற்றேற்கும் | மென்றற்கும் |
| ,, | 17 | ரருளிலா | ரருளில |
| 173 | 26 | ஆமாறு | அந்தாதித்தொடையும் ஆமாறு |
| ,, | 27 | கூறுதும் | கூறுப |
| 184 | 10 | ஈண்டு உடுக்குறியிட்ட இடத்தில் கீழ் உடுக்குறியிட்டுக் காட்டிய பாடத்தைச் சேர்த்துக்கொள்க. | |
| ,, | 16 | இடையிட்டந்தாதி | இடையிட்டந்தாதி, இடையிட்டடியந்தாதி |
| ,, | 23 | சந்தனக் | வாசஞ் |
| ,, | 24 | குழம்பு | சந்தனக்குழம்பு |
| 185 | 15 | இயின்றித் | யின்றித் |
| 189 | 6 | பொழிப்பு | கூழை |
| 193 | 13 | பெறுபவோ | பெறுபவே |
| 197 | 23 | கண்டலவர் | கண்டலர் |
| 200 | 20 | னும், | ன், |
| ,, | 20,21 | 'கொள்ளுமோ வெனினும்' என்பதை நீக்கி விடுக. | |
| 203 | 1 | பெருங்குழிசி மன்றமறுக | பெருமன்ற மறுக |
| 206 | 5 | மாலகாப்ப | மால்காப்ப |
| ,, | 24 | வேரரும்ப | வேரரும்பும் |
| 208 | 4 | வஞ்சியென | வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சியென |
| 227 | 26 | 'நா—லோரடியாய்' | —'நாலோரடியாய்' |
| 268 | 9 | முகுகுயிர்த்து | முருகுயிர்த்து |
| 273 | 19 | நலத்லை | நிலத்தலை |
| 275 | 29 | வானவனுங் | மாயவனுங் |
| 277 | 23 | வலைமதித்தய் | வலைமதித்தாய் |
| 278 | 10 | பெண்ணெரு | பெண்ணொரு |
| 279 | 27 | வென விவ்வாற் | வெனவும் இவ்வாற் |
| 289 | 1 | வுயிக்கர | வுயிர்க்கர |
| 296 | 21 | 22, 24, 25 இவ்வரிகளில் நீ என்னும் அசையைத் தனியாகக் கொள்ளாது அதன் முன்னுள்ள சீரோடு சேர்த்துக்கொள்க. | |
| 331 | 2 | சண்டயா | சடையா |
| 346 | 8 | மாறற்குச | மாறற்குச் |
| 349 | 2 | பெரிதருளி | பெரிதருளித் |
| | | 103, 105, 107, 109, 111 இப்பக்கங்களின் தலைப்பில் 'தளையோத்து' என்றிருப்பதை 'அடியோத்து' எனத் திருத்திக்கொள்க. | |

# பாட பேதங்கள்.

| பக்கம். | வரி. | வேறு பாடம். |
|---|---|---|
| 12 | 29 | கருத்தே செலுத்தலென் றீரைங் கிளவியு |
| ,, | 30 | நெறிப்பட வருவது பனுவற் றுறையே" |
| ,, | 31 | என்றோதப்பட்டன. |
| 72 | 7 | "அலரிநாறு துவர்வா யமர்ந்த நோக்கி |
| ,, | 17 | ............கருநீல மதுவுண்ணவும் |
| ,, | 25,26 | செழுநீர் நல்வய லூரன் |
| 83 | 14 | ஏழாவன:—வெண்டளை இரண்டும், ஆசிரியத்தளை இரண்டும், கலித்தளை ஒன்றும். |
| ,, | 15 | வஞ்சித்தளை இரண்டும் என. |
| 90 | 16 | கிளவி வேண்டியது விளைக்கும்' என்பதாகலின். "தேமா புளிமா.........நாண்மலரே." "தண்ணிழறண்பூ...ஒண்டளைக்கே." இவற்றை விரித்துரைத்துக்கொள்க. பிறரும், |
| 92 | 16 | என்றார் மயேச்சுவரர். " தண்சீர்............ஒண்ணுதலே" "திருமழை............உதாரணமே" என வரும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க. |
| 95 | 24 | மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.<br>"கருவிப் புட்டிலின் சண்டமும்<br>மருவிப் பக்கரைப் போழ்களும்<br>விரவிப் போர்க்கள வாயெலாம்<br>புரவித் துண்டங்கள் போர்த்தவே."<br>இவ்வஞ்சி விருத்தத்துள் ஆசிரியத் தளையும் வெண்டளையும் வந்தன. பிறபாவினங்களுள்ளும் தளைமயங்குமாறு வந்த வழிக் கண்டுகொள்க. |
| 97 | 13 | பிறவுமிவ்வாறு வழுவி வந்தன கண்டுகொள்க. "மாஞ்சீர்.........பூங்கொடியே' என்னும் இதனை விரித்துரைத்துக்கொள்க. |
| 99 | 3,4 | 'குறள்சிந் தளவு நெடில்கழி நெடிலென் றாங் |
| ,, | | கனைவகை மரபின' வடிவகை தானே' |
| 106 | 7,8 | "நாலெழுத் தாதி யாக வாறெழுத் |
| | | தேறிய நிலத்தே குறளடி யென்ப' |
| ,, | 27 | தளவிரண்டு மொன்ற நெடில்கழியு மொண்பாற் |
| 107 | 3 | "அளவியற்பா வான்றசீ ரைந்தெழுத்திற் பல்கா |

| பக்கம். | வரி. | வேறு பாடம். |
|---|---|---|
| 107 | 15,16 | பிறவாற்றாற்கூறப் பலவுமாம். "குறளிருசீரடி.........கழிநெடிலே" இதனை விரித்துரைத்துக்கொள்க. |
| 108 | 18 | தாழையோடு முருகுயிர்ப்ப |
| ,, | 20 | கண்டலோடு கடலுடுத்துந் |
| 109 | 4 | "பாலத்தஞ்செல விவளொடு படுமாயி |
| ,, | 21 | "அகவ லென்ப தாசிரியப் பெயரே" |
| ,, | 23,24, 25,26 | னுது, 'கலியொடு வெண்பா வகவல்' என்று தலை தடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்ததனால் கலியுள் அம்போதரங்க உறுப்புச் சில இருசீரடியாலும், முச்சீரடியாலும் வரும்; அராக உறுப்பு நாற்சீரடியின் மிக்கு வரும் எனக்கொள்க. அவை போக்கிக் கலிப்பாச் |
| 115 | 15,16 | வான் எடுத்துக் கோடலின், இச்சூத்திரம் ஆசிரியப்பாவினுள் அல்லாப் பாவினடி மயங்குமாறுணர்த்துதல் நுதலிற்று. |
| | 26 | "வஞ்சி விரவ லாசிரிய முரித்தே |
| 119 | 25 | .. .........ஆசிரியவடி விரவவும் |
| | 28 | .........வெள்ளடி அருகிவரவும் பெறும்; |
| 120 | 19,20 | இது குறளடியுஞ் சிந்தடியு மயங்கி வந்த வஞ்சிப்பா. 'வஞ்சியுளகவல் மயங்கவும் பெறும்' என்னுது 'மயங்கினும் வரையார்' என்று மற்றொரு வாய்பாட்டாற் சொல்லவேண்டியதென்னை? வஞ்சிப்பாவினுள் ஆசிரிய மயங்கி வருவது அகத்திணையல்லாத வழியே என்ப ஒரு சாராசிரியர் என்றற்கு வேண்டப்பட்டது. என்னை? |
| 121 | 13 | என்றார் நாலடி நாற்பதுடையா ரெனக்கொள்க. 'இயற்சீர் வெள்ளடி...............முறைமையினே' இதனை விரித்துரைத்துக்கொள்க. |
| 122 | 24 | ...............முடியெல்லாந் தத்துந்தம் |
| 123 | 16 | "படைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை |
| 124 | 21 | நீர்பில வெள்ளைக் கடித்தொகை தானே" |
| 125 | 25 | என்றார் பரிமாணனார். 'வெள்ளைக் கிரண்டடி.........காரிகையே' 'அறத்தாறிதுவென.........பூங்கொடியே' என்னும் யாப்பருங்கலப் புறனடைகளைப் பதநெகிழ்த் துரைத்துக் கொள்க. |
| 126 | 15 | யடுத்து நடப்பி னடியாம்-வடுத்தீர்ந்த |
| 127 | 15 | "தொடையெனப் படுவ நடைவகை தெரியின் |
| 128 | 11 | ...........பாகுபாட்டைச் சொல்லு மென்ற |
| 131 | 3 | ..............யம்பலைத் தமர்ந்த |
| 133 | 19 | .......................தான் செல்லும் |
| 139 | 22 | இறைக்காச்சா னேசமருண் மாலையு மாலை |
| 141 | 1-4 | "மாக்கொடி யானையு மௌவற் பந்தரும்<br>கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப் |

| பக்கம். | வரி. | வேறு பாடம். |
|---|---|---|
| | . | பூக்கொடிப் பொதும்பருங் கானஞாழலுங் |
| | | தூக்கொடி கமழ்ந்துதான் றுறக்க மொக்குமே" |
| 143 | 20 | பாவகை நான்காம் பகருங் காலே" |
| ,, | 25 | அஃதொழித் தொன்றி னதுகை யாகும் (இது தொல்காப்பிய அச்சுப்பிரதியின் பாடம்) |
| 147 | 20 | இது நத்தத்தனார் கூறியது. |
| ,, | 22 | இது பல்காயனார் கூறியது. |
| 149 | 15 | இப்பாட்டுக் கையனார் காட்டிய தெனக்கொள்க. |
| 153 | 17 | திருநுதற் பொறித்த திலகமு மணங்கே" |
| 155 | 4,5,6, | "பரவை மாக்கடற் றொகுதிரை வரவும் |
| | | பண்டைச் செய்தி யின்றிவண் வரவும் |
| | | பகற்பின் முட்டா திரவினது வரவும் |
| 166 | 11 | படிய பாவை மாயோ ளொண்கண் |
| 167 | 25 | தெண்கடற் சேர்ப்பனே......... .. |
| 169 | 27 | "கருங்கண் வெள்வளை வார்கோற் சேயிழை |
| 170 | 7 | இன்னுமியாமின்னுயிர்தீரேமுளோம்" |
| 174 | 1 | ............சொல்லி யுலப்பிக்கலாகா. |
| 181 | 24 | .......... ......அலகிருக்கையா |
| 1·2 | 26 | 'அடலமர் வேளுக்கி' 'அடல்வே லமர்நோக்கி' என்பவும் [பாடம். |
| 186 | 9 | வகைமுடி வில்வினை வாடுக வெனவே |
| 186 | 22 | பொழின்மலர்ப் பூம்புன்னை |
| 187 | 6 | "மேனமக் கருளும் வியனருங் கலமே |
| 194 | 11 | " அ இ உ எ ஒ என்னு மைந்தெழுத்தல்லாத |
| 195 | 10 | இவ்வரியிலுள்ள 'விசற்பம்' என்பது சில ஏடுகளிலில்லை. |